6. தரமான சந்தக் கட்டைகள் சேலம் அரசு டெப்போவிலிருந்து பெற்றிட கடிதங்கள் எழுதி தமிழக முதல்வரின் சிபாரிசின் பேரில் 150 கிலோ சந்தனக் கட்டைகள் வழங்கிட ஆர்டர் போட்டுள்ளார்கள். நமது காசி சத்திர மேலாளர் திரு. பனையப்பன், தமிழக முதல்வரின் PA ஆகியோரின் முயற்சியால் கிடைக்கப் பெற்று தரமிக்க சந்தனக் கட்டைகளாக வாங்கப் பெற்று காசிக்கு அனுப்பப் பெற்றது.

7. சத்திரங்களுக்கும் நிர்வாகிகள் அனைவரும் சென்று பார்த்து வந்தோம். நானும் பொருளாளர் திரு. RM. வயிரவன் அவர்களும் எல்லாசத்திரங்களுக்கும் 4 முறை சென்று தங்கி கணக்குகள், இருப்புக்களை சரிபார்த்து தவறுகளை கண்டு பிடித்து இருமுறை எச்சரிக்கை செய்தும் அதற்குப் பிறகும் தவறு செய்பவர்களை மாற்றியும் தினமும் நடவடிக்கைகளை கேட்டு உரிய ஆலோசனைகளை வழங்கியும் நிர்வாகம் செம்மையாய் நடைபெற வழி வகுத்துள்ளோம்.


8. வடநாட்டில் உள்ள கல்கத்தா, நாசிக், வாரணாசி, அலகாபாத், கயா, அயோத்தி என எல்லா இடங்களிலும் வாடகைக்கு குடியிருப்பவர்களை காலி செய்ய முடியாமலும் வாடகையும் பாக்கியாகி வசூலிக்காமலும் நம் இடத்தில் நமது அனுமதி இல்லாமலேயே ஆக்ரமித்து கட்டிடங்கள் எழுப்பியும் பல பிரச்சனைகள் உள்ளன. நமது சத்திரத்தில் மேலாளராய் இருக்கும் சிலரும் அவர்கள் செய்யும் தவறுகளை நம் கவனத்திற்கு கொண்டுவராமல் அங்குள்ளவர்களோடு தவறுக்கு துணை போகிறார்கள்.

9. சத்திர மேலாளர்கள் அவசியம் கருதி மாற்றப்படுவதாலும் அவர்களுக்கு ஹிந்தி மொழி தெரியாததாலும் நாம் செலவு செய்து கோர்ட்டில் வழக்குகள் போட்டாலும் வழக்குகளின் நிலை அவர்களுக்கு தெரியவில்லை. வக்கீலோடு உரிய கருத்துக்களை பேசி தொடர்நடவடிக்கை சரியாக எடுக்க இல்லாத நிலை உள்ளது.

10. எல்லா ஊர் சத்திரங்களிலும் உள்ள வைரம், தங்கம், வெள்ளி நகைகள், அங்கிகள், வங்கி லாக்கரில் உள்ளவைகளையெல்லாம் லிஸ்ட் செய்து பக்கவாகாக ஒவ்வொரு சத்திரத்திற்கும் மூன்று புத்தகங்களில் எழுதி அதில் ஒன்று காரைக்குடி தலைமை அலுவலகத்திலும் மற்றொன்று வாரணாசி சத்திரத்திலும் மீதமுள்ள ஒன்று அந்தந்த சத்திரங்களிலும் இருக்குமாறு செய்ய வேண்டும்.

11. எல்லா ஊர்ச் சத்திரங்களிலும் நடைபெற்று வரும் கட்டிட வேலைகளை வழக்குகளை கோர்ட் நடவடிக்கைகளை தொடர்ந்து தொய்வின்றி நடத்திட அதற்கென தனியாக ஒரு நபரை நியமித்தால்தான் அவைகள் நல்ல முறையில் நடைபெற ஏதுவாக இருக்கும்.

12. நமது சத்திரத்தின் 2010 முதல் 2013 ம் ஆண்டு முடிய உள்ள கணக்குகளை தணிக்கை செய்து கொடுத்த பிரபல தணிக்கையாளர்கள் திரு. PL. சோலையப்பன் அவர்களுக்கும், திரு. T. காளைராஜா அவர்களும் எங்கள் அன்பான நன்றியினை நிர்வாகிகள் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.



13. முக்கியமாக எங்கள் பணிகள் சிறப்பாய் நடைபெற மிகவும் உறுதுணையாய் இருந்து எங்களை வழிநடத்திட்ட அட்ஹாக் கமிட்டி தலைவர் திரு. R. சேக்கப்ப செட்டியார் அவர்களுக்கும் மற்ற அட்ஹாக் கமிட்டி உறுப்பினர்களுக்கும் நிர்வாகிகள் அனைவர் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

14. சிக்ரா நந்தவன இடத்திற்காக முயற்சிகள் பலமேற்கொண்ட திரு. R.சேக்கப்ப செட்டியார் அவர்களுக்கும் திரு. N.சிவனடியான் செட்டியார் அவர்களுக்கும் திரு. V.D.M.RM. அண்ணாமலை செட்டியார் அவர்களுக்கும் நன்றி.

15. காசி சத்திரத்துக்கு நன்கொடை தந்திட்ட நல்ல கொடை உள்ளங்களுக்கும் சத்திரத்திற்கு பல்லாற்றானும் உதவி வருபவர்களுக்கும் இதயம் நிறைந்த நன்றி. குறிப்பாக **காசி சத்திர மேலாளர் திரு. பனையப்பன்** அவர்களின் சிறப்பான பணிக்கு அனைவர் சார்பாக நன்றி.

16. சத்திர நிர்வாகம் சீராய் நடைபெற உண்மையாய் பணியாற்றிடும் எல்லா ஊர் சத்திர மேலாளர்களுக்கும் துணையாக பணிபுரிபவர்களுக்கும் எங்கள் நன்றி.

17. எங்களுடைய எல்லா செயல்பாடுகளுக்கும் மிகவும் உறுதுணையாய் இருந்து நல்ஆலோசனைகளை நல்கி வரும் மதிப்புமிக்க செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களுக்கு உளம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

18. நிறைவாக என் செயலர் பொறுப்பினை சிறப்பாகவும் மனநிறைவோடும் ஆற்றிட உறுதுணையாய் இருந்திட்ட தலைவர் திரு. CT.S. சிதம்பரம் செட்டியார் அவர்களுக்கும் தொடர்ந்து பேரன்பு காட்டி வரும் பெருமை மிகு துணைத் தலைவர்கள் திரு. AL.S. அழகப்ப செட்டியார் அவர்களுக்கும் திரு. PL.M. முத்தையா செட்டியார் அவர்களுக்கும் எல்லாச் செயல்களிலும் என்னோடு முழுவதும் இணைந்து எனக்கு தோள் கொடுத்துவரும் பொருளாளர் திரு. **RM.வயிரவன்** அவர்களுக்கும் அமைதியாய் எனக்கு உதவிவரும் துணைச் செயலாளர் திரு. சோம. இராமநாதன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்து எனது அறிக்கையினை நிறைவு செய்கிறேன்.

தங்கள் அன்புள்ள,
முத்து. பழநியப்பன்
செயலாளர் (பொ)






உ

நன்கொடைகள் வழங்கி நல்ல பணிகள் பலநாங்கள் செய்திட
உறுதுணையாய் இருந்திட்ட உயர்ந்த மனம் படைத்தோரை
உளமாற நன்றி கூறிப் பாராட்டுகிறோம்.

1. திரு. டால்பின் AR. ராமநாதன் செட்டியார், தேவகோட்டை
2. திருமதி. K.V.AL. RM. பார்வதி நாச்சியப்பன், கோட்டையூர்
3. M/s. AVM அறக்கட்டளை, சென்னை
4. திரு. அபிராமி இராமநாதன் செட்டியார்,பூலாங்குறிச்சி
5. திரு. லோட்டஸ் AN. வெங்கடாசலம் செட்டியார், தேவகோட்டை
6. திரு. N.அன்பு சிதம்பரம் செட்டியார், கண்டனூர்
7. திரு. R.திருநாவுக்கரசு செட்டியார், மதகுபட்டி
8. திரு. வயிரவன் செட்டியார், கீழப்பூங்குடி
9. திரு. லெனா. காசிநாதன் செட்டியார், உலகம்பட்டி
10. திருமதி. A.M.K.M.CT. தெய்வானை ஆச்சி, காரைக்குடி
11. திரு. முத்து. பழ. மு. கண்ணப்ப செட்டியார், பாகனேரி
12. திரு. முத்து பழநியப்ப செட்டியார் கண்ணாத்தாள் ஆச்சி சாரி டபிள் டிரஸ்ட்
13. திருமதி. AL. மீனாட்சி ஆச்சி, இராயவரம்
14. திரு. ராஜாசர் அண்ணாமலை செட்டியார் நினைவு அறக்கட்டளை, சென்னை
15. M/s. விசாலாட்சி பழநியப்பன் அறக்கட்டளை, சென்னை
16. திரு. முத்து. பழநியப்ப செட்டியார், வேகுப்பட்டி
17. திரு. Dr. A.C. முத்தையா - திருமதி. Dr. தேவகி முத்தையா, கானாடுகாத்தான்
18. M/s. அண்ணாமலைப்பல்கலைக்கழகம், சிதம்பரம்
19. M/s. சிட்டி யூனியன் பாங்க் லிட், கும்பகோணம்
20. M/s. இந்தியன் பாங்க், காரைக்குடி
21. M/s. இராம. நாராயணன் மெய்யம்மை, கண்டனூர்
22. திரு. KN. சுந்தரம் செட்டியார், கல்லல்
23. திரு. . S. சுப்பிரமணியன் செட்டியார், ஆ. தெக்கூர்
24. திருமதி. S.M.R. சீதை ஆச்சி, சிறாவயல்
25. M/s. சண்முகநாதன் இன்ஜினியரிங் கல்லூரி, அரசம்பட்டி
26. M/s. ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, காரைக்குடி
27. திரு. N. சுப்பிரமணியன் - நாச்சாள் சுப்பிரமணியன், காரைக்குடி
28. திரு. S.K.PL. SP. N. TR. பழநியப்பன் - தெய்வானைஆச்சி, தேவகோட்டை
29. திரு. C. வைரவன் செட்டியார், குழிபிறை
30. திரு. பில்லப்பன் பழநியப்பன் செட்டியார், ஒக்கூர்
31. திரு. K. தியாகராஜன் செட்டியார் நெற்குப்பை
32. திரு. SV. AR. தியாகராஜன் செட்டியார், நெற்குப்பை
33. M/s விஜயலெட்சுமி லெதர்ஸ், பாண்டியன் செட்டியார், சென்னை
34. M/s சியாமளா பிக்சர்ஸ் & ஹோட்டல்ஸ் பி.லிட்., சென்னை
35. திரு. PL.A. லெட்சுமணன் செட்டியார் , நெற்குப்பை
36. திரு. சோம. கரு. சோலையப்ப செட்டியார், பாகனேரி
37. திரு. AL.S. அழகப்ப செட்டியார், காரைக்குடி
38. திரு. PL.M. முத்தையா செட்டியார், வலையபட்டி
39. திரு. CT.S. சிதம்பரம் செட்டியார், கீழச்சிவல்பட்டி
40. திரு. Dr. M. அழகப்பன் செட்டியார், கோட்டையூர்
41. திரு. M/s. தியாகராஜன் சிதம்பரம் அறப்பணிகள், சேலம்
42. திரு. வெ.மு. வெ. சா. வெ. பழநியப்பன் செட்டியார், சென்னை
43. திரு. L. வெங்கடாசலம் செட்டியார், அரியக்குடி
44. திரு. P. கணேஷ் செட்டியார், கல்லுப்பட்டி (துபாய்)
45. திருமதி. Dr. உமையாள் இராமநாதன், கண்டனூர்
46. திருமதி. சரோஜா ரெகுபதி, வி. லெட்சுமிபுரம்
47. திரு. KN. தியாகராஜன் செட்டியார், மதுரை
48. திரு. AR. அருணாசலம் செட்டியார், காரைக்குடி
49. திரு. அக்ரி. SP. சொக்கலிங்கம் செட்டியார், வலையபட்டி
50. திரு. அரிமளம் சோமு செட்டியார்
51. திரு. PL. வைரவன் செட்டியார், நெற்குப்பை
52. திரு. T. கனகசபை செட்டியார், நெற்குப்பை
53. திரு. N. வள்ளியப்ப செட்டியார், உலகம்பட்டி
54. திரு. AR.KN. அருணாசலம் செட்டியார், கீழச்சிவல்பட்டி
55. M/s. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சென்னை



200 வது ஆண்டு விழாக் குழுவினர்

திரு. R. சேக்கப்ப செட்டியார், ஒக்கூர், தலைவர்

திரு. M.A.M. பழநியப்ப செட்டியார், ராயவரம்

திரு. Dr. MR. முத்தையா செட்டியார், கோட்டையூர்

திரு. PL. அடைக்கப்ப செட்டியார், நெற்குப்பை

திரு. AN. வெங்கடாசலம் செட்டியார், தேவகோட்டை

திரு. KM.CT. நாராயணன் செட்டியார், கானாடுகாத்தான்

திரு. AL.AR. V. காளைராஜா செட்டியார், தேவகோட்டை

திரு. N.S.S. சிவசுப்பிரமணியன் செட்டியார், கண்டவராயன்பட்டி

திரு. A.M.K.M. கருப்பன் செட்டியார், காரைக்குடி

திரு. PL. A. சிதம்பரம் செட்டியார், வலையபட்டி

திரு. AR. KN. அருணாசலம் செட்டியார், காரைக்குடி

திரு. AN. முத்துப் பழநியப்ப செட்டியார், வேகுப்பட்டி

திரு. R. திருநாவுக்கரசு செட்டியார், மதகுபட்டி

திரு. S.V. RM. ராமநாதன் செட்டியார், பூலாங்குறிச்சி

திரு. ரவி வீரப்ப செட்டியார், சொக்கலிங்கம் புதூர்

திரு. M.C.N. மாணிக்கம் செட்டியார், கண்டரமாணிக்கம்

திரு. PL.K. பழநியப்ப செட்டியார், வலையபட்டி

திரு. செல்லகணபதி செட்டியார், கண்டனூர்

திரு. E. ஞானம் செட்டியார், மேலச்சிவபுரி

திரு. சோனா வள்ளியப்ப செட்டியார், பூலாங்குறிச்சி

திரு. N. பழநியப்ப செட்டியார், நாச்சியாபுரம்

திரு. V. சம்பந்தம் செட்டியார், கோனாபட்டு

திரு. லெனா. காசிநாதன் செட்டியார், உலகம்பட்டி

200வது ஆண்டுவிழா மலர்க்குழு

திரு. சொ.சொ. மீ. சுந்தரம் செட்டியார், தேவகோட்டை.

திரு. செல்லகணபதி செட்டியார், கண்டனூர்

திரு. காசு. மணியன் செட்டியார், ஆத்தங்குடி

திரு. நா. பழநியப்ப செட்டியார், நாச்சியாபுரம்

திரு. SP. அண்ணாமலை செட்டியார், மேலைச்சிவபுரி

ஸ்ரீ காசி விசாலாட்சி கோயில் கும்பாபிஷேகக் குழுவினர்

திரு. Agri. SP. சொக்கலிங்கம் செட்டியார், வலையபட்டி

திரு. அன்பு N. சிதம்பரம் செட்டியார், கண்டனூர்

திரு. முத்து. பழ. மு. கண்ணப்ப செட்டியார், பாகனேரி


திரு. VR. ராமசாமி செட்டியார், புதுவயல்

திரு. S. காசிச் செட்டியார், தேவகோட்டை

திரு. விசாலம் AR. விஸ்வநாதன் செட்டியார், பள்ளத்தூர்



- **சொர்ணலிங்கம் உருவாக தங்கம், வைரம், வெள்ளி வழங்கியோர்**
- சேலத்தில் சந்தனக் கட்டைகள் வன அலுவலகத்தில் எடுத்திட உறுதுணையாய் இருந்திட்ட திரு. L.RM.K. கண்ணன் செட்டியார், நாட்டரசன்கோட்டை.
- சத்திரக் கட்டிட வேலைகளுக்காக பல ஊர்களுக்கும் சென்று வந்து அலோசனைகள் வழங்கிய Er. S.R.M. கண்ணப்ப செட்டியார், காளையார்மங்கலம்.
- எல்லா சத்திர வழக்குகள், கட்டிடப் பணிகள் பார்த்து மிக்க உதவியாய் இருந்திட்ட திரு. வெங்கடாசலம் செட்டியார், மதகுப்பட்டி.
- திரு. V.D. கண்ணன், வலையப்பட்டி, ராஜா முத்தையா மன்ற மேலாளர், திரு. மெய்யப்பன்
- நாசிக் சத்திர மராமத்து வேலைகளை மேற்பார்வையிட்டு உதவி புரிந்திட்ட மும்பை நகரத்தார் தேவகோட்டை திரு. வைத்தியநாதன் செட்டியார் அரிமளம், திரு. செல்லப்ப செட்டியார் கும்பாபிஷேகத்திற்கு உதவியாய் இருந்திட்ட கீழச்சிவல்பட்டி திரு. AL.சுப்பிரமணியன் செட்டியார், வேகுப்பட்டி திரு. L.சுப்பையா செட்டியார்,
- அழைப்பிதழ்கள் & மலரை அழகுற அச்சிட்டுக்கொடுத்திட்ட ஸ்ரீவிநாயகா ஸ்கிரீன்ஸ் நிறுவனத்தினர்
- மலருக்கு விளம்பரங்கள் தந்துதவிய பெருமக்களுக்கும் தீபாவளி, சிவன் ராத்திரி, காசி விசாலட்சி கோவில் கும்பாபிஷேகம், 200 வது ஆண்டுவிழா நிகழ்ச்சிகளில் உடன் இருந்து பணியாற்றிய உறுப்பினர் பெருமக்களுக்கும், பந்தி விசாரணை செய்து உதவிய கண்டனூர் நகரத்தார் பெருமக்களுக்கும், பனையப்பட்டி நச்சாந்துப்பட்டி நகரத்தார் பெருமக்களுக்கும்
- அன்னதானத்திற்கு அள்ளிக் கொடுத்திட்ட பெருமக்கள் அனைவருக்கும்
- 3 காலப் பூஜைக்கு வாரி வழங்கிய பெருமக்கள் அனைவருக்கும்
- காசிச் சத்திர செய்திகளை வெளியிட்டு உதவிய நகரத்தார் பத்திரிக்கைகளான ஆச்சி வந்தாச்சு, தனவணிகன், நகரத்தார் மலர், பூச்சரம், நகரத்தார் இதழ்களுக்கும் அதன் ஆசிரியர்கள் திரு. நாச்சியாபுரம் நா. பழநியப்பன், திரு. VN.CT.வள்ளியப்பன், திரு. நா. இளங்கோவன், திரு. PL. மணிகண்டன், திரு. சுப. செந்தமிழன்.
- ஆகிய அனைவருக்கும் நிர்வாகக்குழுவின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.



உ

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் மேலாண்மைக் கழகம், காரைக்குடி

2010–2013–ம் ஆண்டுகளில் நடைபெற்ற குறிப்பிடத்தக்க செயல்கள் (உத்தேசமாக)

1	சொர்ணலிங்கம் மற்றும் காசி விசாலாட்சி கழுத்தூறு செய்த வகையில்	1,00,00,000
2.	வாரணாசி சத்திரத்தில் 10 புதிய அறைகள் ரூம் கட்டிய செலவு	35,00,000
3.	காசி விசாலாட்சி கோவில் கும்பாபிஷேகம் செய்த வகையில்	20,00,000
4.	காசி சத்திர புதிய போர்வெல் + கட்டிட மராமத்து, பெயிண்டிங் செலவு	6,00,000
5.	வாரணாசியில் வருடம் முழுவதும் இலவச அன்னதானம் செய்த வகையில் 3 வருடங்களுக்கான சாப்பாட்டு செலவு (நகரத்தார்களுக்கு)	45,00,000
6.	காரைக்குடி சத்திர பழைய கட்டிடத்தை முழுவதும் மராமத்து செய்த செலவு	18,00,000
7.	காரைக்குடி சத்திரத்தில் 6 புதிய அறைகள் மற்றும் லாக்கர் கட்டிடம் கட்டிய செலவு	58,00,000
8.	காரைக்குடியில் லாக்கர் யூனிட்டுகள், லாக்கர் ரூம் கதவு, கேமரா, பர்னிச்சர்கள், பேவர்டு பிளாக் கல் போட்ட வகையில் செலவு	35,00,000
9.	காரைக்குடி சத்திர காசி விநாயகர் கோவில் கும்பாபிஷேகம் + ஆலய கட்டிட செலவு	8,00,000
10.	கல்வி நிதி உதவி மற்றும் திருமண நிதி உதவி	23,00,000
11.	பொதுக்குழு உறுப்பினர்களை காசிக்கு அழைத்து சென்று வந்த செலவு	4,00,000
12.	காசி சத்திர 200வது ஆண்டு விழா செலவு (சத்திரத்திலிருந்து எந்த செலவும் செய்யப்படவில்லை. முழுவதும் 200 வது ஆண்டு விழாக்குழு உறுப்பினர்கள் நன்கொடை மூலம் செய்யப்பெற்றது)	22,00,000
13.	200வது ஆண்டு விழா மலர் செலவு (உத்தேசமாக) விளம்பரங்கள் வாயிலாக பெற்றது	3,00,000
14.	சென்னை ரெங்கோன் நகர விடுதி முழுவதும் மராமத்து பார்த்த செலவு + 2 முகப்பு ATM ரூம் கட்டிய செலவு	22,00,000
15.	நாசிக் சத்திரம் மராமத்து பார்த்த செலவு	2,50,000
16.	அன்னதானம் மற்றும் அபிஷேகத்திற்கு நன்கொடைகள் மூலம் வந்தது	50,00,000
17.	கல்கத்தா சத்திர 6 வருட கார்ப்பரேஷன் வரி பாக்கி முன் இருந்ததை கட்டிய செலவு	6,00,000
		4,57,50,000

ரூபாய் நான்கு கோடியே ஐம்பத்தேழு இலட்சத்து ஐம்பதாயிரம்



காசி

சிவத் தலங்களிலெல்லாம் நிகரற்று விளங்கும் காசியம்பதியில் கங்கைக் கரையிலும் சரி, நகரெங்கிலும் சரி, ஆயிரக்கணக்கான சிவலிங்கங்கள் உள்ளன. கண் பார்வை படுமிடமெங்கும், ஒரு சிவலிங்கத்தைக் காணலாம். புதிய சிவன் கோவில் அமைக்கக் காசிலிங்கம் வரவழைப்பது மரபு.

இவ்வாறு சிவலிங்க வடிவமாய்த் திகழும் காசியில் கோயில் கொண்டுள்ள விசுவேசர்க்கு நாளும் பூசை செய்யும் பேறுபெற்ற ஒப்பற்ற நிறுவனம் காசி நகரச் சத்திரம்.

காசிமா நகரின் வாழ்விலும் வரலாற்றிலும் இச் சத்திரம் முக்கியமான பங்கு கொண்டிருக்கிறது. நகரச் சத்திரம், விசுவேசர் கோயிலுக்கு அருகேயுள்ள குதோலியா சந்திப்பையடுத்து அமைந்த கற்கட்டிடமாகும்.

5-8-1863ல் கோஜாயி ஹரிதயான்கிரி, 1866ல் கிருஷ்ணய்ய சாஸ்திரி, 1873ல் ஈரலால், 1874ல் கின்னுகிரி கொசாயி, காந்தாகிரி கொசாயி, 1877ல் பாபுமியா, 1884ல் பத்திக்கீநாத் கோசுவாமி, 1894இல் விசுவநாத கோசுவாமி, துர்க்க பிரசாத், 1895இல் மன்னுப்பட்டு பிராமண என்பவர்களிடம் இடங்களும் கட்டிடங்களும் வாங்கப்பெற்றன. இவற்றை, தக்கவாறு புதுப்பித்து, பெரியதொரு மாளிகையாக நகரத்தார் அமைத்துள்ளனர். இன்று இம்மாளிகையின் மதிப்பு நான்கு இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டதாகும்.

இது தவிர, பசுமடமும் நந்தவனமும், 8-12-1924 இல் காசிநாத பட்டாச்சாரி என்ற வங்காளியிடம் வாங்கிய வீடும் (இப்போது இடிந்துவிட்ட நிலையில்) நகரச் சத்திரத்துக்கு உடைமையாக உள்ளன.


இச் சத்திரம் நெடுங்காலம் கல்கத்தா நகரத்தார்களின் மேற்பார்வையிலும், 1925 முதல் இரங்கூன் நகரத்தார்களின் மேற்பார்வையிலும், 1934 முதல் மானேஜிங் சொசைட்டியின் ஆட்சியிலும் நடைபெற்று வருகிறது.

சத்திரம் 1941 வரை மிகச் சிறப்பாக நடைபெற்றது. சில சமயம் நாள்தோறும் 300 பேருக்கு அன்னதானம் அளிக்கப் பெற்றது. அபிடேகத்துக்குப் பல குடங்கள் பால் அனுப்பப் பெற்றன. விசாலாட்சி கோயில் திருவிழாக்களுக்கு இறைவியைக் காசி நகரின் சில தெருக்களில் நகரத்தார் ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். இதற்கென, அரசாங்கத்தார் சிறப்பான முறையில் பல ஏற்பாடுகளைச் செய்தனர்.

1942-இல் பர்மாவிலிருந்து பணம் வருவது தடைப்பட்டது. இருப்பினும், அறச்செயல்கள் நின்றுவிடவில்லை. அன்னதானத்தின் அளவு மட்டும் சுருக்கப் பெற்றது. பூசைகளும் ஏனைய செயல்களும் செம்மையாக நடைபெற 1943-இல் நன்கொடை வசூலிக்க ஒரு குழு அமைக்கப் பெற்றது.

சுபானு ஆவணி 24-இல் 9-9-1943 இல் காரைக்குடி அறுபத்துமூவர் குருபூசை மடத்தில் நகரத்தார்கள் கூடி, காசி நகரச் சத்திரத்தின் தற்காலிக நிர்வாகத்துக்கு ஒரு குழுவை அமைத்தனர்.

தேவகோட்டை அள.சுப.பழ.சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் இக்குழுவின் தலைவராயும், காரைக்குடி மெ.செ.ச.சிதம்பரம் செட்டியார் அவர்கள் செயலாளராகவும் கானாடுகாத்தான் மு.சித.மு.சிதம்பரம் செட்டியார் அவர்கள் பொருளாளராகவும் இருந்து சத்திரம் தொடர்ந்து பணியாற்ற உதவினர்.



இந்த 100 ஆண்டுகளில் பல்லாயிரக்கணக்கான நகரத்தார்களும் ஏனைய சமூகத்தினரும் இச் சத்திரத்தில் தங்கியுள்ளனர். சத்திரத்தில் தங்கியவர்களுள், தமிழ்நாட்டு முதலமைச்சராக இருந்த காமராசர் அவர்களும் ஒருவர் ஆவார். சத்திரத்திற்கு அடிக்கடி வருகை புரிந்து அதன் நிர்வாகத்தைப் போற்றிய பெருமக்கள் மிகப்பலர். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள்.

நகரத்தார்கள் காசிச் சத்திரத்துக்காகவும் அதன் கிளைகளுக்காகவும் இதுவரை மூலதனச் செலவாகவும் நடைமுறைச் செலவாகவும் ஐம்பது இலட்சம் ரூபாயை வாரி வழங்கியுள்ளனர். இந்த தொகை முழுவதும் நகரத்தார்களால் மட்டுமே கொடுக்கப் பெற்றது. காசி நகரச் சத்திரத்துக்கும் அதனொடு இணைந்த நிறுவனங்களுக்கும் நகரத்தார் அல்லாதாரிடமிருந்து நன்கொடை பெறுவது கிடையாது.

நகரச் சத்திரத்தின் ஆட்சியில் அவ்வப்போது ஏற்படும் சிக்கல்கள் பலவாகும். குறிப்பாக 1942-43 இல் பொருளாதார நெருக்கடியும் இருந்தது. ஆயினும், ஒருவேளை கூட சத்திரத்தின் ஆக்க வேலைகள் தடைப்பட்டதில்லை. நகரத்தார் தம் கடமையில் தவறவும் இல்லை. காசி விசுவேசர் திருவருளே இதற்குக் காரணம் ஆகும். 'அவன்' அருளாலேயே இனிது நடைபெற்று வந்திருக்கிறது. வருங்காலத்திலும் இறைவன் திருவருளை நம்பியே நகரத்தார்கள் தொடர்ந்து இந்த அறங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

பசுமடம்

விசுவேசருக்கு அபிடேகம் செய்ய தூய்மையான பால் குறித்த நேரங்களில் கிடைப்பதற்கான ஓர் ஏற்பாட்டையும் நகரத்தார்கள் செய்திருக்கிறார்கள். சொந்தமாகவே பசுமடம் தொடங்கினர். அதற்குரிய இடத்தை நகரச் சத்திரத்திற்கு அருகிலேயே வாங்கி 15-1-1897 இல் கட்டிடம் கட்டி முடித்தனர். இதில் சொந்தமாக பசுக்களை வைத்துப் பால் கறந்து அபிடேகம் நடத்தி வந்தனர்.

இரண்டாம் உலகப்போரின் விளைவாக, சத்திரத்தின் ஆட்சி முறையிலும் நடைமுறையிலும் வரவு செலவிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. இவற்றால், விலைப்பால் வாங்கி, அபிடேகத்திற்கு அனுப்பப் பெறுகிறது. சத்திரத்திற்கு பால் விற்பனை செய்யும் வணிகர் தங்கள் பசுக்களைக் கட்டிக்கொள்ள பசுமடத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

நந்தவனம்

காசி விசுவேசருக்கு நாளும் நறுமலர்களை அனுப்ப நந்தவனம் ஒன்றை நகரத்தார்கள் நடத்தி வருகின்றனர். 1894-ஆம் ஆண்டில், சிக்ரா பகுதியில் பெரியதோர் இடம் வாங்கி நந்தவனம் அமைக்கப்பெற்றது. மீண்டும் 1902-லும், 1905-லும் புதிதாக இடங்கள் வாங்கி நந்தவனம் விரிவாக்கப் பெற்றது. நந்தவன வேலைக்கெனத் தனியே ஆட்கள் நியமிக்கப் பெற்றுள்ளனர். குறித்த நேரத்தில் மலர்கள் அங்கிருந்து அனுப்பப் பெறுகின்றன.

இரங்கூன் நாலறை நகரத்தார்கள் அந்நகரில் நடத்திய நந்தவனத்துக்குரிய நிதியை 1955-இல் காசி நகரச் சத்திரத்துக்குக் கொடுத்து உதவினர்.



காசி விசுவநாதர் கோவில்

இங்கு உச்சிக் காலத்திலும் அர்த்தசாமத்திலும் நகரத்தார்கள் பெயருக்கு ஒவ்வொரு நாளும் அஷ்டோத்ர அர்ச்சனை நிகழ்கிறது.

விசுவேசருக்கு உஷத் காலத்தில் பத்தாஸ் மிட்டாயும், உச்சிக் காலத்தில் பருப்புப் பொங்கலும், அர்த்தசாமத்தில் சர்க்கரைப் பொங்கலும் நகரச் சத்திரத்திலிருந்து அனுப்பப்பெறும் பொருள்களைக் கொண்டு கோயில் மடைப்பள்ளியில் செய்து நைவேத்யமாகச் செய்யப்படுகின்றன. இவ்வாறே ஏகாதசி நாளில் அல்வாவும் சோமவார உச்சிக் காலத்தில் பூரியும் நகரத்தார் உபயமாக உள்ளன. நகரச் சத்திரத்து மகமையிலிருந்து விசுவேசர் கோயில் பண்டாக்களுக்கு ரூபாய்க்கு ஒரு அணாவும், விசாலாட்சி கோயில் பண்டாக்களுக்கு ரூபாய்க்கு ஒரு அணாவும் கொடுக்கப்பட்டு வருகிறது.

உஷத்கால பூசை, பண்டாக்கள் மட்டுமே இருந்து நடத்தப்படுகிறது. அவர்களுடைய இசைவு பெற்றே, பொதுமக்கள் உஷத்கால பூசையைக் காண இயலும். இந்த இசைவு, நகரச் சத்திரத்தின் வாயிலாக முன்னரே அறிவிக்கும் நகரத்தார்களுக்குப் பண்டாக்களால் எளிதில் வழங்கப்பெறுகிறது. இது நகரத்தார்க்குரிய தனிச் சிறப்புக்களில் ஒன்றாகும்.

சம்போ

சம்போ என்பது சமஸ்கிருதச் சொல். இச்சொல் சிவபெருமானைக் குறிக்கும்.

காசிவிசுவநாதர் கோயிலுக்கு நாள்தோறும் 2 முறை பூசை, அபிஷேக, அலங்காரப் பொருட்கள் நகரச் சத்திரத்திலிருந்து அனுப்பப்படுகின்றன.

காலை 10-40க்கும், இரவு 9-30க்கும் இப்பொருள்கள் சத்திரத்திலிருந்து முறைப்படி எடுத்துச் செல்லப்படுகின்றன. "சம்போ சம்போ சங்கர மகாதேவா" என்று சொல்லிக் கொண்டு, நகரச் சத்திரத்து வேலையாட்கள் அவற்றைக் கோவிலுக்குக் கொண்டு போகின்றனர். அப்போது வழியிலுள்ள மக்கள், கடைக்காரர்கள் ஆகியோர் சம்போவைப் பார்த்துத் தலைவணங்குகின்றனர்.


நகரச் சத்திரத்தின் மாடியிலுள்ள சுப்பிரமணியர் படத்தின் முன்பாகச் சாம்பிராணிக் கலசத்தை வைத்துப் பிறகு கீழே பாதாள ஈசுவரர் கோவிலில் இருந்து தசாங்கம் போட்டு நகரேசுவரர் கோவிலை வலம் வந்து, சம்போ புறப்படும். இக்கோலம் கண்டார் அனைவரும் பக்தியுடன் வழிபடக்கூடிய காட்சியாகும்.

உச்சிக்காலப் பூஜைக்குக் கொண்டுபோகப் பெறும் பொருள்களாவன :

வாசனைத் தைலம், தேன், பன்னீர், ஊதுபத்தி, சூடம், அத்தர், தேசிச்சீனி (பழுப்புச் சர்க்கரை) திருநீறு, சந்தனம், முக்களை வில்வம் 16, அறுகம்புல், பூ மாலை-3, பால் (ஆறேகால் படி), தயிர், பஞ்சாமிர்தம் பிரயாகைக் கங்கை, பூணூல் (யக்ஞோபீதம்), அரிசி (மங்கள அட்சதை).

அர்த்தசாமப் பூசைக்கு மேற்கண்ட பொருள்களுடன் முக்களை வில்வம் 108-ம் சவ்வாது, பட்டு, நாகஆபரணம், பால் அண்டா, பூக்கூடை, வெண்சாமரை, சோடச உபசார ஆரத்திப் பொருள்கள் ஆகியவை வெள்ளிப் பாத்திரங்களில் கொண்டு போகப்படுகின்றன. அவ்வமயம், இரவு 3 மணிக்கு நிகழும் அபிஷேகமான உஷத் காலம் என்னும் திருவனந்தலுக்கு வேண்டிய பொருள்களும் கொண்டுபோய்க் கொடுக்கப்படுகின்றன.

அன்னபூரணி கோயிலுக்கு அபிஷேகப் பொருள்களும், குங்குமமும் ஒரு டலியாவில் வைத்துக்கொண்டு போய்க் கொடுக்கப்படுகின்றன. (டலியா - வட்டமான தூக்குச்சட்டி).



அபிடேக, பூசைப் பொருள்களை இந்துஸ்தானி பிராமணர்கள்தான் தூக்கிக் கொண்டுபோது வழக்கம். அதற்காக, அவர்கள் நால்வரை நகரச் சத்திரத்தில் சம்பளச் சிப்பந்திகளாக நியமித்திருக்கிறார்கள்.

இவர்கள் தவிர, உச்சிக்காலத்தில் ஓர் ஆளும், அர்த்தசாமத்தில் ஆறு பேரும் உடன்போய் உபரிப் பொருள்களை எடுத்துச் செல்லுகின்றனர்.

யாழின் இனிமையில் தானே மயங்கிக் கிடந்தவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர்; அச்சீரிய இசைக் கருவியைப் பற்றி ஆராய விபுலானந்த அடிகளுக்கு உறுதுணையாய் இருந்தவர்கள் நகரத்தார்கள். தமிழருக்குச் சிறப்பாக உள்ள பிறிதோர் இசைக் கருவி நாதசுரம். ஷனாய் வாத்தியமே மங்கல வாத்தியமாகத் திகழும் வட இந்தியாவில் நாதசுரத்தின் புகழை நிலைநாட்டியிருப்பவர்கள் நகரத்தார்கள் ஆவர். உச்சிக்காலம், அர்த்தசாமம் ஆகிய, நகரத்தார்கள் அபிடேகம் செய்யும் இந்த இரண்டு வேளைகளில் மட்டும் நகரச் சத்திரத்து மேளகாரர்கள் மேளம் வாசித்து வருகிறார்கள்.

இந்த அபிடேகக் காலங்களில் நகரத்தார்களுக்கு அர்ச்சனை செய்வதற்கு ஒரு அத்தியான பட்டரை நகரச் சத்திர அலுவலர் நியமித்திருக்கிறார்கள். அவர் பூசை வேளைகளில் காசி விசுவநாதர் கோவிலுக்கு வந்து தயாராக இருப்பது வழக்கம். எவ்வளவு பேர் வழிபட வந்திருந்தாலும், நகரத்தார்களுக்குச் சிறப்பான முறையில் மரியாதை செய்வது கோவில் பண்டாக்களின் பழக்கம் ஆகும். அர்த்தசாமப் பூசைக்குச் சிங்கார பூசை என்று பெயர். காசி விசுவநாதரை வழிபடும் மக்கள் எல்லோரும் இந்தப் பூசையைக் காண்பதையே முக்கியமான கடமையாகவும், பெறற்கரிய பேறாகவும் கொண்டிருக்கின்றனர்.

கடமைகள் வழியாகச் சம்போ அர்த்தசாமத்திற்குச் சென்று திரும்பியதும், வேனிற் காலத்தில் கடைகளை அடைப்பதும், குளிர்காலம், பனிக்காலங்களில் சம்போ கோவிலுக்குச் செல்லும்போது கடைகளை அடைப்பதும் நடைமுறையாக இருந்து வருகிறது. இவ்வகையில் பார்க்கும்போது காசிநகர் வணிகர் தம் வாழ்வை வகைப்படுத்துவது நகரத்தார்களின் சம்போவேயாகும்.

இதிலிருந்து குறித்த நேரத்தில் சம்போ அனுப்பப்படுவதும் தெரியவரும். பஞ்சாப் மெயில் தவறினாலும் கூட, நகரத்தார் சம்போ நேரப்படி வரத் தவறுவதில்லை என்பது பழமொழி. 1942ஆம் ஆண்டில் வெள்ளையனே வெளியேறு என்ற இயக்கம் நடைபெற்று, காசி மாநகரில் கலகங்கள் நிகழ்ந்தன. ஊரடங்குச் சட்டம் போடப் பெற்றது. அப்போதும்கூட விதிவிலக்குப் பெற்று, சம்போ உரிய நேரத்தில் சென்று வந்தது. இது வரலாற்றில் குறிப்பிடத்தக்கது.

குளிர்காலச் சட்டை

ஐப்பசி மாதம் வசந்த பஞ்சமியிலிருந்து மாசி மாதம் சிவன் ராத்திரி வரை, குளிர்காலமாக இருப்பதால் விசுவேசருக்குக் குளிர்காலச் சட்டை (மக்மல் பட்டு) அணிவிக்க நகரத்தார்கள் கட்டளை ஏற்படுத்தி அவ்வாறு நடைபெற்று வருகிறது.

மடைப்பள்ளி

விசுவேசர்க்கு நாக ஆபரணம், மேற்படி சொர்ணக்கிரீடம், பள்ளியறைக்கு வெள்ளிக்கட்டில் ஆகியவை நகரத்தார்களால் செய்யப் பெற்றிருக்கின்றன. விசுவேசர் கோவில் மடைப் பள்ளியும் நகரத்தார்களால் கட்டிக் கொடுக்கப் பெற்றதே ஆகும். நைவேத்தியம் வைப்பதற்கு உள்ள நாற்காலிகள், கருவறையைச் சுற்றிலும் நான்கு திக்குகளிலும் போடப்படும் திரைகள் ஆகியவையும் நகரத்தார்களின் உபயமே. நைவேத்தியத்துக்கும் தீபத்துக்கும் வேண்டும் பொருள்கள் யாவும் ஒவ்வொரு நாளும் நகரச் சத்திரத்திலிருந்து



விசுவேசர் கோவிலுக்கு அனுப்பப் பெறுகின்றன. அபிடேகத்திற்குரிய கங்கை நீர் வைப்பதற்குத் தாமிர அண்டா. கோபுரத்தின்மீது மெர்க்குரி விளக்கு ஆகியவையும் நகரத்தார்கள் திருப்பணிகளே.

பிரதோஷ நாட்களில் விசுவேசர் கோயிலில் மாலை 5 மணிக்குப் பிரதோஷ பூஜை நடைபெறும். அந்தப் பூசைக்காக, பூ, பால் நீங்கலாக ஏனைய பூசைப் பொருள்கள் யாவும் கொண்டு போகப்படுகின்றன. இவை தவிர காப்பரிசி செய்வதற்காக அரிசியும், வெல்லமும் நகரச் சத்திரத்திலிருந்து அனுப்பப் பெறுகின்றன.

பள்ளியறைக் கட்டில் அங்குள்ள ஏனைய வெள்ளிச் சாமான்கள் யாவும் நகரத்தார்களால் மகாவீர் பிரசாத் பண்டாவிடம் ஒப்புவிக்கப் பெற்று விசுவேசர் கோயிலில் இருந்து வருகின்றன.

விசாலாட்சி கோயில்

ஸ்ரீ காசி விசாலாட்சி அம்மன் கோயில் நகரத்தார்களால் கட்டப்பெற்று அவர்களுடைய நிர்வாகத்திலேயே இருந்து வருகிறது. இக்கோயில் கட்டப் பெற்றது 1893 ஆம் ஆண்டு அளவில் என்று தெரிகிறது. இக்கோயிலுக்கு 1908ல் பிலவ ஆண்டு தை 25ல் கும்பாபிடேகம் செய்து வைக்கப் பெற்றது. விசாலாட்சி அம்மனுக்குத் தங்க விக்கிரகமும், வெள்ளித திருவாச்சியும் செய்யப் பெற்றுள்ளன. இந்த அம்மன் மிகுதியான ஆற்றல் பெற்றது.

இக்கோயிலில் உள்ள பிற திருவுருவங்கள் - சிவலிங்கம், தண்டாயுதபாணி, விநாயகர், சண்டிகேசுவரர், நவக்கிரகங்கள்.

உற்சவம் - நவராத்திரி.

மகாசிவராத்திரியன்று 4 கால அபிடேகம் உண்டு.

உற்சவ விக்கிரகம் - விசாலாட்சி அம்மன். இந்த மூர்த்திக்குப் பௌர்ணமிதோறும் அபிடேகம் உண்டு. நவராத்திரியில் வெள்ளி அங்கியும், தங்கக் கவசமும் அணிவிக்கப் பெறும். நவராத்திரி கடைசி நாளில் அதாவது மகார் நோன்பு (விஜயதசமி) அன்று, மூலத்தானத்தில் தங்க விசாலாட்சி எழுந்தருளியிருக்க, உற்சவமூர்த்தியாகிய விசாலாட்சி அம்மன் குதிரை வாகனத்தில் கோவிலுக்குள் வலம் வந்து அம்பு விடும்,

நாடோறும் நடைபெறும் பூசை

காலை 10-30 மணிக்கு காலசந்தி, மாலை 6 மணிக்கு சாயரட்சை, உச்சிக் காலத்திற்கு நகரச் சத்திரத்திலிருந்து பால், தயிர், தேன், பஞ்சாமிர்தம், பன்னீர், பழுப்புச் சீனி, சந்தனம், விபூதி, குங்குமம், அத்தர், பூ, நெய்விளக்கு ஆகியவை அனுப்பப் பெறுகின்றன.

தேவி மகாத்மியப் பாராயணம் ஒரு சாஸ்த்திரியால் நாள்தோறும் மாலை 5 மணி அளவில் செய்யப்படுகிறது.

செவ்வாய்க் கிழமைகளிலும் வெள்ளிக் கிழமைகளிலும் சாயரட்சையில் மேளம் வாசிக்கப்படுகிறது. விசாலாட்சி கோவில் திருப்பணிக்காகச் சுபகிருது ஆண்டு தை, மாசி, பங்குனி சோபகிருது ஆண்டு சித்திரை மாதங்களில் இரங்கோனிலும், பர்மாவின் பிற பகுதிகளிலும் நன்கொடை வசூலிக்கப்பெறுகின்றது.



காசி நகரச் சத்திரத்திலுள்ள கோவில்கள்

1. பாதாள ஈசுவரர் கோயில்

இந்தக் கோவிலில் 4 சிவலிங்கங்களும் ஒரு நந்தியும் ஒரு பாவை விளக்கும் உள்ளன.

சத்திரத்தின் ஒரு பகுதி நகரத்தார்கள் விலைக்கு வாங்குமுன் ஹிந்துஸ்தானி கோஷாயி சாதுக்கள் மடமாக இருந்தது. அந்த மடத்தில், பெருமதிப்பிற்குரிய துறவி ஒருவர் சமாதியடைந்தார். அவ்விடத்தில் சிவலிங்கங்கள் பிரதிட்டை செய்யப்பெற்றன. இந்த லிங்கங்களுக்குப் 'பாதாள ஈசுவரர்' என்ற பெயர் நிலவிவருகிறது. பாதாள ஈசுவரரின் பெருமையே இச்சத்திரம் அடைந்துள்ள பெரு முன்னேற்றத்திற்கு காரணம் என்று நகரத்தார்கள் நம்புகிறார்கள்.

காசி யாத்திரை மேற்கொள்வோர் அறிந்தோ அறியாமலோ, செய்திருக்கக்கூடிய தவறான செயல் களுக்குப் பிராயச்சித்தமாக, காசியைவிட்டு புறப்படுமுன், பாதாள ஈசுவரர்க்கு அபிடேகம் செய்வது வழக்கம்.

2. அன்னபூரணி கோவில்

அன்னம் பாலிக்கும் மண்டபத்தில் கருங்கல் திருவுருவம் நிறுவப் பெற்றிருக்கிறது.

3. மானேஜர் பெட்டியடிக்கு அருகே சுப்பிரமணியர், நடராசர், பரமசிவன் - பார்வதி படங்கள் உள்ளன. கோவில்களில் பூசை நடக்கும் நேரங்களில் இந்தப் படங்களுக்கும் தீப ஆராதனை செய்யப்பெறுகிறது.

4. நகரேசுவரர் கோயில்

இந்தக் கோயிலில் உள்ள சிவபெருமானுக்கு நகரேசுவரர் என்றும், இறைவிக்கு நகரேசுவரி என்றும் பெயர். கோயிலின் வெளிவாயிலுக்கு வெளியே மேற்குப் பக்கத்தில் கிழக்குப் பார்த்தமுகமாக ஒரு விநாயகர் திருவுருவம் இருக்கிறது. நகரேசுவரருக்கு திருவாச்சி உண்டு. இது கல்கத்தா தண்டாயுதபாணி கோயிலில் இருந்து கொண்டு வரப்பெற்றது. நகரேசுவரருக்கு எதிரில் நந்தியும் கருவறையின் வாயிலில் பிள்ளையார் தண்டாயுதபாணி திருவுருவங்களும் அமைந்துள்ளன. சுற்றுப்பிரகாரத்தில் கருவறை மதிலில் தட்சிணாமூர்த்தி, அண்ணாமலையார், பிரம்மா திருவுருவங்களும் பிரம்மாவுக்கு எதிரில் சண்டிகேசுவரர் திருவுருவமும் காணப்பெறுகின்றன.

கருவறை மதிலுக்கு எதிரில் சுற்றுப் பிரகாரத்தில் நந்தியுடன் கூடிய 50 சிவலிங்கங்கள் நிறுவப்பெற்றுள்ளன. தென்மேற்கு மூலையில் விநாயகரும் வடமேற்கு மூலையில் வள்ளி தெய்வானையுடன் கூடிய சுப்பிரமணியரும் காட்சி கொடுக்கின்றனர். இவ்விரு திருவுருவங்களுக்கும் நடுவே உற்சவ விநாயகரும், 2 வேல், இடும்பன் ஆகியவையும் இருக்கின்றன. கல்கத்தாவிலிருந்து சின்ன வீட்டுக்காரர்களால் இவை கொண்டுவரப்பெற்றன. சுற்றுப்பிரகாரத்தின் வடபகுதியில் நகரேசுவரிக்கு உட்கோயில் உள்ளது. அதையடுத்து (1) மாணிக்கவாசகர் (2) நடராசர் (3) சிவகாமி அம்மன் (4) வள்ளி தெய்வானையுடன் கூடிய சுப்பிரமணியர் ஆகிய நான்கு உற்சவ விக்கிரகங்கள் உள்ளன. வடகிழக்கு மூலையில், வயிரவர் விக்கிரகம் காணப்படுகிறது.

வழக்கமான பூசை

காலை 10-30 கால சந்தி, காசி கங்கை அபிஷேகம், பால் அபிஷேகம், சுத்தான்னம் நைவேத்தியம், மாலை 7 மணிக்கு சாயரட்சை, சுத்தான்னம் சுண்டல், காசி கங்கை, பால் அபிஷேகங்கள். இரவு 9 மணிக்கு அர்த்தசாமம், பாசிப் பருப்புப் பாயசம்.



தமிழ்ப் புத்தாண்டு அன்று புண்ணிய வாசகம் செய்து 2 கலசங்கள் வைத்து பூசை செய்து நகரேசுவரர் சந்நிதியில் பஞ்சாங்கம் படிக்கப்பெறுகிறது. சோமவாரத்திலும் சுக்கிரவாரத்திலும் நகரத்தார் பெயருக்கு அர்ச்சனை செய்யப்படுகிறது. பிரதோச நாட்களில் பிரதோசப் பூசை நடைபெறுகிறது. கார்த்திகை தோறும் சுப்பிரமணியருக்கு பால், தயிர், பஞ்சாமிர்த, விபூதி, சந்தன அபிஷேகம் உண்டு. வெள்ளி மயில் வாகனத்தில் சுப்பிரமணியர் புறப்பாடு நிகழும். திருக்கார்த்திகையன்று கோயில் முழுதும் தீபம் போடப் பெறுகிறது.


பிள்ளையார் சதுர்த்தியன்று பிள்ளையாருக்கு அபிஷேகம் அலங்காரம் நடைபெறுகின்றன. மார்கழித் திருவாதிரை உட்பட ஓர் ஆண்டுக்கு 6 நாட்களில் நடராசருக்கும் மாணிக்கவாசகருக்கும் ருத்ர ஜெபம் செய்து அபிஷேகங்கள் நடைபெறுகின்றன.

தீபாவளி, மகாசிவராத்திரி முதலிய காலங்களில் யாத்திரிகர் தனி இரயில் வரும் சமயம் தங்க விசாலாட்சியம்மனை நகரேசுவரர் கோயிலில் வைத்து பூசை செய்யப்பெறுகிறது. ஏனைய நாட்களில் 51 ரூபாய் கட்டினால் இந்தக் காட்சியை யாவரும் கண்டுகளிக்கலாம்.

நாகரேசுவரருக்கு வெள்ளி நாகாபரணமும் நகரேசுவரிக்கு வெள்ளி அங்கியும் உண்டு. ஒவ்வொரு நாளும் இரவு 8 மணி முதல் 9 மணிவரை பஜனை, தேவார திருவாசகப் பாராயணம் நடைபெற்று வருகிறது. மார்கழி மாதம் திருப்பள்ளி எழுச்சி 30 நாட்களும் சித்திரான்ன நைவேத்தியத்துடன் நடைபெறுகிறது.

காசியில் நகரத்தார்கள் ஏற்படுத்தியுள்ள கட்டளைகள்

* பால் கட்டளை
* பசுமடக் கட்டளை
* நந்தவனக் கட்டளை
* வில்வம் அட்சதை அறுகம்புல் கட்டளை
* புனுகு சட்டக் கட்டளை
* கற்பூரக் கட்டளை
* அத்தர்க் கட்டளை
* விசாலாட்சி அம்பாள் திருப்பள்ளி எழுச்சிக் கட்டளை
* விசாலாட்சி அம்பாள் பால் அபிஷேகக் கட்டளை
* அன்னபூரணி அம்பாள் பால் அபிஷேகக் கட்டளை
* உபதான அரிசிக் கட்டளை
* சாதுக்கள் போஜனக் கட்டளை
* பிராமண போஜனக் கட்டளை (இது 1863 இல், அதாவது ருத்ரோத்காரி தை 12 வங்காள நகரத்தார் சனம் 18க்கு வரவான ரூபாய் 9,000ஐக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.)
* சில்லறை பிராமண போஜனக் கட்டளை
* வெள்ளிச் சாமான்களை நல்முறையில் வைத்துப் பாதுகாப்பதற்குப் பண்டு முதல் கட்டளை.
* சாதுக்கள் ஏழைகளுக்கு நித்தியப்படி கட்டளை.
* சோமவாரக் கட்டளை.



* கியாஸ் லைட்டுக் கட்டளை (மின்சார விளக்கு ஏற்படும் வரை இந்தக் கட்டளை இருந்து வந்தது.)
* அன்னதானக் கட்டளை
* நகரேசுவரர் கோவில் சிவலிங்கப் பிரதிஷ்டைக் கட்டளை.
* நைவேத்தியக் கட்டளை.
* வயிரவர் தீபக் கட்டளை.
* முத்தி மண்டப தீபக் கட்டளை.
* திருவனந்தல் கட்டளை.
* வில்வ ஆரக் கட்டளை.
* சாம்பிராணிக் கட்டளை.
* கங்கை அபிஷேகக் கட்டளை.
* அன்னதான அகண்ட தீபக் கட்டளை முதலிய பல கட்டளைகள்.

கயை

கயை, பீகார் இராச்சியத்திலுள்ள புனிதத் தலம். பல்குனி ஆற்றின் கரையில் அமைந்த கோவிலில் விஷ்ணு பாதம் இருக்கிறது. இப்பாதத்தில், முன்னோர்களுக்காகப் பிண்டம் போடுவதை இந்துக்கள் புனிதமான கடமையாகக் கொண்டிருக்கிறார்கள். காசிக்குப் போகத் தொடங்கியது முதலே நகரத்தார்கள் கயைக்கும் போய், தல சிரார்த்தம் செய்து பிண்டம் போட்டு வந்திருக்கின்றார்கள். மனிதன் பற்றற்றவனாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தினால் விருப்பமான பழம் காய் இலை முதலிய மூன்றிலும் ஒவ்வொன்றை இனிக் கைவிடுவதாக வட பால விருட்சத்தில் உறுதி செய்து கொடுப்பது இந்தத் தலத்தில் வழக்கமாகும்.

பல்லாண்டுகள் வாடகைக் கட்டிடத்தில் கயை நகரச் சத்திரம் நடைபெற்று வந்தது. 1884-இல் ரூ.2500க்கு ஒரு இடம் சான் சவுரா என்னும் பகுதியில் விலைக்கு வாங்கப் பெற்றது. 1911இல் ரூ.2500க்கும் 1928இல் ரூ.1800க்கும் இடங்கள் வாங்கப்பெற்றன. இவற்றில் நகரச் சத்திரம் கட்டப்பட்டு நந்தவனம் உண்டாக்கப்பட்டது. நகரச் சத்திரம் செட்டிநாட்டுப்பாணியில் நன்றாக கட்டப் பட்டிருக்கிறது. இங்கு நடராஜர் திருவுருவம் பிரதிட்டை செய்யப்பெற்றிருக்கிறது. இரண்டு காலப் பூசை உண்டு. நாள் தோறும் 5 பிராமணர்களுக்கும் 10 சாதுக்களுக்கும் அன்னதானம் 1942 வரை போடப்பட்டது. நந்தவனம் இப்போது பொரும்பாலும் அழிந்துவிட்டது.

விஷ்ணு பாதத்தில் ஏறத்தாழ நூறு ஆண்டுகளாக நகரத்தார்கள் பால் அபிடேகம் செய்தும் நெய் தீபம் போட்டும் வந்திருக்கின்றார்கள். விஷ்ணு பாதத்தருகே அந்த மண்டபத்திலேயே நகரத்தார்கள் ஒரு சிவலிங்கத்தையும் ஓர் அம்மனையும் பிரதிட்டை செய்திருக்கிறார்கள். 1926 முதல் 1942 வரை விஷ்ணு பாதத்தில் சந்தனக்காப்புச் சாத்தி வந்தனர். நகரத்தார்களுக்கென்று இவ்வூரில் பண்டாவும் சாஸ்திரிகளும் நியமிக்கப் பெற்றிருக்கிறார்கள்.

விஷ்ணு பாதத்திற்கு நகரத்தார்கள் நாள்தோறும் நெய் தீபம் பால் அபிடேகம் செய்து வருகிறார்கள். அதன்பிறகு நடக்கும் விஷ்ணு பாத அலங்கார சந்தன சாத்துப்படி நடத்தியவர்கள் அத்திட்டத்தை ஒழுங்காக நடத்தவில்லை. ஆகையால் கயை வாசிகள் அட்சய ஆண்டு ஐப்பசி மாதம் 3உ 19.10.1926 இல் கூட்டம்



கூட்டி அந்தக் கட்டளையை ரத்துச் செய்து சந்தன சாத்துப்படி நடத்திவருமாறு நகரத்தார்களைக் கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றினர். இந்த வேண்டுகோளை நகரத்தார்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். இதில் நீதிபதியும் மற்ற கனவான்களும் பெரிய மனிதர்களும் பண்டாக்களும் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். இதிலிருந்து நெடுங்காலமாகக் கயைவாழ் பெருமக்கள் நகரத்தார்களின்பால் கொண்டிருந்த பேரன்பு வெளிப்படுகிறது.

கல்கத்தா

நகரத்தார்கள் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் செய்த துறைமுகப் பட்டினங்களில் கல்கத்தா முக்கியமானது. கி.பி.1800 அளவில் இவர்கள் கல்கத்தாவுக்கு வந்ததாகத் தெரிகிறது. கல்கத்தாவிலிருந்து பர்மாவுக்கும் இலங்கைக்கும் அரிசி நவதானியம் முதலியவற்றை ஏற்றுமதி செய்து வந்தார்கள். ஏறத்தாழ 120 கடைகள் இருந்து வந்தன.


நகரத்தார்கள் நடத்திய கடைகள் அந்நியநாட்டு வியாபாரச் சங்கங்களுடனும் ஆங்கிலேய கம்பெனிகளுடனும் வணிக உறவு கொண்டு அவர்களால் பெரிதும் மதிக்கப்பட்டன. எல்லாக் கடைகளிலிருந்தும் ஏற்றுமதி செய்த பொருள்களுக்கு, கப்பல் கட்டணத்துக்கு செலுத்திய தொகைகளில் 100 ரூபாய்க்கு 5 ரூபாய் வீதம் ஆண்டு இறுதியில் கப்பல் கம்பெனியிலிருந்து திருப்பி வாங்கப்பட்டது. இவ்வாறு கிடைத்த ரிபேட் தொகையை தருமப்பொதுப் பண்டு என்று வைத்திருந்தார்கள். இவ்வகையில் ஆண்டுதோறும் ரூபாய் 25,000 வரை வருவாய் வந்துகொண்டிருந்தது.

முர்க்கியாட்டாவில் கன்னிங் தெரு 40 ஆம் வீட்டில் எல்லாக் கடைகளும் இருந்து வந்தன. அந்த வீட்டிலேயே வேல் ஒன்றைப் பிரதிட்டை செய்துவைத்தார்கள்.

1840 வரை கல்கத்தா நகரத்தார்கள் எல்லோரும் ஒற்றுமையாய் இருந்து வந்தனர். பிறகு சிறிது சிறிதாக ஒற்றுமை சீர்குலைந்தது. காரைக்குடி சேகரம், தேவகோட்டை சேகரம் என்று இரு கட்சிகள் ஏற்பட்டன. அப்போது இருந்தர்களுக்குள் வயதானவர்கள் 4 பேரை மத்தியஸ்தராக வைத்து, வீட்டை ஒருகட்சிக்கும் சுவாமியை இன்னொரு கட்சிக்குமாக வழங்க திருவுளச் சீட்டுப் போட்டனர். காரைக்குடியாருக்கு சுவாமியும் தேவகோட்டையாருக்கு வீடும் விழுந்தன.

காரைக்குடியார் உடனே சுவாமியையும் பொருள்களையும் எடுத்துக்கொண்டு கன்னிங் தெரு 64ஆம் வீட்டுக்கு மாறினர். தேவகோட்டையார் உடனே தேவகோட்டைக்கு எழுதி வேலாயுதம் செய்து வரவழைத்தனர். அந்த வேலாயுதத்துக்கு "சிங்கார முருகேசர்" என்றும் அந்த வீட்டுக்கு "பெரியவீடு" என்றும் பெயரிட்டனர். அதுமுதல் தேவகோட்டை சேகரத்துக்கு பெரியவீடு என்றும் காரைக்குடி சேகரத்துக்கு சின்னவீடு என்றும் பெயர்கள் வழங்கி வரலாயின.

பெரிய வீட்டுக்காரர்கள் சில ஆண்டுகள் கழித்து எஸ்ரா தெரு 48ஆம் கட்டிடத்துக்கும் அதன் பிறகு அதே தெருவில் 54ஆம் கட்டிடத்திற்கு மாறினர். அந்த வீட்டில் பூமியதிர்ச்சி ஏற்பட்டு, கன்னிங் தெரு 40 ஆம் கட்டிடத்துக்குக் குடிபோய் அதில் 17 ஆண்டுகள் (1898 முதல் 1915 வரை) இருந்தார்கள். பிறகு லோயர் சித்பூர் ரோடு 180 ஆம் கட்டிடத்தில் 1921 நவம்பர் வரை இருந்தனர். கோவில் வீடுகள் இரண்டு ஏற்பட்டமையால் மகமைகள் தனித்தனியாக அந்தந்த வீட்டுக்காரர்களால் எழுதப் பெற்றன.



19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் 120 கடைகள் இருந்தன. ஆனால் அவை படிப்படியாகக் குறைந்தன. 1861ல் சூயஸ்கால்வாய் திறக்கப்பட்டதும் பர்மா அரிசிக்கு ஐரோப்பாவில் நிலையான மார்க்கட் ஏற்பட்டது. அதன் விளைவாகக் கல்கத்தா நகரத்தார்கள் சிலர் அரிக்கனில் நெல் அறைக்கும் இயந்திரங்களை நிறுவினர். சிறிது சிறிதாக இரங்கூனில் நகரத்தார்களின் கடைகள் கூடிக்கொண்டு வந்தன. இவ்வாறு ஏற்பட்டபோது கல்கத்தா நகரத்தார்களும் இரங்கூனில் தொழில் தொடங்கினர். இரங்கூனில் தொழில் லாபகரமாக நடைபெற்று வந்ததும் கல்கத்தாவில் தொழில் சுருங்கிற்று. இரங்கோன் தொழிலுக்கு குறைந்த வட்டிக்குக் கல்கத்தா வங்கிகளிலும் மார்வாரிகளிடமும் பணம் கடன் வாங்கி வேன் வட்டிக்கு இரங்கோனில் அடைப்பதே கல்கத்தா கடைகளின் முக்கியமான தொழிலாக இருந்து வந்தது. மார்வாரிகள் நாள்தோறும் பெரியவீட்டுக்கும் சின்னவீட்டுக்கும் வந்து தாங்கள் அடைக்க வேண்டிய பணத்தை செட்டிய வீட்டில், கூடுதலான வட்டிக்கு ஏலம் கேட்ட கடையில் பணத்தை அடைப்பது வழக்கமாக இருந்தது.

கடைகளின் எண்ணிக்கை 120-லிருந்து 43 ஆக குறைந்தது. அதன் பிறகு கடைகள் கூடியும் குறைந்தும் வந்தன. 1883ஆம் ஆண்டில் வங்காள நகரத்தார்கள் ஒற்றுமையாக இருந்து கப்பல் கம்பெனிகளிடம் 100க்கு ஒரு ரூபாய் வீதம் மட்டுமே கமிஷன் வாங்குவதென்றும் யாரும் கூட்டியோ குறைத்தோ கமிஷன் வாங்குவதில்லை என்றும் ஒப்பந்தம் செய்து கொண்டதிலிருந்து இந்த விவரம் தெரிகிறது. இந்த ஒப்பந்தத்தில் கீழ்க்கண்ட கடைக்காரர்கள் கையொப்பம் இட்டிருக்கிறார்கள்.

1.அரு.லெ.	2.வெ.அரு.	3.மெ.செ.	4.வயி.நாக.ராம	5.வீ.மு.	6.நாக.மு.ப.வ
7.அழ.ப.	8.அ.ராம.	9.வெ.வீர.அ	10.அள.மெ.சு	11.மெ.அரு.சித	12.ராம.மெ
13.பெரி.சுப.தெ	14.சி.கரு.சி	15.அ.க.	16.மு.ராம.ப	17.கும.பெரி	18.ராம.சா
19.ந.பெரி.	20.க.ராம.ராம.கு	21.மெ.ப.	22.சா.ராம.	23.சுப.வ.	24.பழ.நா.
25.பெ.மெ.	26.பழ.சு.அரு	27.வீ.க.அ	28.பழ.சுப.லெ	29.நா.முரு	30.ராம.லெ.
31.முரு.மு	32.அ.ராம	33.ராம.அரு.அரு	34.குழ.மெ.	35.பெரி.க.அரு.	36.கு.பழ.சு
37.ப.ராம.லெ	38.ம.பழ.	39.ராம.ப.	40.சா.சா	41.அ.செ.சு	42.சி.ராம.க
43.நா.பழ.					

பெரிய வீட்டுக்காரர் என்பதை "பிக் செட்டி பிரதர்ஸ்" என்றும் சின்ன வீட்டுக்காரர் என்பதை "ஸ்மால் செட்டி பிரதர்ஸ்" என்றும் வெள்ளைக்காரர்கள் குறிப்பிட்டு வந்தார்கள்.

சிங்கார முருகேசருக்கு உற்சவம் நடத்த வேண்டுமென்று இரண்டு வீட்டு நகரத்தார்களும் கூடிப் பேசுவதற்காக பார்த்திப ஆண்டு பங்குனி மாதத்தில் (1886ல்) கூட்டம் கூட்டினார்கள். ஆண்டுக்கு ஒரு வீட்டுச் சுவாமியாக மாறி மாறி காளிகாட்டுக்கு சித்ரா பவுர்ணமியன்று போய் வருவதென்று முடிவு செய்யப்பட்டது. திருவுளச்சீட்டு பெரிய வீட்டுக்காரருக்கு விழுந்ததால் முதல் ஆண்டில் பெரியவீட்டுச் சுவாமி காளிகாட்டுக்குப் போய் வந்தது. சித்ராபௌர்ணமி காலத்தில் மழையும் காற்றும் மிகுதியாய் இருந்ததால் 1893 முதல் திருவிழாவைப் பங்குனி உத்திரத்துக்கு மாற்றிக் கொண்டார்கள். அந்த ஆண்டில் கல்கத்தாவில் இருந்து வருகிற சுவாமிக்கு 5 நாட்களுக்கு அபிஷேக ஆராதனைகளும், காளிகாட்டுக்குப் பவனி செல்லும்



சுவாமிக்கு சம்பிரதாய பூஜையும் ஆண்டுதோறும் நடைபெற்றது. இந்த இரண்டு வகைச் செலவுகளுமே காளிகாட் திருவிழாக் கணக்காகச் செய்யப்பெற்றன.


காளிகாட் திருவிழாவுக்கென்று வெள்ளித் தேர் செய்து வைக்கப்பட்டது. அந்த ரதத்தில் உற்சவ விக்கிரகத்தை வைத்துத் தங்க நகைகள் அணிவிக்கப்பட்டதைக் கண்டு வங்காளிகள் அளவு கடந்த மகிழ்ச்சியடைந்தார்கள். நமது உற்சவ மூர்த்திக்கு "சொன்னார் கார்த்திக்" என்று பெயரிட்டு அதை வழிபட்டு வந்தனர். திருவிழாக் காலத்தில் உண்டியல்களில் வங்காளிகள் பணம் போட்டுக் காணிக்கை செலுத்தினர். வெள்ளித்தேர் செல்லுவதற்கு இடையூறு இல்லாதபடி டிராம் போக்குவரத்து. சிறிது நேரம் நிறுத்தி வைக்கப்பட்டது. டிராம், எலக்ட்ரிக், டெலிபோன் முதலிய கம்பிகள் தேரைத் தட்டாதவாறு தேர் செல்லும்போது அவைகள் தூக்கிவைக்கப்பட்டன. இதற்குரிய வசதிகளை உரிய அலுவலர்கள் செய்து கொடுத்து வந்தனர்.

பாண்டு, மேள வாத்தியம் முதலியனவும் தேவாரக் குழுவும் திருவாசகப் பாராயணக் குழுவும் பவனியில் வந்தன. காளிகாட்டில் 5 நாட்கள் சிங்கார முருகேசர் தங்கியபோது நகரத்தார்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் ஏழை மக்களுக்கும் உணவு வசதி செய்யப்பட்டது. சுவாமி சேர்க்கைக்கு வரும்போது ஆங்கிலேய கவர்னர் பவனியில் கலந்து கொண்டு நகரத்தார்கள் செய்த மரியாதைகளைப் பெற்றுக் கொண்டார்.

காலம் செல்லச் செல்ல மீண்டும் நகரத்தார்களுக்குள் இரண்டு கட்சிகள் ஏற்பட்டன. பெரியவீட்டுச் சுவாமி புறப்பாடு காலத்தில் சின்ன வீட்டார் காளிகாட் மடத்தைப் பூட்டிவிட்டார்கள். கல்கத்தா உயர்நீதிமன்றத் தீர்ப்பு, பெரிய வீட்டாருக்கு அனுகூலமாக இருந்ததால் அவர்கள் பூட்டை உடைத்து மடத்தைத் திறந்து திருவிழா நடத்தினர். நகரத்தார்களுக்குள் ஒருவருக்கொருவர் செலவு தொகையை வசூலித்துக் கொள்ளக் கூடாதென்ற எண்ணம் நிலவியது. நீதிமன்றத்தாரின் ஆணை எவ்வாறிருப்பினும் சின்ன வீட்டாரிடம் செலவு தொகை வாங்குவதில்லையென்று பெரிய வீட்டுக்காரர்கள் முடிவு செய்தனர். 1907 ஆண்டு அளவில் தீபாராதனைச் சமயம் பெரியவீட்டு நகரத்தார் ஒருவர் மீது முருகப்பெருமான் அருள் வந்தது. சின்னவீட்டு நகரத்தாரையும் சேர்த்துக் கொண்டு பூசை நடத்தும்படி உத்தரவாயிற்று. வயது முதிர்ந்தவர்கள் நால்வர் வந்து அழைக்க, சின்ன வீட்டுக்காரர்களும் காளிகாட் பூசையில் கலந்து கொண்டனர்.

முதலாவது உலகப்போர் ஏற்பட்டதும் 1914இல் தொழில் நிலைமை மந்தமாகிவிட்டது. சின்ன வீட்டுக் கடைகள் பெரும்பாலும் ஒடுக்கப்பட்டன. கடைகளை ஒடுக்கியவர்களுக்கு வெள்ளி ரதத்துக்காக அவர்கள் கொடுத்திருந்த ரூபாய் சத்திரத்துக் கணக்கிலிருந்து திருப்பிக்கொடுக்கப்பட்டது. சின்ன வீட்டிலிருந்து ஊருக்குப் போனவர்கள் தவிர எஞ்சியிருந்த தீ.சொ. பழ.கரு. ஆகிய இரண்டு கடைகளும் பெரிய வீட்டுக்கு வந்தன. கடைகள் தொகை குறையக் குறைய நிலைமை மாறிக் கொண்டே வந்தது. வெள்ளித் தேர் திருப்பாதிரிப்புலியூர்க் கோவிலுக்கு விற்கப்பட்டது. நகரத்தார்கள் கல்கத்தாவுக்கு வந்தது முதல் வ.பெ.சி.மு. என்ற விலாசம் வைத்து ரூ. 1,17,000 மூலதனத்துடன் சுவாமிக்காக நடத்திவந்த தொழில் சீர்கெட்டு 1909இல் அந்தக் கடை நிறுத்தப்பட்டது.

1940ஆம் ஆண்டுவரை காளிகாட்டில் பங்குனி உத்திரம் சிறிய அளவில் நடைபெற்று வந்தது. மகமை வசூலித்துத் திருவிழாக்களை நடத்தி வந்ததோடு இரண்டு வீட்டுக்காரர்களும் அவரவர் கோவில்களில் அன்றாட பூசைகளை நடத்தி வந்தனர். தொழில் பெருகி வந்ததாலும் கப்பல் கம்பெனியார் வாயிலாக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50,000 வரை ரிபேட் தொகை கிடைத்ததாலும் இன்னும் பல அறச்செயல்கள் செய்ய வேண்டுமென்ற எண்ணம் கல்கத்தா நகரத்தார்களுக்கு ஏற்பட்டது.



கல்கத்தாவுக்கு நகரத்தார்கள் வந்தது முதலே, தலைசிறந்த தலமாகிய காசிக்குப் போய் விசுவேசுவரரை வழிபட்டு வந்தனர். கல்கத்தாவில் தொழிலில்லாத ஏனைய நகரத்தார்களும் சிவபக்தி மேலீட்டால் சிலர் இராமேச்சுரத்திலிருந்து காசி வரை நடந்து சென்றும் வந்தனர். இவ்வாறு காசி யாத்திரை சென்ற எல்லா நகரத்தார்களுமே காசி கேதார கட்டத்தில் குமரகுருபர சுவாமிகளால் 1720இல் கட்டப்பெற்ற குமாரசாமி மடத்தில் தங்கி வந்தனர். அந்த மடத்தில் நகரத்தார்கள் தங்கிய பகுதி செட்டி சத்திரம் என்ற பெயரில் இன்றும் வழங்கி வருகிறது. குமாரசாமி மடத்திற்குச் சிறிது தொலைவில் கங்கைக் கரையில் கேதார கட்டத்தில் அழகாக அமைக்கப்பட்டிருக்கிற கேதார ஈச்சுரர் கோவிலில் சுற்றுப் பிரகாரத்தில் காணப்படும் மீனாட்சி அம்மன் சொக்கலிங்கப் பெருமான் ஆகிய மூர்த்திகள் கல்கத்தா நகரத்தார்களால் பிரதிட்டை செய்யப்பட்டன. பூசை செலவுகள் நெடுங்காலம் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

காசி யாத்திரை செல்லும் நகரத்தார்கள் தொகை பெருகிற்று. கல்கத்தா நகரத்தார்களிடம் தருமப் பண்டு தொகையும் பெருகிற்று. இந்த நிலைமையில் நகரத்தார்களுக்கென்று காசியில் ஒரு சத்திரம் கட்டவேண்டும், சிவராத்திரி போன்ற சிறப்பு நாட்களில் மட்டுமே விசுவேசுவரருக்கு நடத்தி வந்த அபிஷேகம், ஏழைகளுக்கு இட்டு வந்த அன்னதானம் ஆகியவற்றை ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டும் என்ற கருத்துக்கள் கல்கத்தா நகரத்தார்களுக்கு ஏற்பட்டன. அதனால் ஹிந்துஸ்தானி கோஷாயி சாதுக்கள் மடத்தை விலைக்கு வாங்கி புதுப்பித்து, 1863இல் ருத்ரோத்காரி ஆவணி 10ம் நாள் முதல் அந்த இடத்தில் கல்கத்தா நகரத்தார்கள் நகரச் சத்திரம் நிறுவினர்.

விசுவேசுவரருக்குப் பூசைகளை மிகச் சிறப்பாகச் செய்து வந்தனர். கல்கத்தா நகரத்தார்களுடைய மகமை வருவாயில் சின்ன வீட்டுக்காரர் பெரிய வீட்டுக்காரர் இருவருமே அவரவர் கோவிலுக்கு மகமைத் தொகையில் பாதியை மட்டும் வைத்துக்கொண்டு மற்றொரு பாதியை, காசி நகரச் சத்திரத்துக்கு கொடுத்து வந்தனர். தருமப் பணங்கள் பெருகியதற்குத் தகுந்தபடி காசியில் சத்திரத்தை விரிவு படுத்தியும், புதிய சொத்துக்கள் வாங்கியும் அன்னதானம், கோவில் கைங்கர்யம் முதலிய திட்டங்களை முன்னிலும் கூடுதலான முறையில் செய்தும் நகரேசுவரர் கோவில் கட்டியும் கல்கத்தா நகரத்தார்கள் அறச் செயல்களைச் செய்தனர்.

1909இல் சின்ன வீட்டிலுள்ள கடைகளை ஒடுக்கியபோது வேலாயுதம், இடும்பன், விநாயகர் விக்கிரகம் ஆகியவற்றைக் காசிக்கு கொண்டுபோய் நகரேசுவரர் கோவிலில் பிரதிட்டை செய்தும் நகைகளை காசி நகரச் சத்திரத்தில் ஒப்புவித்தும் இருக்கிறார்கள். இவ்வாறே பெரிய வீட்டிலிருந்த ஏராளமான தங்க நகைகளும் 1935இல் காசி நகரச் சத்திரத்தில் ஒப்புவிக்கப்பெற்றன. 1924 வரை காசி நகரச் சத்திரம் கல்கத்தா நகரத்தார்களுடைய மேற்பார்வையில் இருந்து வந்தது. கயா, பிரயாகை, தாரகேசுவரம், கோதாவரி முதலிய இடங்களிலும் கல்கத்தா நகரத்தார்கள் சத்திரங்களை நிறுவினர். காசி நகரச் சத்திரத்துக்கு இன்று முக்கியமான சொத்தாக இருந்து வருவது கல்கத்தா எஸ்ரா தெருவில் உள்ள 34 ஆம் கட்டிடமாகும். 1918இல் கல்கத்தாவில் நகரத்தார்களுக்கு 13 கடைகள் இருந்தன. அடிக்கடி பல வீடுகள் மாறி அல்லற்பட்டதால் 13 பெட்டியடிகளும் இருப்பதற்குச் சொந்தக் கட்டிடம் வேண்டுமென்று அவர்கள் நினைத்தார்கள். காசி சத்திரத்துக்கும் நகரத்தார்கள் மேற்கொண்டுள்ள இன்ன பிற சிவப்பணிகளுக்கும் ஆண்டுதோறும் வருமானம் வரக்கூடிய கட்டிடமாக இருக்கவேண்டுமென்று முடிவு செய்தனர்.

1918 ஆம் ஆண்டு சூலை மாதம் 5ஆம் தேதி எஸ்ரா தெரு, 34ஆம் கட்டிடம் டேவிட் எஸ்ரா என்ற சீமானிடம் ரூ. 1,27,916/10/8 க்கு வாங்கப்பட்டது. இந்தக் கிரயம் கல்கத்தா ரிஜிஸ்ட்ரார் ஆப்




அஸ்யூரன்ஸ்ஸ் அலுவலகத்தில் 1918 ஆம் ஆண்டு 2846 ஆம் கிரயமாக முதற்புத்தகம் 84வது வால்யூமில் 148 முதல் 167 பக்கம் வரை பதிந்திருக்கின்றது. இவ்வாறு வாங்கிய கட்டிடத்தை முற்றிலும் பிரித்து பழைய அஸ்திவாரத்தை மட்டும் வைத்துக்கொண்டு அதன் மீது (கீழ்த்தளம் உட்பட) மூன்று மாடிக் கட்டிடத்தைச் செட்டிநாட்டுக் கட்டிடங்களைப் போலக் கட்டுவதென்று நகரத்தார்கள் முடிவு செய்தார்கள். அத்தகைய பிளானை எட்வர்ட் ஹோப் ஜான்ஸ்டன் என்ற வெள்ளைக்கார என்ஜினியர் சில திருத்தங்களுடன் அங்கீகரித்து புதுக் கட்டிடம் கட்ட கார்ப்பரேஷனில் அனுமதி வாங்கிக் கொடுத்தார். கட்டிடம் கட்டுவதற்கு ரூ.1,22,398/2/9 க்கு அந்த என்ஜினியருடைய சிபாரிசுப்படி தினேஸ் சந்தர்ஸென் என்பவரிடம் 23.8.1920ல் நகரத்தார்கள் கண்டிராக்ட் செய்து கொண்டார்கள். மேற்படி கட்டிடத்தின் இடப்பரப்பு சுமார் 8.1/2 கட்டா. அதாவது ஏறத்தாழ 6120 சதுர அடி. 1921 நவம்பர் மாதம் 2-ந்தேதி இந்தக் கட்டிடத்தில் நகரத்தார் குடிபுகும் விழா சிறப்பாக நிகழ்ந்தது. இதில் நிறுவப்பட்ட சிங்கார முருகேசர் கோவிலுக்கு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சி அக்காலத்தில் ஸ்டேட்ஸ்மேன் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

1918இல் கட்டிடம் அரு.அரு.சோம. ஏஜண்ட் சாமிநாதன் செட்டியார் பெயரால் கிரயம் வாங்கப்பட்டது. அவர் 1921இல் இந்தச் சொத்தை ஒரு டிரஸ்டு சொத்தாக ஏற்படுத்தி அரு.அரு.சோமசுந்தரம் செட்டியாரை டிரஸ்டியாக நியமித்து செட்டில்மெண்டு எழுதி வைத்தார்கள். 1934இல் இந்தச் சொத்து இரங்கூனில் ஏற்பட்ட காசி நகரச் சத்திரத்தின் மானேஜிங் சொசைட்டியின் ஆளுகைக்கு வந்தது. 1955இல் அரு.அரு.சோம.வுடைய வாரிசுகள் மானேஜிங் சொசைட்டிக்கு சகல அதிகாரங்களையும் வழங்கி பவர் ஆப் அட்டார்னி பதிந்து கொடுத்தனர். அவ்வாறே ஒரு அவிடவிட் கையெழுத்திட்டு 5.4.1955 இல் கல்கத்தா கார்ப்பரேஷனுக்கு எழுதிக்கொடுத்தனர். 8.12.1955 முதல் கல்கத்தா கார்ப்பரேஷன் ரிக்கார்டுகளில் இந்தச் சொத்து மானேஜிங் சொசைட்டிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. 27.8.1958 முதல் இது 'நகரத்தார் ஹவுஸ்' என்ற பெயரால் வழங்கி வருகிறது.

1942ல் ஜப்பானியர் பர்மாவைப் பிடித்துக்கொண்டதும் நகரத்தார்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் ஆயிரக்கணக்கானவர் பர்மாவில் இருந்து கால்நடையாக அரிக்கன் சிட்டகாங் பாதை வழியாகவும், மணியுவா இம்பால் மணிப்பூர்ப் பாதை வழியாகவும் அகதிகளாக இந்தியாவிற்கு வந்தனர். அவர்கள் தங்குவதற்கும் சாப்பாடு வசதி செய்வதற்கும், அரசாங்கத்தின் செலவில் இரயில் டிக்கட்டும் மருத்துவ வசதியும் பெறவும் நகரத்தார் ஹவுசில் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது. இது, இந்தச் சங்கத்தின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க முக்கியமான நிகழ்ச்சியாகும்.

நகரேசுவரர் கோவில், கல்கத்தா

இந்தக் கோவில் ஸ்ட்ராண்டு ரோடு 35 நிர். கட்டிடத்தில் இருக்கிறது. இங்கு ஏற்கனவே இரு சிவலிங்கம் அரச மரத்தடியில் இருந்தது. இந்த இடத்தில் நகரத்தார்கள் ரூபாய் 80,000 செலவில் சிவாலயம் கட்டி கும்பாபிஷேகமும் நடத்தினர். இச் சிவலிங்கத்துக்கு நகரேசுவரர் என்று பெயர் வைத்து, நகரேசுவரி என்ற அம்பாளையும் பிரதிட்டை செய்தனர். கோவில் இன்றளவும் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. இரண்டு காலப் பூசை உண்டு. நகரத்தார்களால் நியமிக்கப்பட்ட ஒரு சாஸ்திரிகள் பூசைக் காரியங்களைக் கவனித்து வருகிறார். பூசைப் படித்தரச் செலவுகள் காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மானேஜிங் சொசைட்டியரால் செய்யப்பட்டு வருகின்றன.



பெரிய வீட்டிலிருந்த சிங்கார முருகேசராகிய தண்டாயுதபாணி, இடும்பன், விநாயகர் ஆகிய மூர்த்திகள் எஸ்ரா தெரு 34நிர். வீட்டிலிருந்து 1930 அளவில் நகரேசுவரர் கோவிலில் கொண்டுபோய் வைக்கப்பட்டன. விக்கிரகங்கள் யாவும் கல் திருவுருவங்களாக உள்ளன. சிங்கார முருகேசர் முகம் செம்பால் செய்து தங்க முலாம் பூசப்பெற்றது. இந்த விக்கிரகத்தின் ஏனைய பகுதிகள் சந்தன மரத்தால் செய்யப்பெற்றன. வெள்ளியங்கி உண்டு. மர விக்கிரகம் பழுதடைந்திருப்பதால் கல்லில் சிங்கார முருகேசர் விக்கிரகம் செட்டிநாட்டில் கம்பனூரில் செய்யப்பெற்று அதற்கேற்ற புதிய வெள்ளியங்கியுடன் 1963இல் கல்கத்தாவுக்கு கொண்டுவரப் பெற்றிருக்கிறது. இந்தக்கோவில் கட்டிடத்துக்கும் இடத்துக்கும் யாதொரு வரியும் செலுத்த வேண்டியதில்லை என்றும் விதி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த இடத்தின் பரப்பு ஒன்றே முக்கால் கட்டா அல்லது 1160 சதுரஅடி.

கங்கைக் கரையில் அமைந்து கவர்ச்சியாகக் காட்சி தருவதால் கங்கையில் நீராடுபவர்கள் பல நூறு பேர்கள் கங்கை நீரால் நகரேசுவரருக்கு அபிஷேகம் செய்கிறார்கள். அலுவலகங்களுக்குச் செல்லுபவர்களும் நூற்றுக்கணக்கான இந்துக்களும் இங்கு வந்து வழிபடுவது ஒவ்வொருநாளும் காணக்கூடிய காட்சியாகும்.

காளிகாட்

காளிகாட் என்பது கல்கத்தா நகரத்தார் ஹவுசிலிருந்து 5 மைல் தொலைவில் ஆதிகங்கை என வழங்கப்படும் காளிகாட் ஆற்றின் கீழ்க்கரையில் காளி கோவில் அருகே அமைந்த பகுதியாகும். கல்கத்தாவிலிருந்து சித்ரா பவுர்ணமித் திருவிழா நடத்தியபோது சிங்கார முருகேசரை கல்கத்தா நகரத்தார்கள் காளிகாட்டில் எழுந்தருளச் செய்தனர். அதற்காக 6-9-1878 இல் இடம் வாங்கப்பட்டது. மற்றொரு பகுதி 1885 லும் மூன்றாவது பகுதி 1893லும் வாங்கப்பட்டன. மூன்று இடங்களும் இரு சேகரமாக வந்ததும் திருவிழாத் தேவைக்கேற்ப இரண்டு மாடிக் கட்டிடமாக மடம் கட்டப்பட்டது. விரிவான திண்ணையும் முகப்பில் நடைபாதையில் காங்கிரீட் தார்சும் கூடியது. இக் கட்டிடத்துக்கு அந்நாளிலேயே ரூ. 40,000க்கு மேல் செலவாகியிருக்க வேண்டும்.

திருவிழா நின்ற பிறகு, குடும்பத்துடன் வரும் யாத்ரீகர்கள் தங்குவதற்கு காளிகாட் மடம் பயன்படுத்தப்பட்டது. காளிகாட் மடத்துக்கென்று தனியாக மகமை வசூலிக்கப்பட்டது. அப்போது கல்கத்தா நகர விடுதியில் ஆண் பிள்ளைகள் மட்டுமே தங்கி வந்தனர்.

1945 முதல் காளிகாட்டுக்கு யாத்ரீகர்கள் வருவது பெரும்பாலும் நின்றுவிட்டது. இப்போது இந்தக் கட்டிடம் வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது. கட்டிடம் பழுதான நிலையில் இருந்து வருகிறது.

மேல் வீட்டில் தண்டாயுதபாணி சிலை இருக்கிறது. தினந்தோறும் பூசை நடைபெற்று வருகிறது. காளிகாட் கோவிலின் நுழைவாயிலில் நகரத்தார்கள் சிறியதொரு விநாயகர் கோவிலைக் கட்டியுள்ளனர். இதன் நிர்வாகம் எப்போதுமே காளி கோயில் பண்டாக்களிடம் இருந்து வந்திருக்கிறது.

வெள்ளித்தேரை நிறுத்தி வைப்பதற்காக 106ல் காளிகாட்டில் ஒரு இடத்தை கோர்ட்டு ஏலத்தில் நகரத்தார்கள் ரூ.3150 க்கு வாங்கி அதில் ரதக் கொட்டகை கட்டினர். பிற்காலத்தில் வெள்ளி ரதம் விற்கப்பட்டதால் கொட்டகை தேவைப்படவில்லை. கொட்டகையும் இடமும் 1939இல் காசி நகரச் சத்திர மானேஜரால் ரூ.6,000க்கு விற்று முதல் செய்யப்பட்டன.



தாரகேசுவரம்

தாரகேசுவரம் என்பது ஹவுராவிலிருந்து மின்சார ரயிலில் செல்லக்கூடிய ஊர். 36 மைல் தொலைவில் அமைந்துள்ளது. இது மகந்துப் பிரதேசம்.

இந்த சிவத்தலம் வங்காளிகளால் மிகப் புனிதமாகக் கருதப்படுகிறது. இங்கு கோவில் கொண்டுள்ள இறைவன் பெயர் தாரகநாதர். இது சுயம்புலிங்கம் என்பர். இத்தலத்தைப் பற்றிய விரிவான கட்டுரை ஒன்று இந்த மலரில் வெளிவருகிறது. காசி யாத்திரையாக வரும் நகரத்தார்கள் தாரகேசுவரத்துக்குப் போய் வந்தனர். அவ்வாறு போய் வருபவர்களின் வசதிக்காக, மகந்திடம் இடம் வாங்கி கல்கத்தா நகரத்தார்கள் ரூ.10.000 செலவில் மடம் கட்டி ஆர்ச்சும் அமைத்தனர். இந்த மடம் அமைக்கப்பட்டது, 1890 ஆம் ஆண்டுவாக்கிலென்று ஊகிக்க வேண்டி இருக்கிறது. மடத்துக்குச் சேகரமான ஓர் இடம் 1907இல் ரூ.2000க்கு குத்தகைக்கு எடுக்கப்பட்டது. இந்த இடம் முன் எக்ரிமெண்டின்படி 1952 ஆம் ஆண்டு அளவில் மகந்து வயப்பட்டது.

தாராகேசுவரம் நகர மடத்திற்குள் ஒரு நந்தவனம் இருந்தது.

பல ஆண்டுகள் இந்தத் தலத்தில் அன்னதானம் செய்யப்பட்டது. 1941 வரை தாரகநாதருக்கு நகரத்தார்கள் பாலபிஷேகம் ஒவ்வொரு நாளும் செய்து வந்தனர். கல்கத்தா நகரம் ஜப்பானியருடைய குண்டு வீச்சுக்கு உள்ளானபோது கல்கத்தா நகரத்தார் சிலருக்கு தாரகேசுவரம் நகர மடம் தஞ்சம் தந்தது.


யாத்திரைக்காரர்கள் தாரகேசுவரத்துக்குப் போய் வருவதும் அருகிவிட்டது. மடம் இரயில் நிலையத்திலிருந்து ஒரு மைல் தொலைவில் கோவிலுக்கு அண்மையிலும் கடைத்தெருவின் நடுவேயும் உள்ளது. வங்காளிகள் நமது மடத்தை "செட்டி பாடி" என்று குறிப்பிட்டு வருகிறார்கள். மானேஜிங் சொசைட்டியின் சிப்பந்தியொருவர் மடத்திலுள்ள சுப்பிரமணியர் படத்துக்குத் தீபாராதனை செய்து வருகிறார். மடத்தின் சில பகுதிகள் வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றன. செட்டியார்கள் வெட்டிய குளம் ஒன்றும் தாரகேசுவரத்தில் இருக்கிறது.

காசிக்கு அருகே...

காசி மாநகரின் வடகிழக்கு மூலையில் சாரநாத் என்னும் சிற்றூர் இருக்கிறது. சாரநாத்தில்தான் பௌத்த மதம் தோன்றிற்று என்று கூறலாம். புத்தர்க்கே உரிய அமைதி தவழும் புனித இடம் சாரநாத்.

இந்திய அரசாங்கத்தின் சின்னமாக விளங்கும் சிங்கமும் தர்ம சக்கரமும் சாரநாத்திலுள்ள அசோகத் தூணில் இருக்கும் வடிவத்தைப் பின்பற்றி அமைக்கப்பட்டவைதான். புத்தர் பெருமான் அரிய அறவுரைகள் அருளிச் செய்து அறச் சக்கரத்தை இயக்கிய புனித இடம் இதுவே.

எண்கோணக் கோபுரத்தை உச்சியில் கொண்ட பெரிய செங்கற் கட்டடக் குன்றும், மகாபோதி சங்கம் உருவாக்கியுள்ள மூலகந்தகுடி பௌத்தர் ஆலயமும், சீனர் அமைத்துள்ள பௌத்தர் கோயிலும், சமணர் கோவிலும், பௌத்த மதத்தின் சின்னங்கள் அடங்கிய கலைக் கருவூலமாய் விளங்கும் காட்சிக்கூடமும் உள்ள சாரநாத், பௌத்தம் வளர்த்த பண்ணையாகும். இதைக் காணாத கண் என்ன கண்ணே!



சபதமேற்போம்! தர்மம் காப்போம்!

- கவித்தென்றல் காசு.மணியன்



இருநூறு ஆண்டுகட்கு முன்ன தாக
இறைப்பணியை வடநாட்டில் நகரத் தார்கள்
அருமையாகத் தொடங்கி வைத்தோம், தொய்வு இன்றி
அற்புதமாய் நடத்துகிறோம்; நமக்கு ஈடாய்ப்
பொருள்கொடுத்து, உலகத்தில் ஆன்மீ கத்தைப்
போற்றியவர் யாருமுண்டோ? அதுபோல் வாழ்வில்
வருமானம் தனில்பங்கு கடவு ளுக்கும்
வைத்திட்ட ஒரேயினம் நகரத் தார்தான்.



வடநாட்டில் அன்றைக்கே நகரத் தார்கள்
வாரணாசி நகர்சென்று தர்மம் தன்னை
கடவுளுக்குச் செய்திட்டோம், சத்தி ரத்தைக்
கட்டிவைத்து மூன்றுகால பூஜை செய்தோம்
வடநாட்டார் செய்யாத ஒன்றைச் செய்து
வரலாறு படைத்தவர்கள் நகரத் தார்கள்
கொடையுள்ளம் நம்மோடு பிறக்கும் போதே
கூடவந்து பிறந்ததென்றால் உண்மை தானே!

காசியிலே சம்போவோ சென்றால் போதும்
கடையிலுள்ளோர் எழுந்துநின்று வணங்கி நிற்பார்
பூசுதற்குத் திருநீற்றைப் பெற்றுக் கொள்வார்
பூஜைப்பொருள் தனைவணங்கி மகிழ்ச்சி கொள்வார்
காசிவீதி தனில்சம்போ சென்ற பின்னர்
கடைமூடி அனைவருமே வீடு செல்வர்
தேசத்தார் புகழும்வண்ணம் காசி தன்னில்
திருப்பணியைச் செய்தவர்கள் நகரத் தார்கள்.

விண்முட்டும் கோபுரங்கள் கட்டி வைத்தோம்
விளங்குபுகழ் சத்திரங்கள் ஆக்கி வைத்தோம்
கண்ணிற்கு எழிலூட்டும் நகைகள் தன்னைக்
கடவுளுக்கு அணிவித்து அழகு பார்த்தோம்
பொன்னோடு, வெள்ளியிலும் அங்கி செய்தோம்
பூப்பறிக்க நந்தவனம் தோற்று வித்தோம்
அன்னதான மடம்தந்தோம்; வாக னங்கள்
அனைத்தையும் கோயில்களில் செய்து வைத்தோம்.

மன்னர்க்குப் பின்னர்எனப் போற்றப் பெற்றோம்
மதம்மாறா இனம்என்று புகழப் பெற்றோம்
சென்றயிடம் அனைத்தினிலும் கோயில் கட்டி
சிறப்போடு திருப்பணிகள் செய்து வைத்தோம்
முன்னோர்கள் தர்மத்தைத் தொடங்கி வைத்தார்
முறையாக நாமின்று தொடர்ந்து உள்ளோம்
என்றைக்கும் இத்தர்மம் காக்க வேண்டும்
இதைநாமும் சபதமாக ஏற்க வேண்டும்.



காசியில் கைவிட்டவை

- குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா

காசிக்குத் தாத்தாவும் சென்று வந்தார் - உடன்
களிப்போடு பிள்ளைகள் சூழ்ந்து கொண்டார்
ஆசையாய்க் கூடியே பேசுகையில் - அங்கே
ஆனந்தன் தாத்தாவைக் கேட்கலுற்றான்.

"அத்தையும் காசிக்குச் சென்றுவந்தாள் - இனி
அவரைக்காய் தின்பதே இல்லையென்றாள்
பாட்டியும் காசிக்குச் சென்றுவந்தாள் - இனி
பாகற்காய் தின்பதே இல்லையென்றாள்.

இப்படிக் காசிக்குச் சென்றோரெல்லாம் - அங்கே
ஏதேனும் ஒன்றினை விட்டுவந்தார்
அப்படி நீயுமே விட்டதென்ன? - தாத்தா
அவசியம் கூறிட வேண்டு"மென்றான்.


"கோபக்காரன் என்றே ஊரிலுள்ளோர் - என்னைக்
கூறிடு வாரன்றோ? ஆதலினால்,
கோபத்தைக் காசியில் விட்டுவந்தேன்" - என்றே
கூறினார் மறுமொழி தாத்தாவுமே.

கண்ணனும் உடனேயே, "தாத்தா, தாத்தா - நீயும்
காசியில் விட்டதும் என்ன?" என்றான்
"இந்நேரம் கோபத்தை விட்டதாய்ச் சொன்னேனே
எங்கே கவனமோ?" என்றுரைத்தார்.

முரளியும், "தாத்தா, நீ விட்டதென்ன?" - என்றே
மீண்டும் ஒருமுறை கேட்டிடவே,
திரும்பவும் "கோபத்தை விட்டே" னென்றே - தாத்தா
செப்பினார், முரளியும் "ஓகோ" என்றான்.
அருணனும் கோபுவும், அழகப்பனும் - இன்னும்
அலமுவும், கீதா, காவேரியுமே
திரும்பத் திரும்பக் கேள்விதனைக் - கேட்கச்
சீறி எழுந்தார் தாத்தாவுமே

"வேலையற்ற வெட்டிப் பிள்ளைகளா - என்ன
வேடிக்கையா இங்கே காட்டுகிறீர்?
தோலை உரித்தே எடுத்திடுவேன்" - என்று
சொல்லியே கையில் தடியெடுத்தார்.

"கோபத்தைக் காசியில் விட்டேனென்றார் - இதோ
குண்டாந் தடியுடன் வந்ததடா!
ஆபத்து! ஆபத்து!" என்றேசொல்லி - உடன்
அனைவரும் ஓட்டம் பிடித்தனரே!



ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் நூற்றாண்டு விழா வாழ்த்து

நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

தெய்வ பக்தியில் திளைத்த மனமும்
சிவநெறித் தொண்டில் சலியாச் சிறப்பும்
பண்டைத் தமிழரின் நல்ல பண்புகள்
இன்னும் தம்மிடை இருக்கும் இனமாய்
வாணிபத் துறையில் மிகவும் வல்லவராய்
செல்வம் வளர்க்கும் வித்தையிற் சிறந்து
திரவியம் தேடத் திரைகடல் ஓடி
எந்த நாட்டிலும் சொந்த நாடுபோல்
அங்குள எவரொடும் அன்புடன் பழகி
இம்மியே யாயினும் இகழ்ந்து விடாமல்
சிறுகச் சிறுகச் சேர்த்துப் பெருக்கிக்
கூடிய பொருளைக் கோடிக் கணக்கிலும்
ஆலயத் திருப்பணி, அன்ன சத்திரம்,
கல்விச் சாலைகள், கலைதெரி கழகம்,
மருத்துவ மனைகள், மாணவர் விடுதி
ஆகிய பலவித அறப்பணி களுக்கே
வாரி வழங்கும் வண்மைய யாளராம்
நாட்டுக்கோட்டை நகரச் செட்டிமார்
தம்முடைய தாயகம் தமிழ்நாடெங்கும்
பற்பல அறங்களைப் பாலிப்ப தோடு
பாரத நாட்டில் பல்வே றிடங்களில்
நல்லறப் பணிகளை நடத்து கின்றார்கள்.
அத்தகு அறங்களுள் அதிகம் சிறப்புற
தேசமே வணங்கும் காசியம்பதியில்
வீற்றிருந் தருள்புரி விஸ்வேஸ் வரற்கு
வடநாட் டவர்க்கு வழக்கமில் லாது
தமிழ்நாட் டிற்கே தனிப்பெரும் சிறப்பாம்.
வாத்திய முழுக்குடன் தோத்திரம் பாடி
அபிஷே காங்களும் ஆரா தனைகளும்
முக்கால பூஜை சாஸ்திர முறைப்படி
நைவேத்தி யத்துடன் நடப்பதற் காகிய
நிதிவரு வாய்களை நிரந்தர மாக்கி
அத்துடன் காசியில் நித்திய அறமாய்
அந்தணர், பிணியுளோர், அகதிகள், மாணவர்
முதலிய பலரும் இதமுற நாடிப்
புந்தி மகிழ்ந்திடப் போஜனம் உண்ணப்
புகலிட மாகப் புகழுடன் விளங்கி
நூறாண்டு காலமாய் நோன்புடன் நடக்கும்
நாட்டுக் கோட்டை நகரச் சத்திரம்
போற்றத் தகுந்த மிகப்பெரும் புண்ணியம்.
அந்தச் சத்திரம் ஆரம்பம் ஆகி
ஆண்டுகள் நூறு ஆயின ஆகையால்
நூற்றாண்டு விழாவை நாற்றிசை யோரும்
மெச்சிப் புகழ்ந்திட மேலான முறையில்
நடத்தி மகிழும் நாட்டுக் கோட்டை
நகரத் தார்களின் நலங்கள் பெருகி
தெய்வ பக்தியும் திருப்பணி ஆர்வமும்
தருமமும் தானமும் தவமும் தழைத்து
சத்திய சாந்த சன்மார்க்கம் நிலவ
உதவும் படிக்கு உவந்தருள் புரிந்திட
விஸ்வேஸ் வரரோடு விசா லாட்சியின்
பாதார விந்த மலர்களிற் பணிந்து
மனமார வாழ்த்தி மங்களம் பாடுவோம்.

கயைக்கு அருகே

இந்துக்களின் புனித நகரமான கயைக்கு 10 கி.மீ. தெற்கே புத்தகயை என்னும் பௌத்த தலம் இருக்கிறது.

இது புத்தர் பிரான் ஞான ஒளி பெற்ற சிறப்பினை உடையது. இங்குள்ள மகா போதிக் கோயிலில் புத்தரின் பொற்சிலை பொலிவுடன் காட்சி தருகிறது. புத்தர் ஞானம் பெற்றபின் உலவிவந்த நடைபாதை ஒன்று சிற்ப வேலைப்பாடுகளுடன் ஒரு மேடை போலக் கட்டப்பெற்றிருக்கிறது. ஞானம் பெறும்போது, புத்தர் வீற்றிருந்த வஜ்ராசனமும், அவர்க்கு நிழல் தந்த போதி மரமும், பர்மியர், திபேத்தியர், ஜப்பானியர், தாய்லாந்து நாட்டினர் ஆகியோர் அமைத்துள்ள பௌத்த கோயில்களும் புத்த சபையில் காணத்தக்கன.



அறம் வளர்க்கும் நகரத்தார்

கதி.சுந்தரம்

அன்புநெறி வளர்ந்தோங்க அறநெறியின் திறமேற்று அருளைப் போற்றும்
இன்பநெறி புரக்கின்ற உயர்வுடையார் தனவணிகர் இயலும் நல்ல
மன்னுயிரின் நலம் காக்கும் நகரத்தார் வளநாட்டுக் கோட்டை ஆவார்
என்னென்பேன் இவராற்றல் தமிழ்வளர்க்கும் மனம்படைத்தார் என்றும் வாழ்க

அலைஆடும் நெடுங்கடலில் வாணிகத்தை மிகக்கொண்டே பொருளை ஈட்டி
மலைநாடும் கடவுளுக்கு மனமகிழ கலைக்கோயில் ஆக்கி நின்றார்
கலைநாடும் இளைஞர்க்குப் பலகலையின் கழகங்கள் பலவும் தந்தார்
நிலைநிற்கும் புகழ்பெற்ற நகரத்தார் பொதுத்தொண்டை உலகம் போற்றும்

மண்ணுலகில் புகழ்பெற்ற காசி தன்னில்
மாநிலத்தார் போற்றுகின்ற விசுவேஸ் வரர்க்கே
எண்ணரிய சிறப்புடனே விழாக்கள் செய்தே
என்றென்றும் இறையருளே போற்றி நின்றார்
புண்ணியம்செய் நகரத்தார் காசி தன்னில்
பொற்புடனே கட்டியுள்ள சத்தி ரத்தின்
பண்ணொலிக்கும் நூற்றாண்டு விழாவே! வாழ்க!
பாரெல்லாம் நகரத்தார் அறமே! வாழ்க!

பஞ்சவடி பிரயாகை மற்றும் உள்ள
பாடலுறு அயோத்தி கயா நகரம் எல்லாம்
மஞ்சுதவழ் மாளிகைகள் பலவும் கண்டார்
மாதவத்தோர் போற்றுகின்ற அறத்தைச் செய்தார்
நெஞ்சார அறம்போற்றி ஏழை வாழ்ந்த
நீறணிந்து உணவளித்தார் உள்ளம் வாழ்க!
செஞ்சுடராய்க் கொடைபரப்பும் நாட்டுக்கோட்டைச்
சீர்மைமிகு நகரத்தார் என்றும் வாழ்க!

கன்னல் வளரும் திருநாடு
கவினார் உண்மை இறைநெறியில்
என்றும் சென்று பயன்பெறவே
இன்பம் பலவும் பெற்றிடவே
அன்பார் மக்கள் அனைவருமே
அறத்தைப் போற்றி மேன்மையுற
அருளின் திறத்தால் மக்களெலாம்
இன்ப வாழ்வில் உண்மைநெறி
என்றும் நின்று சிறந்திடவே
எழில்சேர் நாட்டின் தொழில்களெலாம்
இணைந்து நின்று இலங்கிடவே
அண்ணல் விசுவேஸ் வரனேநீ
அன்பாய் வருக! வருகவே!
அருளின் வடிவாம் முதல்வநீயே
அன்பாய் வருக! வருகவே!





இரு நூறு ஆண்டுகள் இறைபணி வரலாறு

குழந்தைக் கவிஞர் செல்லகணபதி

நாடுவிட்டு நாடுசென்று நகரத்தார் தொழில்வளர்க்க
நாடியது பர்மாவை நாட்டிவைத்தார் வெற்றியினை
பொருள்சேரப் பொருள்சேர பூட்டிவைக்கும் எண்ணமில்லை
ஒருநாளும் பெருமையில்லை உள்ளபொருள் பூட்டிவைத்தால்

பந்துக்குள் காற்றைப் பதுக்கிவைத்து விளையாட
பந்தை உதைக்கின்றோம் பாவமந்தக் கால்பந்து
புல்லாங் குழல்வழியே போய்ப்பரவும் காற்றெனிலோ
புல்லாங் குழல்இசையாய் புகுந்துவரும் செவிமகிழ

பூட்டிவைத்த பொருளுக்குப் போக்கிடமே இல்லைஜயா
வாட்டிவிடும் பூட்டிவைத்த மனங்களையே என்றென்றும்
செல்வத்துப் பயனே ஈதல்என உணர்ந்ததனால்
செல்வவளம் பெற்றுயர்ந்த செட்டிமார் தம்பொருளை

வாரி வழங்கிவிட்டார் மக்களுக்காய் விடுதிகட்டி
ஓர்ந்து தெளிந்தார்கள் உயர்தருமம் செய்வதற்கு
இருநூறு ஆண்டுகள்முன் இனியகங்கை நதிநகரில்
வருபவர்கள் தங்கிடவும் விசுவநாதர் தரிசனத்தில்

பெருமகிழ்வு எய்திடவும் பெரும்திட்டம் செய்தார்கள்
ஒருவிடுதி மிகப்பெரியது குதோலி யாவிடுதி
விசுவநாதர் பூசைக்கு வேண்டிய பொருள்எல்லாம்
விசுவாச மாய்சம்போ விருப்பமுடன் சுமந்துசென்றார்

ஒன்றல்ல இரண்டல்ல ஒருநூறு ஆண்டுமல்ல
இன்றந்த ஆண்டு இருநூறைத் தாண்டிவிடும்
இருநூறு ஆண்டுகளாய் இதுநிலைத்த தொண்டாக
இறைபணியோ வளர்கிறது இனம்அருளைப் பெறுகிறது

கருணையுடன் தொடங்கிவைத்தோர் காலங்கள் முடிந்தாலும்
வருகின்ற தலைமுறையும் வழிவழியாய்க் காத்ததனால்
இருநூறு ஆண்டென்ன ஈராயிர மாண்டு
பெருமைமிகு ஆண்டவனின் பெரும்தொண்டு தொடர்ந்துவரும்

காசி விசாலாட்சி விசுவநாதர் திருவருளால்
காசியில் இறைபணியும் காலமெல்லாம் நிலைத்திருக்கும்
நகரத்தார் காசியிலே நாட்டிவைத்தார் தர்மங்கள்
அகமகிழத் தொண்டினைநாம் ஆற்றலுடன் தொடர்ந்திடுவோம்



காசி முதலிய தலங்களிலுள்ள நகரச் சத்திரங்களின் வரலாறு

“சோமலெ”

தாளாண்மை என்னும் தகைமையால் தழைத்து விளங்கும் இனம் நகரத்தார் இனமாகும். “செட்டி கப்பலுக்குச் செந்தூரான் துணை” என்று நம்பி அலைகடல் கடந்து, அல்லகளைப் பொருட்படுத்தாது, அரும்பொருள் தேடுவது இவர்களது இயல்பு.

> “ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை
> போகா றகலாக் கடை”

என்னும் திருவள்ளுவர் வாக்கைப் பின்பற்றி, பொருள்தனைப் போற்றி வாழ்பவர்.

வீட்டினிற் செட்டாக வாழ்ந்திடினும், திருப்பணிகளில் அளவு கடந்து செலவு செய்யும் தன்மை நகரத்தாரிடம் நிலவி வருகிறது. ‘செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வம்’ என்னும் அருள்மொழியின் பொருளையுணர்ந்து நகரத்தார் பெருமக்கள் அறப்பணி ஆற்றி அனைவரின் போற்றுதலுக்கும் உரியராக இருந்து வருகின்றனர். இதனாலேயே ‘குலமுயர, நகருயர, நாடுயர உழைக்கின்றார்’ என்று இவர்களைப் பாட்டுக்கொரு புலவன் பாரதி பாடியுள்ளான்.

நகரத்தார்களின் அறச் செயல்களுக்கு மணிமுடியாய் விளங்குவது காசியில் அவர்கள் சிறப்பாயும் செம்மையாயும் செய்து வரும் தெய்வப் பணியாகும். வட இந்தியாவில் பிற தலங்களிலுள்ள அறநிலையங்களும் காசி நகரச் சத்திரமும் ஒரே ஆட்சியின் கீழ் இருந்து வருகின்றன. காசி யாத்திரையாக வலம் வரும்பொழுது இத்தலங்கள் அமைந்துள்ள முறைப்படி வரிசைப்படுத்தி ஆங்காங்குள்ள நிலையங்களின் வரலாறுகளைக் கூறுவோம்.


நாசிக் - பஞ்சவடி

நாசிக்கும் பஞ்சவடியும், திருச்சியும் திருரவங்கமும்போல ஓராற்றின் இரு கரைகளில் அமைந்தவை. நாசிக் ஒரு மாவட்டத்தின் தலைநகரம்; மகாராஷ்டிரத்தின் இதயம் போன்ற நகரம்; வீர மராத்தியர்கள் இந்நகரைப் பழமைக்குச் சான்றாகக் கொள்ளுகின்றனர்.

நாசிக்கு எதிர்க்கரையில் உள்ளது பஞ்சவடி. பஞ்சவடி என்ற சொற்றொடருக்கு ஐந்து ஆலமரங்கள் என்று பொருள். இந்த ஆலமரங்கள் இராமாயண வரலாற்றுத் தொடர்பு உடையவை.

நகரத்தார்கள் 100 ஆண்டுகளுக்கு மேலாக இந்த தலத்துடன் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். இங்கு ஒரு சத்திரம் கட்ட வேண்டும் என்ற கருத்து, பம்பாயில் வியாபாரம் செய்துவந்த நகரத்தார்களுக்கு ஏற்பட்டதாகவும், 1862 அளவில் சிலர் இங்கு வந்ததாகவும், மராத்தியர்களில் வயதானவர்கள் சொல்லக் கேள்விப்பட்டதாக, நாராயண அந்த்ருட்கர் என்ற நகரத்தார் பண்டா என்னிடம் கூறினார். இவருக்கு வயது 72. இவருடைய தகப்பனார் பாலாஜிசங்கர் (1843-1913) என்பவரும் நகரத்தாரின் பண்டாவாக இருந்திருக்கிறார்.

நகரச்சத்திரம் பஞ்சவடியில் பஞ்சவடித் தெருவில் மேற்குப் பார்த்த கட்டடம். இது ஆற்றிலிருந்து ஒரு பர்லாங்குக்கு மேல் ஒன்றரை பர்லாங்குக்குள்ளும், இராமர் கோயிலுக்குச் சமீபத்திலும் அமைந்தது. சீதா குகை, பஞ்சவடி இரண்டும் சத்திரத்துக்குச் சமீபமாக உள்ளன. இவ்வளவு பொருத்தமான இடத்தைத் தேடி வாங்கினவர்களை எவ்வளவு பாராட்டினாலும் பொருந்தும். கோதாவரியில் வெள்ளம் சில



சமயங்களில் வருவது உண்டு. அப்போது சிருங்கேரி சங்கர மடம் முதலிய பல சத்திரங்களில் கோதாவரி நீர் உட்புகும். ஆனால் நகரச் சத்திரம் ஒருகாலும் பாதிக்கப்படுவதில்லை. காரணம் இது மேடான இடத்தில் இருப்பதாகும்.

நகரச் சத்திரம் உள்ள கட்டடம் சுமார் 1865 அளவில் தீக்சித் பண்டா என்பவரிடமிருந்து 800 ரூபாய்க்குப் பம்பாய் நகரத்தார்களால் வாங்கப்பட்டதாகத் தெரிகிறது. பிறகு ஏறத்தாழ 8000 ரூபாய் செலவில் அந்தக் கட்டடம் புதுப்பிக்கப்பட்டது. அதற்காகச் செட்டிநாட்டிலிருந்து கொத்தர், தச்சர், கொல்லர் வரவழைக்கப்பட்டதாகவும் கேள்விப்பட்டேன். 1867 ஜனவரி 21ல் சத்திரம் இக்கட்டடத்தில் பணியாற்றத் துவங்கியது. இது இந்தக் கட்டட வாசலில் நிலைக்கதவுக்கு மேல் உள்ள கல்வெட்டில் குசராத்தியிலும் மராத்தியிலும் பொறிக்கப்பட்டிருப்பதிலிருந்து தெரிகிறது. தமிழில் "நகர மடம்" என்று இந்தக் கல்வெட்டில் எழுதப்பட்டிருக்கிறது. இந்தக் கல்வெட்டுக்கு மேற்கே சுவரில் பதித்த பளிங்குக் கல்லில் இந்தியில் 'ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி மந்திர்' என்றும் தமிழில் "நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம்" என்றும் எழுதப்பட்டிருக்கின்றன.

இந்தக் கட்டடம் முதலில் கோயில் வீடாக மட்டுமே இருந்து வந்தது. இப்போது கோயில் வீடாகவும் நகர விடுதியாகவும் இருந்து வருகிறது. இது காலி இடமும், மண்டபங்களும் உடையது. இந்தக் கட்டடத்தின் இன்றைய மதிப்பு, இடம் உள்பட ரூ. 30,000.

இதில் தண்டாயுதபாணி சுவாமி கோயில் இருக்கிறது. இங்கு பழனியாண்டவர், இடும்பன் திருவுருவங்களும் அவற்றுக்கு எதிரில் மயில் திருவுருவங்கள் இரண்டு பிரதிட்டை செய்யப்பட்டிருக்கின்றன. இந்தக் கோயிலுக்குச் சுற்று மதில் உண்டு. எனவே பிரகாரமாக வந்து வழிபட வசதியாக இருக்கிறது. இதற்கு அருகே பஞ்சலோக விநாயகர் திருவுருவம் இருக்கிறது. இந்த விக்கிரகம் செட்டிநாட்டில் செய்து இங்கு கொண்டுவரப்பட்டது. வள்ளி தெய்வானையோடு கூடிய சுப்பிரமணியர் படமும், நவக்கிரகப் படமும் இந்த விநாயகருக்குப் பக்கத்தில் இருக்கின்றன. தண்டாயுதபாணிக்கு கந்தர் சஷ்டி, திருக்கார்த்திகை, தைப்பூசம் ஆகிய மூன்று திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இவற்றுள் தைப்பூசம்தான் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. தைப்பூசச் செலவு பம்பாய் நகரத்தார் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. நாள்தோறும் காலை 9-30க்கும், மாலை 7-30க்கும் பூசை நடைபெறுகிறது. காலையில் கோதாவரி தீர்த்த அபிஷேகம், பால் அபிஷேகம், அன்ன நைவேத்தியம், கற்பூர நைவேத்தியம் நடைபெறுகின்றன. மாலையில் பால் நைவேத்தியமும் தீபாராதனையும் உண்டு. பழநியாண்டவர் விக்கிரகத்தைப் பிரதிட்டை செய்தபோது அதை ஸ்தாபிக்க திருவண்ணாமலைப் பெரிய குருக்கள் இங்கு வந்ததாகக் கேள்வி.

தைப்பூசத் திருவிழாவில் பூசத்தன்று பிராமணர் சுமார் 10 பேருக்கும், மறுநாள் சுமார் 100 பேருக்கும் சாப்பாடு செய்விக்கப்படுகிறது.

தைப்பூசத்துக்கு இந்தக் கோயில் நகைகள் காசியிலிருந்து கொண்டுவந்து தண்டாயுதபாணிக்கு அணிவிக்கப்படுகின்றன.

எந்த நாளிலும் எந்த நேரத்திலும் மராத்தியரும் ஏனைய மொழியினரும் இங்கு வந்து தண்டாயுதபாணியையும் விநாயகரையும் வழிபட்டு மணியடித்துச் செல்கின்றனர்.

சுப்பிரமணியசுவாமி என்றும் முருகன் என்றும் தண்டாயுதபாணி என்றும் தமிழ் மக்கள் வழிபடும் இறைவனுக்குக் கார்த்திகை நாட்களில் சிறப்பான விழாக்கள் நடைபெறுவதால் வட இந்தியர்கள் இந்த இறைவனை கார்த்திகேயர், கார்த்திக் ஸ்வாமி என்று சொல்லுகிறார்கள். பஞ்சவடியில் இந்தக் கோயிலையும் சத்திரத்தையும் கார்த்திக் சுவாமி மந்திர் என்ற பெயரால்தான்



எல்லோரும் குறிப்பிடுகிறார்கள். அப்படிச் சொன்னால்தான், இடத்தை அடையாளம் காண்பிப்பார்கள்.

புது மடம்

இதற்கு நயாமட் என்றும், செட்டி தர்மசாலை என்றும் பெயர். இது நகரச் சத்திரம் உள்ள தெருவிலேயே எதிர்வரிசையில் நான்கு கட்டடங்களுக்கு அப்பால் இருக்கிறது.

இப்பொழுது சத்திரம் உள்ள வீடு கோயில் வீடாக இருந்ததால் நகரத்தார் யாத்ரீகர்கள் இறங்குவதற்கும், தைப்பூசத்தில் பிரமாணர்களுக்கும் ஏழைகளுக்கும் சாப்பாடு போடவும், வசதியாக பம்பாய் நகரத்தார்கள் புது மடத்தை ஏற்படுத்தினர். அந்தக் கட்டடத்தை 1905இல் ஒரு வண்ணானிடமிருந்து ரூ.1500-க்கு வாங்கி, சீர்திருத்தங்கள் செய்தார்கள். இதில் பஞ்சமுகலிங்கம் ஒன்று இருக்கிறது.

இந்த லிங்கத்துக்குத் தினமும் காலை 9-30 மணி அளவில் ஒரு காலப் பூசை நடைபெறுகிறது. மகா சிவராத்திரி அன்று லகு ருத்ராபிஷேகம் செய்யப்படுகிறது.

இக் கட்டிடத்தின் மதிப்பு ரூ. 50,000. இதில் ஒரு பகுதி போஸ்ட் ஆபிசுக்கு வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது.

இந்தக் கட்டடத்தின் ஓரத்திலுள்ள சந்து யாரைச் சேர்ந்தது என்று பக்கத்து வீட்டுக்காரர்களுக்கும் நகரத்தார்க்கும் நாசிக் ஜூனியர் டிவிஷன் ஜாயிண்டு சிவில் ஜட்ஜ் கோர்ட்டில் ரெகுலர் சிவில் நம்பர் 335-57 நம்பர் வழக்கும் அதன் பேரில் நாசிக் எக்ஸ்ட்ரா அசிஸ்டண்டு ஜட்ஜ் கோர்ட்டிலும் அப்பீலும் நடைபெற்றன. இவற்றில் 19-10-1959இல் கீழ்க் கோர்ட்டிலும் 28-8-1961 இல் அப்பீல் கோர்ட்டிலும் முடிவு கூறப் பெற்றன. 2 தீர்ப்புகளும், நகரத்தார்களுக்கே சாதகமாகச் சொல்லப்பட்டன. நகரத்தார்களின் சார்பாகச் சாட்சி சொன்னவர்களை நம்புவதாகவும் அந்தத் தீர்ப்புகளில் கண்டிருக்கிறது.

நகரத்தார்களுக்காக 2 பண்டாக்கள் இருக்கிறார்கள். இவர்கள் பெயர் 1. நாராயண பாலாம்ப்ட் அந்த்ருட்கர் 2. பாபு சவுத்தே.

இவர்கள் நகரத்தார்களுக்கு சங்கல்பம், சிரார்த்தம் முதலியன செய்து வைக்கின்றனர்.

பஞ்சவடி இராமர் கோயிலில் 1942 வரை நகரத்தார்கள் அகண்ட தீபம் போட்டு வந்தனர். அதற்கு நாள்தோறும் எண்ணெய் கொடுத்து வந்தனர்.

1942க்கு முன் பஞ்சவடி கபாலீசுவரர் கோயிலில் பால் அபிஷேகத்துக்கு தினசரி பால் கொடுத்து வந்திருக்கிறார்கள். தீபம் போட்டு வருகிறார்கள்.

பிரயாகை

அலகாபாத் இரயில் சந்திப்பிலிருந்து 4 மைல் தொலைவிலும், அலகாபாத் சிட்டிக்கும் காசிக்கும் இடையே செல்லும் சிறிய (மீட்டர் கேஜ்) இரயில் பாதையில் உள்ள தாராகஞ்சு இரயில் நிலையத்திற்குச் சமீபத்திலும் தாராகஞ்சுமோரியில் நகரச் சத்திரம் கட்டப்பட்டிருக்கிறது. கங்கை, யமுனை, சரசுவதி ஆகிய 3 ஆறுகளும் கூடும் திருவேணி சங்கமத்துக்கு அண்மையில் இருப்பதால் இந்த இடத்தில் சத்திரம் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சத்திரத்துக்குரிய வீடும் இடங்களும் 22-7-1891, 4-4-1901, 19-3-1913 ஆகிய தேதிகளில் மொத்தம் ரூ. 58225 க்கு வாங்கப் பெற்றன. இவற்றுள் 1825 ரூபாய்க்கு வாங்கிய ஒரு வீடு 1960ல் ரூ. 5000க்கு விற்கப்பட்டது. பிற இரண்டு இடங்களில் தேவைக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கட்டப்பட்டு சத்திரம் இரு பகுதிகளாக இருக்கிறது. நந்தவனம் பெரும்பாலும் அழிந்துவிட்டது.

கோயில் என்பதே சிதம்பரம், அங்கு குடிகொண்ட இறைவன் அம்பலக்கூத்தன்,



தமிழகத்துக்குப் பெருமை தரும் இந்த நடராச மூர்த்தியின் திருவுருவத்தை நகரத்தார்கள் பிரயாகையில் நிறுவியுள்ளனர்.

இந்தச் சத்திரத்தில் விகாரி ஆண்டு தை மாதம் முதல் தேதி இரங்கூன் நகரத்தார்கள் நடராசர், சிவகாமி அம்மன், மாணிக்கவாசகர் விக்கிரகங்களை எழுந்தருளச் செய்திருக்கின்றனர். இரண்டு வேளைப் பூசை உண்டு. வெள்ளிக்கிழமைகளிலும் திங்கட்கிழமைகளிலும் நகரத்தார் பெயருக்கு அஷ்டோத்ர அர்ச்சனை செய்யப் பெறுகிறது.

பல்வேறு நிலையிலுள்ள மக்களும் கங்கையில் நீராட வருகிறார்கள். அவ்வாறு. வர இயலாதவர்கட்கு ஏனையோர் கங்கை நீரைக் குடங்களிலும் செம்புகளிலும் எடுத்துச் செல்லுகின்றனர். மரணத்தின் எல்லையிலும் மனிதனின் கண்ணிமைகளிலும் நாவிலும் ஒரு துளி கங்கை நீரை ஊற்றும் வழக்கம் பல பகுதிகளில் உண்டு.

காசி நகரச் சத்திரத்துக்கும் நகரத்தார்கள் வேண்டுகோளுக்கிணங்க இராமேசுவரம் முதலிய தலங்களுக்கும் இங்கிருந்து பிரயாகைத் தீர்த்தம் அனுப்பப்பட்டு வருகிறது.

வாரியார் சுவாமிகளின் வாழ்த்து!



உ
முருகா

பஞ்சவடி
பிலவ. ஆவணி 6.
22-8-1961

இளம்பூரணன் இன்னருளால் இன்று இங்குவந்து நகர மடாலயத்தில் தங்கினேன். பூஜை உணவு முதலிய சகல வகைக்கும் அனுகூலமாக இருந்தது. "சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார்" என்று கம்பநாடர் பாடியருளிய கோதாவிரியை அடியேனும் கண்டு களித்தேன்.

மடம் யாத்ரீகர்கட்கு மிக்க வசதியாக அமைந்துளது. தரும குணசீலர்களான நகர தனவணிகர்களுடைய அறம் போற்றுதற்குரியது.

மடலாயத்தில் திரு. கோபாலசாமி அவர்கள் நல்ல முறையில் கவனித்து மடத்தின் வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாக இருப்பது பாராட்டுதற்குரியது. வாழி மடலாயம்.

அன்பன்
கிருபானந்தவாரி
ஆசிரியர். "திருப்புகழாமிர்தம்"
சென்னை



மானேஜிங் சொசைட்டியின் வரலாறு

காசித் தொடர்பு

சிவபக்தி மிக்காராய், தமிழ்நாட்டிலும் கடல் கடந்த நாடுகளிலும் பாடல்பெற்ற தலங்கள் முதலியவற்றில் புதிய கோயில்களைக் கட்டியும், மன்னர்கள் கட்டிய கோயில்களைப் பேணியும், புதுப்பித்தும் வந்த பெருமை பல நூற்றாண்டுகளாக நகரத்தார்களைச் சேரும். தல யாத்திரை செய்வதில் நகரத்தார் ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் உள்ள ஈடுபாடு உலகறிந்தது. இவர்களில் பலர் இராமேசுவரத்திலிருந்து மிருத்திகை எடுத்தும் கோடித் தீர்த்தம் கொண்டும் கால்நடையாகக் காசிக்குச் சென்று விசுவநாதரை வழிபட்டு வருவார் ஆயினர்.

சிவராத்திரி உற்சவம்

19ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தில் போக்குவரத்து வசதிகள் மிகக் குறைவாக இருந்தன. அந்நாட்களில் நடந்து சென்று தல யாத்திரை செய்பவர் பல இன்னல்களுக்கு ஆளாயினர். இக்காரணத்தால் பலர் சேர்ந்து, காசி யாத்திரையை மேற்கொள்வதும், கூடியவரை சிவராத்திரியன்று காசியில் இருக்குமாறு பயணம் அமைத்துக் கொள்வதும் நகரத்தார்களுள் வழக்கமாக இருந்து வந்தது.

இடைக்கால ஏற்பாடு

1801 முதல் கல்கத்தாவில் அரிசி முதலிய பொருள்களை ஏற்றுமதி செய்து, நகரத்தார்கள் நாளும் பெருகிச் செல்வத்தில் திளைத்தனர். செல்வாக்கும் பெற்றனர். கப்பல் கம்பெனிகள் நகரத்தார்களுக்கு ஆண்டு இறுதியில் கப்பல் கேள்வுத் தொகையில் ஒரு பகுதியைத் திருப்பிக் கொடுத்தனர். இவ்வாறு கிடைத்த ரீபேட் தொகையைப் பொது நிதியாக வைத்திருந்து தர்மத்திற்குச் செலவிடுவதென்று கல்கத்தா நகரத்தார் முடிவு செய்தனர். ஆண்டுதோறும், இவ்வகையில் 25,000 ரூபாய் வரை வருமானம் வந்து கொண்டிருந்தது.

முக்தி தரும் தலங்கள் ஏழில் முதன்மையானதாகிய காசியில், தர்மம் செய்வதே சிறந்தது என்று கல்கத்தா நகரத்தார்கள் கருதினர். குமரகுருபரர் மடத்தில் சில காலமும், பின்னர் தற்காலிகமாக வேறு ஓர் இடத்திலும் இருந்துகொண்டு கல்கத்தா நகரத்தார்கள் சிவராத்திரி போன்ற திருவிழாக்களில் விசுவேசுவரருக்கு அபிஷேகங்கள் நடத்தவும் ஏழைகளுக்கு அமுது படைக்கவும் ஏற்பாடு செய்தனர்.

சொந்தக் கட்டிடம்

மேற்கண்ட முறையில் 50 ஆண்டுகள் அபிஷேகம், அன்னதானம் முதலியன நடைபெற்றன. அதன் பின்னர் ஹிந்துஸ்தானி கோஷாயி சாதுக்கள் மடம் விலைக்கு வாங்கப் பெற்றது. 1863-ல் ருத்ரோத்காரி ஆவணி 10ல் அந்த மடம் சில பகுதிகள் புதுப்பிக்கப் பெற்றும் பெரும்பகுதி புதிதாகக் கட்டப்பெற்றும், "நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம்" என்ற பெயரில் தொடங்கப் பெற்றது. இந்த நன்னாளின் நூற்றாண்டு விழாவே இப்பொழுது கொண்டாடப் பெறுகிறது. அன்று முதல் விசுவேசுவரர் விசாலாட்சி அன்னபூரணி துண்டி விநாயகர், கால பைரவர் முதலிய மூர்த்திகளுக்கு நாள்தோறும் பூசைகள் சிறப்பாகச் செய்யப்பட்டு வருகின்றன. அந்தணருக்கும், துறவிகளுக்கும், ஏழை எளியோர்க்கும் உணவு படைக்க அன்னதானக் கட்டளைகள் ஏற்படுத்தி, சத்திரத்தின் முக்கிய பணிகளுள் ஒன்றாக நாள்தோறும் அன்னதானம் செய்யப் பெறுகிறது.

பெரு வளர்ச்சி

1880 முதல் கல்கத்தா நகரத்தார் பெரிய செல்வம் ஈட்டினர். அதற்கேற்ப கல்கத்தா, காளிகாட், பிரயாகை, அயோத்தி, கயை, தாடகேசுவரம், கோதாவரி ஆகிய தலங்களில் தங்கள் தருமங்களைப் பெருக்கினர். கட்டிடங்கள் கட்டி ஆங்காங்கேயுள்ள சத்திரங்கள் இனிது நிகழவும்



மூர்த்திகளைப் பிரதிட்டை செய்யவும் பூசை முதலிய தெய்வப் பணிகள் செம்மையாய் நடைபெறவும் மூலதனம் வைத்தனர். இதே காலத்தில் பம்பாய் நகரத்தார்கள் நாசிக் பஞ்சவடியில் சத்திரங்கள் நிறுவி தண்டாயுதபாணி திருவுருவத்தைப் பிரதிட்டை செய்தனர்.

கல்கத்தா விசாரணை

மேற்படி சத்திரங்கள் கல்கத்தா நகரத்தார்களின் விசாரணையில் (மேற்பார்வையில்) இயங்கி வந்தன. நாசிக் பஞ்சவடிச் சத்திரம் மட்டும் பம்பாய் நகரத்தார்கள் பார்வையில் இருந்து வந்தது.

பல காரணங்களால் கல்கத்தாவில் நகரத்தார்களின் கடைகள் எண்ணிக்கையில் குறைந்தன. பல கடைகள் கல்கத்தாவிலிருந்து இரங்கூனுக்கு மாற்றப் பெற்றன. செல்வம் பெருக்கிய இரங்கூன் நகரத்தார்கள் சிவமும் பெருக்கப் பெரு விருப்பம் கொண்டனர்.

இரங்கூன் விசாரணை

1925ஆம் ஆண்டுக்குப் பின் இரங்கூன் நகரத்தார்கள் காசிச் சக்கரத்திற்கு மகமை எழுதினர். பிறகு இரங்கூன் நகரத்தார்களுடைய மேற்பார்வையில் காசி முதலிய சத்திரங்களின் ஆட்சி நடைபெறத் தொடங்கியது. இந்த ஆட்சி முறை இன்னும் சிறப்பாக விளங்குவதற்காக 1934ஆம் ஆண்டில் இரங்கூன் நகரத்தார்கள் கூடி ஒரு சொசைட்டியை உருவாக்கினர்.

சொசைட்டியின் தோற்றம்

10-9-1934ல் பவ ஆவணி 25ல் "ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் மானேஜிங் சொசைட்டி" இரங்கூன் சப்ரிஜிஸ்தர் ஆபீசில் பதிவு செய்யப்பெற்றது.

தொடக்க அறிக்கை, சொசைட்டியின் குறிக்கோள்களைத் தெளிவாகக் கூறுகிறது.

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர நிர்வாக சபையின் மெமோரண்டம் ஆப் அசோசியேஷன் என்னும் தொடக்க அறிக்கை:

1. இச்சபை "ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர நிர்வாக சபை" என்றழைக்கப்படும்.

2. இதன் பதிவு செய்யப்பட்ட ஆபீசு இரங்கூன் மொகல் வீதி 74வது இலக்கமிட்ட கட்டிடத்திலுள்ள பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கக் காரியாலத்திலிருக்கும்.

3. சபையின் நோக்கங்கள்:

A) இந்தியாவிலும், பர்மாவிலும் காசி நகரச் சத்திர ஸ்தாபனங்கள் என வழங்கப்பட்டு காசி, அயோத்தி,கயா, பிரயாகை, தாடகேச்வரம், கோதாவரி முதலிய ஸ்தலங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தர்ம ஸ்தாபனங்களைக் கண்காணித்து நடப்பித்து பராமரித்து வருதல்

B) வட இந்தியாவுக்கு யாத்திரையாகச் செல்லும் எல்லா நாட்டுக்கோட்டைச் செட்டியார்களுக்கும் வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்தல், காசியிலுள்ள ஸ்ரீ காசி விஸ்வேஸ்வரர் கோயிலிலும், மேற்கண்ட ஊர்களிலிருக்கும் தேவாலயங்களிலும் தினசரி பூஜை மற்றும் மத சம்பந்தமான காரியங்களை நடத்துதல்; அல்லது நடத்தி வைத்தல்.

C) வட இந்தியாவிற்கு யாத்திரையாகப் போகும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களுக்கு அன்னவர்களால் ஏற்படுத்தப்பட்ட இடங்களிலும் சத்திரங்களிலும் விடுதி கொடுத்து வசதிகள் செய்து கொடுத்தல்.

D) நாட்டுக்கோட்டை செட்டியார்கள் சார்பாகச் சகல சடங்குகளையும், கிரியைகளையும் நடத்தி வைத்தலும், அன்னவர்களுக்கு வட இந்தியாவிலிருந்தும் வேறு இடங்களிலிருந்தும் அவ்விதமான சடங்குகளுக்குச் சம்பந்தப்பட்ட எல்லாப் பொருள்களையும் வஸ்துக்களையும் அனுப்புதலும்

E) ஸ்ரீ காசி நகரச் சத்திரத்திற்காக அதன் நிர்வாகத்திற்கும் அதை நீடித்து நடத்துவதற்கும்



அல்லது மேற்கொண்டு சொத்தைச் சம்பாதிப்பதற்கும், வேண்டிய நிதி அல்லது மூலதனம் நன்கொடை வகையறாவை பொதுவாக வசூல் செய்தலும்; சிறப்பாக எல்லாவிடங்களிலுமுள்ள நாட்டுக்கோட்டைச் செட்டியார் கடைகளிலிருந்தும் தனி நபர்களிடமிருந்தும் குறிப்பிட்ட விகிதங்கள் பிரகாரம் மகமையை வசூல் செய்தலும் அவ்விதம் கிடைக்கும் பணங்களைத் தகுந்த முறையில் வட்டிக்குப் போட்டு வைத்தலும்

F) ஸ்ரீ காசி நகரச் சத்திரத்தின் சொத்துக்களை காரியக் கமிட்டியோ பொதுச்சபையோ தீர்மானம் செய்தால் விற்கலாம்.

4. கீழ்க்கண்ட நபர்கள் 1934ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 13ந்தேதி முதல் 1937 ம் வருஷம் ஏப்ரல் மாதம் 13ந் தேதி வரையுள்ள மூன்று வருஷ காலத்துக்கு காரியக்கமிட்டி அங்கத்தினர்களாகவும் உத்தியோகஸ்தர்களாகவும் இருப்பார்கள்:

தலைவர்

1. சா. அ.ச. இராமன் செட்டியார்
 116, மொகல் வீதி, இரங்கூன், பாங்கர்

உப தலைவர்

2. மு.அழ. நாராயணன் செட்டியார்,
 100, மொகல் வீதி, இரங்கூன், பாங்கர்

காரியதரிசி

3. சுப.க.அ. லெட்சுமணன் செட்டியார்,
 70, மொகல் வீதி, இரங்கூன், பாங்கர்
4. ராம.அரு.அரு.ராம.அருணாசலஞ் செட்டியார்,
 107, மொகல் வீதி, இரங்கூன், பாங்கர்
5. கூ.அரு.சுப்பிரமணியன் செட்டியார்,
 62, மொகல் வீதி, இரங்கூன், பாங்கர்
6. அ.க.அ.சித.வெ.சிதம்பரஞ் செட்டியார்,
 112, மொகல் வீதி, இரங்கூன், பாங்கர்
7. அழ. வீர.பெ.சிவப்பிரகாசஞ் செட்டியார்,
 98, மொகல் வீதி, இரங்கூன், பாங்கர்

மகமை

இரங்கூன் நகரத்தார்கள் தண்டாயுதபாணி கோயிலுக்குத் தைப்பூச மகமை எழுதி வருவதோடு காசிச் சத்திரத்துக்கு ரூ.1000க்கு அரைக்கால் வீதம் ஆண்டுதோறும் மகமை எழுதி வருவதென்று ஒருமனதாய்த் தீர்மானித்தனர். பர்மாவில் நாட்டுப்புறங்களில் உள்ள நகரத்தார்களை ரூ.1000க்கு வீசம் வீதம் மகமை எழுதச் செய்வதென்றும் மலாயா, செய்கோன், இலங்கை நகரத்தார்களுக்கும் எழுதி மகமை வசூலிப்பதென்றும் அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பெற்றது.


நடப்புச் செலவு

கல்கத்தாவிலும், கோதாவரியிலும் அந்தந்த ஊர்களில் கிடைத்த வீட்டு வாடகைகளைக் கொண்டே எல்லாச் செலவுகளும் செய்யப் பெற்று வந்தன. ஏனைய 6 சத்திரங்களுக்கும் வாடகைக் கட்டிடத்தில் நடந்துவந்த அரித்துவார் சத்திரத்திற்கும் இரங்கூன் தலைமைக் காரியாலயத்திலிருந்து மாதம் ரூ. 3000 அனுப்பப் பெற்று வந்தது. பிறகு செலவுகளைச் சிக்கனமாகச் செய்ய ஏற்பாடாகி ரூ. 2000 மட்டும் அனுப்பப் பெற்றது.

நிர்வாகம்

நிர்வாக சபையார் சத்திரங்களில் கட்டிடங்களை அவ்வப்போது பழுதுபார்த்தும் புதுப்பித்தும் தேவையில்லாத இடங்கள் முதலியவற்றை விற்றும் சத்திரங்களின் நலத்தைப் பேணி வந்திருக்கிறார்கள்.

காசி விசுவேசர் கோவில் மகந்து பங்காளிகளுக்குள் கோவில் நிர்வாகம் பற்றிச் சச்சரவு உண்டாகி அலகாபாத்தில் வழக்கு நடந்தது. மகந்துகளுக்குள் ஒற்றுமையில்லாத நிலையில் காசி விசுவேசர் கோயில் நிர்வாகத்தை நடத்தும் பொறுப்பை நகரத்தார்களே ஏற்க வேண்டுமென்று அலகாபாத் உயர்நீதி மன்றம் ஆணையிட்டது. இந்நிகழ்ச்சி நகரத்தார்களுடைய ஆழ்ந்த தெய்வபக்திக்கும் சீலத்துக்கும் அவை வட இந்திய மக்களால் மதிக்கப் பெற்றதற்கும் எடுத்துக்காட்டாகும். நகரத்தார்களின் இறைப்பணியைப் போற்றிப் பிறப்பிக்கப்பட்ட இந்த ஆணைக்கிணங்க காசி நகரச் சத்திரம் ஏஜண்டு, கோயில் ரீசிவராக இருந்து வருவதற்கு, நிர்வாக சபை இசைவு தெரிவித்தது.



நாசிக் பஞ்சவடி

நகரத்தார் பலருடைய வேண்டுகோளுக்கிணங்க, நிர்வாக சபையார் நாசிக் பஞ்சவடி நகரச் சத்திரம், கார்த்திகைச் சுவாமி கோவில், அவைகளின் சொத்துக்கள் ஆகியவற்றை ஒப்புக்கொண்டு 1940ஆம் ஆண்டு முதல் அவற்றின் ஆட்சியையும் பொறுப்புடன் கவனித்து வருகின்றனர்.

1942-1945

1942ல் பர்மாவில் ஜப்பானியருடைய ஆட்சி ஏற்பட்டு, இந்தியாவிற்கும் பர்மாவிற்கும் போக்குவரத்து இல்லாதிருந்தது. இதனால் நிர்வாக சபை செயலாற்ற இயலாது போயிற்று.

நிர்வாக சபையின் ஆட்சிக்குட்பட்ட தர்ம ஸ்தாபனங்கள் யாவும் இந்தியாவில் இருந்ததால் அவற்றை நடத்தும் பொறுப்பையும், செலவுக்குப் பணம் அனுப்பும் கடமையையும் இந்தியாவில் இருந்த நகரத்தார்கள் பலர் ஏற்றுச் செவ்வனே செய்தனர். இதைப் பற்றிய விவரங்களை இம்மலரின் பிறிதொரு பகுதியில் காணலாம்.

நெருக்கடியான ஒரு காலத்தில் இந்தியாவில் உள்ள நகரத்தார்கள் இந்த ஸ்தாபனங்களை நடத்தியும் விசுவேசர் கைங்கரியம் ஒருநாளும் தடைப்படாது நன்றாகச் செய்தும் சொசைட்டியின் பொறுப்பைத் தங்கள் கடமையாகக் கொண்டு நிறைவேற்றியது பொன் எழுத்துக்களில் பொறிக்கத்தக்கது.

போருக்குப் பின்

29-2-1946 விய மார்கழி 14ல் இரங்கூன் நகரத்தார்கள் கூடி தலைவர், உப தலைவர், காரியதரிசி முதலியவர்களையும் நிர்வாக சபை, காரிய சபை அங்கத்தினர்களையும் தேர்ந்தெடுத்தனர்.

மலாய் நாட்டில் நன்கொடை வசூலிப்பதற்கான முயற்சிகளை சொசைட்டி மேற்கொண்டது. சொசைட்டி பிரதிநிதிகளாக இரங்கூன் சொ.ம.அ.மெ.ராம.ஏஜண்டு பழ.சண்முகம் செட்டியார் அவர்களும், ராம.பெ.அழ.ஏஜண்டு அண்ணாமலை செட்டியார் அவர்களும் பினாங்கு முதல் சிங்கப்பூர் வரை பல ஊர்களுக்குச் சென்று நகரத்தாரவர்களைச் சந்தித்தனர். இதன் பயனாக மலாயா நகரத்தார்கள் ரூ. 80666 நன்கொடை வழங்கினர். இவ்வாறு ஒரு பெருந்தொகை தந்து காசியம்பதியில் நடைபெறும் சிவத் தொண்டுக்கு உதவிய மலாயா நகரத்தாரவர்களுக்கு நிர்வாக சபையார் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், காசி விசுவேசர் திருவருளால் நன்கொடையாளருக்கு எல்லா நலன்களும் உண்டாகப் பிரார்த்திக்கின்றனர்.

1955ஆம் ஆண்டில் காசியிலுள்ள கட்டிடங்கள், தேவகோட்டை தி.ராம.தி.ச.தி. தின்னப்பச் செட்டியாரவர்கள் மேற்பார்வையில் நிர்வாக சபையாரால் நல்ல முறையில் பழுது பார்க்கப் பெற்றன.

வரவேண்டிய தொகைகளுக்காக சொசைட்டியார் ஒப்புக்கொண்ட நிலங்கள், பர்மா அரசாங்கத்து நிலத் தேசியமயச் சட்டப்படி 1955ல் தேசியமயமாக்கப் பெற்ற வருவாய் குறைந்தது. இரங்கூன் நகரத்தார்கள் மகமையும் நன்கொடையும் தந்ததும் 1955-56ல் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி.

1957-58-59 ஆம் ஆண்டுகளில் எல்லாக் கிளைச் சத்திரங்களிலும் சிறுசிறு மராமத்து வேலைகள் நடைபெற்றன. பிராயாகையில் ரூ. 5000 வரை செலவு செய்து அங்குள்ள கட்டிடத்தில் பல சீர்திருத்தங்கள் செய்யப் பெற்றன. 1958-59 ல் செய்கோன் நகரத்தார் ரூ. 3000 அனுப்பியுதவினர்.

1959-60 ஆம் ஆண்டில் சொசைட்டிப் பிரதிநிதிகளாக இரங்கூன் சொ.மு.அ.மெ.மு.ஏஜண்டு பழ.சண்முகம் செட்டியார் அவர்களும் ராம.வீர.ராமசாமிச் செட்டியார் அவர்களும் ஸ்ரீ காசிக்குப் போய் அவ்விடத்தில் (அன்றாட உபயோகத்தில் இல்லாதிருந்த) உபரி நகைகளையும் வெள்ளிச் சாமான்களையும் ரூ. 44.579 க்கு விற்றுக் கொடுத்தனர். அப்பணம் காசி யுனைட்டெட் கமர்ஷியல் பாங்கில் டெபாசிட் செய்யப்பெற்றது.



7-11-60ல் நடைபெற்ற விசேஷப் பொதுக்கூட்டத்தில் நம் ஸ்தாபனத்தை இரங்கோன் சொசைட்டி நிர்வாகப் பொறுப்பிலேயே இந்தியாவில் ரிஜிஸ்டர் செய்யலாம் என்று தீர்மானிக்கப் பெற்றது.

11-2-62ல் காசியிலுள்ள நமது நகரேசுவரர் கோவிலிலுள்ள மூர்த்திகளுக்கு மருந்து சாத்தி அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது.

9-4-62ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சோபகிருது ஆவணி 10ல் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதென்று முடிவு செய்யப்பெற்று அதற்கென ஒரு குழு நியமிக்கப் பெற்றது. நூற்றாண்டு விழா நினைவாக, பெரியதொரு கட்டிடம் வாங்கி அதைக் காசிச் சத்திரத்தின் மூலதனமாக அமைப்பதென்றும் முடிவு செய்யப்பெற்றது.

கல்கத்தா நகரேசுவர் கோயிலுக்குப் புதிய சிங்கார முருகேசர் சிலாபிம்பம் செட்டி நாட்டில் தக்க ஸ்தபதிகளால் செய்வித்து 1963ல் கொண்டுவரப் பெற்றது.

நிர்வாகச் சிக்கல்கள்

இந்தியாவில் ஐந்து இராச்சியங்களில் இந்த ஸ்தாபனத்தின் கிளைகள் உள்ளன. ஆங்காங்கு உள்ள சத்திரங்களும் கோயில்களும் சொத்துக்களும் அந்தந்த இராச்சியத்தில் செய்யப்படும் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடத்த வேண்டியதிருக்கிறது. அந்த இராச்சியங்களின் சட்ட சபைகளால் புதியதாக நிறைவேற்றப்படும் மத தர்ம ஸ்தாபனச் சட்டங்கள் நம்மைப் பெரிதும் பாதிக்கின்றன. சில ரிட்டன்களைத் தாக்கல் செய்ய நேரிடுகிறது. சில சட்டங்களின்படி நமது சத்திரங்களை அந்தந்த இராச்சியத்து அதிகாரிகளிடம் பதிந்துகொள்ள வேண்டியதிருக்கிறது.

சொத்துக்களின் நிர்வாகமும், சத்திரங்களை நிர்வகிக்கத் தகுதியான ஆட்களை நியமித்து அவர்களைக் கண்காணிப்பதும் இவ்வாறே பொறுப்பும் சிக்கலும் நிறைந்த பிரச்சினைகள் ஆகும். சொசைட்டியார் தங்களால் இயன்றவரை இந்தக் கடமைகளை நன்கு நிறைவேற்றி வருகின்றனர்.

நன்றியுரை


நமது தரும ஸ்தாபனங்களுக்கு தாராளமாக நன்கொடை தந்து உதவி வரும் பர்மா, மலாயா, செய்கோன், இலங்கை நகரத்தார்களுக்கும் காசிக்கும் ஏனைய தலங்களுக்கும் வந்து கால் கட்டளை முதலியவற்றுக்குப் பணம் தந்து உதவியுள்ள மெய்யன்பர்க்கும் பன்னீர், சந்தனம், ஜவ்வாது, அரகஜா முதலிய பொருள்களைத் தொடர்ந்து அனுப்பிவரும் கொடையாளர்களுக்கும் நமது சொசைட்டியின் சார்பாக நன்றி கூறுவது எங்கள் கடமையாகும்.

நன்கொடை விவரங்களும், கணக்குகளும் சொசைட்டி ஆண்டுதோறும் வெளியிட்டுள்ள அறிக்கையில் தொகுக்கப் பெற்றிருக்கின்றன.

நம் சொசைட்டியின் வளர்ச்சிக்காகவும் சமயக் கல்வி வளம் பெறவும் பர்மா கம்பை தன வைசியர் கல்விக் கழகத்தார் கியா ஒரு லட்சத்து ஒன்றும், கோலாலம்பூர் நகரத்தார்கள் ரூபாய் ஓராயிரத்து ஒன்றும், மலாயா கங்கைபஹாப் சுப.அரு. அருணாசலம் செட்டியார் அவர்கள் ரூபாய் ஐயாயிரமும் மற்ற அன்பர்கள் பலவாறும் நன்கொடை கொடுத்திருப்பதை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

முக்கியமாக நகரத்தார் பெண்மக்களைப் பாராட்ட விரும்புகிறோம். இவர்கள் நாளும் சிவம்பேணி ஆகமப்படி வழிபாடு செய்து தீர்த்தந்தோறும் புனித நீராடுவர். காசி முதலிய தலங்களுக்கு ஸ்பெஷல் ரயில்களில் யாத்திரையாக வந்து இவர்கள் தம் மரபினர் வழி நின்று சைவ சமயத்தைக் காத்து வருகின்றனர். அறச் செயல்களுக்கு அள்ளிக்கொடுத்து ஆக்கந்தந்து மன நிறைவு பெறுதலே தங்கள் பிறவிப் பெரும் பயனெனக் கருதும் இந்தத் தாய்மார்களைப் பெரிதும் போற்றிப் புகழ்தல் பொருத்தமேயாகும்.

இந்த 100 ஆண்டுகளில் சத்திரங்களின் நிர்வாகப் பொறுப்பும் பிற தொண்டுகளும் செய்து வந்துள்ள அனைவரும் நமது நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள் ஆவர்.



இரங்கூனில் சொசைட்டியின் தலைவர், துணைத் தலைவர், காரியதரிசி, உப காரியதரிசி, காரிய சபை, நிவாக சபை அங்கத்தினர்கள் ஆகிய பதவிகள் வகித்துப் பணிபுரிந்து வந்தவர்களுக்கும் சொசைட்டியின் பிரதிநிதிகளாக இந்தியாவுக்கும் மலாயாவுக்கும் சென்று வந்துள்ள பேரன்பர்களுக்கும் எம் நன்றி உரியது.

இரங்கூன் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் கோயில்கள் தர்ம பரிபாலன சபையும், கம்பை தனவைசியர் கல்விக் கழகமும், பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கமும் இந்த ஸ்தாபனத்துடன் இணைந்து பணிபுரியும் சகோதர ஸ்தாபனங்கள் ஆகும். அவற்றின் ஆட்சியாளர்கள் பல உதவிகளைச் செய்து வருகிறார்கள். அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெரிதும் போற்றுகிறோம்.

மேற்கூறிய எல்லோர்க்கும் நலன்கள் அனைத்தும் உண்டாக வேண்டுமென்று காசி விசுவேசுவரர் திருவருளை மனமொழி மெய்களால் இறைஞ்சுகின்றோம்.

முடிவுரை

நகரத்தார்கள் காசியம்பதியில் சத்திரம் கட்டி அபிஷேக ஆராதனைகளை மேற்கொள்வதற்கு முன்னர் அங்கு நைவேத்தியம் முறையாக நடைபெறவில்லை. நகரத்தார்களால்தான் அவை ஒழுங்கான வடிவம் பெற்றுள்ளன. மகந்துகளைக் கலந்து விசுவேசுவரருக்குத் திருவனந்தல் உச்சிக்காலம், அர்த்தசாமம் என்ற மூன்றுகாலப் பூசைகளை என்றென்றும் நடத்திவரும் உரிமையை நாம் பெற்றோம். எல்லா மூர்த்திகளுக்கும் நாள்தோறும் மலர் அனுப்ப நந்தவனம் அமைத்தோம். பல்லாண்டுகள் சொந்தமாகப் பசுமடம் நடத்தி வந்தோம். இந்த நூற்றாண்டுக் காலமும் நாள் தவறாமலும் நாழிகை தவறாமலும் விசுவேசர்க்குரிய பூசைகளை சைவ ஆகமப்படியும் அரசரும் பிற கோடீசுவரர்களும் கண்டால் பொறாமைப்படத் தக்கவாறும் நடத்தி வந்திருக்கிறோம்.

1940 வரை நாள்தோறும் 350 பேருக்கு அன்னதானங்கள் செய்து வந்தோம். அந்தணரும் ஏழைகளும் நோயாளிகளும் மாணவர்களுமாகப் பல்வகை மக்கள் இவற்றால் பெரும் பயனடைந்தனர். அளவு சுருங்கினாலும் இயன்றளவும் இத் தருமங்களைத் தொடர்ந்து செய்து வருகிறோம்.

எத்தனையோ சமூகங்கள் சாதிகள் இந்திய நாட்டில் உண்டு. கவியரசர் பாரதியார் பாடியவாறு ஆயிரமுண்டு இங்கு சாதி. ஆயினும் வட இந்தியா எங்கும் உரிமையோடு ஒரு பொது இடம் உள்ளர்கள் நாம் மட்டுமே ஆவோம். எவரையும் எதிர்பாராது தலந்தோறும் தங்கி இறை வழிபாடு செய்யவும் கவலையின்றிக் காசி யாத்திரை தொடங்கவும் நமக்கு வசதி இருந்து வருகிறது.

இந்தத் தருமங்கள் தொடர்ந்து நடந்து வரவும் இன்னும் பெருகவும் நகரத்தார்கள் தாராளமாக நன்கொடை வழங்கிக் காசி விசுவேசர் அருளால் நலம் பல பெற்று மென்மேலும் செல்வம் ஈட்டி வாழ்வாங்கு வாழ்வார்களாக.

காசி விசுவேசர் துணை


மு.பழ. நடராசன் செட்டியார்
தலைவர்

அரு.சு.சுப்பிரமணியன் செட்டியார்
காரியதரிசி

சொ.மு.லெ.சுப்பிரமணியன் செட்டியார்
துணைத் தலைவர்

கூ.கரு.நா.காசிச் செட்டியார்
உப காரியதரிசி

இரங்கூன் 18-8-1963



காசி க்ஷேத்ரம்

தேவகி முத்தையா M.A., M.Phil.,


மோட்சபுரிகள் என்று ஏழு தலங்களைக் குறிப்பிட்டுச் சொல்வார்கள். அயோத்யா, மதுரா, மாயா, காசி, காஞ்சி, அவந்திகாபுரி, துவாரகாவதி, சைவ ஸப்தையதா மோஷதாயிகா என்பது ஸ்லோகம். ராமஜன்ம பூமியான அயோத்யா, கிருஷ்ணபரமாத்மா பிறந்த பூமியான மதுரா, மாயா என்பது ஹரித்துவாரம். அதாவது கங்கை விண்ணிலிருந்து பூமிக்குப் பிரவேசம் செய்த தலம். காசி என்ற புண்ணிய க்ஷேத்ரம் நகரேஷு காஞ்சி எனப் பெறும் காஞ்சி மாநகர் அவந்திகா எனும் உஜ்ஜயினி மற்றும் கிருஷ்ண பரமாத்மா ஆண்டருளிய துவாரகா ஆகிய ஏழும் மோட்சபுரிகள் என்று குறிப்பிடப் பெறுகின்றன. இத்தலங்களில் பிறப்பது, வாழ்வது, இறப்பது என்ற மனித வாழ்க்கையின் ஆதி, நடு, அந்தம் என்ற 3 நிலைகளுக்கும் தலையாய இடங்கள் என்று கூறுவது புராணம். க்ஷேத்திரம் என்பது நெல் விளையும் இடம் என்று பொருள். அங்கு எவ்வாறு ஒரு நெல், பத்து நூறாகி, ஆயிரம் லட்சமாகி செழிக்கின்றதோ அவ்வாறு இத்தலங்கள் செய்யும் நற்காரியங்களும் ஒன்று, பத்தாகி, நூறு ஆயிரமாகி, லட்சம் கோடியாகிப் பெருகி நற்பயனை அளிக்கின்றன.

காசியைப் பற்றிப் பொதுவான செய்திகளை முதலில் கூற விழைகின்றேன். காசி மாநகரம் வட இந்தியாவில் உ.பி.மாநிலத்தில் அலகாபாத்திலிருந்து 78 மைல் தொலைவில் உள்ளது. காசி என்னும் சொல்லுக்கு ஒளிமயமானது என்று பொருள். வாரணாசி என்று மற்றொரு பெயர் உள்ளது. காசி நகருக்கு வடக்கே வாரணா என்ற நதியும் தெற்கே ஆசி எனும் நதியும் சங்கமிக்கும் இடத்தில் அமைந்த நகரமாதலால் வாரணாசி என்று பெயர். இதனைப் பூலோகக் கைலாயம் என்றும் அழைப்பர். கந்த புராணத்தில் காசி காண்டம் என்னும் பகுதியில் உள்ள ஒரு பாடல்:

"காசியைக் குறித்துச் சொல்லும்
கால்களே கால்களாகும்
காசியை வாழ்த்தும் நாவே
நாவெனக் கூறலாகும்
காசியின் கதைகள் கேட்கும்
செவிகளே செவிகளாகும்
காசியை இனிது காணும்
கண்களே கண்களாகும்" என்று

கூறுகின்றது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று விசேஷங்களும் ஒருங்கே அமையப் பெற்றது காசி என்னும் புண்ணிய க்ஷேத்ரம். மூர்த்தி எனும் விசேஷம் பற்றி முதலில் காண்போம். பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்களுள் முதலாவதாகக் கூறுவது காசி விஸ்வேஸ்வரர் எனும் விஸ்வநாதர். ஆதி சங்கரர் நடைப் பயணமாக காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரையில் பயணித்து பன்னிரு ஜோதிர்லிங்க ஷேத்திரங்களை நிறுவினார். இதில் தலையாயது காசி விஸ்வநாதம். காசி விஸ்வநாதரை யாராக இருந்தாலும் அருகில் சென்று கைகளால் ஸ்பரிசித்து வணங்கும் பேற்றினைப் பெறலாம். விஸ்வநாதர் எளிமையின் வடிவம். அவரது சௌலப்யம் சிறப்பு மிகு குணம். காசியில் உள்ள விசுவநாதரைத் தொடும் உரிமை அனைவருக்கும் உண்டு என்பதாலோ என்னவோ காசியில் வாழும் மனிதர்களைத் தொட்டாலே பிறவித் துன்பம் கிடையாது என்று கூறுகிறது காசி காண்டம். ஜோதிர் லிங்கமான காசி விஸ்வநாதருக்கு மூன்று வேளையும் பூஜைப் பொருட்களை வழங்கி பூஜை செய்யும் அரிய பேற்றினைப் பெற்றவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர். விஸ்வேசருக்கு நாளும் பூஜை செய்யும் பேறு பெற்ற ஒப்பற்ற நிறுவனம் காசி நகரச் சத்திரம். இச்சத்திரம் விசுவேசர் கோவிலுக்கு அருகேயுள்ள குடோலியாவை அடுத்து அமைந்த கட்டிடமாகும்.



கடந்த 200 ஆண்டுகளாகச் செயல்படும் இந்நிறுவனம் பசுமடமும். நந்தவனமும் உண்டாக்கி விஸ்வநாதருக்குப் பாலும் மலர்களும் அனுப்புகின்றது. உஷத் காலத்தில் பத்தாஸ் மிட்டாயும், உச்சிக் காலத்தில் பருப்புப் பொங்கலும் அர்த்த சாமத்தில் சர்க்கரைப் பொங்கலும் நகரச் சத்திரத்தில் இருந்து அனுப்பப்படும் பொருட்களைக் கொண்டு கோயில் மடப்பள்ளியில் செய்து நைவேத்யம் செய்யப்படுகின்றது. விஸ்வேஸ்வரருக்கு நாளும் மூன்று முறை பூசை அபிஷேக அலங்காரப் பொருட்கள் நகரச் சத்திரத்திலிருந்து எடுத்துச் செல்லும்போது மேளம், தாளம் ஒலிக்க சம்போ, சம்போ சங்கர மகாதேவா என்று கோஷமிட்டுச் செல்வதைத் தெருக்களில் இருப்பவர்களும், கடைகளில் கட்டிடங்களில் உள்ளவர்களும் மரியாதையுடன் சென்று, பார்த்து தலை வணங்குவர். ஊரடங்குச் சட்டம் அமலில் இருந்தபோதும்கூட சம்போ நேரப்படி தவறாமல் வரும் என்றும் பஞ்சாப் மெயில் தாமதமானாலும் கூட நகரத்தார் சம்போ நேரப்படி தவறாமல் வந்துவிடும் என்பதும் காசியில் பழமொழி. குளிர் காலத்தில் ஐப்பசி மாதம் வசந்த பஞ்சமியிலிருந்து மாசி மாதம் சிவன் ராத்திரி வரை குளிர்காலச் சட்டை (மக்மல் பட்டு) காசி விஸ்வநாதருக்கு அணிவிக்க காசி நகரத்தார் கட்டளை உண்டு என்பதும் சிறப்பு.

காசி ஷேத்திரத்தில் கண் பார்வை படும் இடமெல்லாம் லிங்கஸ்வரூபம் இருக்கும். தரையில் பல இடங்களில் லிங்கஸ்வரூபம் இருப்பதால் இராமகிருஷ்ண பரமஹம்சர் மலஜலம் கூட காசி நகரத்தில் கழிக்காது நகருக்கு வெளியே செல்வார் என்றும் காஞ்சி மஹா பெரியவர் காசியில் வசிக்கும் காலங்களில் காலில் பாதுகையே அணிய மாட்டார் என்றும் கூறுவர். காசியில் செயலேதும் புரியாமல் சும்மா படுத்திருந்தாலும்கூட உயர்ந்த யோகம் செய்வதற்கும் மேலாகும் என்பது பொதுவான கருத்து.

காசி விஸ்வநாதரின் தேவி, விசாலாட்சி அம்மன். தேவிக்கும் தனிக்கோயில் 1893ஆம் ஆண்டு நகரத்தார்களால் அமைக்கப்பெற்று இங்கும் 3 வேளை பூஜைக்கு நகரச் சத்திரத்திலிருந்து சம்போ உடன் பொருட்கள் அனுப்பப்படுகின்றது. தீபாவளியின்போது மட்டும் 2 நாட்களுக்கு நாட்டுக்கோட்டை நகரச் சத்திரத்தில் உள்ள ஸ்வர்ண உற்சவ விசாலாட்சி அம்மன் தரிசனத்திற்கு மண்டபத்தில் எழுந்தருளுகின்றாள்.

காசி என்றவுடன் விஸ்வேஸ்வரருடன் நினைவில் வர வல்லவள் தேவி அன்னபூரணேஸ்வரி. தனிக்கோயில் கொண்டிருக்கும் அன்னைதான் புவனங்கள் பதினான்கினுக்கும் அன்னம் பாலிப்பவள். விஸ்வரூபம் கொண்ட லிங்கோத்பவரின் முடியைப் பார்த்துவிட்டதாக அன்னப் பறவை வடிவம் கொண்ட பிரம்மா பொய் கூற, கோபம் கொண்ட சிவன் பிரம்மனின் ஒரு தலையைக் கொய்து விட்டதாகவும், அந்தத் தலையானது சிவனின் கைகளை விட்டு அகலவில்லை என்றும், அந்த திருவோடு கொண்டு வீதி வீதியாக அவர் அலைந்ததாகவும், திருவோடுதனில் காசியில் அன்னபூரணேஸ்வரி பிச்சை இட்டவுடன் அது சிவனின் கைகளிலிருந்து மறைந்தது என்றும் கூறுகின்றது புராணம். இன்றும் நாள்தோறும் அதிகாலையில் அன்னபூரணி அம்மனின் கோயில் நடைக்கதவு முதலில் திறக்கப் பெற்றதும் அபிஷேக அலங்காரங்கள் நடைபெறுகின்றது. பின்னர்தான் விஸ்வேஸ்வரருக்கு அபிஷேக அலங்காரம் நடைபெறுகின்றது. அன்னையிடம் வந்து அவர் பிச்சை பெற்றுக்கொண்டு செல்வதே இன்றும் வழக்கமாக உள்ளது.

அன்னபூரணி கோயிலில் உள்ள தங்க அன்னபூரணிக்குத் தினமும் குபேரன் பூஜை செய்து வருவதாகவும், அதனால் பூட்டிய கர்ப்பகிரகத்தினுள் இருப்பதாகவும் கூறுவர். ஆண்டுதோறும் தீபாவளி சமயம் மட்டும் 3 நாட்களுக்குத் தங்க அன்னபூரணி பக்தர்கள் தரிசனத்திற்கு வெளி வருகின்றாள். தீபாவளியின்போது விஸ்வேஸ்வரர் கோயிலில் லட்டுத் தேரும், அன்னபூரணி கோயிலில் அன்னக்கூட்டும் விசேஷமான நிகழ்வுகள்.

கால பைரவர் திருக்கோயில் காசியில் பிரசித்தம். காசி நகரமே கால பைரவரின் காவல் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும், இங்கு வருபவர்கள்




அவரது உத்திரவுக்குப் பிறகே நகரை விட்டு வெளியேறலாம் என்றும் கூறுவது உண்டு. கால பைரவர் சன்னதியில் வழங்கப் பெறும் கருப்புக் கயிறு மகிமை வாய்ந்தது. காசிப் பிரசாதம் என்றாலே விஸ்வேஸ்வர் கோயில் விபூதி, விசாலாட்சியின் செந்தூரக் குங்குமம் மற்றும் பைரவரின் கருப்புக் கயிறு ஆகும். காசி ஷேத்திரத்தில் பருந்து வட்டமிடாது. பல்லி திருவுளம் கூறாது என்று கூறுவர். இதற்கு காரணமாக புராணக் கதை ஒன்று உண்டு. இராமபிரான் இலங்கை வேந்தனைப் போர் புரிந்து வெற்றி கண்டு இராமேஸ்வரம் வந்தவுடன் தனக்கேற்பட்ட தோஷத்தைப் போக்கிக் கொள்ள வேண்டி சிவலிங்க பிரதிஷ்டை செய்து வணங்க எண்ணி அனுமனைச் சிவலிங்கத்தைக் கொண்டுவர காசிக்கு அனுப்புகிறார். அனுமன் காசிக்குச் சென்று அங்கே கருடன் வட்டமிட்டுப் பறந்ததும், பல்லி திருவுளம் சொல்லியதுமான இடத்தில் இருந்த சுயம்பு லிங்கத்தை எடுத்துக்கொண்டு இராமேஸ்வரம் திரும்பினார். காசியும் அதன் சுற்றுப்புறமும் வயிரவர் காவலுக்கு உரிய பிரதேசமானபடியால் வயிரவர் இசைவு இன்றி லிங்கத்தை எடுத்தபடியால் அனுமனுக்கும் பயிரவருக்கும் போர் மூண்டது. அப்பொழுது அனுமன் கருடன் வட்டமிட்டதையும், பல்லி திருவுளம் சொல்லியதையும் கூறினார். அதுகேட்ட வயிரவர் அன்று முதல் கருடனும், பல்லியும் காசியில் முறையே பறக்கவும், திருவுளம் சொல்லவும் கூடாது என்று சாபமிட்டதாகவும் உள்ளது வரலாறு.

இப்புனித க்ஷேத்திரத்தில் அறிவு ஒளி பெற்ற ஆன்றோர் ஆதி சங்கர பகவத்பாதாள், புத்தர் போன்ற மகான்கள், கபீர்தாஸ், பாரதியார் போன்ற கவிஞர்களும் இங்கு வாழ்ந்தனர். உஸ்தாத் பிஸ்மில்லா கான், பண்டிட் ரவிசங்கர் போன்ற உலகப் பிரசித்தி பெற்ற கலைஞர்களும் காசிவாசிகள் ஆவார்கள். பண்டிட் மதன்மோகன் மாளவியா இங்கு நிறுவிய வாரணாசி ஹிந்து பல்கலைக்கழகம் புகழ் வாய்ந்தது. காசிநகரின் அருகாமையில் அமைந்துள்ள சாரநாத்தில்தான் புத்தர் போதி மரத்தின் கீழ் ஞான ஒளி பெற்றார். இந்திய நாட்டின் அடையாளச் சின்னமான அசோகர் தூணும் இங்குதான் அமைந்துள்ளது. புத்தகயா, அலகாபாத், திரிவேணி சங்கமம் ஆகியவை காசிக்கு மிக அருகில் உள்ள விசேஷமான தலங்கள்.

மூர்த்தி தலம் மகிமை பார்த்தாகிவிட்டது. அடுத்து தீர்த்தம். காசிக்கு நிகரான பதியுமில்லை. கங்கைக்கு நிகரான நதியுமில்லை என்பார்கள். பாரத நாட்டிலே எத்தனையோ நதிகள் உற்பத்தியாகி புரண்டோடுகின்றன. அவற்றுள் ஸப்த புண்ணிய நதிகள் என்று நாம் கூறுவது கங்கா, யமுனா, சரஸ்வதி, காவேரி, துங்கபத்ரா, கிருஷ்ணா, கோதாவரி போன்றவை. இவற்றுள் தலையாயது கங்கா. கங்கையில் மூழ்கி எழுந்தால் நமது அத்தனை பாவங்களும் அகன்று விடும். மானிடர் அனைவரது பாவத்தையும் தான் வாங்கிக்கொண்டு தனது புனிதம் மட்டும் சிறிதும் மாறாமல் என்றும் ஜீவநதியாகத்தான் கங்கை பாரத பூமியில் புரண்டோடுகின்றாள். காசி மஹா க்ஷேத்திரத்திற்குச் சென்றால் அங்கு நிகழ்வன கண்டால் இது நமக்குப் புரியும். காசியில் தீர்த்தமாடும் கட்டங்கள் காட் என்பன 64. இதில் மணிகர்ணிகா கட்டத்துக்குச் சென்றால் அங்குத் துறையில் மரணம் அடைந்தவர்களின் பூத உடல்கள் அக்கினி மூட்டப்பட்டு முக்கால் வீதம் ஏன் அரை வீதம் மட்டுமே எரிந்த நிலையிலேயே கங்கையினுள் தள்ளப்படுகின்றன. எத்தனையோ உடல்கள் தள்ளப்பெற்றும் கங்கையில் சிறிதும் துர்நாற்றம் வீசுவதில்லை. காசியில் பிணம் நாறாது. பூ மணக்காது என்பார்கள்.

கங்கையின் நீரை கலசங்களில் அடைத்து பல ஆண்டுகள் வரை வைத்திருந்தாலும் அந்நீர் கெடுவதில்லை. விஞ்ஞானிகள் இதற்குக் காரணம் கங்கையில் ஒருவித பாசி விளைவதாகவும் இந்தப்பாசி நதியில் கலக்கும் அத்தனை கழிவுகளையும் அப்புறப்படுத்தி நீரைத் தூய்மையாக வைத்திருக்கும் சக்தி கொண்டது என்று கூறுகிறார்கள். கோடானு கோடி மக்களின் பாவங்களைச் சுமந்தாலும் தனது தூய்மை மட்டும் சிறிதும் மாறாத கங்கை "எந்தப் புனிதப் பெற்றோரின் மகள்?" எனும் கேள்வி என்னுள் எழுந்து என்னை வியப்பில் ஆழ்த்தும்.



இமயமலையில் உதித்த கங்கை பெரும் இறுமாப்புடன் கரை புரண்டோடிக் கொண்டிருக்கின்றாள். 100 அஸ்வமேத யாகங்களை நடத்தினால் இந்திரப் பதவி கிடைக்கும் என்பதால் பகீரதனின் முன்னோர்கள் அஸ்வமேத யாகங்களை நடத்துகின்றார்கள். அந்த யாகத்தை நிறைவு பெறாமல் கெடுப்பதற்காக அஸ்வத்தைக் (குதிரையைக்) கபில மகரிஷியிடம் கொண்டு சென்று பாதாளத்தில் கட்டி வைக்கின்றார்கள் (கபில மகரிஷியின் இருப்பிடமான பாதாளம்தான் அமெரிக்காவில் உள்ள தற்போதைய கலிஃபோர்னியா மாகாணம் என்பதனை இங்குக் குறிப்பிட விழைகின்றேன்.) சத புத்திரர்கள் எனப்படும் 100 பேரான பகீரதனின் முன்னோர்களை உயிர்ப்பிக்க வேண்டும். அதற்குக் கங்கையைக் கொண்டு வர வேண்டும் என்று பகீரதன் சிவபெருமானை எண்ணி கடும் தவம் புரிகின்றான். கங்கையை ஆகாயத்திலிருந்து நேரடியாக பூமிக்கு வரவழைத்தால் அவளது வேகத்தைப் பூமி தாங்க முடியாது என்பதால் சிவபெருமான் அவளைத் தனது தலையில் வாங்கி வேகம் குறைத்து பூமியில் பாய விடுகின்றார். அவள் பூமியில் பாய்ந்தோடும்போது ஜன்னு முனிவர் யாகம் வளர்த்துக்கொண்டிருக்க அவளது வேகம் தனது யாகத்தைக் கெடுத்துவிடும் என்று அஞ்சி கங்கையை அவர் குடித்து விடுகின்றார். பகீரதன் தான் இத்தனை பிரயத்தனம் செய்து, கொண்டு வந்த கங்கையை மீண்டும் புவியோர்க்குத் தர வேண்டும் என்று பிராத்திக்க ஜன்னு முனிவர் கங்கையைத் தனது வலது காதிலிருந்து வெளியே பாயச் செய்கின்றார். இதனால் கங்கைக்கு ஜானவி ஜன்னுவின் மகள் என்ற பெயரும் உண்டு. நம் வலது காதில் கங்கை இருப்பதாக நம்பிக்கை இன்றும் இருப்பதால்தான் பூஜை, ஹோமம் ஆகியன செய்யும்போது தும்மலோ, கொட்டாவியோ வந்துவிட்டால் அந்த அசுத்தம் நீங்க பூஜை செய்வோர் வலது காதைத் தொட்டுக்கொள்ளும் பழக்கம் உண்டு. அதில் இருக்கும் கங்கை நமக்குப் புனிதம் தந்து விட்டதாகப் பொருள் / ஐதீகம்.

கங்காதேவி ஈன்றெடுத்த திருமகன்தான் பாண்டவர்களும், கௌரவர்களும், பிதாமகர் என்று பெரும் மரியாதையுடன் அழைத்த பீஷ்மாச்சாரியார் ஆவார். கங்கையின் மைந்தன் என்பதால் காங்கேயன் என்றும் இவருக்குப் பெயருண்டு. தன் தந்தைக்காக, தான் கடும் பிரம்மச்சரியம் பூண்ட உத்தமர். ஆன்மிக உலகிற்கு விஷ்ணு சஹஸ்ரநாமத்தை ஈன்ற மஹான். தனது மரண நேரத்தைத் தானே தேர்ந்தெடுக்கக் கூடிய வரம் பெற்றவர் என்று பல சிறப்புக்களை உடைய பீஷ்மரைப் பெற்ற தாய் கங்காதேவி.

காசியில் தண்டம், முண்டம், பிண்டம் ஆகிய மூன்றும் விசேஷமாக செய்யப் பெற வேண்டியவை. கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று புண்ணிய நதிகளும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்தில் முண்டம் செய்து கொள்ள வேண்டும். பின்னர் காசியில் விசுவநாதருக்குத் தண்டமிட வேண்டும். இறுதியாக கயாவில் பித்ருக்களின் பொருட்டு பிண்டம் இடவேண்டும். கயாவில் உள்ள வடவால மரத்தின் அடியில் திருமாலின் பாதத்தில் போடப்படுகின்ற பிண்டத்தால் பித்ருக்கள் உய்தி பெறுகின்றார்கள். காசியில் இறந்த ஆன்மாக்களை அம்பிகை தன் மடியில் கிடத்தி இளைப்பாற்றி விஸ்வேஸ்வரர் பிரணவத்தை அவர்களது காதுகளில் உபதேசிப்பார் என்பது புராண வரலாறு. மணிகர்ணிகா துறையில்தான் இறந்தவர்களின் காதில் பிரணவ மந்திரம் உபதேசிக்கப் பெறுகின்றது. மணிபிரவளம் என்பது மந்திரம். கர்ணிகை என்பது காது. இதன் காரணமாகவே இந்தத்துறைக்கு மணிகர்ணிகா என்று பெயர்.

எத்தனையோ மாதவம் புரிந்தவர்கள் கங்கைக் கரையில் காசியில் வாழ்ந்திருக்கின்றார்கள். இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவளது புகழ் பரப்பிக் கொண்டிருக்கின்றார்கள். அவ்வழியில்தான் இன்று காசி க்ஷேத்திரம் பற்றி பலர் பாடுகின்றார்கள். எழுதுகின்றார்கள். சேது பந்தனத்தில் அணிலின் பங்கு என்பது பெரியது. அந்த அணில் மீது படிந்த மணலில் ஒரு துளி என்பதுதான் எனக்குப் பொருந்தும். எனக்கு எப்பொழுதும் தாமரை, கிளி,



கங்கை என்ற மூன்றும் அதிகப்பிரியம். ரிஷிகேசத்தில் கங்கைக்குள் கால் பதித்த வேளையை என்னால் மறக்க இயலாது. காசியில் என் கணவரது அன்புப் பெற்றோர்களின் அஸ்தியைக் கரைக்கச் சென்றதும், மீண்டும் சில ஆண்டுகளுக்குப் பின் தங்க அன்னபூரணியை தரிசிக்கச் சென்றதும் என் நினைவில் நீங்காத இடம் பெற்ற சம்பவங்கள். அந்த நினைவுகளை இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு (சுமார் 13 ஆண்டுகள்) மீண்டும் புத்துயிருடன் பிறக்கச் செய்திருக்கிறார் விஸ்வேஸ்வரர். அதற்குக் காரணம் நான் வணங்கும் காஞ்சி மஹா பெரியவர் பூஜ்யஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி அவர்களின் ஆசியும் வாசகர்களின் அன்பு கலந்த ஆதரவும்தான். இந்த அரிய வாய்ப்பினை நல்கிய காசி விஸ்வேஸ்வரருக்கும் அன்னபூரணிக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு (ரகுபீர் சிங்) Ragubhir Singh அவர்களது Ganga-Sacred River of India எனும் நூலில் நான் கண்ட காளிதாஸரின் பாடல் ஒன்றையும் ஆதி சங்கர பகவத்பாதாளின் சௌந்தர்யலஹரியில் உள்ள பாடல் ஒன்றையும் கூறிக் கட்டுரையை முடித்துக் கொள்கின்றேன்.

When the waters of the Ganga and the Yamuna mingle it appears as though diamonds and sapphires were woven together in a string; as though a flock of white swans had suddenly run into another flock of black swans; as though a garland of white lotus buds were interspersed with blue lotuses; as though a streak of lightening had merged into a sheet of darkness; as though a clear blue sky was spotted with woolly clouds of autumn.

- Kalidas Raguvamsam Canto XIII

சௌந்தர்யலஹரியின் 54வது ஸ்லோகம்

பவித்ரீ கர்த்தும்ந: பசுபதி பராதீன ஹ்ருதயே
தயாமித்ரைர்-நேத்ரைர் ரருண தவல ச்யாம்ருசிபி
நத : சோணோ கங்கா தபண தனயேதி த்ருவமமும்
த்ரயாணாம் தீர்த்தானா முபநயஸி ஸம்பேத மநகம்

"பசுபதிக்கு நிகரான கருனை உள்ளம் கொண்டவளே, தயைக்கு இருப்பிடமாகத் திகழும் உன் கண்கள் சிவப்பு, வெளுப்பு, கருப்பு என்ற வர்ணங்களைக் கொண்டவையாக உள்ளன. அது எதற்கு ஒப்பாக இருக்கிறதென்றால் மேற்கு நோக்கி செல்லும் சிவந்த நீரினை உடைய சோணாபத்ரா ஆறு (சரஸ்வதி) வெளுப்பான கங்கை மற்றும் சூர்யபுத்திரியான கறுப்பு வண்ணம் கொண்ட யமுனையும் சங்கமிப்பது போல் இருப்பதால் உனது கண்களே எங்களது பாவங்கள் அனைத்தையும் போக்கிப் புனிதமாக்க வல்லவை" என்று கூறுகிறார்.

அன்னையின் நயன தீக்ஷையில் நம் பாவங்கள் அனைத்தும் நீங்கி உய்வு பெறுவோமாக!

உ
சிவமயம்



சொ.கண்ணப்பன்

நாட்டரசன்கோட்டை

(காசிச் சத்திர மேலாண்மைக் கழகத்தின் முன்னாள் செயலாளர்
திரு. கண.மெ.நா. சொக்கலிங்கம் செட்டியார் அவர்களின் புதல்வர்)

காசி விஸ்வநாதருக்கு பல ஆண்டுகளாக மூன்று காலப்
பூஜைகளை நடத்தி நகரத்தார்களுக்குப் புண்ணியத்தையும், பெருமையையும்
சேர்த்து வரும் ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்தின்
இறைப் பணிகள் மென்மேலும் சிறப்புடன் நடைபெற எனது நல்வாழ்த்துக்கள்.

Senior Engineer for SNC Lavalin Hydrocarbons & Chemicals
Member : Texas Board of Professional Engineers
Member : American Society of Mechanical Engineers
Member : The Gas pipeline Safety Research Committee
Board Member : Society of Piping Engineers & Designers
Advisory Board Member of the Asia Society of Texas
One of the Founders of Houston Meenakshi Temple

அன்பே சிவம்

பதிவு எண் : 56/91
போன் : 0451 - 2470349



நகரத்தார் சங்கம் – திண்டுக்கல்

'இச்சமயம் சைவம் ஏற்றிய பெரியோன் வாழ்க!
இச் சீர்வளர் மரபு தந்த பேராளன் வாழ்க'

30-12-2012 அன்று நடைபெறும் காசி விஸ்வநாதர் மூன்று கால வழிபாடு தொடங்கி 200 ஆண்டுகள் நிறைவு விழா, மாநாடு போல் சிறக்க வாழ்த்துகிறோம்.

30-12-2012ஆம் நாள் "**இரண்டு லட்சம் ஆண்டுகளை**" நோக்கிப் பயணிக்கும் வெற்றி நாளாக அமையட்டும்.

மேற்கண்ட 'சிவத்தொண்டு' 200 ஆண்டுகளாய் நடந்து வருகின்ற செய்தியை நகரத்தார்களிடம் எடுத்துச் சொல்ல விழாக் குழுவினர் எடுத்துக் கொண்ட முயற்சியைப் பாராட்டுகிறோம்.

"ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்"

போல் நகரத்தார்கள் தருமங்களில் மிகுந்து சிறக்கவும், நகரத்தார் புள்ளிகள் பல்கிப் பெருகவும், நகரத்தார்கள் கலை, கல்வி, ஆன்மீகம், வணிகத்தில் சிறந்து விளங்கவும் காசி விஸ்வநாதர் விசாலாட்சி அன்னையைப் பிரார்த்திக்கிறோம்.

நகரத்தார் சங்கம் - நகரத்தார் திருமண மண்டபம்
21-23 ராஜலெட்சுமி நகர், நத்தம் சாலை,
திண்டுக்கல் - 624 003.

குடி செய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடி தற்றுத் தான் முந்துறும் – குறள் 1023

என்கிற குறளுக்கேற்ப தாம் பிறந்த குடி உயரப் பாடுபடும் நகரத்தார்களுக்கு காசி விஸ்வநாதர் – விசாலாட்சி அன்னை எல்லா வளத்தையும் நலத்தையும் நல்கட்டும்.

தலைவர் – செயலர் – பொருளாளர் உள்ளிட்ட நிர்வாகக் குழு – செயற் குழு – பொதுக் குழு உறுப்பினர்கள் – நகரத்தார் சங்கம் – திண்டுக்கல்

திண்டுக்கல் நகரத்தார் சங்கத்தின் சேவைகள்

1. பழனி காவடிகளை வரவேற்று மரியாதை செய்தல் – பாதயாத்திரை பக்தர்களுக்கு அன்னதானம் செய்தல்.

2. திண்டுக்கல் ஸ்ரீ அபிராமி அம்மன் திருக்கோவில் மண்டகப்படியை ஆண்டுதோறும் செய்தல்


3. திண்டுக்கல் ஸ்ரீ வெள்ளை விநாயகர் திருக்கோவில் மண்டகப்படியை ஆண்டுதோறும் செய்தல்

4. கல்வி உதவி – திருமண உதவி போன்ற சமுதாயப் பணிகள்

5. ஆண்டு விழா – பிள்ளையார் நோன்பு விழா போன்ற நகரத்தார் ஒருங்கிணைந்த பணிகள்

மேற்கண்ட பணிகளில் சிறந்து விளங்க தங்களின் அன்பான வாழ்த்துக்களை வளமோடு வழங்க வேண்டுகிறோம்.

நன்றி



ஸ்ரீ காசி விஸ்வநாதர்


மூன்று கால வழிபாட்டின்
200 ஆண்டுகள் நிறைவு விழா
மலருக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்



சுப.அண.சுப்பையா செட்டியார்
சுப.சரோஜா ஆச்சி

சோழபுரம், சிவகங்கை மாவட்டம்

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர்
திருக்கோவிலில் அருள்பாலிக்கும் அன்னை மீனாட்சிக்கு
ரூ. 1.5 கோடி மதிப்புள்ள வைரக் கீரிடத்தைச் செய்து
உபயமாக வழங்கிய தம்பதியர்



மதுரை
அருள்மிகு மீனாட்சி அம்மனுக்கு
திரு. அண. சுப்பையா செட்டியார் -
திருமதி சரோஜா ஆச்சி தம்பதியர்
உபயமாக வழங்கிய
வைரக் கிரீடத்தின் கண்கவர் தோற்றம்



காசியில் ஞானிகள்

சொ.சொ.மீ.சுந்தரம்

உலகிற்கு ஞானம் கொடுக்கும் ஞான பூமி இந்தியா. இந்தியாவின் ஆன்மீகத் தலைநகரம் காசி. கங்கை நீரும் காசியின் மண்ணும் ஞானப்பயிரை விளைவிப்பதில் ஈடுஇணையற்றவை. விசுவநாதர் அருள்பெற்ற ஞானிகள் பலர். புலவரும், ஞானியுமான பாரதியார் காசியில் சிலகாலம் வாழும் பேறு பெற்றார். அவருக்குப்பின் வந்த பலரும் காசியை வணங்கிச் சிலகாலம் காசியில் வாழும் பேறு பெற்றனர். ஆதிசங்கரர் காலத்துக்கு முன் தோன்றிய அப்பர் பெருமான் கயிலாயம் செல்ல நினைத்தபோது காசிக்குச் சென்று பதிகம் பாடியுள்ளார். இத்தகைய ஞானிகள் சிலர் காசிக்குப் பெருமை சேர்த்தனர். இவர்களில் சிலரை மட்டும் இங்கே சிந்திப்போம். இதனால் நம் தீவினைகள் அகலும்.

ஆதி சங்கரர்

ஆதிசங்கரர் கங்கையில் குளித்துவிட்டுக் காசியில் நடந்து போனார். எதிரில் புளித்த கள் உள்ள குடத்தைச் சுமந்துகொண்டு நான்கு நாய்களைக் கையில் பிடித்தபடி ஒரு புலையன் வந்தான். அவன் தன்மீது உரசிவிடக் கூடாதே என்றெண்ணிய ஆதிசங்கரர் "விலகிப் போ" என்றார். அவன், "எதை விலகச் சொல்கிறீர்கள். ஆன்மாவையா? உடலையா? உங்கள் உடம்பும் சோற்றால் உண்டானது. என் உடம்பும் சோற்றால் உண்டானது. இரண்டுக்கும் என்ன வேற்றுமை?" எனக்குள்ளும் உங்களுக்குள்ளும் ஒரே ஆத்மாதான் உள்ளது. அது எல்லா உயிர்களிலும் எங்கும் நிறைந்திருக்கிறது. அதை எங்கே போகச் சொல்ல முடியும்?

கங்கையில் தோன்றும் சூரியனும் சண்டாளத் தெருவில் அழுக்குநீரில் தோன்றும் சூரியனும் ஒன்றுதானே? அது சுத்தம், இது அசுத்தமா?

தங்கள் குடத்திலும் ஆகாசம் உள்ளது. என்னுடைய கள் குடத்திலும் ஆகாசம் உள்ளது. இரண்டு ஆகாசங்களுக்கும் வேறுபாடு உண்டா? என்று கேட்டான். சங்கரர் அறிந்துகொண்டு மனீஷாபஞ்சகம் என்ற ஐந்து சுலோகங்களைப் பாடினார். சண்டாளன் விசுவநாதனாகவும், நாய்கள் வேதங்களாகவும் கள் குடம் அமுதக் குடமாகவும் காட்சியளிக்கச் சிவனருள் பெற்றார் ஆதிசங்கரர். காசியில் தங்கியபோதுதான் விஷ்ணு சகஸ்ரநாமத்துக்கு உரை எழுதினார்.

துளசீதாசரும் காசியும்

காசியில் குமரகுருபர சுவாமிகள், இராமாயணத்தை இந்தி மொழியில் தொடர்ந்து பேசினார். இதைக் கேட்ட துளசீதாசர் இராம சரித மானஸ் என்ற பெயரில் இந்தியில் இராமாயணத்தை எழுதினார். 1574 மார்ச் 30ல் எழுதத் தொடங்கி 2 ஆண்டு 7 மாதம் 26 நாட்களில் நிறைவு செய்தார். தோஹா, சௌபாயி, சந்த், சௌரடா, சப்பய் ஆகிய யாப்புகளில் இயற்றப்பட்ட இக்காவியம் 17000 சொற்களைக் கொண்டது. ஒவ்வொரு சௌபாயியிலும் மற்றும் சந்த்களின் ஒவ்வொரு வரியிலும் சீதாராம் என்பதைக் குறிப்பதுபோல ச,த,ர,ம என்ற நான்கு எழுத்துக்கள் இயல்பாக அமைந்துள்ளன.

இந்த இராமாயணத்தை எடுத்துக்கொண்டு வந்து, அனுமான் கூறியபடி காசி விசுவநாதர் சந்நிதியில் வைத்தார் கோஸ்வாமி துளசீதாசர். ஒவ்வொரு நாளும் அவர் படிக்க, அது விசுவநாதர் கருவறையில் வைக்கப்பட்டது. கடைசி நாள் இரவில் பாராயணம் முடிந்தது. இரவு முழுவதும் பஜனை நடந்தது. மறுநாள் காலையில் கருவறை திறக்கப்பட்டது. இராமாயணச் சுவடிகளின் மேல் விசுவநாதர் அணிந்த ஆடை விரிக்கப்பட்டுச் சத்தியம் சிவம் சுந்தரம் என்ற எழுத்துக்கள் காணப்பட்டன. போலோ ஹரஹர மகாதேவ



என்ற முழக்கம் எழுந்தது. விசுவநாதரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்தி இராமாயணம் பண்டிதர்கள் பாராட்டுக்கும் பாமரர்கள் பாராயணத்துக்கும் உரியதாயிற்று. 126 ஆண்டுகள் வாழ்ந்த துளசீதாசர் 1623ல் மறைந்தார்.

குமரகுருபரரும் காசியும்

காசியில் முகம்மதிய மன்னன் ஆண்ட காலத்தில் சைவமுரசொலித்துச் சைவமடம் கட்டிச் சைவப் பேரரசு செலுத்தியவர் குமரகுருபர சுவாமிகள். எல்லா நதிகளும் கங்கையே; எல்லாத் தெய்வங்களும் விசுவநாதரே. எல்லா ஊரும் காசியே எனக்கண்டு

காணும் காணும் நதிகள்எல் லாம்புனல்
கங்கையே; அங்குள தெய்வம் யாவையும்
தாணு எங்கள் அகிலேசரே; மற்றைத்
தலங்கள் யாவும் தடமதில் காசியே

என்று பாடிய பெருமை அவருக்கே உரியது. திருச்செந்தூர் முருகப் பெருமான் திருவருளால் பேசம் திறமையும் பாடும் புலமையும் பெற்றுக் கந்தர் கலிவெண்பாப் பாடிய குமரகுருபர சுவாமிகள் காசிக்கு வந்தார். சைவ மடம் கட்ட இடம் வேண்டும் என்று கேட்பதற்காக முகம்மதிய மன்னன் அரசவைக்குச் சென்றார். அரசன் இவருக்கு ஆசனம் அளிக்காமல் நிற்கச் செய்தான். மீனாட்சியம்மையை நினைத்தார். அவள் வாகனமாகிய சிங்கம் வந்தது. ஏறி அமர்ந்தார். சிங்க ஆசனத்தில் புவி மன்னன்; சிங்கத்தின் மீது கவியரசர்; கண்டவர் திகைத்தனர். சுவாமிகள் கலைமகளை எண்ணிச் சகலகலா வல்லிமாலை பாடினார்.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண்கண் டளவில் பணியச் செய்வாய் படைப்போன் முதல்ஆம்
விண்கண்ட தெய்வம் பலகோடி உண்டேனும் விளம்பில்உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ சகலகலா வல்லியே

என்று பாடியதும் இந்திமொழி பேசும் திறமை பெற்றார். மன்னனிடம் இந்தியில் பேசினார். மடம் கட்ட இடம் கேட்டார். மன்னன் அமைச்சரைப் பார்த்தான். மதியமைச்சர் "கங்கைக் கரையில் கருடன் பறக்கும் இடத்தைத் தருவோம்" என்றார். காசியில் கருடன் பறக்காது என்று அமைச்சருக்குத் தெரியும். எனவே இப்படித் தந்திரமாகக் கூறிவிட்டார். காசியில் கருடன் பறப்பதில்லை. ஏன்?

இலங்கையில் இராவணனைக் கொன்ற இராமபிரான். இராமேஸ்வரத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபட்டுத் தன் பாவத்தைப் போக்கிக் கொள்ள நினைத்தார். சிவலிங்கம் கொண்டுவர அனுமாரைக் காசிக்கு அனுப்பினார். காசிக்கு வந்த அனுமார் அங்கே கருடன் வட்டமிட்ட இடத்தில் பல்லி திருவுளம் சொல்லிய இடத்தில் சுயம்பு லிங்கத்தை எடுத்துக்கொண்டு திரும்பினார். காசிக்குக் காவல் வயிரவமூர்த்தி. அவர் இசைவின்றிச் சிவலிங்கத்தை எடுத்த அனுமாரை அவர் தடுத்து நிறுத்தினார். போர் மூண்டது. தேவர்கள் வந்து இருவரையும் வணங்கி இருவரும் சிவ அம்சம் பெற்றவர்கள். சண்டையில் யாரும் வெல்லவும் முடியாது. தோற்கவும் முடியாது. சண்டையை நிறுத்துங்கள் என்று வேண்டிக் கொண்டனர். சிவலிங்கத்தை அனுமார் எடுத்துச்செல்ல வயிரவர் ஒப்புக்கொண்டார். "அன்று முதல் காசியில் கருடன் பறக்கக்கூடாதென்றும் பல்லி திருவுளம் சொல்லக்கூடாது என்றும்" வயிரவர் ஆணையிட்டார்.

இதை அறிந்த அமைச்சர் சுவாமிகளை ஏமாற்றக் கருடன் பறக்கும் இடம் தருவோம் என்றார். மறுநாள் காலை யாவரும் கங்கைக் கரைக்கு வந்தனர். சுவாமிகள் வயிரவரை வேண்ட, வயிரவர் விதிக்கு விலக்களிக்க, மசூதியைச் சுற்றிக் கருடன் பறக்க, அரசன் ஒப்புக்கொண்டபடி அந்த இடத்தைத் தர,



அங்கே காசிமடம் பெரிய அரண்மனைபோலக் கட்டப்பெற்றது. இது 1648ல் நிகழ்ந்தது. மடத்துக்கு முன்னால், கேதாரகட்டத்தில் கேதார ஈஸ்வரர் கோவிலும் கட்டப்பட்டது. தமிழ்நாட்டு முறைப்படி இங்கே வழிபாடுகள் சிறப்பாக நடந்து வருகின்றன.

காசிக் கலம்பகம்

மாதுக்கு இடம் கொடுத்த விசுவநாதன் மடம்கட்ட இடம் கொடுத்த காரணத்தால் குமரகுருபர சுவாமிகள். காசிக் கலம்பகம் பாடினார். இது மிகச்சிறந்த நூல். இந்நூலில் சிவபெருமானாகிய அகிலேசர் மயிலேறும் முருகனுக்குத் தீப்பறக்கும் வேலைதந்தார். அடியார்களாகிய எங்களுக்கு அடித்தொழும்பு செய்யும் இவ்வேலை தந்தார் என்பதை

கேயூரம் ஊரக் கிளர்தோள் அகிலேசர்
மாயூரம் ஊரும்ஒரு மைந்தற்குத் - தீயூரும்
அவ்வேலை ஈந்தார் அடித்தொழும்பு செய்தொழுகும்
இவ்வேலை ஈந்தார் எமக்கு

என்று பாடுகிறார். காசிப் பெருமானைக் கண்டு தொழுதார் இனிப் பிறக்க மாட்டார். தொழாதார் பிறப்பார் என்பதை

புயலார் பொழிற்காசிப் பூங்கோவில் மேய
சுயலார் தடங்காணாள் காந்தன் - செயல், ஆவி
உய்யத் துதியார் உதிப்பார்; துதிப்பாரேல்
வையத்து உதியார் மறுத்து.

என்று மிக நயமாகக் குறிப்பிடுகிறார்.

ஆனந்தம் தரும் அன்னபூரணியுடன் ஆனந்தமான மகாமயானத்தில் ஆனந்தமாக ஆடும் பெருமான் அழகில் ஈடுபட்டுத் திளைத்து ஆடுங்கள். இல்லாவிட்டால் பிறவியில் அகப்பட்டு இளைத்து ஆட வேண்டும் என்று எச்சரிக்கிறார்.

ஆனந்த வல்லியுடன் ஆனந்தக் கானகத்தே
ஆனந்தக் கூத்தாடு அருட்கடலை - ஆனந்தங்
கொள்ளத் திளைத்தாடும்! கூடாதேல் இப்பிறவி
வெள்ளத்து இளைத்தாடு வீர்.

என்பது காசிக்கலம்பகம்

குமரகுருபர சுவாமிகள் காசியில் நீண்ட காலம் தங்கியிருந்தார். இந்தியிலும் தமிழிலும் சொற்பொழிவு செய்தார். கம்ப இராமாயணத்தை இவர் சொல்லக்கேட்ட துளசிதாசர் இந்தியில் "ராமசரித மானஸ்" என்ற பெயரில் இராமாயணம் பாடினார்.

காசிப்பதியைச் சிவபெருமானின் படைவீடு என்று குமரகுருபர சுவாமிகள் பாடுகிறார்.

செந்தேன் ஒழுகும் பொழிற்காசி. சிறுநுண் நுசிப்பில் பெருந்தடங்கண்
பைந்தேன் ஒழுகும் இடப்பாகர். படைவீடு என்பது உணராய் கொல்

என்று பாராட்டுகிறார். துறவியும், மடாதிபதியும், மடம் நிறுவியவருமாகிய குமரகுருபரர் பெருங்கவிஞராகவும் திகழ்ந்து பல நூற்களைப் பாடினார். சைவ மடங்களில் இவர் கட்டிய காசித் திருமடம்



அகில இந்திய மடம். அமெரிக்காவில் வேதாந்தசிங்கமாக விளங்கிச் சிங்கத்தின் மேல் எழுந்தருளிய கவிச் சிங்கம் குமரகுருபர சுவாமிகள்.

சைவ சித்தாந்தமும் காசியும்

பதியாகிய ஆண்டவன் ஒருவன். பசுக்களாகிய உயிர்கள் பல. உயிர்களைப் பந்தித்து நிற்கும் பழவினைப் பாசங்கள் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றுமாகும். இறைவன் திருவருளால், உயிர்கள் பக்குவப்படப் பாசம் எனும் தாழ் உருவப்படுகிறது. காசி மகாமயானம், சாமானிய மயானம் உடலைச் சுடுகிறது. இந்த மகாமயானம் உயிரைப் பற்றி நிற்கின்ற பாசங்களைச் சுடுகிறது. காசியில் இறக்க முத்தி என்றால் என்ன பொருள்? இந்தப் பாசங்கள் இறந்துபோவதால் ஆன்மா முத்தி அடைகிறது என்பது பொருள். காசிக்கு ஆனந்தவனம் என்று பெயர். எந்த இடத்தில் மேலும் அப்பால் செல்ல முடியாமல் வாக்கானது மனத்தோடு கூடத் திரும்புகின்றதோ அதுவே ஆனந்தம் என்று தைத்ரீய உபநிடதம் கூறுகிறது. “மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே” என்பது திருவாசகம். மாற்றமும் மனமும் கழிய நின்ற நிலை ஆனந்த நிலை. காசியில் இறப்பவர்க்கு உமாதேவியார் இளைப்பை மாற்றி முத்தி அருளுகிறாள் என்பது நம்நாட்டு வழக்கம். அழிப்பு என்பதே இளைப்பாற்றல்தான். நாசம் அன்று. காசியில் இறக்கும் பேறுபெற்ற ஆன்மாவுக்குத் திருவருள் பதிவு (சத்திநிபாதம்) உண்டாகிறது. காசியில் அன்னபூரணி எல்லோருக்கும் அன்னம் பாலிக்கிறாள். இதன் பொருள் என்ன? “எத்திறம் நின்றான் ஈசன், அத்திறம் அவளும் நிற்பாள்” என்று சிவஞான சித்தியார் கூறுவதுபோல, அன்னபூரணி உலக உயிர்களுக்கெல்லாம் அவரவர் பக்குவத்துக்கேற்ப, தனுகரணபுவன போகங்களைத் தந்து, வினையை அனுபவிக்கச் செய்து, வினை கழிய வைக்கிறாள். காசி என்ற சொல்லைத் திருப்பிப் போட்டால் சிகா என்று வரும். அதற்கு முடி என்று பொருள். காசியே தலங்களுக்குள் முடிமணி போல் தலையாயது என்பது இதன் விளக்கம். காசியில், பெருமான் உபதேசிப்பதை

காசி தன்னிடை முடிபவர்க்கு எம்பிரான் கழறும்
ஆசில் தாரகப் பிரமமாம் அதன்பொருள்.


என்று கந்தபுராணம் பேசுகிறது.

ஆதிசங்கரரும் காசியும்

காசியில் பல காலம் வாழ்ந்தவர் ஆதிசங்கரர். பத்மபாதர் என்ற புகழ்மிக்க சீடர் இங்கேதான் குருவை நாடி வந்தார். பல்லாண்டுகளாக இலக்கணப் பயிற்சியில் வாழ்நாளை வீணாக்கிய ஒருவனைப் பார்த்துப் பஜகோவிந்தம் பஜகோவிந்தம் பஜகோவிந்தம் மூடமதே என்று ஆதிசங்கரர் பாடியதும் காசிப்பதியில் நிகழ்ந்தது. ஒருநாள் ஒரு கிழட்டு அந்தணர் மகாஞானியாகத் தோன்றி பிரம்ம சூத்திரபாஷ்யம் பற்றி விவாதம் செய்தார். ஆதிசங்கரர் அவர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் விடை சொல்லி அவரைத் திருப்திப்படுத்தினார். இறுதியில் அந்தப் பெரியவர் தன் உண்மையான வடிவத்தைக் காட்டினார். வேதங்களைத் தொகுத்த கிருஷ்ணதவைபாயன வியாச முனிவராகத் தோன்றி அருள்செய்தார். வியாசர் இருந்த இடம் வியாச காசி என்றழைக்கப்படுகிறது. இங்கே வியாசர் வழிபட்ட மிக அழகாக ஒளிவீசும் சிவலிங்கம் இருக்கிறது. காசி மன்னர் அரண்மனையின் மேற்பகுதியில் இந்தச் சிவாலயம் உள்ளது.

காசியும் யோகிராம் சுரத்குமார் சுவாமிகளும்

திருவண்ணாமலையில் விசிறி சுவாமிகளாக வீற்றிருந்து ஞானமழை பொழிந்த யோகிராம் சுரத்குமார் சுவாமிகள் 1-12-1918ல் காசிக்கு அருகில் உள்ள ஒரு சிற்றூரில் பிறந்தவர் இவர். கங்கைக் கரையில் பல சாதுக்களைச் சந்தித்தார். அவர்கள் கூறியவற்றைப் பற்றிச் சிந்தித்தார். மலருக்கு முளைக்கும்போதே மணம்



வந்தது. இளமையிலேயே சாதுசங்கம் இவருக்கு இன்பமூட்டியது. 16ஆம் வயதில் ஒரு பறவையை விரட்டக் கயிற்றை வீசினார். அது பறவையின் மேல் பட்டுப் பறவை இறந்தது. இவருக்கு அளவில்லாத துன்பம் உண்டாயிற்று. காசி விசுவநாதப் பெருமான் சன்னதியில் வாரக் கணக்கில் கிடந்தார். தவம் புரிந்தார். சாரநாத் சென்று பௌத்த விகாரத்தைப் பார்த்தார். 1937ல் கங்கைக் கரைச் சந்நியாசி ஒருவர் இவரைத் தடுத்தாட்கொண்டார். விசுவநாதர் சந்நிதியில் இவர் "என் தந்தையே உன்னைக் காணாமல் பல ஆண்டுகள் வீணாகி விட்டனவே! நான் உன் மகன் அல்லவா? உன்னிடம் என்னை அழைத்துக்கொள்ள மாட்டாயா?" என்று கதறினார். விசுவநாதர் கருணை காட்டினார். யோகிராம் சுரத்குமார் புதுவையில் அரவிந்தரைப் பார்த்தார். அருணையில் ரமணரை அடைந்தார். இறுதியாக 1952ல் காஞ்சன்காடு ராமதாசர் மூலம் ஸ்ரீ ராமமந்திர உபதேசம் பெற்றுத் தவத்தால் தன்னை உணர்ந்து 1959ல் திருவண்ணாமலைக்கு வந்து தன் ஞானத்தவம் பலருக்கும் பயன்படச் செய்தார். தன்னைப் பிச்சைக்காரன் என்று கூறிக்கொண்டு அனைவருக்கும் அருட்பிச்சை போட்ட சுவாமிகள் காசிப்பதியில் கங்கைக் கரையில் பூத்துத் திருவருணையில் மணம் வீசிய மலராய்த் திகழ்ந்தார்.

அகல்யாபாயும் காசியும்

காசி விசுவநாதர் முகமதியர்களால் கங்கையில் மூழ்கடிப்பட்டார். ராஜபுத்திர ராணி அகல்யாபாய் காசிக்கு வந்தாள். விசுவநாதரைக் காணாமல் வருந்தினாள். அழுதாள். விசுவநாதர் கிடைக்க வேண்டுமென்று 48 நாட்கள் கங்கைக்கரையில் உண்ணாநோன்பு நோற்றாள். தவம் செய்தாள். 48ஆம் நாள் கங்கையில் மூழ்கினாள். அவள் கைக்குள் வந்தமர்ந்தார் விசுவநாதப் பெருமான். அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை அகல்யாபாயின் கரத்தில் இருந்தது. அந்தச் சிவலிங்கப் பெருமானை இப்போது கட்டப்பட்டுள்ள கோவிலில் பிரதிஷ்டை செய்தார்கள். (பழைய கோவில் மசூதியானதாகக் கூறப்படுகிறது. விசுவநாதர் கோவிலின் பின்புறம் அந்த மசூதி உள்ளது) பண்டாக்கள் இது உண்மையான விசுவநாதர் இல்லை என்றார்கள். அகல்யாபாய் இறைவனை வேண்டினாள். ஏதேனும் அற்புதம் நிகழ்ந்தாலன்றிப் பண்டாக்கள் நம்பமாட்டார்கள். எனவே விசுவநாதப் பெருமான், நடுவில் இருந்தவர் நகரத் தொடங்கினார். நகரத்தில் தொடங்கும் மந்திரமானவர் நகரத்தார்களின் நற்பணி ஏற்பவர், நாடு வியக்க நகரத் தொடங்கினார். சந்நிதியின் ஈசானிய (வடகிழக்கு) மூலையில் எழுந்தருளினார். இன்னும் அப்படியே காட்சி அளிக்கிறார். சிவலிங்கப் பெருமான் மேல், முகமதியர்களால் பாதிக்கப்பட்டதால் வந்த வடு இன்னும் இருக்கிறது. காசிக்கோவில் மகாத்வாரங்கள் அகல்யாபாய் பெயரால் அழைக்கப்படுகின்றன. கங்கையின் 64 கட்டங்களில் அகல்யாபாய் காட் என்பதும் ஒன்றாகும். இந்த அரிய செய்தி இராயவரம் ஆர்எம்.இராமசாமி அவர்களால் "வாரணாசி மகத்துவம்" என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காசியும் குழந்தையானந்த சுவாமிகளும்

மீனாட்சியம்மையின் திருக்குழந்தையாக வளர்ந்த குழந்தையானந்தா சுவாமிகள் மதுரை அரசரடியில் சமாதி கொண்ட மகான். இவர் பலகாலம் காசியில் திரைலிங்க சுவாமிகள் என்ற பெயரோடு வசித்து வந்தார். குருதேவர் இராமகிருஷ்ணர் காசியில் தங்கியிருந்தபோது இவரைச் சந்தித்தார். இவரைப் பற்றிக் குருதேவர், "விசுவநாதரே இவர் உடலில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார். இவர் இருப்பதால் காசி நகரமே உயிர்த்துடிப்புடன் மிளிர்ந்து கொண்டிருக்கிறது. உடல் உணர்வற்ற மிகப்பெரிய ஞானி இவர்." கொதிக்கும் வெயிலில் படுத்திருப்பார். ஒருநாள் நான் அவருக்குப் பாயாசம் கொண்டு போய்க் கொடுத்தேன். அவரிடம் "கடவுள் ஒருவரா? அல்லது பலரா?" என்று சைகை மூலம் கேட்டேன். அவர் மௌன விரதம் இருந்தார். சைகை மூலம் "சமாதி நிலையில் ஒருவராகக் காண்கிறோம். நான், நீ, உயிர், உலகம் போன்ற பலவாகக் காணும்போது கடவுளும் பலரே" என்றார். இதுதான் உண்மையான பரமஹம்ச நிலை" என்று கூறுகிறார்.



காசியில் தமிழர்கள் அதிகம் வாழ்ந்து வரும் இடம் ஹனுமான்கட்டம். சுமார் 130 ஆண்டுகளுக்கு முன் இப்பகுதியில் ருக்மிணி என்ற அம்மையார் வசித்து வந்தார். இவருக்கு 1000 பேருக்குக் கங்கைக் கரையில் அன்னதானம் செய்ய வேண்டும் என்று ஆசை. ஆனால் அதற்கேற்ற பொருள் வசதி, இட வசதி உடல் வலிமை எதுவும் இல்லை. கங்கையில் மிதந்தபடி காட்சியளிக்கும் திரைலிங்க சுவாமிகளிடம் அம்மையார் வந்து தன் ஆசையை வெளியிட்டு என்னால் இந்த ஆசையை நிறைவேற்ற முடியாது. நீங்கள் மட்டுமாவது வந்து உணவருந்திச் செல்ல வேண்டும் என்று வேண்டினாள். சுவாமிகள் உடன்பட்டார். இல்லத்துக்கு வந்தார். தலை வாழை இலை போடப்பட்டது. பாட்டி ருக்மிணி பரிமாற ஆர்வமுடன் உண்டார் சுவாமிகள். பாட்டி மகிழ்ந்தாள். சுவாமிகள் அவளை ஆசிர்வதித்தார். அக்கணமே கங்கைநீரில் குதித்தார். மிதந்தபடி தன்னிடம் சேர்ந்தார். சுவாமிகள் சாப்பிட்ட இலை யார் காலிலும் படக்கூடாது என்று புறக்கடையில் ஒரு பள்ளம் தோண்டி, இலையைப் போட்டு மூடிவிட்டு உள்ளே வந்தாள் ருக்மிணிப் பாட்டி. என்ன ஆச்சரியம்! சுவாமிகள் சாப்பிட்ட இடத்தில் சாப்பிட்ட இலை போல் மற்றொரு இலை கிடந்தது. அதையும் கொண்டுபோய்த் தொட்டிப் பள்ளத்தில் போட்டாள். வந்து பார்த்தாள். அடுத்த இலை கிடந்தது. எடுக்க எடுக்க இலை வந்தது. நூற்றுக்கணக்கான இலைகளை எடுத்துக்கொண்டு போய்ப் போட்டுப் பாட்டி அசந்து விட்டாள். இலைகள் இன்னும் வந்தன. சுவாமிகளிடம் ஓடினாள். சுவாமிகள் சிரித்தார். "வருவாய் என்று தெரியும்" என்றார். "ஆயிரம் பேருக்கு உணவிட ஆசைப்பட்டாய். அதன் பலன் கிடைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாய். எனக்கு மட்டும் சோறு போட்டாய். ஆயிரம் பேருக்குச் சாப்பாடுதான் போடவில்லை. ஆயிரம் இலையாவது எடுக்கக்கூடாதா? நல்ல காரியம் செய்யும் போது பலனை எதிர்பார்த்துச் செய்யாதே பலனை எதிர்பார்ப்பவன் அதற்கான உழைப்பைக் கொடுக்க வேண்டாமா. திரும்பிப் போ. அங்குள்ள இலையை எடுத்துவிடு. இனித்தோன்றாது. இலை மட்டுமல்ல, உன் பிறவியும்தான்" என்றார்.

செய்தல் உன் கடனே - அறம்
செய்தல் உன் கடனே - அதில்
எய்துறும் விளைவினில் எண்ணம் வைக்காதே

என்று பாரதி பாடிய பகவத் கீதையைச் சுவாமிகள் காசிப் பதியில் கங்கைக் கரையில் எளிதாக விளக்கி விட்டார்.

காசியும் கட்டிக்குளம் மாயாண்டி சுவாமிகளும்

திருப்பரங்குன்றத்தில் திருக்கூடல் மலையில் கோவில் கொண்டு அருள்புரியும் சித்தர் மாயாண்டி சுவாமிகள். இவருடைய அணுக்கத் தொண்டர் இருளப்பக் கோனார். வடக்குமாசி வீதியில் முதலாளி என்று பலராலும் போற்றப்பட்ட கோனாருக்குக் காசி பார்க்க ஆசை. இப்பிறவியில் மாயாண்டி சுவாமிகள் ஆட்கொண்டு விட்டார். அடுத்த பிறவி இனி இல்லை. எனவே இப்பிறவியிலேயே காசி பார்க்க வேண்டும் என்று எண்ணிக் குருநாதரிடம் சொன்னார். மாயாண்டி சுவாமிகள், "அப்பு, காசிக்குப் போகணுமா? அன்னபூரணியைப் பார்க்கணுமா? அன்னபூரணியைப் பார்க்க நினைத்தால் அன்னதானம் செய்" என்றார். கோனார் திருக்கூடல்மலையில் அன்னதானம் செய்தார். மலையெல்லாம் இலையாய்க் கிடந்தது. சுவாமிகள் கோனாரைக் கட்டிக்குளத்துக்கு அருகில் உள்ள கருப்பனேந்தல் தியான மடத்துக்கு அழைத்துச் சென்றார். தீபாராதனை காட்டினார். இருளப்பக் கோனார் தீப ஒளியில் காசியைக் கண்டார். எங்கும் சிவமயம்; எல்லாம் சிவலிங்கம்; கங்கை தெரிந்தது; காசிக் கோபுரம் தெரிந்தது; பலகோடிச் சித்தர்கள் வந்து கண்டு மகிழும் விசுவநாதப் பெருமானுடைய சோதிலிங்கம் தெரிந்தது. இருளப்பக் கோனார் இருந்த இடத்தில் இருந்தபடி குருவருளால் காசியைக் கண்டார். அவர் முன்னால்



கங்கையைச் சடையில் தாங்கிக் கருணையே வடிவமாகிப்
பொங்கிடும் மகிழ்வோடு அன்னபூரணி பிச்சை ஏற்று
மங்கலம் அருளும் கண்கள் மலர்விசா லாட்சியோடும்
செங்கதிர் கோடி போலத் திகழ்ந்தனன் விசுவநாதன்

தீபாராதனை முடிந்தது. தெரிந்த காட்சி மறைந்தது. கோனார் கொடுத்து வைத்தவர். குருவே காசியைக் கொணர்ந்து காட்டினார். இதன்பிறகு கட்டிக்குளம் மாயாண்டி சுவாமிகள் காசிக்கு வந்து விசுவநாதப் பெருமானை வணங்கி மீண்டார்.

காசியும் இராமகிருஷ்ண பரமஹம்சரும்

இராமாவாதாரமும் கிருஷ்ணாவதாரமும் இணைந்த அவதாரமாக, நம்மை ஆட்கொள்ள நமக்காகப் பிறவி எடுத்தவர் பகவான் இராமகிருஷ்ணர். குருதேவர் என்று போற்றப்படும் இந்தப் பேரருளாளர் காசியில் பெற்ற அருளனுபவம் வாக்கிற்கும் மொழிக்கும் அப்பாற்பட்டது. காசிக்குத் தீர்த்த யாத்திரையாக வந்தார் குருதேவர். அவருடன் வந்த மதுர்பாபு அந்தணர் பலருக்கும் அன்னதானம் செய்தார். துணிமணி, போர்வை, செருப்பு, பாத்திரங்கள் எல்லாம் கொடுத்தார். இப்பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் அந்தணர்கள் சண்டையிட்டு ஒருவரையொருவர் அடித்துக் கொண்டார்கள். குருதேவருக்கு வெறுப்புண்டாகி விட்டது. "இது எவ்வளவு பெரிய புண்ணிய பூமி! காசிக்கு வந்துமா இப்படிச் சண்டை போடுவது?" என்று வேதனைப் பட்டார். அவர் காசிக்கு வந்து காசியைப் பார்த்ததும் எல்லாம் சிவலிங்கமாகத் தெரிந்தது. "இச்சிவபுரி பொன்னால் ஆக்கப்பட்டது. இங்கே கல் இல்லை. மண் இல்லை. எல்லாம் பொன் மயம். கயிலாயம் பொன்மலை காசி பொன்னகர்" என்றார் குருதேவர்.

புகுவ தாவதும் போதர வில்லதும் பொன்னகர் புகப் போதற்கு
உகுவ தாவதும் எந்தை எம்பிரான் என்னை ஆண்டவன் சுழற்கன்பு
நெகுவ தாவதும் நித்தலும் அமுதொடு தேனொடு பால்கட்டி
மிகுவ தாவதும் இன்றெனின் மற்றிதற்கு என்செய்கேன் வினையேனே

என்று திருவாசகத்தில் மாணிக்கவாசகர் இறைவன் திருத்தலத்தைப் பொன்னகர் என்று குறிப்பிடுவதுபோலக் காசி, குருதேவர் கண்களுக்குப் பொன்னகர் ஆகத் தோன்றியது. இந்திய மக்கள் அனைவரும் பொழிந்த பொன் மழையால் கட்டப்பெற்றுப் பொன்மனச் சான்றோர்கள் பலரால் புனிதம் பெற்ற இந்தப் பொன்னகரில் இயற்கைக் கடன் கழிக்கக் கூடாது என்று குருதேவரின் குழந்தையுள்ளம் பக்திப் பரவசத்தால் நினைத்தது. ஒரு பல்லக்கு ஏற்பாடு செய்து, காசி நகரின் எல்லையைத் தாண்டி அசி ஆற்றைக் கடந்து சென்று இயற்கைக் கடன் கழித்தார். சில நாட்களுக்குப் பின் இந்த மனநிலை மாறியது. காசியில் எல்லாம் சிவம் எங்கும் சிவம். இடுப்புக்குக் கீழே பொன்நகைகள் அணியக்கூடாது என்பது வங்காளிகளின் பழக்கம். ஏன் பொன் புனிதமானது. அதுபோலக் காசியும் புனிதமான பொன்னகர் என்று குருதேவர் நினைத்தார். ஒருநாள் மதுர்பாபுவுடன் குருதேவர் கங்கையில் உள்ள மணிகர்ணிகை கட்டத்தை நோக்கிப் படகில் சென்றார். மணிகர்ணிகையில் தான்பிணங்கள் அதிகமாக எரிக்கப்படும். அந்தச் சுடுகாடு பிணங்கள் எரிந்ததால் வந்த புகையால் மூடப்பட்டிருந்தது. உணர்வுமயமாக இருந்த குருதேவர் இதைக் கண்டதும் ஆனந்த பரவசமுற்றார். திடீரென எழுந்து படகின் ஓரத்துக்கு ஓடினார். அங்கேயே அசைவற்று நின்றார். ஒருகை மேலே சென்றது. முகத்தில் பேரருள் பொங்கித் ததும்பியது. அப்படியே சமாதியில் ஆழ்ந்துவிட்டார். அவரிடம் தெரிந்த அற்புதப் பேரொளி அந்தப் பகுதி முழுவதையும் ஒளி வெள்ளத்தில் ஆழ்த்திவிட்டது. படகுக்காரனும், மதுர்பாபுவும் படகை மெதுவாகக் கரை சேர்த்தனர். குருதேவரின் பரவச நிலை மாறியது. அப்பொழுது அவர் கூறினார். "உயரமான ஒரு வெண்ணிற மனிதர் மஞ்சள் நிறச் சடைமுடியுடன் கம்பீரமாக நடந்து, அங்கே எரிந்துகொண்டிருந்த ஒவ்வொரு சிதையின் அருகிலும் சென்றார். அந்த உயிரை எழுப்பினார்.



அதன் செவியில் தாரகப் பிரம்ம மந்திரம் கூறினார். பேராற்றல் மிக்க மகா சக்தி சிதையின் மறுபக்கத்தில் அமர்ந்து, அந்த உயிரைப் பிணைத்திருக்கும் தூல, சூட்சும, காரண, சம்ஸ்கார வடிவ பந்தங்களை எல்லாம் நீக்கினாள். தன் கைகளினாலேயே முத்தி வாயிலைத் திறந்து, அந்த உயிர்களைச் சச்சினாந்தமாகிய இறைவனோடு ஒன்றச் செய்தாள். எத்தனையோ காலம் யோகமும் தவமும் செய்து அடையக்கூடிய பேரானந்த அனுபவத்தை, அந்த உயிர்களுக்கு விசுவநாதர் அங்கேயே அப்பொழுதே வழங்கினார்" என்று தான் கண்ட காட்சியை யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையம் என்ற உயர்ந்த எண்ணத்தோடு படம் போலக் காட்டினார் குருதேவர். சாத்திரங்கள் கூறுவது உண்மைதான். காசியில் இறப்பவர்களுக்கு எம்பெருமான் விசுவநாதன் முக்தியருள்கிறான் என்பது தெளிவாக்கப்பட்டது.

காசியும் சாரதா தேவியும்

ஒரு பெண்ணின் வாழ்க்கை எவ்வளவு உயர்ந்த நிலைகளை எட்ட முடியும் என்று வாழ்ந்து காட்டியவர் அன்னை சாரதா தேவியார். குருதேவர் மறைந்த பிறகு அன்னையார் 2 முறை காசி யாத்திரை செய்தார்கள். அவர்கள் காசியைப் பார்க்குமுன்பே அவர்களுக்கு அன்னபூரணி தரிசனம் கொடுத்து விட்டாள்.

கல்கத்தா தட்சிணேஸ்வரத்தில் காளி கோயிலுக்கு அருகில் தனக்காகக் கட்டப்பட்ட சிறுவீட்டில் அன்னையார் வசித்தபோது (1874 ஆம் ஆண்டு) குருதேவர் கடுமையான வயிற்றுக் கடுப்பினால் பாதிக்கப்பட்டார். அவரால் நடக்கக்கூட முடியவில்லை. குருதேவரை அன்னையார் அடிக்கடி சென்று கவனித்துக் கொண்டார்கள். அருகிலிருந்து கவனிக்க முடியவில்லையே என்று வருந்தினார்கள். அப்பொழுது உதவிக்கு ஒரு பெண் வந்து சேர்ந்தாள். காசியைச் சேர்ந்தவள் என்று கூறினாள். குருதேவருக்கான எல்லா பணிவிடைகளையும் செய்தாள். அன்னையாரிடம் "இவர் இப்படி இருக்கும்போது நீங்கள் வேறு வீட்டில் இருப்பது சரியல்ல" என்று கூறி அன்னையாரை அங்கேயே நகபத் என்ற சிறிய அறையில் தங்க வைத்தாள். அன்னையார் எப்பொழுதும் முகத்திரை போட்டிருப்பார்கள். அப்பொழுது அன்னையாருக்கு 21 வயது. ஒருநாள் இரவில் அந்தக் காசிப் பெண், அன்னையாரைக் குருதேவரிடம் அழைத்து வந்தாள். அவர் முன்னால் அந்த முகத்திரையை விலக்கினாள். சக்தி தன் வடிவத்தைச் சிவத்துக்குக் காட்டுவதுபோல உலகுக்குக் காட்டினாள். குருதேவர் பரவச நிலையில் ஆழ்ந்தார். மறுநாள் அவர் நோய் நீங்கியது. காசிப் பெண்ணையும் காணவில்லை. தூய அன்னையார் உணர்ந்து கொண்டார். வந்தவள் அனைவருக்கும் அமுதளிக்கும் அன்னபூரணி என்று. அன்னை அதன்பிறகு அங்கேயே தங்கி விட்டார்.

குருதேவரின் மறைவுக்குப் பின் அன்னையார் காசிக்கு வந்தார்கள். ஒருநாள் காசி விசுவநாதர் கோயிலில் மாலை வழிபாட்டில் கலந்து கொண்டார்கள். மிகவுயர்ந்த பரவச நிலைக்கு ஆளானார்கள். திரும்பி வரும்போது வழக்கத்திற்கு மாறாக, மிகுந்த வேகத்துடன் அடியெடுத்து வைத்து நடந்தார்கள். பின்னர் அதற்கான காரணம் கேட்டபோது, "கோயிலிலிருந்து நான் திரும்பி வந்தபோது குருதேவர் என் கையைப் பிடித்து அழைத்து வந்தார்" என்றார்கள்.

பின்னர் ஒருமுறை காசியில் அவதூதராக விளங்கிய பாஸ்கரானந்தரைச் சந்தித்தார்கள். அவர் "அன்னையே சங்கடப்படாதீர்கள். நான் உங்களிடம் அந்த அகிலாண்ட நாயகியையே காண்கிறேன்" என்றார். குருதேவரை இழந்த துன்பத்தில் இருந்த அன்னையார் மனம் ஆறுதல் பெற்றது.

மற்றொரு நாள் அன்னையார் கங்கையில் நீராட ஆசைப்பட்டார்கள். இது காசிக்கு வருமுன் நடந்த நிகழ்ச்சி. மறைந்த குருதேவரை நினைத்துக் கொண்டே காமர்ப்புகூரில் நடந்து வந்து கொண்டிருந்த போது, எதிரில் குருதேவர் வருவதுபோலத் தெரிந்தது. வியப்புத் தாளவில்லை. அவருக்குப் பின்னால் நரேந்திரன், ராக்கால், பாபுராம் போன்ற சீடர்கள் வந்தனர். குருதேவரின் பாதங்களிலிருந்து தண்ணீர் ஊற்றெடுத்துப் பெருகி, அவருக்கு முன்னால் அலைகளை வீசிப் பாய்ந்தது. "இது தான் கங்கை" என்று



மலரிட்டு வணங்கினார் அன்னையார். வாமனன் வளர்ந்து உலகளந்தபோது ஒரு திருவடி வானுலகம் செல்ல, அந்த மலரடியில் கமண்டலப் புனிதநீர் விட்டுப் பிரமதேவன் வழிபட, அப்போது உருவானது தான் ஆகாச கங்கை. அதுபோல இப்பொழுதும் இராமகிருஷ்ணர் திருவடியிலிருந்துதான் ஞானக் கங்கை தோன்றுகிறது என்பதை அன்னையார் அறிந்து கொண்டார். வானக் கங்கையும் ஞானக் கங்கையும் குருதேவரின் மலரடிப் பிரசாதம் என்பதை உலகம் அறிந்தது.

1912ல் இரண்டாவது முறை அன்னையார் காசிக்குச் சென்றார்கள். கேதார கட்டத்திலுள்ள கேதார நாதர் ஆலயத்தில் வழிபட்டார்கள். "இமயமலையில் உள்ள கேதாரநாதர் ஆலயமும் இந்த ஆலயமும் ஒன்றுக்கொன்று உறவானது. இவரைத் தரிசிப்பவர்கள் இமயத்தில் உள்ளவரைத் தரிசித்தவர்கள் ஆவார்கள். இங்கே சிவபெருமான் உயிர் உணர்வுடன் பொலிகிறார்" என்று குறிப்பிட்டார்கள். காசியில் புகழ்பெற்ற இரண்டு மகான்களைத் தரிசித்தார்கள். நானக் துறவி என்பவரையும் சமேலிபுரி என்பவரையும் கண்டு வணங்கினார்கள். அன்னையுடன் சென்ற கோலாப்மா என்ற அம்மையார் சமேலிபுரி என்ற சாதுவிடம் "உங்களுக்குக் காசியில் யார் உணவு தருகிறார்கள்?" என்று கேட்டார். அவர் "என் தாயான அன்னபூரணிதான் தருகிறாள். வேறு யார் எனக்குச் சோறு போடுவார்கள்?" என்றார். இதைக் கேட்ட அன்னையார் ஆனந்தப் பரவசம் அடைந்தார்கள்.

காசியில் விவேகானந்தர்

1888ல் சுவாமி விவேகானந்தர் காசிக்கு வந்தார். பிரேமானந்தர், பக்கீர் பாபு இருவரும் கூடச் சென்றார்கள். ஒருநாள் சுவாமி விவேகானந்தர் துர்கா மந்திர் சென்று திரும்பிக் கொண்டிருந்த பொழுது ஒரு குரங்குப் படை அவரைத் துரத்தத் தொடங்கியது. (திரேதா யுகத்தில் அனுமானாக வந்தவர் இவர்தான் என்று தெரிந்து கொண்டதுபோலும்) சுவாமிகள் ஓட ஆரம்பித்தார். குரங்குகளும் வேகமாகப் பின்தொடர்ந்தன. ஒரு சாதுவின் குரல் ஒலித்தது. "ஓடாதே நில். அந்தக் குரங்குகளுக்கு முகம் கொடுத்து வெற்றி கொள்" என்றது அக்குரல். சுவாமிகள் கம்பீரமாகத் திரும்பி நின்றார். குரங்குகள் ஓட்டம் பிடித்தன. நியூயார்க்கில் சுவாமிகள் இந்த காசி நிகழ்ச்சியைக் கூறி, "அறியாமை மாயை இவற்றுக்குப் பயந்து ஓடாதீர்கள். எதிர்த்து முகம் கொடுத்து வெல்லுங்கள்" என்று மக்களுக்கு ஆணையிட்டார்.

தொல்லை தீர்ந்தது

காசியில் நகரத்தார் கட்டியுள்ள நகரேசுவரர் கோவிலுக்கு அருகே ஒரு வங்காளியின் வீடு இருந்தது.

வங்காளிகளுக்கு மீன் என்றால் உயிர். பருப்பில்லாத் திருமணம் தமிழ்நாட்டில் இல்லை. மீனில்லாத் திருமணம் வங்காளத்தில் இல்லை.

நாள்தோறும் வங்காளி மீனை உண்டு, மீன் எலும்புகளை வீதியில் எறிந்து வந்தார். சிவன் கோயில் வாயிலில் மீன் துண்டுகள் கிடப்பதைக் கண்டு நகரத்தார் மனம் வருந்தினர். எவ்வளவோ முயன்றும் அதை அவர்களால் தடுக்க இயலவில்லை.

இறுதியாக, வங்காளியின் வீட்டை நகரத்தார் விலைக்கு வாங்கி அதைக் காசி நகரச் சத்திரத்தின் உடமையாக்கினர். வங்காளி வீட்டை விட்டு அப்புறப்படுத்தப்பட்டார். மீன் தொல்லையும் தீர்ந்தது.



A.M.M. MURUGAPPA CHETTIAR

52/53 Jehangir Street, Madras-1


ஹிந்து தர்மத்தின் நிலைக்களனாய், புனித க்ஷேத்திரமாக விளங்கும் காசியம்பதியில் ஸ்ரீ விச்வேஸ்வரருக்கு தென்னாட்டு சம்பிரதாய் விதிப்படி பூஜா கைங்கர்யம் செய்யும் சிவத்தொண்டை நாட்டுக்கோட்டை நகரத்தார் மக்கள் 152 ஆண்டுகளாகச் செய்து வருகின்றனர் என்பதை எண்ணிப் பார்க்கும்போது மனம் பூரிப்படைகிறது. சாமானிய முறையில் ஆதியில் ஆரம்பிக்கப்பட்ட இத்தொண்டு காலப்போக்கில் விரிவடைந்து காசியம்பதியைத் தவிர, பிரயாகை, அயோத்தியா, பஞ்சவடி முதலிய பல க்ஷேத்திரங்களில் யாத்ரிகர்கள் தங்க வசதிகளுடன் ஏற்பாடுகள் அமைத்து, பூஜை திருப்பணிகளுக்கும் வகை செய்து ஈசன் அருளால் எவ்விதக் குறைவுமின்றி நடைபெற்று வருவது மகிழ்ச்சிக்குரியது. இவ்விரிவான ஏற்பாடுகள் சீரிய முறையில் ஆரம்பிக்கப்பட்டு ஒரு நூற்றாண்டு காலம் ஆகிறது என்பதை நினைத்தால் மனம் களிப்பெய்துகிறது. இதையொட்டி ஒரு சிறப்பு மலர் வெளிவருவதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

தெய்வ வழிபாட்டில் நமது சமூகத்தினருக்குள்ள ஆழ்ந்த பற்று இயற்கையானது. சிவபூஜை மூலமும் ஆலயத் திருப்பணிகள் மூலமும், நாம் ஒப்பற்ற மகிழ்ச்சி கொண்டு ஆத்ம திருப்திபெற்று சாந்தியடைகிறோம். ஏற்கனேவே நிறுவியுள்ள கட்டளைகளைப் பராமரிப்பதுடன் புதுப்புதுக் கட்டளைகளையும் அமைத்து வருகிறோம். தெய்வத் தொண்டுடன் சமூகத் தொண்டையும் நமது சமூகம் ஆற்றி வருகிறது.

ஒரு நூற்றாண்டு கால அளவில் நகரத்தார் மக்களின் சரித்திரம் பெரிய பெரிய மாறுதல்களை அடைந்துள்ளது. வெளிநாடுகளில் அவர்களிருக்கிருந்த வாணிபத் தொடர்புகளும், செல்வாக்கும் வசதிகளும் பெருகி வளர்ந்த காலம் இருந்தது. திருப்பணிகளும் விரிவடைந்து வளம்பெற்று நடத்தப்பட்டன. பிற்காலத்தில் ஏற்பட்ட சூழலில் வாய்ப்புகள் குறைந்து வசதிகளும் சுணங்கத் தொடங்கின. எனினும் மாறுபட்ட சூழ்நிலையில் அவ்வப்போது தோன்றிவரும் புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு நமது சமூகத்தினர் தங்கள் உயர்பணியைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர் என்பது பெருமைப்பட வேண்டிய நிலைமையே ஆகும். நமது நாட்டில் இப்போதுள்ள சமூக வளர்ச்சிக் கட்டத்தில் தருமக் கட்டளைகளை முக்கியமாகக் கவனித்துப் பேணுதல் மிகவும் அவசியம். குறைகளுக்கு இடங்கொடாது பரிபாலன நடைமுறைகளில் எவ்வித வழுக்களும் புகாமலும் விழிப்புடன் பராமரித்தல் அவசியம். சமூகத் தேவைகளுக்கேற்ப திருப்பணிகளுக்கு இணங்கிச் சம்பந்தப்பட்ட புதிய நற்பணிகளையும் சந்தர்ப்பங்களுக்கும் வசதிகளுக்கும் ஏற்றவாறு மேற்கொள்ளல் நலன்தரும்.

பொருளீட்டல் எவ்வாறு முக்கியமோ அவ்வாறுதான் அதை நல்வழிகளில் சமூக முன்னேற்றத்திற்காகச் செலவழிப்பதும், அறப்பணிகளும் அப்படியே. நமது நகரத்தார் சமூகத்தினருக்கு சிவப்பணியிலுள்ள பக்தியும் சிரத்தையும் நிரந்தரமானதாகையால் அவர்களுக்கு எவ்விதக் குறைவும் வராது என்பது என்னுடைய திடமான நம்பிக்கை. திருப்பணிகளைக் குறைவின்றி நடத்திவரும் ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் மானேஜிங் சொஸைட்டிக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இத்தெய்வத்தொண்டு நீடுழி சிறப்புடன் வளம்பெற்று நடைபெற்றுக் கொண்டுவர ஸ்ரீ காசி விச்வேஸ்வரர் அருள்புரிவாராக.

- அ.மு.மு. முருகப்ப செட்டியார் (1963ல் எழுதியது)



காசிக்கு நடைப் பயணம்

"பொற்கிழிக் கவிஞர்", "காசிஸ்ரீ", "கயிலைமணி"
"முத்தமிழ்ப் பேரறிஞர்" அரு. சோமசுந்தரன் M.A.,B.T.,


தேவகோட்டையில் இருந்து திருச்செந்தூருக்கு 36 ஆண்டுகட்கு முன்பு 1977 மே மாதம் காவடியுடன் 20 பேர் அடியேன் தலைமையில் முதன்முதலாகப் பாதயாத்திரை புறப்பட்டோம். அப்பொழுது அடியேன் எழுதிய "செந்திலாண்டவா திருச்செந்தூர் ஆண்டவா" என்ற பாடலில் "காசி முதல் குமரி வரை உனது எல்லையே: கால்கடந்து வந்தவர்க்குக் கவலை இல்லையே" என்ற வரிகள் இறையருளால் அமைந்தன. அதனைப் பாடிய நம் பக்தர்கள் "காசிக்குப் பாதயாத்திரை உண்டா?" என்று கேட்டனர். "உண்டு" என்றேன். ஆறு படை வீடுகளுக்குப் பாதயாத்திரை சென்றுவந்தபின் இராமேஸ்வரம்-காசிப் பாதயாத்திரை முயற்சியில் ஈடுபட்டேன். அதன் விளைவுதான் காசிப் பாதயாத்திரை.

பல நூறு ஆண்டுகட்கு முன்பு நம் முன்னோர்கள் காசிக்குப் பாதயாத்திரையாகச் சென்று வந்தனர். 100 ஆண்டுகட்கு முன்பு கவர்னர் ஜெனரலாக இருந்த டல்ஹவ்சி ரயில் பாதை அமைத்தபின் நம் மக்கள் நடப்பதை விட்டு ரயிலில் செல்லத் தலைப்பட்டனர். அதனால் நூறு ஆண்டுகளாகக் காசிக்கு நடப்போர் இலர் ஆயினர். அந்நிலையில் மீண்டும் காசிக்கு நடைப்பயணத்தைத் துவக்க விசுவநாதரும் இராமநாதரும் விரும்பி இருக்கின்றனர். அப்பணிக்கு என்னைத் தேர்ந்தெடுத்துள்ளனர். அப்பணியைப் பக்தி விசுவாசத்தோடு அடியேன் செய்தேன். காசி விஸ்வநாதர் கோவிலில் "காசிஸ்ரீ" பட்டம் அடியேனுக்கு 12-6-1983ல் முதன்முதலில் வழங்கி விசுவநாதர் பெருமைப்படுத்தினார். காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரத்தில் அப்பொழுது மேலாளராக இருந்த புதுவயல் வினைதீர்த்தான் செட்டியார் அடியேனுக்கு 12-6-1983ல் "காசிதாசர்" என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்தார். 30-12-2012ல் காரைக்குடி கம்பன் மணிமண்டபத்தில் நிகழ்ந்த காசிச் சத்திரப் பூசை 200ஆவது ஆண்டு விழாவில் அடியேனுக்கு நீதியரசர் மாண்புமிகு அரு.இலக்குவன் பொன்னாடை போர்த்த, தொழிலதிபர் திரு. எம்.வி.சுப்பையா பாராட்டிச் சிறப்பித்தார். எல்லாம் இறையருளே!

அடியேனுடைய "இராமேஸ்வரம் காசி நடைப் பயணம்" என்ற நூலில் அடியேனின் காசிப் பாதயாத்திரை அனுபவங்களைத் தெளிவாக விளக்கி எழுதி உள்ளேன். அந்நூலுக்குத் தமிழக முதல்வர் வி.என்.ஜானகி எம்.ஜி.ஆர். முதல் பரிசு வழங்கிப் பொன்னாடை போர்த்தித் தமிழக அரசின் சார்பில் சிறப்பித்தார். அந்நூல் தெலுங்கிலும் மொழிபெயர்ப்பாகி வெளிவந்துள்ளது.

17-2-1983ஆம் தேதி காலை எங்களது காசிப் பாதயாத்திரை, இராமேஸ்வரத்தில் இருந்து தொடங்கியது. 13 பேர் கொண்ட குழுவுக்குத் தலைமை தாங்கி அடியேன் நடத்திச் சென்றேன். எங்களுடன் ஒரு சைக்கிள் ரிக்ஷா கொண்டு சென்றோம். அதில் எங்களுக்கு வேண்டிய அரிசி, பருப்பு, எண்ணெய், தண்ணீர், துணி முதலியன இருந்தன.

முதல் நாள் காலை தங்கச்சிமடத்தில் ஸ்ரீ ஏகாந்தராமர் கோவிலில் தரிசனம் செய்தோம். அவ்வூரில் ஒரு கல் மண்டபம் இருக்கிறது. அது சுமார் 100 ஆண்டுகட்கு முன்பு நகரத்தார் விடுதியாக



இருந்தது. ரயில் வருவதற்கு முன்பு நாம் படகில் இராமேஸ்வரத்துக்கு வந்த காலம். அப்பொழுது தங்கச்சிமடத்தில் நமக்கு நகர விடுதிக்காக இராமநாதபுரம் சேதுபதி தந்த கட்டடம் அது. நாம் அதனைப் பிறகு பயன்படுத்தாமல் விட்டுவிட்டோம். இப்பொழுது அக்கட்டடத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. அதனைப் பார்த்துவிட்டுப் பயணமானோம்.

முதல் நாள் மாலை பாம்பனைக் கடந்து மண்டபம் என்ற ஊருக்கு வந்து புகைவண்டி நிலையம் அருகிலுள்ள முருகன் கோவிலில் தங்கினோம். அப்பொழுது அங்கு பத்துப் பதினைந்து மீனவ இளைஞர்கள் வந்து தங்கினர். அவர்கள் எங்களுடன் பேச்சுக் கொடுத்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு கேள்வி கேட்டனர். "என்ன சாமிகளா? இராமேஸ்வரம் செல்ல வேண்டுமா?" என்று கேட்டனர்.

"இல்லை. இராமேஸ்வரத்திலிருந்து வருகிறோம்" என்றேன்.

"நீங்கள் எங்கே போக வேண்டும்?" என்றனர்.

"காசிக்குப் போக வேண்டும்" என்றேன்.

"காசியா? அது எங்கே இருக்கிறது?" என்றனர்.

"அது 2000 மைல் தொலைவில் இருக்கிறது" என்றேன்.

"காசிக்கு இங்கிருந்தே ரயில் இருக்கிறதா?" என்றனர்.

"இல்லை. காசிக்கு நடந்தே போகிறோம்" என்றேன்.


"நடந்தா? காசிக்கா? 2000 மைலும் நடந்தா" என்று வியப்புடன் கேட்டனர்.

"ஆம்" என்றேன்.

உடனே ஒருவன், "டேய், இதெல்லாம் லூசுடா. வாங்கடா போவோம்." என்றான். அனைவரும் அதனை அங்கீகரித்ததுபோல் உடனே அங்கிருந்து போய்விட்டனர். இதுதான் எங்களுக்கு முதலில் கிடைத்த பட்டம். கடைசியில் கிடைத்த பட்டம் "காசிஸ்ரீ"

பாம்பன் சுவாமிகள் தவம் இருந்த பிரப்பன் வலசை கோவிலில் இரண்டாம் நாள் வழிபட்டுத் தங்கினோம். மூன்றாம் நாள் இராமநாதபுரம் தங்கல். அரசி இந்திராதேவி வரவேற்று உபசரித்தார்.

நான்காம் நாள் தேவிபட்டினம் தீர்த்தமாடி உப்பூர் ஸ்ரீ வெயிலுகந்த விநாயகரைத் தரிசித்து உப்பூரில் தேவகோட்டை ஜமீன்தார் அள.அரு. குடும்பத்துச் சத்திரத்தில் தங்கினோம். உப்பூர் ஸ்ரீ வெயிலுகந்த விநாயகரை வழிபட்டுத்தான் ஸ்ரீராமர் இராவண சம்ஹாரத்துக்குச் சென்றார் என்பது ஐதீகம். ஐந்தாம் நாள் திருவாடானையில் உள்ள பாடல் பெற்ற ஆதிரெத்தினேஸ்வரர் சிநேகவல்லி அம்மனைத் தரிசித்துத் தங்கினோம். ஆறாம் நாள் தேவகோட்டையில் எங்களுக்கு பிரம்மாண்டமான வரவேற்பு வழங்கப் பெற்றது. பிறகு செட்டிநாட்டு ஊர்கள் வழியாக ஒன்பதாம் நாள் புதுக்கோட்டை; பத்தாம் நாள் நார்த்தாமலை; 11 ஆம் நாள் திருச்சி திருவானைக்கா என்று எங்கள் பயணம் தொடர்ந்தது. ஊரெல்லாம் மக்கள் கூடி நின்று வரவேற்று உபசரித்து, வழியனுப்பிய காட்சி மறக்க இயலாதது. காவிரியில் நீராடி, காவிரிக்கரை வழியாக குணசிலம், அய்யம்பாளையம், முசிறி, திருஈங்கோய்மலை, தொட்டியம் வழியாக வழிபட்டுச் சென்றோம்.



பதினாறாம் நாள் நாமக்கல் சென்றோம். இங்கு தேசிய நெடுஞ்சாலை எண் ஏழு (N.H.7) கண்டோம். இச்சாலை கன்னியாகுமரியில் இருந்து காசிக்குச் செல்கிறது. இது இந்தியாவின் மிகப்பெரிய நெடுஞ்சாலை ஆகும். இதன் வழியே சேலம், தொப்பூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, சூலகிரி, ஓசூர் கடந்து 28ஆம் நாள் கர்நாடகாவில் நுழைந்தோம். 29ஆம் நாள் பெங்களூரில் நகரத்தார்கள் வரவேற்று உபசரித்தனர். 30ஆம் நாள் கஞ்சனஹள்ளியில் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ஆலயத்தில் ஸ்ரீ திருச்சி சுவாமிகள் எங்களை வரவேற்று ஆசிர்வதித்தது நாங்கள் செய்த பெரும்பேறு. எல்லா ஊர்களிலும் நம் நகரத்தார்கள் திரண்டு நின்று எங்களை வரவேற்று விருந்தோம்பியது இச்சாதனைக்கு உறுதுணையாக அமைந்தது.

32ஆம் நாள் சிக்கஜாலா - தேவனஹள்ளி. இந்த ஊரில்தான் திப்புசுல்தான் ஒரு குடிசையில் பிறந்தான். ஆங்கிலேயரை அலற அடித்தான். அவனது நினைவுத் தூணைக் கண்டோம். 33ஆம் நாள் வெங்கடகிரிக் கோட்டை, நந்திமலை - சிக்பலப்பூர் வழிபட்டோம். 35ஆம் நாள் பரகோடு கடந்து ஆந்திர எல்லைக்குள் நுழைந்தோம். வழி எங்கும் எங்கட்கு லாரிக்காரர்கள் செய்த உதவிக்குக் கணக்கில்லை. அப்பொழுது தபால் தந்தி தொலைபேசி வசதிகள் மிகக் குறைவு. ஆகவே நாமக்கல் லாரிக்காரர்கள் மூலம் தபால் போக்குவரத்து வைத்துக் கொண்டோம். அவர்கள் 15 நாளைக்கு ஒருமுறை எங்களை எங்கள் வழியில் சந்தித்துத் தபால் தந்து, உதவிகள் செய்தது சரித்திர சாதனை ஆகும்.

40 ஆம் நாள் அனந்தப்பூர். 45ஆம் நாள் துரோணாசலம். 46 ஆம் நாள் கர்னூல் துங்கபத்திரா நதி, 48 ஆம் நாள் பீச் பள்ளி கிருஷ்ணா நதி. 54 ஆம் நாள் ஹைதராபாத். 55, 56ஆம் நாள் செகந்தராபாத். சுமார் 10 நாட்கள் ஹைதராபாத்துக்கு முன்னும் பின்னும் ஹைதராபாத் செகந்தராபாத் நகரத்தார்கள் எங்களை வரவேற்று உபசரித்தது கற்பனைக்கும் எட்டாதது ஆகும். காசிக்குப் பாதி தூரம் ஹைதராபாத். ஆயிரம் மைல்கள் கடந்து வந்த எங்களை "நீங்கள் வெற்றி பெறுவீர்கள்" என்று முதலில் நம்பிக்கையோடு வாழ்த்தியவர்கள், ஹைதராபாத் நகரத்தார்களே.

ஹைதராபாத் நகரத்தார் சங்கத் தலைவர் திரு. ந. முத்தையா செட்டியார் (தேவகோட்டை) எங்களுக்கு இந்தப் பத்து நாட்களும் செய்த உதவிக்குக் கணக்கில்லை. கடைசியாக எங்களைக் காட்டுக்குள் வழிவிட்டபொழுது அவர் கண்கலங்கி அழுதார். "இனி உங்கட்கு யார் உதவி செய்வார்கள்?" என்று அழுதுகொண்டே கேட்டார். அப்பொழுது அடியேன் சொன்னேன், "கடவுள் உதவி செய்வார்" என்றேன். அவர் அழுதார். ஆனால் நான் அழவில்லை. இது கம்பராமாயணத்தில் இராமன் குகன் சந்திப்பை நினைவுப்படுத்தியது. இராமனைக் காட்டுக்குள் அனுப்பிய குகன் அழுதான். ஆனால் காட்டுக்குச் சென்ற இராமன் அழவில்லை. இராமன் அழுதிருந்தால் கதை அங்கேயே முடிந்திருக்கும். அதுதான் எங்கள் கதையும்!

59 ஆம் நாள் ராமயண்பெட், பிக்னூர் வழியாகச் சித்தராமேஸ்வரம் என்ற தலத்துக்குச் சென்று அங்கிருந்த சிவன் கோவிலில் தங்கினோம். சித்தகிரி, ராமகிரி என்ற இருவரால் கட்டப்பெற்ற கோவில் அது. ஆகவே அது சித்தராமேஸ்வரம் என்று பெயர் பெற்றது. அங்கு ஒரு மண்டலம் தங்கினால் மூளைக் கோளாறுகள் தீரக் காண்கிறோம். அங்கிருந்த கிணற்று நீரில் நீராடினோம். எங்களது வெப்பு தீர்ந்தது. சிவலிங்கத்தைத் தொட்டு வணங்கினோம்.

63 ஆம் நாள் போச்சம்பாடு-கோதாவரி நதியில் நீராடினோம். 64 ஆம் நாள் நிர்மல் கடந்து



1680 அடி உயரம் உள்ள சாத்பூரா மலையில் இரவில் ஏறி இறங்கி 'வாங்கிடி' என்ற கிராமத்தில் தங்கினோம். 65 ஆம் நாள் வட்டைமலை கடந்தோம். இந்த வட்டை மலையை அப்பர் சுவாமிகள் கடந்து சென்றதாகப் பெரிய புராணத்தில் சேக்கிழார் பாடுகிறார்.

கருநடம் கழிவாக ஏகிய
பின் கலந்த வனங்களும்
திருநதித் துறை யாவையும்
சேண் நெடுங்கிரி வட்டையும்
பெருநலம் கிளர் நாடும் எண்ணில
பிற்படச் செறி பொற்பினால்
வருநெடுங் கதிர் கோலு சோலைய
மாளவத்தினை நன்னினார்

என்பது பெரிய புராணம்.

ஆந்திராவின் எல்லை அடிலாபாடு என்ற ஊர் ஆகும். அங்கு ஒரு சேட் கட்டி உள்ள அழகான பளிங்கு மண்டப விடுதியில் 67 ஆம் நாள் இராமனைத் தரிசித்துத் தங்கினோம். 68 ஆம் நாள் பென்கங்கா நதி கடந்து மகாராஷ்ட்டிரா மாநிலத்தில் நுழைந்தோம்.

72 ஆம் நாள் வார்தா நதியில் குளித்து போகனா என்ற சரித்திரப் புகழ்மிக்க ஊரில் உள்ள சிவன் கோவிலில் தங்கித் தரிசித்தோம். 73 ஆம் நாள் வாணா நதியில் சிவலிங்க உற்பத்தி கண்டோம். 77 ஆம் நாள் நாகபுரி அடைந்தோம். 78 ஆம் நாள் பிள்ளி நதி, காம்ப்டி இராணுவப் பாசறை கடந்தோம். 79 ஆம் நாள் கன்ஹான் நதியில் நீராடி மலைப்பாதையில் நடந்தோம். வழியில் சுமார் நாற்பது கருங் குரங்குகள் பாதையை மறித்து நிற்கக் கண்டோம். உடனே நான் இரு கைகளையும் கூப்பியவாறு "ராம் ராம்" என்று கூறிக்கொண்டே நடந்தேன். என் பின்னே மற்றவர்கள் நடந்தனர். கடைசியில் சைக்கிள் ரிக்ஷா வந்தது. கருங்குரங்குகள் அனைத்தும் ராம மந்திரத்துக்கு கட்டுப்பட்டு கற்சிலைகள் போல் நின்றன. நான் தினந்தோறும் இராமாயணம் தொடர் சொற்பொழிவு செய்பவன். ராம மந்திரம் எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதை அந்தக் காட்டில் கண்டேன். அதுதான் இராமன் நடந்து வந்த தண்டகாரண்யம். இப்பகுதியில் ராமன் 10 வருடங்கள் நடந்தான். நாங்கள் இரண்டு மாதங்கள் நடந்தோம். ராமன் வடக்கில் இருந்து தெற்கே வந்தான் நாங்கள் தெற்கில் இருந்து வடக்கே சென்றோம். இதுதான் வித்தியாசம். மற்றபடி அனுபவங்கள் எல்லாம் ஒன்றுதான். புழுதி படிந்த காடு, புண்ணிய நதிகள் 40, விந்திய சாத்பூரா மேற்குத் தொடர்ச்சி மலைகள்,

"பூழி வெங்கானம் நண்ணிப்
புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண் டாண்டின் வா"

என்று கைகேயி இராமனுக்குக் கட்டளை இட்டாள். இராமன் நடந்து வந்த பாதையில் நாங்கள் தொடர்ந்து நடந்தோம்.

9-5-1983 81ஆம் நாள் கவாசா என்ற ஊரில் மத்தியப் பிரதேசத்திற்குள் நுழைந்தோம். அங்கு மத்தியப்பிரதேச அரசாங்கம் எங்கட்கு போலீஸ் பாதுகாப்பு வழங்கியது. அர்ஜுன்சிங் அப்பொழுது மத்தியப் பிரதேச மாநில முதல்வர். ஒரு சப் இன்ஸ்பெக்டர், 2 போலீசார், எங்கட்குப் பாதுகாப்பாக வந்தனர். 82ஆம் நாள் கோரை என்ற ஊரில் தங்கி, 83ஆம் நாள் 1400 அடி உயரம் உள்ள விந்திய மலையில் ஏறி இறங்கினோம். இங்கு புலி நடமாட்டம் மிகுதி. 88ஆம் நாள் பஞ்சாரிமா துர்க்காதேவியை மலையில் வழிபட்டோம். 91ஆம் நாள் (18-5-1983) ஹுல்கி பள்ளத்தாக்கில் தங்கினோம். எங்களது மூன்றாவது குழுவினர் காசிஸ்ரீ ந.காசிநாதன் தலைமையில் நடந்து சென்றபொழுது இங்குதான் பூகம்பத்தில் சிக்கினர். ஆனால் இறைவன் அவர்களைக் காப்பாற்றினான். நாங்கள் அங்கு அன்று இரவு ஆதிவாசிகளைச் சந்தித்தது ஆச்சரியமான சம்பவம்.

வழியில் எங்களுக்குப் பழம் கிடைக்கவில்லை. முழங்கால் வலி ஏற்பட்டுவிட்டது. பழம் தின்றால்



வலி தீரும். ஓரிடத்தில் காலையில் ஒரு லாரி வடக்கே இருந்து தெற்கே வந்தது. அது எங்கள் அருகில் வந்தபொழுது கதவு தானே திறந்து சாத்துக்குடிப் பழங்கள் விழுந்தன. நாங்கள் எடுத்து உண்டோம். முழங்கால் வலி தீர்ந்தது. அப்பொழுது நான் சொன்னேன், "சுந்தரருக்குப் பசித்தபொழுது இறைவன் சோறு கொடுத்தான். அவன் சுந்தரருக்கு மட்டும்தான் கொடுப்பானா? சோமசுந்தரத்துக்கும் கொடுப்பான்தானே." என்றேன். பெரியபுராணம் பலித்தது.

94ஆம் நாள் (21-5-1983) ஜபல்பூர் சென்றோம். நர்மதை நதியில் நீராடினோம். கல் உடைக்கும் தமிழர்களைச் சந்தித்தோம். 100 ஆம் நாள் மைஹார் சாரதா தேவியை வழிபட்டோம். 103ஆம் நாள் ரீவா என்ற பெரிய ஊரில் சிறைக் கைதிகளுக்கு ஆசி கூறினோம். இவ்வூர் வெள்ளைப் புலிக்குப் பெயர் பெற்ற சமஸ்தானம் ஆகும்.

107ஆம் நாள் (3-6-1983) அருலா நதி கடந்து உத்தரப் பிரதேசத்தில் நுழைந்தோம். 110ஆம் நாள் (6-6-83) பல நதிகளில் நீராடி விந்தியமலையை விட்டு இறங்கி கங்கைச் சமவெளி அடைந்தோம். எங்கும் கோதுமை வயல்கள். கண்கொள்ளாக் காட்சி. 111ஆம் நாள் மீர்சாபூர் அடைந்து கங்கையில் குளித்தோம். எங்கள் கஷ்டங்கள் எல்லாம் தீர்ந்தன. விந்தியாசலம் சென்று விந்தவாசினியைத் தரிசித்தோம். 114ஆம் நாள் (10-6-1983) காசிக் கோபுரம் கண்டோம். பூமியில் விழுந்து புரண்டு அழுதோம். அடுத்த குழுத் தலைவர் வயிரவன் எங்களை அங்கு வந்து வரவேற்றார். 12-6-1983 ஞாயிறு காலை. 116ஆம் நாள் காசி விஸ்வநாதர் கோவிலில் சரியாக 8 மணிக்கு நுழைந்தோம். அக்கோவில் நிர்வாக அதிகாரி மிஸ்ரா எங்களை வரவேற்று, "சோமசுந்தரம் ஜி. ஜூன் 12ஆம் தேதி 8 மணிக்கு வருவதாக 5 மாதம் முன்பு எனக்கு எழுதினீர்கள். இன்று ஜூன் 12. காலை சரியாக மணி 8. குறித்த நேரத்தில் வந்துள்ளீர்கள். இக்காலத்தில் பஸ்கள், ரயில்கள், விமானங்கள் தாமதமாக வருகின்றன. ஆனால் நடந்துவரும் நீங்கள் தாமதம் இல்லை. கடவுள் மிகப் பெரியவர்". (You are not late. God is great!) என்றார். இதுதான் எங்கள் சாதனை.

கோவிலில் வேதம் முழங்க மிஸ்ரா எங்கட்குக் 'காசிஸ்ரீ' பட்டம் வழங்கி உருத்திராட்ச மாலை சூட்டி, பரிவட்டம் கட்டினார். பிறகு காசி நகரச் சத்திரத்தில் வரவேற்று மரியாதை செய்தனர். அன்று மாலை நம் சத்திரத்தில் தங்க அன்னபூரணி தரிசனம் செய்து வைத்தனர். எல்லாம் மேலாளர் வினைதீர்த்தான் செட்டியார் ஏற்பாடு. அப்பொழுது அவருக்கே எல்லா அதிகாரமும் இருந்தது.

நாங்கள் இராமேஸ்வரத்தில் இருந்து, கொண்டு சென்ற கடல் மணலைக் கங்கையில் கரைத்தோம். இராமநாதர் கோவில் கோடித் தீர்த்தத்தைக் காசி விஸ்வநாதருக்கு அபிஷேகம் செய்து வழிபட்டோம். நாங்கள் கொண்டுசென்ற வேலை நகர விடுதியில் உள்ள நகரேஸ்வரர் கோயிலில் வைத்தோம். அதற்கு இன்றும் அங்கு வழிபாடு நிகழ்கிறது.

பிறகு இராமேஸ்வரம் திரும்பிக் காசி கங்கை நீரை அபிஷேகம் செய்து வழிபட்டு இனிதே ஊர் திரும்பினோம். இன்று தேசிய ஒருமைப்பாடு பற்றிப் பேசுகிறோம். பழங்காலத்தில் காசி இராமேஸ்வரம் என்ற தொடரால் தெய்வீக ஒருமைப்பாட்டினை ஏற்படுத்தி இருப்பது போற்றத்தக்கது. நம் நகரத்தார்கள் அந்த வழியைப் பின்பற்றிச் செயற்படுவது பாராட்டத்தக்கது. எங்கள் திருச்செந்தூர்ப் பாதயாத்திரைக் குழு சார்பாக 1990, 97, 2004, 2011 ல் காசிஸ்ரீ வயிரவன், காசிஸ்ரீ காசிநாதன், காசிஸ்ரீ அழகப்பன், காசிஸ்ரீ தட்சிணாமூர்த்தி தலைமையில் ஏழாண்டுக்கு ஒருமுறை ஒரு குழு சென்று வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. எல்லாம் அவனருள்.



இன்று விழித்துவிட்டோம்!

- கவிஞர் கண்ணதாசன்

ஆன்ற தமிழர் அருங்குணத்தி லேமிதந்து
தோன்றுந் திசையெங்கும் தொழில்புரிந்த காலமுதல்
ஈன்ற மனையரசு, இல்லத்தாள், பெற்ற பிள்ளை
யாவும் மறந்து அயலகத்தே தமிழ்வளர்த்தோம்
வண்ணக் கலைவளர்த்தோம்; வரலாறே நாம்சமைத்தோம்;
எண்ணத் தொலையாத எத்தனையோ கோவில்களை(க்)
கண்ணில் இருத்திக் கலையோடு காத்துவந்தோம்
காசி நகரத்துக் கடவுளரைப் பேசவைத்தால்
காவிரிப்பூம் பட்டினத்தார் கலையுணர்ச்சி தோன்றவரும்!
மாசற்ற பொன்னும் மணிவயிரம் இரத்தினமும்
தூசென்று எண்ணித் தூக்கிக் கொடுத்துவந்தோம்
பண்டைத் தமிழ்மரபைப் பண்போடு காத்துவந்தோம்
அண்டை நிலங்களில்நம் ஆண்டவனை ஊன்றிவைத்தோம்
காசி விசாலாட்சி கவின்மதுரை மீனாட்சி
கட்டியுள்ள ஆடைகளும் கழுத்திலுள்ள பொன்னகையும்
சுற்றியுள்ள மண்டபமும் தூக்கிவரும் வாகனமும்
முற்றும் அழியாத மொட்டைக்கோ புரத்தழகும்
அண்ணா மலையில் அமர்ந்திருக்கும் பேரழகும்
ஆக்கிக் கொடுத்தவர்கள் அமர்ந்திருந்து காத்தவர்கள்
நாட்டுக்கோட் டைவளர்த்த நகரத்தார் அல்லேமோ!
பக்திக்குத் தானா பணத்தைச் செலவழித்தோம்
பகுத்தறிவுக் கோவில்களாம் பள்ளிகளும் நாம்சமைத்தோம்
பல்கலையும் ஆற்றிவரும் வண்ணப்பல் கலைக்கழகம்
செல்வம் வளர்த்துவரும் செட்டிமார் வண்ணமன்றோ?
வட்டி வணிகன் வளமார் தமிழகத்தில்
கொட்டிக் குவித்ததொரு கோடியிலும் மேலாகும்
அன்று பிறகலைகள் அறியா திருந்தவர்கள்
இன்று புவிமுழுதும் எத்தனையோ தொழில்புரிவார்
பழந்தமிழின் இலக்கியமும், பண்புமிகும் நூலினமும்
இழந்துவிடா திருப்பதற்கு எத்தனையோ நூல்நிலையம்
நாமே நடத்துகின்றோம்! நாட்டறிவை ஏற்றுகின்றோம்.
வழக்கறிஞர் நூறு, மருத்துவரோ இருநூறு



வளரும் பொறியியலில் மலர்ந்தவரோ நானூறு
கிழக்கும்மேற் கும்அறிந்து, கேட்போர்க்குப் பதிலுரைக்கும்
தத்துவமும் நம்மக்கள் சமுதாயம் கண்டதுண்டு!
பர்மா நிலத்தில் பச்சைவயல் முகங்காட்ட
பச்சை வயலிடையே பச்சரிசி சிரித்திருக்க
அத்தனையும் பொன்னாக ஆக்கிப் படைத்தவர்கள்
நம்மவரே என்றால் நாட்டோர் மறுப்பதில்லை,
ஆனாலும் நம்மவர்கள் அடக்கத்தால் இன்றுவரை
தாமாகத் தம்மைத் தலைதூக்கிக் கொண்டதில்லை.
இன்று விழித்துவிட்டோம்! எல்லோரும் ஒன்றுபட்டோம்
ஒன்று சமுதாயம் என்றுவரும் நாள்வரையும்
தத்தமது சாதியினைச் சாதியினர் போற்றுமட்டும்
சபையில் முழக்கிடுவோர் சாதிக்கே வாழுமட்டும்
நாமும் நமதுகுலம் நலங்காணப் போரிடுவோம்,
நகரத்தார் நலஉலகை நாளைக்கே நாம்சமைப்போம்!

அயோத்தி

இராமர் பிறந்த தலமாதலால் அயோத்தி புனிதமாகக் கருதப்படுகிறது. அயோத்தி இரயில் நிலையத்திலிருந்து 2 மைல் தொலைவில் நகரச் சத்திரம் இருக்கிறது. இது பைசாபாத் நகரிலிருந்து சரயு ஆற்றங்கரைக்குச் செல்லும் பெரிய சாலையில் துளசிதாஸ் பூங்காவுக்கு அருகே இருக்கிறது. கட்டிடம் பெரிது. இரண்டு யாத்திரைக் கட்டுகளுடன் கூடியது. உறுதியாகவும் கட்டப்பட்டது. சத்திரம் நல்ல முறையில் இருந்து வருகிறது. நந்தவனமும் இருக்கிறது. சத்திரத்தின் வெளிப்பகுதி சில கடைகளுக்கு வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது.

1883 முதல் 1942 வரை இங்கு அன்னதானம் நடைபெற்று வந்தது. சத்திரத்தில் இராமர் கோவில் இருக்கிறது. இதற்கு நாள்தோறும் இரண்டு காலப் பூசை உண்டு. அயோத்தியில் நூற்றுக்கணக்கான இராமர் கோவில்கள் இருந்தாலும் இந்த விக்கிரகம்தான் மிக அழகாக வடிக்கப் பெற்றிருக்கிறது. இங்கு கோவில் கொண்டுள்ள இராமர், தம் கையில் கோதண்டம் வைத்திருப்பதால் இங்குள்ள மக்கள் இவ்விக்கிரகத்தை கோதண்டராமர் என்று அழைக்கிறார்கள். இராமர், சீதை, இலக்குமணர், பரதர், சத்துருக்கர், அநுமன் திருவுருவங்களும் உள்ளன. நகரத்தார்கள் பல ஆண்டுகள் இவ்வூரில் திருவிழாக்களை நடத்தி வந்தனர். அதற்காகச் செய்யப் பெற்ற தேர் இன்றும் உள்ளது. இராமநவமி 9 நாட்களிலும் சத்திரத்திலிருந்து நாகநாதர் கோயிலுக்கு பூசை அபிடேக, நைவேத்தியப் பொருள்கள் அனுப்பி வருகின்றனர். அந்நாட்களில் அம்மாஞ்சி கோயில் இறைவன் எழுந்தருளி வரும்போது நம் சத்திரத்தின் முன்பாக இன்றும் தீபாராதனை செய்யப் பெறுகிறது.



THE CHETTIAR COMMUNITY - ITS CONTRIBUTION TO RELIGION

Dr. V. SP. Manickam M.A., M.O.L., Ph.D.
Professor of Tamil
Alagappa College, Karaikudi

Tolkappiyar, the ancient Tamil Sociologist has prophetically said that merchants are next in rank to kings in society. It is a historical fact that the cultural and religious institutions of Tamil Nadu would have been straved but for the incessant patronage of Nattukottai Chettiar Community called "Thana Vanikar" after the fall of the great Cholas and pious Nayakas. The perfect maintenance of the sacred monuments in the Tamil country and the gradual spread of Saivism in the Far East are the chief contribution of this community to the preservation and development of Hinduism. This contribution is stiil going on and will be ever going on.

Religious charity is the inborn characeristic of the Chettiar family. Whenever a business was started, a Chettiar would set apart a certain amount as fund in the name of the Almighty. There would be a separate account for this fund and a separate business also would be started out of this fund in order to multiply it. It is no exaggeration to say that a Chettiar is as much interested in the business conducted in the name of God as in his own business. His religious ambition is always broad and to put into practice his big scheme, a large fund is needed. He has therefore to do this two fold business simultaneously. This is evident from the earliest inscriptional records called " Nagarathar Arapatatayankal" edited by me with the help of Mr. K.PL.S.PL. Subramanian Chettiar of Nerkuppai. The oldest record belonging to the 16th century gives a detailed account of a devoted Chettiar Kumarappan, a salt trader, his allotment of a certain percentage of income in the name of the Velayuthaswami of Palani as "makamai", his salt business for God and for himself etc.,

The contribution of the Chettiar community to Hinduism is varied and manifold. The big and small temples and Goupurams built by several dynasties of different peroids were renovated by the Chettiars all over the country. New temples were also erected by them wherever necessary. Nagarathar temples of nine divisions are also magnificient structures. In every Nagarathar village one will find huge temples with great activity. Anything needed for the temple service invariably attracts the attention of the Chettiars. Flowers and milk are two importnat things for worship in temple from morning till night. Freshness and purity cannot be assured if we purchase them. Therefor Nanthavanams (flower gardens) and Pasumadams (Cow-houses) are maintained bythe Chettiars in the vicinity of the temples at great expense and with good care padasalai for vedas and Devarams are conducted as a part of temple administration in order to chant and sing hymns during daily worship.

In every temple there are natheswaram players and drum beaters. For all the employees, there are free quarters around the temple. Temples under the management of the Chettiars are self - sufficient in every respect.



It should be clearly borne in mind that temple renovation, temple construction, building of employees, quarters and maintenance of the other connected things were done by the Chettiars from their own funds individually or collectively. No government support had ever been sought. No supervisor was appointed to look after these constructions. The Chettiar would camp at the site and pay his personal attention to all matters, leaving his business in the hands of an agent. To make his contribution permanent and to consolidate his charities is always a Chettiar's aim.

It may be humbly estimated that the religious contribution of the Chettiar community in Tamil Nadu, in other parts of India and overseas countries like burma, Ceylon, Malaya, Saigon would be more than rupees 50 Crores. In spite of this sincere and systematic service, the Chettiar community has never thought to fame and name. One can hardly find any inscription about or any status of the Chettiar-donor in the temples. Self-effacement is the highest lesson of religion. The attainment of salvation lies not in earning a name but in doing one's duty simply and selflessly. The sacrifice of the Chettiar community reveals their realisation of this essential doctrine of religion.

வாழ்த்துரை

மன்னவர் பின்னோர் என்று இளங்கோ அடிகள் புகழ்ந்து கூறும் நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபினர் தொன்றுதொட்டு இன்றுவரை சிவநெறியும் செந்தமிழும் புரந்துவரும் பெருமக்கள் என்பது உலகறிந்த உண்மையாகும்.


இச்சமூகத்தைச் சார்ந்த தாழ்விலாச் செல்வர்கள், தென்னாடு எங்ஙணும் எண்ணற்ற கற்றளிகளை எழுப்பியும், தொன்மைச் சிறப்பு வாய்ந்த ஆலயங்கள் பலவற்றைப் புதுக்கியும், அறச்சாலைகள் கல்வி நிலையங்களை நிறுவியும் அருந் தொண்டாற்றியுள்ளனர். இன்றும் அத்தகைய நற்பணிகளைத் தமது தலையாய கடமையாகக் கருதிப் புரிந்து வருகின்றனர்.

மேலும் தமிழகத்தில் மட்டுமின்றி வட நாட்டிலும், இலங்கை, பர்மா, இந்தோனேசியா முதலிய கடல் கடந்த பகுதிகளிலும் இச்சமூகத்தினர் மேற்கண்ட அறச் செயல்களை இனிதாற்றிப் புகழ் சான்று இலங்குகின்றனர்.

இத்தகைய அறப்பணிகளுள் ஒன்றாய் முகிழ்த்த காசியம்பதி நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரம் ஆல்போல் தழைத்து வளர்ந்து தனது நூற்றாண்டு விழாவைச் சிறப்புறக் கொண்டாட இருப்பதறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

விழா இனிதே நிகழ்ந்தேறவும், நாட்டுக்கோட்டை மரபினர் இத்தகைய அறச்செயல்களை சிறப்பாகத் தமது சமூக ஏழை மாணவர்க்கும் மணம் விழைந்து நிற்கும் மங்கையர்க்கும் தக்க பொருளுதவி புரியும் நற்பணியை, இனிதாற்றிப் புகழ் பெறவும் எல்லாம் வல்ல ஆலவாய் அவிர்சடை அண்ணல் அருள் புரிவாராக.

- கருமுத்து தியாகராசன்



A brief history of the Sri Kasi Nattukkottai Nagara Chatram, Varanasi

'Somalay'

The Nattukkottai Chettiars or Nagarathars are a leading community of bankers and merchants hailing from Tamilnad (Madras State) and doing business all over India and the countries of South East Asia. They are reputed as builders and restorers of the great Temples of South India, which often reach palatial proportions.

Holy Kasi

Kasi or Varanasi is one of the few living cities of the world whose traditions run back to the concept of gods and the divine origin of things. The religious outlook of Indian might have undergone some modifications through changes over a period of several thousands of years, but the importance of Kasi in the sphere of religion still remains undiminished.

Millions of pilgrims overflowing with religious ferver from all over India come here for a dip in the holy waters of the Ganga and for a Darshan of Sri Vishweshwara the presiding deity of the place. Thousands come here every year to take their residence in this holy city after retirement from active life and spend their last days in medidation and renunciation with a devout faith in obtaining Salvation (Moksha) in the end. Ages since people from the farthest corners of India have come and settled here and have brought with them their culture and traditions. So one can find every part of India represented in the different quarters of the city, and all the important place of pilgrimage represented by different temples with the presiding deities installed therein.

In the Puranas we find location of about 800 temples of different parts of India in Varanasi, of which the important ones can still be identified.

Varanasi has also been the most important centre of learning and culture where the sages and seers from different parts of India congredate in large numbers to learn and to preach their ideas.

From time inmemorial Varanasi has been the cosmopolis of India and still continues to be the capital of India's religion and culture.

Varansi is not only a sacred place for the Hindus but the Buddhists. Jains and the Sikhs also hold it as their sacred place of pilgrimage.

Daily Poojas

From about 1820s, the Nattukkottai Chettiars have been doing rich and lavish poojas for Lord Viswanth, thrice a day, at 4 a.m., 11.30 a.m., and 9 p.m. Thus, three out of the four main services of the Viswanth temple are carried out by this chatram, which is a charitable institution founded for the purpose.These daily services have become so famous that devotees coming for Darshan of Viswanath Ji have always made it a point to attend the



"ARTI" service particularly in the evening (the Bada Pooja or Arthajama Puja) which is conducted on behalf of Chatram.

The abovesaid Trikala Pujas and the service in the temples of Lord Viswnath and Mateswari Annapoorna havebeen performed without any break for nearly 150 years now. Even during the Quit India Movement of 1942 and the consequent Curfew imposed in Varanasi, the Nattukkottai Chatram obtained special permission from the District Magistrate of Varansi to enable its staff to go to the Viswanath Mandir.

Abishekams

The ARTI is preceded by Abishekams of Milk, Honey, Ghee, Sandal, Rosewater, Perfumed Articles etc., all supplied by the Chatram. The services are done to the accompaniment of Nadhaswaram or South Indian Shenoi, which is a characteristic musical instrument used in the Temples of Tamilnad. For the regular observance of these services, the Chatram has on its payroll a staff of Hindustani Brahmins and others. Silver vessels, decoration articles and valuable ornaments have been donated by the Nattukkottai Chettiars to the Viswanath Mandir through the Chatram. The articles for preparing the daily food (Bhoj) of the Lord are supplied by the Chatram everyday and taken in a procession. The kitchen -hall in the Viswanath Mandir has been bulit out of the funds of this Chatram. The Visalakshi Mandir owes its present stately building to the munificience of the Nattukkottai Chettiars; in appreciation of their devotion, His Highness the Maharaja of Kasi gave them a plot of land on which the Visalakshi Mandir has been built.

Flower - Garden

A flower Garden is maintained by the Chatram on a large scale in order to ensure uninterrupted supply of flowers to the Viswanath Mandir. A Goshala was run for several decades; since 1941, milk is purchased from milkmen who use the Goshala premises and supply milk promptly and regularly for Abhishekam to the Deity.

Chatram - Bavan

The Chatram is housed in an imposing and spacious building constructed in Gudowlia, not far from the Viswanth Temple, in 1863. The house-warming ceremony took place on August 24, 1863; It is the Centenary of this event that is being celebrated now. Feeding of Hindu Sadhus and Swamijis, the Brahmins and the poor - Annadhan - is a regular and important feature of Chatram activities. Until the outbreak of hostilities with Japan, Annadhan was offered in an extensive manner. Due to the break in communications between India and Burma since 1942. the inflow of funds from Chettiars in Rangoon was stopped. After resumption of communications in 1947, various restrictions have been placed on remittance of moneys from Burma. As a result, Annadhan is done on a moderate but comparatively smaller scale. But, all the other activities of the institution continue undiminished.

Within the precincts of the Chatram is located the Nagareswar Temple, designed on the pattern of temples in Tamilnad. Here on Karthik day every month, the vigraha of Lord Subramanya is seated in a silver peacock (which, incidentally is India's National Bird) Vahana to give Dharshan to devotees.



A home away from Home

For ages, Kasi has attracted Hindus form every nook and corner of India and abroad. With the vast increase in transport facilities, thousands of pilgrims from Madras state and Ceylon flock to this Holy city; to them all the Nattukkottai Chatram is a homeaway from home and they congregate here in large numbers all the year round. The Chatram has living rooms, kitchen rooms, dining halls, prayer halls, verandahs, quadrangles and rooms for storage of large quantities of Ganges water for Abishek of Lord Viswanth brought regularly from Suddha Ganga at Prayag.

Apart from Pilgrims, lodging is given in the Chatram also to Hindu students appearing for Vedic, Hindi and other examination conducted by the Banaras Hindu University and the other temples of learning in Varanasi. Some poor students who were fed by the Chatram are now serving in the Banaras Hindu University in its Sanskrit and Indology Departments as distinguished scholars. The Chatram also acts as the agency of people of Madras State for performance of various ceremonies like the litting the Moksha Deepa for departed souls and for giving offerings to dead ancestors, Ganga water is sent by the Chatram to various temples in Tamilnad and to individuals both in and out of India.

In views of its vital role in the history of the Viswanth Temple and the fact that so far a sum of fifty lakhs of rupees has been spent by the Chatram authoriteis in religious charities in Varansi, the Chatram was appointed as receiver of the Viswanath Mandir in the 1930s during which period the Mahants had certain disputes amongst themselves. The Chatram acted as receiver and managed the affairs of the Mandir for six years at the unanimous request of all the parties to the dispute.


Branch Chatrams

In additions to the chatram at Varanasi, branch Chatrams exist in Ayodhya and Prayag in Uttar Pradesh State, in Gaya in Bihar state, in Calcutta, Kalighat and Tarakeshwar in West Bengal State, in Nasik - Panchawadi in Maharastra state and in Godavari (Rajahumundry) in Andhra Pradesh state, Until the outbreak of war in the Far East, a chatram was maintained in Hardwar in a rented building. Thus spread out in five states of Indian Union and rounded by the people of a sixth state - Tamilnad. this chatram is an institution of great national importance helping the emotional integration of India.

Management

The chatram was managed by the chettiar business - houses of Calcutta, in rotation, till 1930. Its management then passed on to the Chettiar Business - houses in Rangoon. In 1934, a managing society was registered in Rangoon and its functioning from Rangoon presently. In the period (1942-1947) the management of the Chatram was in the hands of a local committee formed in Karaikudi. The Managing Society owns properties in Rangoon, Varanasi, Calcutta and other places. Donations and offerings are made by the Chettiar business - houses operating in Burma, Malaya, Saigon etc., Chettiar pilgrims visiting Varanasi give Mahami (contribution given out of free will). Most of these monies are, earmarked for specific activities and each of these activities has a capital endowment.

May Lord Kasi Viswanath bless the activities of the Nattukkottai Nagara Chatram and help its continued service for all time to come. We pray to Him with folded hands as we fervently believe that this humble institution depends absolutely on His unbounded mercy.



நூற்றாண்டு விழா

தமிழ்க்கடல் இராய.சொ.

(1963ல் எழுதப்பட்டது)

நூற்றாண்டு விழா என்பது எளிதான ஒன்றல்ல. ஒரு நிலையம் கண்டு நூறு ஆண்டுகள் நிறைவுற வேண்டுமானால் அது விரைவில் நடக்கக்கூடிய காரியமல்ல. ஒவ்வோர் ஆண்டாக நூறு ஆண்டுகளைக் கடத்தல் வேண்டும். நூறு ஆண்டு என்று சொல்லும் பொழுது சுருக்கமாக இருக்கும். அது எவ்வளவு காலம் என்று எண்ணிப் பார்க்கும்போதுதான் அதன் பெருக்கம் தெரியும்.

ஒரு நிலையம் நூறு ஆண்டுகளைக் கடந்து நிற்பது என்பது மிக அரிய காரியம். உலகில் நூறு ஆண்டுகள் கடந்து நிற்கும் அறங்கள் மிகக் குறைவு. அப்படி நூறு ஆண்டுகளைக் கடந்து ஒரு நிலையம் நிலைத்துவிடுமானால் பின்னர் அந்நிலையம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளைக் கடந்து நிலைபெறுவதில் ஐயமில்லை.

தமிழ்நாட்டில் சிறப்புற வாழும் நாட்டுக்கோட்டை நகரத்தார் இந்திய நாட்டின் வடகோடியிலுள்ள புண்ணியத் திருத்தலமாகிய காசி மாநகரத்தில் 152 ஆண்டுகளுக்கு முன் அறம் செய்யத் தொடங்கினர். அந்த அறத்தை நிலைநிறுத்த நூறு ஆண்டுகளுக்கு முன் ஓர் கட்டிடத்தை எழுப்பினர். நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரம் என்ற அந்தக் கட்டிடம் பெருக்கம் பெற்று இன்று நிலவுகின்றது. அதினின்றும் நல்லறத்தை வளர்த்து வருகின்றார் நகரத்தார். காசி விசுவநாதப் பெருமானுக்கு நகரத்தார் இச்சத்திரத்தின் சார்பாக திருவனந்தல், உச்சிக்காலம், அர்த்தசாமம் ஆகிய மூன்றுபோதும் சிறப்பாகத் தமிழ்நாட்டு மேளத்துடன் வழிபாடு நடாத்தி வருகின்றனர்.

சத்திரத்தையொட்டி நகரேசுவரர் கோயில் என்ற பெயரோடு ஒரு நல்ல சிவன் கோயில் நடத்தி வருகின்றார்கள். காசிச் சத்திரத்தின் தொடர்பாக காசி நகரத்தில் நல்ல நந்தவனம் ஒன்று நடைபெற்று வருகிறது. அதோடு கல்கத்தா, கயா, அயோத்தி, பிரயாகை, தாரகேசுவரம், காளிகட்டம், பஞ்சவடி, கோதாவரி ஆகிய எட்டு ஊர்களிலும் அறநிலையங்கள் நடைபெறுகின்றன. வடநாட்டில் இப்படியாக எவ்வளவோ காலமாக ஒன்பது ஊர்களில் நடத்தப்பெறும் அறத்தை யாரும் பாராட்டுவார்கள்.

தென்னாட்டில் நகரத்தார் கட்டிய கோயில்களும் செய்த வேறு பல அறங்களும் கணக்கிலடங்கா. பயண வசதிகள் இல்லாத அந்த நாளிலேயே வடநாடு சென்று இத்துணை இடங்களில் அறநிலையங்கள் கண்டது நகரத்தார்களின் அறமன இயல்புகளைக் காட்டுகின்றது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் காசி நகரம் சென்றிருந்தேன். அப்போது நகரச் சத்திரக் கட்டிடத்தில் கட்டிடம் நிறுவிய காலம் 1863 என்று பொறிக்கப் பெற்றிருந்ததைக் கண்டு நூறாண்டு நிறைவுற இன்னும் 2 ஆண்டுகளே இருக்கின்றன என்று எண்ணி மகிழ்ந்து பாராட்டிச் சொன்னேன். அந்த 2 ஆண்டுகள் முடிந்து நூற்றாண்டு விழாக் கொண்டாடி மலர் வெளியிடுவது கண்டு பேருவகை பூக்கின்றேன்.

நகரத்தார் பொதுவாகவும் தனித்தனியாகவும் சத்திரங்களும் கோயில்களும் பாடசாலைகளும் தமிழ்நாட்டில் ஏராளமாகக் கட்டியிருக்கின்றனர். தாங்கள் தொழில் கருதிச் சென்ற மலேயா, பர்மா, இலங்கை, இந்தோசைனா முதலிய நாடுகளிலும் கோயில்கள் நிறுவி மிக நல்ல முறையில் நடத்தி வருகின்றனர். எனவே அறம் நகரத்தாருக்குத் தொன்றுதொட்ட பரம்பரைச் சொத்து. இன்றைய காலநிலைக்கேற்ப பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள், வைத்தியசாலைகள் முதலியவற்றையும் நிறுவி நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஏராளமான பணத்தை வாரி வழங்குவதைக் காண்கின்றோம்.

பாண்டிய மன்னர்களுக்குப் பின் கோயில் திருப்பணிகளைப் பெருகிய அளவில் செய்து திருப்பணிச் செல்வர் என்ற பெயர் பெற்றவர் நாட்டுக்கோட்டை நகரத்தார். அதற்கு இன்று



வானளாவி நிற்கும் எண்ணிறந்த கோபுரங்களும் கோயில்களும் சான்று பகர்கின்றன. கோயில்களிலெல்லாம் மிகப் பெரியது எனக் கருதப்படுகின்ற அழகிய மதுரைக் கோயிலின் செப்பனிடும் பணி இதுபோது நடந்து கொண்டிருக்கிறது. எனவே அக்கோயில் வரலாற்றை இங்குக் கூறுதல் பொருத்தமுடைத்து.

மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை வரிவ
ளைக்கை மடமானி
பங்கயச் செல்வி பாண்மாதேசி பணி செய்து
நாள்தொறும் பரவப்
பொங்கழல் உருவன் பூதநாயகன் நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே.

என்று திருஞானசம்பந்தப் பெருமான் ஆலவாய் அண்ணலைப் பாராட்டினார்.

முளைத்தானை எல்லார்க்கும் முன்னே
தோன்றி
முதிரும் சடைமுடிமேல் முகிழ்வெண் திங்கள்
வளைத்தானை வல்லசுரர் புரங்கள் மூன்றும்
வரைசிலையா வாசுகிமா நாணக் கோத்துத்
துளைத்தானைச் சுடுசரத்தால் துவள நீறாத்
தாமுத்த வெண்முறுவல் உமையோடு ஆடித்
திளைத்தானைத் தென்கூடல் திருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

எனக் கூடற்பெருமானைத் திருநாவுக்கரசு அடிகள் பாடினார்.

பண் சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தின் பெம்மான்
பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்து
ஈசன்
கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலி மதுரை
மண் சுமந்து கூலி கொண்டு அக்கோவால்
மொத்துண்டு
புண் சுமந்து பொன்மேனி பாடுதுங்காண்
அம்மானாய்.

என்று மதுரைப் பெருமானைப் பாடி மகிழ்ந்தார் மணிவாசகப் பெருமான்.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த மதுரைக் கோயிலைப் பாண்டிய மன்னர்கள் எழுப்பினார்கள். பின்னர் அக்கோயிலைப் பெரிதுபடுத்திப் பல அரிய பணிகளைத் திருமலை நாயக்கர் செய்தார். அதன்பின் நகரத்தார் செய்த பணி பெரிது. இன்று இக்கோயிலை ஓரளவு பழுது பார்ப்பதற்கே சுமார் 20 லட்சம் செலவிடப்படுவதாக அறிகிறோம். இப்பணத்தை அளிப்பவர் பலர். இன்றைக்கும் திருமலை நாயக்கர் காலத்திற்கும் இடையில் இம்மதுரைக் கோயில் திருப்பணிக்கு நகரத்தார் வகுப்பைச் சேர்ந்த அமராவதிபுதூர் வயிநாகரம் குடும்பத்தார் இருபத்தைந்து லட்ச ரூபாய் செலவிட்டிருக்கின்றார்கள் என்பதை இக்காலத்தார் சிலர் அறியமாட்டார். ஆதலின் இங்கு நினைவுறுத்துகின்றேன். மொட்டை கோபுரத்தை முழுக் கோபுரமாக்கி, ஆடி வீதி முழுவதும் கருங்கல் பரப்பி, கல்யாண மண்டபம் கட்டி, திருமதிலைச் சுற்றிலும் இருந்த வீடுகளையெல்லாம் அப்புறப்படுத்தி இரும்பு வேலியெழுப்பி இன்ன பல பணிகள் செய்த பெருமை மேற்சொன்ன குடும்பத்தாரின் தனி உரிமை. அக் குடும்பத்திற் பிறந்து கல்வியிற் சிறந்து வாழ்ந்த பெரும் புலவர் அ.இராமநாதன் செட்டியார் அவர்கள் ஒரு சீட்டுக் கவியில்,

துஞ்சாத புகழ் மதுரை மீனாட்சி இறை
சோம சுந்தரேசர்க்கு
எஞ்சாத திருப்பணியைக் காற்கோடி
பொருட்செலவால் இயற்றியுள்ளோம்

என்று பாடி மகிழ்ந்து பெருமைப்பட்டது பொருத்தமுடைத்து.

நகரத்தார் செய்த அறச் செயலுக்கு எடுத்துக்காட்டாக, இன்றைய சூழ்நிலைக்கேற்ப இதைக் கூறினேன். நகரத்தார் அறப்பணி பலப்பல. அவற்றுள் மிக்க சிறப்புடைய ஒன்று காசிச் சத்திரம். காசியில் நகரத்தார் அறம் செய்யத் தொடங்கி 152 ஆண்டுகள் ஆனதும் நகரச் சத்திரத்திற்கு உரிய பெரிய கட்டிடம் கட்டப்பெற்று நூறு ஆண்டுகள் ஆனதும் மகிழ்ச்சிக்குரிய செயல்கள்.

நூறு ஆண்டுகளைக் கடந்து நூற்றாண்டு விழாக் காணும் இச்சத்திரம், இன்னும் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பல்கோடி நூறாயிரம் ஆண்டு கண்டு சிறப்புற்று ஓங்க விசாலாட்சியுடனாய பல்லாண்டென்னும் பதங்கடந்த காசி விசுவநாதப் பெருமான் அருள்வானாக.



தாரகேசுவரம்

அரு.சொக்கலிங்கம்
கல்கத்தா

தாரகேசுவரம் என்பது மேற்கு வங்கத்தில் ஒரு புனிதமான சிவஸ்தலமாக மதிக்கப்படுகிறது. இது. கிழக்கு ரெயில்வே கிளைப்பாதையில் கல்கத்தாவிலிருந்து மேற்கே 36 மைல்கள் அல்லது 58 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இதற்கு பஸ் வசதியும், மின்சார ரயில் வசதியும் உண்டு. இத்தலத்திற்கு ஒவ்வொரு நாளும் பக்தர்கள், கூட்டம் கூட்டமாகச் சென்று வந்தாலும் சிராவண் மாதம் என்ற ஆவணி மாத முழுவதிலும் சரி, சிவராத்திரியை விசேஷமாகக் கொண்ட மாசி மாதம் முழுவதிலும் சரி, சைத்ர சங்கராந்தி என்று சொல்லப்படுகின்ற சித்திரை வருடப் பிறப்பிற்கு முந்திய பங்குனி மாதம் முழுவதிலும் சரி, பக்த கோடிகள் ஆயிரக்கணக்கில் சென்று வருவது வழக்கம்.

வடநாட்டில் திருவிழாவை "மேளா" என்று அழைப்பது கண்கூடு. சிராவண் மாத விழாவை மார்வாரிகள் விசேஷிப்பதால் அது 'மார்வாரி மேளா'வென சிறப்புப் பெயர் பெற்றுள்ளது. சைத்ர சங்கராந்தி விழாவில் ஒரு மாதம் வரை தலைக்கு எண்ணெய் இட்டுக் கொள்ளாமலும், காய்கனிகளையும் கங்கா தீர்த்தத்தையும் மட்டும் அருந்தி, அரைப் பட்டினி கிடந்து, காசாயம் உடுத்திப் பிரார்த்தனை செலுத்துவதால் அதை "சன்னியாசி மேளா" என்றும், மாசியில் நிகழும் சிவராத்திரி விழாவை காவடி செலுத்தும் முக்கிய மேளாவாகவும் கொள்ளப்படுகின்றது.

மேலே விவரித்த மூன்று மேளாக்களைக் கொண்ட வருடத்தின் மூன்று மாதங்களிலும் சரி, மற்ற மாதங்களிலும் சரி திங்கட்கிழமையை சிவனுக்கு உகந்த நாளாகக் கொண்டு அன்று சூரிய உதயத்திலிருந்து மறைவு வரை தண்ணீர் கூடக் குடிக்காமலிருந்து, கங்கையில் அல்லது குளத்தில் நீராடிப் பொழுது சாயும் வேளையில் பழங்களும் கங்கா தீர்த்தமும் உட்கொண்டு விரதத்தை பூர்த்தி செய்து கொள்வது தாரகநாதரின் பக்தர்களுக்கு வழக்கமாக இருந்து வருகின்றது. இத் தலத்தை வங்காளிகள் அதிகமாகச் சிறப்பிக்கிறார்கள். கல்கத்தா மக்கள் தொகைக்கேற்ப 'தாரக நாதரின்' விழாக் காலங்களில் பக்தர்களின் கூட்டமும் பெருக்கெடுத்து ஓடுவதில் வியப்பில்லை.

கல்கத்தா காளி கட்டத்திலுள்ள ஆதி கங்கை என்ற ஹுக்ளி நதி தீரத்திலுள்ள சிற்றாற்றின் நீரை இரு செம்புகளில் நிரப்பி ஒரு மூங்கில் கொம்பினால் காவடியாக அமைத்து அதைத் தோளில் தாங்கிக் கொண்டு, எங்கும் நிற்காமல் கால்நடையாகவும், விரைவாகவும் "போலோ பம்", "தாரகா பம்" என்று சிவ நாமங்கள் அத்தனையும் சொல்லிக் கொண்டு ஒரே சிந்தனையில் திரும்பிப் பாராமல் சட்டை வேட்டியின்றி கஷாயம் அல்லது மஞ்சள் நீரில் துவைத்த ஒரு முண்டை மட்டும் கட்டிக் கொண்டு பாதரட்சையின்றி வெயில்,மழை என்று பாராமலும், இரவு பகல் என யோசியாமலும் ஆணும் சரி பெண்ணும் சரி தாரகேசுவரம் சென்று தாரகநாதர் என்று சொல்லப்படும் சுயம்புலிங்கத்தைத் தாங்கள் கொண்டு செல்லும் நீரால் திருமுழுக்காட்டிப் புளகாங்கிதம் அடைகின்றனர்.

காளி கட்டத்திலிருந்து தாரகேசுவரத்திற்குச் சாலைமார்க்கமாகச் சென்றால் சுமார் நாற்பத்திரண்டு மைல்கள் கடக்க வேண்டும். வயோதிகர் அல்லது சக்தி குன்றியவர்கள் 'சௌரா பள்ளி' என்ற கிராமத்தில் வந்து கலக்கும் கங்கை நீரை மொண்டு காவடியில் ஏந்தித் தாரகேசுவரம் செல்வதும் உண்டு. இது தூரத்தைக் குறைக்கக் கையாளும் முறையாகும் இவ்வழி 16 மைல்கள்தான் இருக்கும். காவடியைக் கொண்டு செல்பவர்கள் அதைத் தரையில் இறக்கி வைக்கக்கூடாது. நீராடிச் சுத்தமாகக் காணப்பெறும் ஒருவரின் கையில் கொடுத்து அல்லது இதற்கெனச் சாலையில் அமைக்கப் பெற்றிருக்கும்



சுமைதாங்கியில் தொங்கவைத்து விட்டுத்தான் வேறு எச்செயலையும் செய்ய வேண்டும். அப்படியின்றித் தரையில் வைத்தால் காவடியில் உள்ள நீரின் புனிதத்தன்மை கெட்டு விடுவதாக ஐதீகம்.

காவடியைத் தாங்கிச் செல்லும் காலத்திலும், அதற்கு முன்பு சில நாட்கள் விரதமாக இருக்கும்பொழுதும் இவர்கள் வழக்கம்போல் கண்ட பொருட்களையெல்லாம் உண்ணக்கூடாது. புதிய மண்பாண்டங்களில் பச்சரிசியைக் கொண்டு சோறாக்கிச் சாப்பிடலாம். பசும்பால் அல்லது பசுநெய் விட்டுக் கொள்ளலாம். கருப்பு வெல்லம் சேர்த்தும் உட்கொள்ளலாம். பச்சையாகத் தின்னக்கூடிய காய்கள், பழங்கள் இவைகளை உண்ணலாம். கங்கை மண்ணை உடம்பெல்லாம் அப்பிக் கொள்வதும், சந்தனத்தை உடம்பில் பூசிக் கொள்வதும் புனிதமாகக் கருதப்படுகிறது. புது ஆடை மிகச் சிறப்பானது. கிழங்கு புது ஆடை மிகச் சிறப்பானது. கிழங்கு வகைகளும், வெங்காயம் பூண்டு வகைகளும் தள்ளத் தக்கனவாகும். தாரகேசுவரத்திற்குக் காவடி செலுத்துவதில் பாதிக்கு மேல் பெண்களே பங்கு பெறுகின்றனர். காவடி செலுத்துபவர்களில் சிறுகப் படித்தவர்களும், முரட்டு சுபாவமுள்ளவர்களும், ஆசாபாசம் மிக்குடையவர்களும், ஏழை எளியவர்களும் வாழ்க்கையில் தோல்வி கண்டவர்களும் வழுக்கி விழுந்தவர்களும் நிறையப் பங்கு பெறுகின்றனர். போதையுடன் பிரார்த்தனையில் கலந்து கொள்பவர்களை வடநாட்டார் வெறுப்பதில்லை.

தாரகேசுவரத்தில் தாரக நாதரின் கோவிலில் கங்கை நீரை அபிஷேகிப்பதோடு மட்டும் பிரார்த்தனை தீர்ந்து விடுவதில்லை. ஆண்களும் சரி, பெண்களும் சரி, குளத்தில் மூழ்கி எழுந்து ஈர ஆடையுடன் கோவிலைச் சுற்றி "கும்பிடுதனம்" செலுத்தி வலம் வருவதுண்டு. குளத்திலிருந்து ஆரம்பித்து குளத்தில் வந்து முடியும் இந்த பிரார்த்தனை பல மணி நேரங்களில் முடிந்துவிடும். ஆனாலும் உடல் உழைப்பு நிறைந்தது. மற்றொரு பிரார்த்தனை இங்கு சிறப்புறத்தக்கதாகத் திகழ்கிறது. ஒரு பக்தர் எதையாகிலும் நினைத்துக்கொண்டு அதில் சித்திபெற வேண்டுமென எண்ணினால், கோவிலைச் சேர்ந்த மஹந்துவின் பிரதிநிதியிடம் ஒரு ரூபாயும், ஒரு காலணாவும் செலுத்தினால் சந்நிதி முன் தவங்கிடக்க அனுமதிச் சீட்டு வழங்குகிறார். அதைப் பெற்ற பக்தர் ஆணோ, பெண்ணோ சந்நிதானத்தின் முன்னுள்ள மண்டபத்தில் நீராடிக் காவியுடை அணிந்து முதல் நாள் பால், பழம் மட்டும் அருந்தித் தவங்கிடக்க வேண்டும். அந்த நாள் சித்திக்காவிட்டால் 3 நாட்கள் வரையிலோ, அல்லது அவர் இச்சைப்படும் நாள் வரையிலோ எவ்வித ஆகாரமுமின்றிக் கிடக்க வேண்டிவரும். நாட்கள் செல்லச் செல்லத் தண்ணீர் அருந்துவதைத் தவிர்க்கும் வைராக்கிய சித்தராகி விடுகின்றார். அவர் தினம் பல தடவை நீராட வேண்டியது கட்டாயம். இப்படிக் கிடக்கும் சமயம் "தாரகநாத்" கனவில் வந்து வேண்டிய வரத்தை அருள்கின்றார் என்பது மரபு. நாட்கள் செல்லச் செல்லத் தவங்கிடக்கும் பக்தர் சோம்பித் துவண்டு உலக நினைவற்ற நிலையைக் கூட அடைந்து விடுவதுண்டு. அந்த நிர்விகர்ப்ப நிலையில் பகவான் அவர்கள் எண்ணத்திற்குத் தக்க வரத்தை அருள்கின்றார் என்பது ஒரு பிரமையாக மாறி அது அவர்கள் மனதில் பதிந்து திருப்தியடைகின்றார்கள். அவரவர் நம்பிக்கையைப் பொறுத்து சித்தி பெற்றதாகவே திடமாக நம்புகின்றார்கள். நம்பிக்கையற்றவர்கூட அவர்கள் துவண்டு கிடக்கும் இந்த யக்ஞத்தைப் பார்த்து மனம் இளகி விடுவதும் உண்டு.

குழந்தைகளும் பெரியோர்களும் 'மஹந்து'விடம் காணிக்கை செலுத்தி முடி நீக்கிக் கொள்வதும் இங்கு வழக்கமாகத் திகழ்கிறது.

மற்றொரு விநோதப் பிரார்த்தனையும் உண்டு. குழந்தையில்லாதவர்கள் அல்லது புத்திசாலிக் குழந்தைகளைப் பெற நினைக்கும் பெண்கள் அதிகாலையில் எழுந்து ஆண்கள் கண்களில் படாமல், தம் சீலைத் தலைப்பின் ஓரத்தைக் கிழித்து அதில் ஒரு செங்கல் துண்டை முடித்து தீர்த்தத் தொட்டியின் ஓரமுள்ள கம்பத்தில் கட்டிவிடுவது பழங்காலந்தொட்டு வழக்கதிலுள்ளது. இப்பொழுது குழந்தைப் பேறு மக்களிடத்தில் பெருகப் பெருக வேறு காரியங்கள் சித்தியாவதற்காக இந்த வழக்கம் மாற்றப்பெற்று நடந்து வருகின்றது. செடிகளில்



துணியைக் கிழித்துக் கட்டுவது, தேவதையைத் திருப்திப்படுத்துமென்பது தமிழ்நாட்டு வழக்கிலும் உண்டு.

இத்தலம் ஏற்பட்டு 800 ஆண்டுகள் ஆகின்றன. இங்கு சமஸ்கிருத மகா வித்யாலயமும், ஆயுர்வேத வித்யாலயமும் சாதுக்களின் சங்கமும், 'கோ' சாலைகளும் இக்கோயிலுக்கு தர்மகர்த்தவான மஹந்துவால் நடத்தப்பட்டு வருகின்றன. வரி வசூலிக்கும் உரிமைகளும் இப்பொழுது தேவஸ்தான போர்டில் சேர்ந்து விட்டபோதிலும், இக்கோயிலின் பூசைத் திருப்பணிகளும், அதன் மேற்பார்வையும் தர்ம நிலையங்களும் கோவிலில் வரும் ஒரு மஹந்துவின் நிர்வாகத்தின் கீழ்தான் இருந்து வருகின்றன. அம்மஹந்து ஆதி சங்கரர் பரம்பரையைச் சேர்ந்தவரென்றே சொல்லிக் கொள்கிறார். ஆதி சங்கராச்சாரியாரின் மடங்களுக்கும், இந்த மஹந்துக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லையானாலும் 'அத்வைத' அநுஷ்டானிகளாகவே திகழ்கிறார்கள். இந்த மஹந்து பரம்பரை சங்கராச்சாரியார் வகுத்த பத்துவித சந்நியாசிப் பிரிவுகளில் ஒன்றாகிய 'கிரி' சம்பிரதாயத்தைச் சேர்ந்ததாகக் காணப்படுகின்றது.

புகழ் மிகப் பெற்ற இந்தச் சிவதலத்தின் பெயர் தாரக நாதரின் பெயரைக் கொண்டு தாரகேசுவரம் என வழங்கப் பெறுகிறது. இதே பெயரில் பம்பாய் பக்கத்திலும் ஒரு தலம் இருப்பதாகத் தெரிகிறது. காடாக மண்டிக் கிடந்த ஒரு இடம் புனிதத் தலமாக மாறியதற்கு முகுந்தகோஷ் என்ற மாடு மேய்க்கும் பையன்தான் காரணமாகத் தெரிகின்றது. பட்டுப்போன பனை மரத்தூரில் தன் பசுமாடு தன் மடியில் சுரக்கும்பாலைத் தினமும் சொரிந்து விட்டு வெற்றுப் பசுவாகத் திரும்பியதை நோட்டம் பார்க்கச் சென்ற முகுந்தகோஷ் என்ற மாடு மேய்க்கி பால் சொரிந்த இடத்தில் ஒரு இலிங்கம் தென்படுவதைக் கண்டான். ஓடோடிச் சென்று ஊராருக்கு அறிவித்தான். கூட்டம் திரண்டு அதளபாதாளம் வரை தோண்டிப் பார்த்து இலிங்கத்தின் அடியைக் காண முடியாத நிலை ஏற்பட்டது. பிறகு ஒரு பிராமணர் கனவில் தாரகநாதர் தோன்றித் தன் நிலையை உணர்த்திய பிறகு தோண்டும் வேலை நிறுத்தப்பட்டு இராம் நகர் என்று பக்கத்து கிராமத்து இராஜா 'ராய் பாராமல்' என்பவருக்கு அறிவிக்க, அவர் கோவில் எழுப்பினார் என்றும் இப்பொழுது உள்ள கோவில் மூன்றாவது முறை செப்பனிட்ட கோவில் என்றும் கூறப்படுகின்றது. தாரகா நாதனின் சரித்திரத்தையும் ராஜா பாராமல் வரலாற்றையும் மஹந்துகளின் பரம்பரையையும் விவரிக்கப் புகுந்தால் மிக விரிவடையும்.

பெரிய போர்களும், படையெடுப்புகளும் நடத்த பிரதேசமான வங்கத்தின் மண்ணிலுள்ள இச்சின்னஞ்சிறிய கோவில் எல்லாப் படையெடுப்புகளுக்கும் தப்பிப் பிழைத்தது இதன் சிறிய தோற்றத்தின் காரணத்தாலா? அல்லது தாரகநாதனின் புனிதத் தன்மையாலா? என்பதை அறிய முடியவில்லை. இதன் பக்தர்களைக் கேட்டால் படையெடுத்து வந்த மகமதியரும்கூட இக்கோவிலுக்குக் காணிக்கை செலுத்தியும் மானியம் வழங்கியுமுள்ளனர் என்றும் இன்றுகூட அக்கம் பக்கமுள்ள மகமதியர்கள் பால் கொண்டு வந்து செலுத்துகின்றனர் என்றும் சொல்லுகிறார்கள்.

ஒரே சமயத்தில் 15 பேர்களைக் கூட உள்ளடக்கிக் கொள்ள முடியாத கோவில் கர்ப்பக் கிரஹத்தின் உள் வாயில் அதற்குத் தகுந்த அளவு சிறியதாகவே காணப்படுகிறது. ஆண்கள் சட்டை அணிந்து செல்லக் கூடாதென்பது வழக்கத்திலிருந்து வருகின்றது. நாற்புறமும் சுவர் எழுப்பப்பட்டு ஒரு சிறிய வழியை உடைய காற்றுப் புக முடியாத கர்ப்பக் கிரஹத்தினுள் பூசாரிகள் பக்தர்களை ஆண், பெண் வித்தியாசமின்றி இடித்து முழக்கிக் கொண்டு அழைத்துச் சென்று ஒருவர் முகம் ஒருவர் அறியாத, ஆண்டவனும் நம்மை அறியாத இருட்டறையைப் போன்ற மண்டபத்திற்குள் சங்கற்பம் சொல்லி, அபிஷேகம் செய்து ஆராதிக்க வைப்பது ஒரு நூதன அநுபவமாகவே இருக்கும். பக்தர்களும் திணறி பகவானும் திணறுகின்ற சமயத்தில் யாருக்கு யார் சங்கற்பம் செய்து வைக்கிறார்கள். எந்த பக்தனைச் சேர்ந்த எந்தப் பூசாரி வாயிலிருந்து சங்கற்பம் வந்ததென்பதைக் கூட அறிந்து கொள்ள முடியாத ஒரு குகை. வாழ்க்கையில் சில நிமிடங்கள் தவழ்ந்த பக்தர்கள், வெளியே வந்தால் போதும் என்ற நிலையில் வியர்த்து விறுவிறுத்து வெளியில்



வந்ததும், வராததுமாக தங்களைத் தொடர்ந்து வரும் பூசாரிக்குக் காணிக்கையை செலுத்தவிட்டு பக்தர் விடுதலையை அடையப் பார்த்தால் பூசாரி சுலபமாகவா விட்டுவிடுவார். பக்தரின் பாதாதி கேசம் வரை பூசாரியால் வர்ணித்து, முடிந்தவரை பணம்பிடுங்கிய பிறகுதான் பூசாரி பக்தரை மோட்ச வரி செல்ல அநுமதிப்பார்.

தாரகேசுவரத்தில் மார்வாரிகளுக்குப் பல சத்திரங்கள் உண்டு. நாட்டுக்கோட்டை நகரத்தார் 60 வருடங்களுக்கு முன்பாகவே அங்கு ஒரு மடம் எழுப்பி இதில் தங்குவதற்கு யாத்திரைவாசிகளுக்கு சௌகரியம் செய்து கொடுத்து இருக்கிறார்கள். யாத்திரையை கல்கத்தாவில் முடிக்கும் செட்டிநாட்டு ஆச்சிமார்கள் தாரகேசுவரத்தை மிகப் புனிதத் தலமாகவே கருதுகிறார்கள். காரணம் தாரகநாதன் ஒரு சுயம்புலிங்கம் என்பதும், இந்தச் சுயம்பு லிங்கத்தின் கர்ண பரம்பரைக் கதை தமிழ்நாட்டு சுயம்பு லிங்கங்களின் கதைகளை ஒத்திருப்பதாலும், தமிழ்நாட்டுக் கோவில்களைப் போல் காவடி எடுப்பது, முடியிறக்குதல் முதலிய பிரார்த்தனைகள் மிளிர்வதாலும் ஆச்சிமார்கள் பக்தி பூண்டதில் ஆச்சரியமில்லை.

வணிகர் வண்மை வாழ்க

சுவாமி சுத்தானந்த பாரதியார்

தமிழும் சைவமும் தழைத்தினி தோங்கவே
திரைகட லோடித் தேடிய செல்வம்
அள்ளி வழங்கி அறவினை செய்த
தனவா ணிகரின் சரித்திரப் புகழை
உலகெலாம் அறியும். உத்தம வணிகர்
சத்திரம் பலபல சதுருடன் எழுப்பி
அந்தணர் மாணவர் ஆண்டிபர தேசிகள்
அனாதைகள் யாவரும் அருந்தி வாழச்
செய்யும் பணிகளின் சிறப்பென் சொல்வோம்
உழைத்த பணத்தால் ஊரினை யூட்டித்
தழைத்த தருமமே தலைகாத் திடுமே.
பாத்தூண் என்னும் பண்பாட் டுடவே
நல்விருந் தோம்பும் நாட்டுக் கோட்டைச்
செட்டியார் வாணிகச் செல்வம் மல்கி
ஃபோர்டு ராக்ஃபெலர் போலவாழியவே
அன்பும் அறமும் பண்பும் பயனுமாய்
நகர முதல்வர் நாட்டுக் கோட்டையார்
மன்னர் பின்னர் மங்கல மாக
வாழ்க நல்லறம் வாழிய மாதோ.



ஸ்ரீ காசி விஸ்வேசர் போற்றி

பொற்கிழிக் கவிஞர் சொ.சொ. மீ. சுந்தரம்

சீர்வளர் காசியில் சிவமே போற்றி!
வார ணாசியில் வளர்வாய் போற்றி!
அகல்யா பாய்க்கருள் அப்பனே போற்றி!
புகல் அடைந் தோர்களைப் புரப்பாய் போற்றி!
கங்கையைத் தாங்குசெஞ் சடையாய் போற்றி!
மங்கைக் கிடமே வழங்கினாய் போற்றி!
அன்னையின் வடிவில் அமர்ந்தாய் போற்றி!
அன்னபூ ரணியாம் அருந்தவ போற்றி!
மாசிலார் துன்பம் மாற்றுவாய் போற்றி!
காசிக் கயிற்றால் களைபவ போற்றி!
பூசும் நீற்றின் பொலிவே போற்றி!
பேசும் ஐந் தெழுத்தின் பெருமையே போற்றி!
தீர்வரும் மனநோய் தீர்ப்பாய் போற்றி!
பார்வையால் ஆட்கொள்ளும் பைரவ போற்றி!
அகிலம் காக்கும் ஐயா போற்றி!
அகிலே சன் எனும் அண்ணலே போற்றி!
ஆயிரம் பேர்கள் அமைந்தாய் போற்றி!
தாய்விசா லாட்சி தண்ணருள் போற்றி!
திருமறை தந்த திருவருள் போற்றி!
திருமுறைக் குள்வளர் சிவமே போற்றி!
கட்டளை பற்பல கண்டாய் போற்றி!
லட்டுத் தேரை நயந்தாய் போற்றி!
ஈசான்ய திக்கில் இலங்குவாய் போற்றி!
காசிவிஸ் வேசர் கழலிணை போற்றி!
பொங்கிய கங்கைப் பொலிவே போற்றி!
எங்கும் தெரியும் இலிங்கமே போற்றி!
நம்பின வர்க்கருள் நம்பா போற்றி!
சம்போ செல்லத் தாங்குவாய் போற்றி!
மங்கலம் குமரர்க்கு வழங்கினாய் போற்றி!
கங்கைக் கரைமடம் கண்டனை போற்றி!
அட்சய வடமாய் அமைந்தாய் போற்றி!
பிச்சை ஏற்கும் பெருமான் போற்றி!
ஆதி லிங்கமாய் ஆனாய் போற்றி!
சோதி லிங்கமாம் சுடரே போற்றி!
பார்த்த னுக்கருள் பசுபதி போற்றி!
தீர்த்தச் செம்பில் திகழ்வாய் போற்றி!
தகரா காசத் தவமே போற்றி!

மகாம யான வாழ்வே போற்றி!
வீட்டில் திகழும் விளக்கே போற்றி!
காட்டில் ஆடும் கண்ணுதல் போற்றி!
மணமிலாப் பூவின் மணமே போற்றி!
தணல்எரி யேந்தும் தலைவா போற்றி!
பொன்னைக் காட்டிப் புரப்பாய் போற்றி!
தன்னைக் காட்டும் தத்துவ போற்றி!
மன்னுல கெல்லாம் வளைத்தாய் போற்றி!
அன்பர் பிடிக்குள் அடங்குவாய் போற்றி!
கட்டிப் பிடிக்கக் காட்டுவாய் போற்றி!
தொட்டுத் தழுவச் சுடர்பவ போற்றி!
காதில் மந்திரம் ஓதுவாய் போற்றி!
பாதாள ஈசனாய்ப் படர்ந்தாய் போற்றி!
அஞ்சு லிங்கமாய் ஆனாய் போற்றி!
மிஞ்சும் அமைதி விளக்கமே போற்றி!
மங்கல மீனாள் மணாள போற்றி!
தங்கவிசா லாட்சி தலைவா போற்றி!
நகரே சப்பெயர் நயந்தாய் போற்றி!
நகரத் தார் தவ நற்பயன் போற்றி!
ஆதி அனாதியும் ஆனாய் போற்றி!
ஓதும் மந்திரத் துட்பொருள் போற்றி!
அளக்க லாகா ஆற்றலே போற்றி!
விளக்கில் விளங்கும் விளக்கமே போற்றி!
பக்தர்க் கருளும் பரம்பர போற்றி!
முக்தி அளிக்கும் முதலே போற்றி!
ஞானியர் காணும் நல்லொளி போற்றி!
ஆனந்த வனத்தில் ஆடுவாய் போற்றி!
பூரண ஞானப் பொலிவே போற்றி!
காரணம் கடந்த கடவுள் போற்றி!
பதியில் சிறந்த பதியே போற்றி!
நதியில் சிறந்த நதியே போற்றி!
பயம் கெடுத் தாளும் பரனே போற்றி!
சுயம் பிர காசச் சோதி போற்றி!
அணைந்தவர்க் கின்பம் அளிப்பாய் போற்றி!
மணிகர் ணிகையில் வழங்குவாய் போற்றி!
தொடரும் பாசம் சுடுவாய் போற்றி!
அடைவோர் பிறவி அறுப்பாய் போற்றி!



வினையெல்லாம் மாற்றும் விஸ்வேச போற்றி!
மனையெல்லாம் சிவமாய் வந்தவ போற்றி!
தாயென மடியில் தாங்குவாய் போற்றி!
ஓய்வளித் தாளும் ஒருவனே போற்றி!
பாடும் பணிக்கே பணிப்பாய் போற்றி!
கோடி தீர்த்தம் கொண்டவ போற்றி!
மரண பயத்தை மாற்றுவாய் போற்றி!
திருவருள் புரியத் தேடுவாய் போற்றி!
எண்ணுவார் நெஞ்சில் இனிப்பாய் போற்றி!
எண்ணிய படியே வருவாய் போற்றி!
கரும வினைகள் களைவாய் போற்றி!
தரும வனத்தில் தங்குவாய் போற்றி!
ராக்கால பூசை நயந்தாய் போற்றி!
பூக்கோலம் காட்டிப் பொலிவிப்பாய் போற்றி!
கல்லா நெஞ்சில் நில்லாய் போற்றி!
எல்லாம் சிவமாய் இருந்தாய் போற்றி!
அயன்தலை மாலை அணிந்தாய் போற்றி!
பயன்தரும் ஆகமம் பயந்தாய் போற்றி!
மதியை வ ளர்க்கும் வள்ளால் போற்றி!
கதியென நின்ற கடவுள் போற்றி!
திரிவேணி சங்கமம் திகழ்வாய் போற்றி!
அருள்பொழி கயைப்பதி அமர்ந்தாய் போற்றி!
பருகா அமுதாம் பண்பே போற்றி!
கருவாய் உலகம் காப்பாய் போற்றி!
மூவர்க் கருளும் முதல்வா போற்றி!
தேவரும் காணாச் சிவமே போற்றி!
கண்டம் கறுத்த கனியே போற்றி!
துண்டி விநாயகர் துணையே போற்றி!
வந்த பிறப்பாம் வரவே போற்றி!
சிந்தும் இறப்பாம் செலவே போற்றி!
ஆல நீழல் அமர்ந்தாய் போற்றி!
காலனைக் காய்ந்த கண்அழல் போற்றி!
தேசு மிகுந்த திருவருள் போற்றி!
காசிவிஸ் வேசக் கடவுளே போற்றி!

காசியில் கருடனும் பல்லியும்

இலங்கையில் இராவணனைக் கொன்று மீண்ட இராமர், தம் பாவத்தைப் போக்கிக் கொள்ள விரும்பி, இராமேச்சுரத்தில் சிவலிங்கப் பிரதிட்டை செய்து வழிபடக் கருதினார். சிவலிங்கம் ஒன்றுகொண்டு வரும்படி அனுமாரைக் காசிக்கு அனுப்பினார்.

அனுமார் காசிக்குச் சென்றார். அங்கே கருடன் வட்டமிட்டுப் பறந்ததும், பல்லி திருவுளம் சொல்லியதுமான இடத்தில் உள்ள சுயம்பு லிங்கத்தை எடுத்துக்கொண்டு இராமேச்சுரம் திரும்பினார்.

காசியும் அதன் சுற்றுப்புறமும் வயிரவர் காவலுக்கு உரியவை. வயிரவர் இசைவு இன்றி இலிங்கத்தை எடுத்தபடியால் அனுமாருக்கும் வயிரவருக்கும் போர் மூண்டது.

அப்பொது அனுமார் கருடன் வட்டமிட்டதையும், பல்லி திருவுளம் சொல்லியதையும் கூறினார்.

அதுகேட்ட வயிரவர் அன்று முதல் கருடன் காசியில் பறக்கவும், பல்லி திருவுளம் சொல்லவும் கூடாது என்று சாபமிட்டார். இன்றும், காசியில் கருடன் பறப்பதில்லை; பல்லி திருவுளம் சொல்வதில்லை.

"கங்கா தேவி கயிலாயங் காட்டு வாள்போற் கடிதேகிப்
பொங்கார் வத்தோ டுத்தரத்திற் புகும்பொற் காசித் திருத்தலத்தே
யிங்கா ரடிய ரெவர்களையு மின்ப வாழ்வி லிருத்தவெனத்
தங்கா ருடையவிசுவேசன் தடங்கட பிராட்டியடி பணிவாம்"

- பாலகவி வயிநாகரம் இராமநாதன் செட்டியார்



உ

சிவமயம்

கண.மெ.நா.சொக்கலிங்கம் செட்டியார் - காளியம்மை ஆச்சி

நாட்டரசன்கோட்டை



சிவகங்கை மாவட்டம் நாட்டரசன்கோட்டையில் மாத்தூர்க்கோவில் மணலூர் பிரிவைச் சேர்ந்த கண.மெ.நா.சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் பல ஆண்டுகள் பர்மாவின் தலைநகராம் இரங்கூனில், அவர்கள் தந்தையார் தொடங்கிய கொடுக்கல்-வாங்கல் தொழிலில் ஈடுபட்டு வந்தார்கள். அப்போது பர்மா நகரத்தார்களின் கூட்டமைப்பில் முக்கிய பதவி ஏற்றும், நகரத்தாருக்குச் சொந்தமான தண்டாயுதபாணி கோவில் நிர்வாகக் குழுவில் முக்கிய பதவி ஏற்றும், இறைப்பணி, சமூகப்பணி ஆற்றி வந்தார்கள். பர்மா நகரத்தார்கள் காசிச் சத்திர நிர்வாகத்தையும், அதைச் சார்ந்த கிளைச் சத்திரங்களின் நிர்வாகத்தையும் 1925 லிருந்து மேற்பார்த்து வந்தனர். பர்மாவிலிருந்து நம்மவர்கள் பெரும் பகுதியினர் ஊர் வர நேர்ந்ததால் சொசைட்டியின் நிர்வாகத்தை இந்தியாவில் நம்மவர்களிடம் ஒப்புவிப்பதென் முடிவு செய்து 16 பேர் கொண்ட இடைக்கால கமிட்டி நிறுவப்பட்டது. இடைக்கால கமிட்டியின் காரியதரிசியாக 29-08-1964 ல் கண.மெ.நா.சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இவர்கள் காசிச் சத்திரத்தின் முதல் காரியதரிசி என்ற பெருமைக்கு உரியவர்கள். 1970 முதல் 1980 வரை காரியதரிசியாகப் பணியாற்றி விஸ்வநாதருக்குச் சேவை செய்துள்ளார்கள். பர்மா நகரத்தார்களின் விருப்பப்படி 31-03-1965ல் சொசைட்டியை இந்தியாவில் பதிவு செய்தும், 02-08-1967 ல் மதுரையில் கீழ மாரட் வீதியில் ஒரு வீடு வாங்கிப் புதுப்பித்தும், இந்தியாவில் 76 ஊர் நகரத்தார்கள் கூட்டத்தைக் கோவிலூரில் கூட்டி, அந்தக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட செயற்குழுவிடம் நிர்வாகத்தை 09-02-1970 ல் ஒப்புவித்தார்கள். சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் நிர்வாகத்தில் இருந்தபோது காசிச்சத்திரத்தின் வருமானம் குறைந்தாலும் விஸ்வேஸ்வரருக்கு நித்திய அபிஷேக கட்டளைகள் சம்போ செல்வது நிறுத்தப்படாமல் நடக்க வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருந்து செயலாற்றினார்கள்.

இவர்களுக்கு மூன்று மகன்கள், மூன்று மகள்கள் உள்ளனர். மூத்த மகன் கண்ணப்பன் அமெரிக்காவில் ஹூஸ்டன் மாநகரில் சமூகப்பணிகள் ஆற்றும், ஹூஸ்டன் மீனாட்சி அம்மன் கோவிலின் நிர்வாகிகளில் ஒருவருமாகிய புகழ்பெற்ற இந்திய அமெரிக்க பொறியாளர் ஆவார்கள். இளைய மகன் நாராயணனும் மனைவி மலர்விழி நாராயணனும் ஹூஸ்டன் மீனாட்சி அம்மன் கோவில் நிர்வாகத்தில் பங்கேற்று சிறந்த இறைப்பணி ஆற்றி வருகிறார்கள். மூன்று மகள்களும் இந்தியாவில் வசிக்கிறார்கள். நா.சொக்கலிங்கம் செட்டியார் அவர்களின் வாரிசுகள் அனைவரும் விஸ்வநாதர், விசாலாட்சியின் அருளை என்றும் பெற்று ஏற்றமுடன் வாழ வாழ்த்துவோம்.



காசியின் பெருமைகள்

சுவாமி விவேகானந்தர், தான் எழுதிய பல கடிதங்களில் காசியின் பெருமையைக் குறிப்பிடுகிறார். அவற்றுள் இருந்து சில செய்திகளைக் கீழ்க்கண்டவாறு தொகுக்கலாம்.

1. தெய்வீக நகரமாகிய காசிக்கு வருமாறு நீங்கள் எழுதிய கடிதம் வந்து சேர்ந்தது. இதை நான் விசுவநாதரின் அழைப்பாகவே ஏற்கிறேன். காசியையும் காசிநாதரையும் கண்டு உருகாத மனம் கல்லால் ஆனதுதான். (4-2-1889)

2. காசியில் சிறிதுகாலம் தங்கியிருக்க விரும்புகிறேன். துரதிஷ்டசாலியான என்னை, விசுவநாதரும் அன்னபூரணியும் எப்படி வழிநடத்தப் போகிறார்கள் என்பதைக் காண விரும்புகிறேன். "உடலை வீழ்த்துவேன் அல்லது லட்சியத்தை அடைவேன்" என்று நான் உறுதி செய்திருக்கிறேன். காசிநாதர் அருளட்டும். (26-12-1889)

3. அலகாபாத்தில் உள்ள வங்காளிகளில் சிலர் நல்ல தர்மசிந்தனையும், அன்பும் மிகுந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் என்னை நன்றாகக் கவனித்துக் கொள்கிறார்கள். நான் இங்கேயே மாசி மாதத்தில் தங்கிக் கல்பவாசம் செய்ய வேண்டும் என்பது அவர்களின் ஆசை. ஆனால் என் மனமோ, காசி காசி என்று அடித்துக் கொண்டிருக்கிறது. இரண்டு மூன்று நாட்களுக்குள் இவர்களின் பிடியிலிருந்து நழுவி வாராணாசிப் புனித நகரத்திற்கு வந்து சேர முயல்கிறேன். (31-12-1889)

4. விசுவநாதர் எப்போது எப்படி எனக்கு ஓய்வு தருவாரோ தெரியவில்லை. நீங்கள் விசுவநாதரிடம் எனக்கு வலிமையை அருளுமாறு பிரார்த்தனை செய்யுங்கள் (10-5-1980)

5. ஒரு சாதாரணமான காய்ச்சல் எப்போதும் என்னை விட்டு நீங்காமல் இருக்கிறது. மூச்சுத் திணறல் அப்படியே உள்ளது. இதன் பொருள் புரியவில்லை. ஒருவேளை நான் இறந்துபோக நேர்ந்தால் சிவபெருமானின் இந்தக் காசி நகரத்தில் உயிர் விடுவதை எவ்வளவோ விரும்புகிறேன்.

இந்தக் கடிதத்தைக் காசியில் இருந்தபொழுது 4-3-1902ல் எழுதினார். 4-7-1902ல் பேலூர் மடத்தில் மகாசமாதி அடைந்தார். விவேகானந்த தீபம் விசுவநாதர் ஒளியுடன் கலந்து விட்டது.

சுவாமி பிரம்மானந்தர்

பகவான் இராமகிருஷ்ணரின் சீடர்களில் ஒருவரான சுவாமி பிரம்மானந்தர், "காசியைப் பொறுத்தவரையில் அது இந்த உலகத்தைச் சேர்ந்ததல்ல. ஆன்மீகப் பெருவெள்ளம் இங்கே எப்போதும் பெருக்கெடுத்துப் பாய்கிறது. உறங்கிக் கொண்டிருக்கும் சிங்கத்தைப் போல அடங்கியிருக்கும் மந்திர சக்தியும் இங்கே விரைவில் விழித்தெழுகிறது" என்றும் "இந்தத் திருத்தலத்தை நினைத்ததும் மற்ற வேலைகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு - அங்கு நான் செல்ல விரும்புகிறேன். வேறு ஒன்றிலும் எனக்கு விருப்பம் இல்லை. என் வாழ்க்கையின் இறுதிக் காலத்தைக் காசியில் கழிக்க நான் விரும்புகிறனே. காசிக்குச் சென்றால் மட்டும் போதாது. அங்கே தனித்திருந்து, இறைவனின் பேரன்பில் மூழ்கி, தெய்வீகப் போதையில் ஆழ்ந்தால்தான் காசியில் வாழ்ந்ததன் சீரிய நோக்கம் நிறைவேறும்" என்றும் எழுதுகிறார்.

நிறைவுரை

மதுரை இராமகிருஷ்ண மடத்தின் தலைவராக இப்பொழுது பெரும் பணியாற்றும் சுவாமி கமலாத்மானந்த மகராஜ் அவர்கள் காசி விசுவநாதரைத் தன் வழிபடு தெய்வமாகக் கொண்டவர்கள். பலமுறை காசிக்குச் சென்றவர்கள்.



காசி விசுவநாதரைப் பல தடவை கனவில் காணும் பேறு பெற்றவர்கள். அவருடைய தாயார் உடல்நலமின்றி இருந்தபோது 2009ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அவர் தன் சகோதரரிடம், "அம்மாவின் ஆயுள் சிறிது காலத்துக்கு முன்பே முடிந்து விட்டது. அம்மாவை விரைவில் காசிக்கு அழைத்து முத்தி தர வேண்டும் என்று பகவான் இராமகிருஷ்ணர் நினைக்கிறார். இதற்காகவே அம்மாவின் ஆயுளை நீடிக்கச் செய்து இன்னும் உயிருடன் வைத்துள்ளார். நீ விரைவில் அம்மாவைக் காசிக்கு அழைத்துச் செல்" என்று கூறினார். அதன்படி 26-10-2009ல் அம்மா, காசிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். முழுவதும் விசுவநாதர் நினைவாகவே இருந்து இடைவிடாமல் நாமஜெபம் செய்து 10-2-2010 இரவு 11-30 மணிக்கு விசுவநாதர் திருவடிகளை அடைந்தார். இத்தகைய காசிப் பதியில் மிகப்பெரிய சத்திரம் கட்டி, விசுவநாதருக்கும் விசாலாட்சிக்கும், அன்னபூரணிக்கும் பணி செய்யும் பேறு, பரமஞானியாகிய பட்டினத்தார் பிறக்கும் பேறு பெற்ற நகரத்தார் மரபுக்குக் கிடைத்தது நம் தவப் பயனே ஆகும். காசிக் காற்று பட்டாலே ஞானம் கிடைக்கும் கங்கைத் தண்ணீர் பிறவிப் பிணி போக்கும்.

கங்கையும் காவிரியும்

வடக்கே கங்கையிலிருந்து தெற்கே காவிரி தாமிரபரணி வரை ஒரு பொதுவான போக்குவரத்து, மின்சார உற்பத்தித் திட்டத்தை அமைக்கும் வழியில் எல்லா நதிகளையும் இணைப்பது, பொருளாதார வகையில் இந்தியாவில் நிரந்தரமான ஒற்றுமை ஏற்படுத்தும் வழிகளில் ஒன்றாகும். இந்தியா முழுதும் சம்பந்தப்பட்ட ஏதாவது ஒரு திட்டத்தின் மூலந்தான் ஒற்றுமையை ஏற்படுத்த முடியும்.

ருஷ்யாவில் வால்கா கால்வாய் ருஷ்ய மக்களை இணைத்துக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலும் அந்த முறையைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

– டாக்டர் சர் சி.பி. இராமசாமி ஐயர்

நகரக் கோவில்களின் விவரம்

கோவிலின் பெயர்	இறைவன் பெயர்	இறைவி பெயர்
1. இளையாற்றக்குடி	கயிலாசநாதர்	நித்யகல்யாணி
2. மாற்றூர்	ஐநூற்றீசர்	பெரியநாயகி
3. வயிரவன் கோவில்	வளரொளிநாதர்	வடிவுடையம்மை
4. இரணிக் கோவில்	ஆட்கொண்டநாதர்	சிவபுரந்தேவி
5. பிள்ளையார்பட்டி	மருதீசர்	வாடாமலர் மங்கை
6. நேமம்	ஜெயங்கொண்ட சோழீசர்	சவுந்தர நாயகி
7. இலுப்பைக்குடி	தான்தோன்றியீசர்	சவுந்தர நாயகி
8. சூரைக்குடி	தேசிகநாதர்	ஆவுடை நாயகி
9. வேலங்குடி	கண்டீசுவரர்	காமாட்சியம்மை



சுதந்திரப் போரில் செட்டிநாட்டின் பங்கு, வரலாறு ஒரு காலக் கண்ணாடி

ஒரு நாட்டுக்கு வரலாறு என்பது கண்ணாடி போன்றதாகும். வரலாற்றுக் கண்ணாடி வழியாகவே நாம் சென்ற கால நிலை, நிகழ் கால நிலை ஆகியவற்றை ஒப்பீடு செய்து காண முடியும்.

விவேகானந்தர், வரலாறுகள் பற்றிக் குறிப்பிடுவது சிந்திக்கத் தக்கதாகும்.

"சென்ற கால வரலாறுகளே வருங்காலத்தை உருவாக்குகின்றன. எவ்வளவுக் கெவ்வளவு நாம் சென்ற காலத்தைப் பற்றி அறிகிறோமோ அந்த அளவுக்கு வருங்காலம் சிறப்புடையதாக விளங்கும். சென்ற கால நிகழ்ச்சிகளை நம் நாட்டின் ஒவ்வொரு வீட்டுக் கதவையும் தட்டி, யார் எடுத்து விளக்குகிறார்களோ, அவர்கள் இந்த நாட்டிற்குப் பெரும் நன்மை செய்தவர்களாவர்".

தூரிகை பிடித்த கைகள் துப்பாக்கி ஏந்தின

கப்பலேறிக் கடல் கடந்து கணக்கெழுதிக் காசு திரட்ட மலேசியா முதலிய நாடுகளுக்குச் சென்ற நமது பகுதியைச் சேர்ந்த நகரத்தார், நாட்டார், முதலான சமூக நண்பர்கள், தம் ஊரை விட்டு உறவினர்களை மறந்து, உயிரினும் இனிய சுதந்திரத்திற்காக வீரத் தலைவன் நேதாஜியின் தியாக அழைப்பை ஏற்று, அவரது ராணுவ அணியில் சேர்ந்து ஆற்றிய அருஞ்செயல்கள் கணக்கிடலங்கா.

மலேசியா, பர்மா, செய்கோன், ஜாவா, சுமத்ரா ஆகிய இடங்களில் நேதாஜியின் இந்திய சுதந்திர சங்கத்திலும், இந்திய தேசிய இராணுவத்திலும் நகரத்தார்கள் உள்ளிட்ட நமது சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த ஏராளமானோர் தீவிரமாகப் பங்கு கொண்டது மட்டுமின்றிக் கோடிக்கணக்கான நிதியினையும் வாரி வழங்கியிருக்கின்றனர்.

நேதாஜியால் நிறுவப்பட்ட இந்திய சுதந்திர சங்கத்திற்குக் கிழக்காசியாவைச் சேர்ந்த பெருவாரியான நகரங்களிலும் கிராமங்களிலும், நமது மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், தலைவர்களாகவும், செயலாளர்களாகவும் பொறுப்பேற்று உதவி புரிந்துள்ளனர். அவர்களில் சிலரது பெயர்கள் வருமாறு :

1. திரு. அபிஸீனியா பழ. நாச்சியப்பன், காரைக்குடி
2. திரு. பழனியப்பச் செட்டியார், ஆ. தெக்கூர்
3. திரு. முத்தையா செட்டியார் (செட்டிநாடு பாங்கு)
4. திரு. திருப்பதி செட்டியார் (செட்டிநாடு பாங்கு)
5. திரு. ரெங்கநாதன் செட்டியார், மதகுபட்டி
6. திரு. நாச்சியப்பச் செட்டியார், ஆ. தெக்கூர்
7. திரு. பழ. சொக்கலிங்கம் செட்டியார், மேலைச்சிவபுரி
8. திரு. வயி. சண்முகம் செட்டியார், ஜே.பி. நாச்சியாபுரம்
9. திரு. சிதம்பரம் செட்டியார், காரைக்குடி
10. திரு. சண்முகம் செட்டியார், விராமதி
11. திரு. அன்பு நடராஜன் செட்டியார்
12. திரு. அழகப்பச் செட்டியார், கண்டவராயன்பட்டி
13. திரு. நா. அருணாச்சலம் செட்டியார், கண்டவராயன்பட்டி
14. திரு. காந்தி அண்ணாமலை செட்டியார், பள்ளத்தூர்
15. திரு. அன்பு அண்ணாமலைச் செட்டியார்



16. திரு. நாகப்பச் செட்டியார், கண்டரமாணிக்கம்
17. திரு. சோமசுந்தரம் செட்டியார், கருங்குளம்

காரைக்குடியில் சிவா

தேச பக்தச் செந்தழல் சுப்பிரமணிய சிவா, காரைக்குடியில் நீண்ட காலம் தங்கியிருந்தார் என்பதையும், அவர் தங்கியிருந்த வீடு மேல ஊரணிக்குச் செல்லும் சந்தில் இருந்தது என்பதையும் பலர் அறியமாட்டார்கள். அந்த இல்லத்திற்கு அவர் இட்ட பெயர் "பாரத மாதா ஆசிரமம்" என்பதாகும்.

தமிழகத்து மூன்று சுப்பிரமணியர்களான சுப்பிரமணிய பாரதி, சுப்பிரமணிய சிவா, வ.வே. சுப்பிரமணிய அய்யர் ஆகிய மும்மணிகளில் இரு மணிகளும், வ.உ. சிதம்பரனாரும் காரைக்குடிப் பகுதிக்கு வருகை தந்து இம்மண்ணைத் தேசிய மணம் கமழச் செய்துள்ளனர் என்பது பெருமைக்குரிய நிகழ்ச்சியல்லவா?

செட்டிநாட்டின் சிறப்பியல்புகள்

தன வணிகர் எனவும், நாட்டுக்கோட்டை நகரத்தார் எனவும் வழங்கப் பெறும் செட்டியார் சமூகத்தினர், தமிழகத்தில் பெருமைக்குரிய கட்டுக்கோப்பான சமூகத்தினராக நெடுங்காலமாக மதிக்கப்பட்டு வருகின்றனர்.

தமிழகத்தில் மட்டுமல்லாமல், தொழில் தொடர்பாக அவர்கள் சென்ற பர்மா, மலேயா, இந்தோ சீனா முதலான நாடுகளிலும் மக்களாலும், அந்நாட்டு அரசினராலும் கௌரவிக்கப்பட்டவர்களாக வாழ்ந்திருக்கின்றனர்.

இவர்கள் பேச்சில் இனிய தமிழ் மணமும் சிந்தையில் ஆழமான இறையுணர்வும் நடை உடைகளில் நல்ல நாகரிகச் செறிவும் உடையவர்களாவர்.

செட்டிநாடும் - கல்விப் பணியும்

கல்வித் துறையின் வளர்ச்சிக்காக நகரத்தார் சமூகப் பெரியோர்கள் ஆற்றியுள்ள அருஞ்சாதனை வியப்பூட்டத்தக்கதாகும்.

ஆரம்பக் கல்விச்சாலை தொடங்கிப் பல்கலைக்கழகம் ஈறாக, எல்லாத் துறைகளுக்குமான கல்விச்சாலைகளை நிறுவியுள்ள சிறப்பினை நாடு நன்கு அறியும். அதிலும் தமது பகுதியில், தமது மக்களுக்காக என்ற குறுகிய நோக்கில்லாமல், தமிழகத்தின் பல பகுதியிலும் தாங்கள் தொழில் செய்கிற அயல் இடங்களிலும், உயர் கல்விக்கான கல்விச்சாலைகளை அமைத்திட்ட இச்சமூகச் சீமான்களின் உள்ளப்பாங்கு பெரிதும் போற்றுதற்குரியதாகும்.

"ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் கோடிப் புண்ணியம்" என மகாகவி பாரதி கூறிய கருத்தினை ஏற்றுக் கொண்டதுபோல, பல ஆண்டுகளுக்கு முன்பே சாதனை புரிந்த சிறப்பு மிக்க சமூகமாக நகரத்தார் சமூகம் விளங்கியிருக்கிறது.

செட்டிநாட்டில் தேசியம்

கொடைநலமும் இறை உணர்வும் ஆழ்ந்த தமிழ்ப்பற்றும் மிக்க செட்டிநாட்டு மக்கள், நாட்டுப் பற்றும் நிறைந்தவர்களாகவே இருந்திருக்கின்றார்கள். இருக்கிறார்கள்.

சென்ற அரை நூற்றாண்டுக்கு முன்னரே தேசிய நோக்குடைய பல நிறுவனங்கள் இப்பகுதியில் தோன்றி, தேசியத்தை, நாட்டுப்பற்றை, மொழிப்பற்றை வளர்க்கும் தொண்டுகளில் ஆர்வத்துடன் பங்கு கொண்டிருக்கின்றன.



அத்தகைய சங்கங்களில் ஒன்று தான் 1917 ஆம் ஆண்டு செப்டம்பர் 10 ஆம் நாள் தோன்றிய இந்து மதாபிமான சங்கமாகும். இச்சங்கத்திற்கு வருகை தந்த மகாகவி பாரதியார் இச்சங்க நிர்வாகிகளான நகரத்தார் சமூக இளைஞர்களின் அன்புப் பிடியிலும் அரிய உபசரிப்பிலும் சிக்கி, செட்டிநாட்டிற்கே உரிய அன்பான விருந்தோம்பலில் சில நாட்கள் காரைக்குடியிலேயே தங்கியிருந்தார்.

மகாகவி பாரதியால் புகழ்ந்து பாடப்பெற்ற ஒரே சங்கம் இந்து மதாபிமான சங்கம்தான் என்று பூரிப்புடன் கூறலாம். இச்சங்கத்தின் துவக்கத்திற்குக் காரணர்களாக இருந்த பலரில் தமிழ்க்கடல் ராய.சொ.சொ. முருகப்பர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். காரைக்குடியில் மற்றும் தேசிய வாலிபர் சங்கம், இராமகிருஷ்ணர் சங்கம், விவேகானந்தர் சங்கம், தாகூர் வாசக சாலை போன்ற பல சங்கங்கள் தேசபக்த உணர்வுள்ள இளைஞர்களால் சிறப்பாக நடத்தப்பெற்றன. தமிழகத்தில் பேச்சாற்றலும் தேசபக்த உணர்வுமிக்க அறிஞர்கள் பலரை மேற்கண்ட சங்கங்கள் அழைத்து ஏராளமான விழாக்கள் நடத்தி நாட்டுணர்வு வளர உதவியாக இருந்தன.

நாட்டுப்பற்றோடு தமிழ்மொழி வளர்ச்சிக்கும் மேற்கண்ட அமைப்புக்கள் ஆதரவாக இருந்திருக்கின்றன.

செட்டிநாட்டுக் கல்விக் கழகம்

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அதிகாரிகளின் ஆணைகளை நிறைவேற்றும் மெக்காலேயின் உயிரற்ற கல்வியும் அடிமைத்தனத்தின் அடையாளமாக 'மன்னர் வாழ்த்து'ப் பாடும் பள்ளிக்கூடங்களும், தேசத் தலைவர்களின் உள்ளத்தை மிகுதியும் உறுத்தின.

வடநாட்டைப் பின்பற்றியே செட்டிநாட்டின் தேசிய அன்பர்களான பிச்சப்பா சுப்பிரமணியம் செட்டியார், ஆ. சொக்கலிங்கம் செட்டியார், செக்காலை காந்தி மெய்யப்ப செட்டியார் ஆகியோரால் செட்டிநாட்டுக் கல்விக் கழகம் என்ற அமைப்பின் ஆதரவில் பல பள்ளிக்கூடங்கள் துவங்கப் பெற்றன.

அமராவதிபுதூர்

திரு. பிச்சப்பா சுப்பிரமணியன் செட்டியார் அவர்களின் ஆதரவில், காந்தி பெண் பாடசாலை, சென்ற அக்ஷய ஆண்டு புரட்டாசி மாதத்தில் துவங்கப் பெற்றது. இதனைத் துவக்கிவைத்த பெரியார் தமிழ்த்தென்றல் திரு. வி. கல்யாணசுந்தரனார் என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகிறேன்.

காந்தியடிகள் வருகை

முதன் முதலில் காந்தியடிகள் காரைக்குடி நகருக்கு வந்த ஆண்டு 1921 ஆகும். அவ்வாண்டு செப்டம்பர் 22 ஆம் நாளன்று காரைக்குடி இந்து மாதபிமான சங்கத்தார் தமிழிலேயே ஓர் வரவேற்புரை தயாரித்து, அதனைக் கதர்த்துணியில் அச்சிட்டு வழங்கியது நினைவில் இருக்க வேண்டிய செய்தியாகும்.

கதர்த்துணியில் அச்சிடப்பட்ட இவ்வரவேற்பு மடல், டெல்லியில் காந்தியடிகளின் நினைவாக அமைக்கப்பட்டிருக்கும் பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருக்கிறது.

கதர் இயக்கத்தை வலுப்பெறச் செய்தலின் வழியாக ஏழைகளின் வேலை வாய்ப்பை மேம்படச் செய்யும் நோக்கோடு காந்தியடிகள் காரைக்குடிப் பகுதிக்கு வருகை தந்தது, இப்பகுதியில் கதர் அணிவோரின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியது.

இராட்டினப் புலவர்

காந்தியடிகள் மீண்டும் 1927 ஆம் ஆண்டு காரைக்குடிக்கு வருகை தந்தார். காரைக்குடியைச்



சுற்றியுள்ள பல ஊர்களுக்கு விருப்பத்துடனும் உற்சாகத்துடனும் பயணம் மேற்கொண்டார். அக்காலத்தில் காரைக்குடியில் பொதுக்கூட்டங்கள் மகர் நோன்புப் பொட்டலில்தான் நடத்தப் பெற்றன. காந்தியடிகளின் பொதுக் கூட்டமும் அந்த ஆண்டு (1927) அங்குதான் நடைபெற்றது. அவரது வருகையின் நினைவாக மகர் நோன்புப் பொட்டல், காந்தி திடலாகப் பெயர் பெற்று விளங்குகிறது.

செக்கிழுத்த செம்மல்

அமராவதி புதூரை ஒரு தேசியப் பாசறை என்றே கூறலாம். தேசபக்தர் இராய. சொக்கலிங்கனார், திரு. பிச்சப்பா சுப்பிரமணியம், சீர்திருத்தச் செம்மலும் காந்திய பக்தருமான திரு. சொ. முருகப்பா, ஆத்தங்குடியிலிருந்து அமராவதிபுதூருக்கு வந்து பெரிய செங்கல் தொழிற்சாலை துவங்கி கிராம மக்களுக்குப் பேருதவி புரிந்த தேசபக்தர் மு.அ. அண்ணாமலை செட்டியார் ஆகியோர் அமராவதிபுதூரில் தேசிய மணம் கமழக் காரணமாயிருந்தனர்.

அன்னிய அரசின் விருதுகள்

ராவ் சாகிப், ராவ் பகதூர், திவான் பகதூர், ஸர், ராஜா போன்ற விருதுகளை பிரிட்டிஷ் அரசு வழங்கி வந்ததை அனைவரும் அறிவர். இவ்விருது பெறுவது பெரும் பேறாகவும், மரியாதைக்குரியதாகவும் கருதப்பட்ட ஐம்பது ஆண்டுகட்கு முன்பு, தமிழகத்திலேயே மேற்கண்ட விருதுகளை அதிகமாகப் பெற்ற பகுதி நம் பகுதியாகும்.

1930 ம் ஆண்டு தொடங்கிய சத்தியாக்கிரக இயக்கம் காரணமாக, காங்கிரஸ் சட்டவிரோதமானது என அரசு அறிவித்திருந்ததனால் போராட்டங்களை நடத்த ஒவ்வொரு பகுதிக்கும் 'சர்வாதிகாரி' என்ற பெயருடன் பலர் நியமிக்கப்பட்டார்கள்.

காரைக்குடி பகுதிக்கு 'உலகம் சுற்றிய தமிழன்' திரு. ஏ.கே. செட்டியார், சர்வாதிகாரியாக நியமிக்கப்பட்டார்.


தமிழ்க்கடல் இராய.சொ.வுக்கு 'சி' வகுப்பு :

திரு. இராய.சொ. அவர்களைக் காரைக்குடி காவல் அதிகாரிகள் கைது செய்ய முன்வரவில்லை. அதனால் அவர் சிவகங்கை சென்று சட்டத்தை மீறிக் கைதானார். அவருக்கு அந்த நீதிபதி 'சி' வகுப்பை வழங்கியதைக் கண்டு அனைவரும் வியந்தனர். அரசியல் கைதிகளுக்கிடையே ஏ.பி.சி. என்ற மூன்று பிரிவுகளில் ஏற்படுத்தியதின் உள்நோக்கம் வெளிப்படையானதே. பிரித்து ஆளுவதுதானே பிரிட்டீசாரின் ஆட்சி முறை? ஓராண்டு தண்டனை பெற்றுச் சிறை சென்ற இராய. சொ. அவர்களுக்கு ஒரு சில மாதங்களுக்குப் பிறகு 'பி' வகுப்பு கொடுக்க அரசு ஆணையிட்டதை அவர் ஏற்க மறுத்துவிட்டார்.

பகைநாட்டுச் செய்தி கேட்கத் தடை :

தேசியத்திலும் காந்தியடிகளிடமும் முழு ஈடுபாடு உடைய திரு. ஆறு.ஆ.ராம. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் 1942 இயக்கத்தில் பாதுகாப்புக் கைதியாக அமராவதி சிறைச் சாலையில் இரண்டு ஆண்டுகள் வாழ்ந்தார். அவர் கைது செய்யப்பட்டதற்குக் காரணம், பிரிட்டிஷாருக்கு பகை நாடான ஜப்பான் நாட்டுச் செய்திகளை வானொலி மூலம் கேட்டறிந்தார் என்பதாகும்.

காங்கிரஸ் வளர்ச்சிக்கு பேருதவியாக இருந்த சொக்கலிங்கனார் அவர்கள் நகர்மன்றத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் அறநிலையத் துறையின் 'ஏரியாக் கமிட்டி' உறுப்பினராகவும் தொண்டு செய்துள்ளார். தலைவர் காமராஜ், மூதறிஞர் ராஜாஜி ஆகியோரின் நன்மதிப்பிற்குரியவராக இருந்தார். செக்காலையில் சுகாதார நிலையம், நகர்மன்றத்திற்கு இவரால் உரிமையாக்கப்பட்டதாகும்.



தமிழ்க்கடல் இராய.சொ.

சிவமணி என்றும், தமிழ்க்கடல் எனவும் புகழ்ப்பெற்று பத்திரிகை ஆசிரியராய், நாவன்மை மிக்கவராய், சுதந்திரப் போராட்ட வீரராய் புகழுடன் வாழ்ந்தவர் திரு. இராய. சொக்கலிங்கன் அவர்கள்.

காந்தியடிகளையும், கடவுளையும் தவிர்த்து, வேறு யாரையும் தம் கவிதை வாழ்த்தாது என்பார் சொக்கலிங்கனார்.

பண்டிகை அசலாம்பிகை அம்மையார் 'காந்தி புராணம்' பாடினார். இராய.சொ. காந்தியடிகள் மீது பிள்ளைத்தமிழ் பாடி மகிழ்ந்தார்.

பட்டி மண்டபம் வளர்த்த கம்பன் அடிப்பொடி

தேசியத்தின் மூலம் நாட்டுக்கும், கம்பனிடம் கொண்ட அளவற்ற பற்றின் மூலம் தமிழுக்கும் ஈடு இணையற்ற தொண்டு செய்த கம்பன் அடிப்பொடி என வழங்கப்பெற்ற சா. கணேசனார் பற்றிப் புதிதாக அறிமுகம் அவசியமில்லை.

இப்பகுதியில் "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தில் ஊக்க சக்தியாக இருந்தவர்.

அநீதியெனத் தோன்றியதை எதிர்க்கும் பணியில் முதல் மனிதராக கச்சை கட்டிக்கொண்டு நிற்பார். 'ஷோ' கொட்டகை எனப்படும் சூதாட்டச் சுரண்டலை எதிர்ப்பதானாலும், கடும் போட்டியுள்ள பெரும் தேர்தலானாலும், நுட்பமாகத் திட்டமிட்டுத் திறமையாக வழி நடத்தி அதில் வெற்றி முத்திரை பதியுமாறு செய்யும் சாதுர்யம் கணேசருக்கு, பிறவியில் அமைந்த சிறப்பியல்பாகும்.

1941ல் தனி நபர் சத்தியாக்கிரகியாக, சென்னை வரை நடந்து சென்று யுத்த எதிர்ப்புப் பிரச்சாரம் செய்து சிறைப்பட்டார்.

1942ல் புரட்சியைத் தீவிரப்படுத்தும் நோக்கத்துடன் தலைமறைவாகித் தமிழகம் எங்கும் சுற்றினார். தலை மறைவாகிவிட்ட திரு. கணேசன் இருக்குமிடத்தைக் கூறுமாறு போலீஸார், உற்றார் உறவினர்களைத் தொல்லைப்படுத்தினர். அவரது வீட்டில் புகுந்து விலையுயர்ந்த சொத்துக்களைச் சூறையாடினார்.

இறுதியில் மூதறிஞர் ராஜாஜி அவர்களின் அறிவுரைக்கிணங்க, சென்னையில் அதிகாரிகள் முன் ஆஜரானார். நீதிமன்றம் இரண்டாண்டுகள் சிறைத் தண்டனை அளித்து அலிப்புரம் சிறைக்கு அனுப்பியது.

சிறந்த நிர்வாகியான திரு. கணேசன் 1936ம் ஆண்டு தமிழ்நாடு காங்கிரஸ் மாநாட்டைத் தமிழகமே புகழுமாறு சிறப்பாக நடத்தினார்கள்.

1947ல் பாரதம் விடுதலை பெற்ற தினத்தை காரைக்குடியில் ஆகஸ்ட் பதினைந்தில் கோலாகலமாகக் கொண்டாட, திரு. மெ.செ.மெ. மெய்யப்பச் செட்டியார் தலைமையில் மிகப் பெரும் கமிட்டி அமைக்கப்பட்டு விழா சிறப்பாக நடந்தது.

1966ல் மலேசியாவில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிற்குத் தமிழக அரசுப் பிரதிநிதியாகச் சென்றார். 1982-ல் மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் சிறந்த தமிழ் அறிஞர்களில் ஒருவராகப் பாராட்டப் பெற்று பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தியால் பொன்னாடை போர்த்தப் பெற்றார்.

ஆழமான தேசிய உணர்வு :

பாரதத்தை அதன் விடுதலையை நோக்கியும், நாட்டின் கட்டுக்கோப்பையும், ஒற்றுமையையும் காத்து முழு முன்னேற்ற லட்சியத்தை எட்டச் செய்யவும், காங்கிரஸ் பெரு மன்றத்தாலும், அதனை இயக்குகின்ற



ஒப்பற்ற தலைவர்களாலும்தான் சாத்தியமென்பதை முழுமையாக நம்பிய செட்டிநாட்டுப் பெருமக்கள் அதன் கட்டளைகளை முழு மனதோடு ஏற்றுக் கொண்டு நிறைவேற்றியிருக்கிறார்கள்.

விடுதலைக்கு முந்திய காலத்தில் நடந்த நகர் மன்றம், ஜில்லா போர்டு, மாநில சட்டமன்றம், மத்திய சட்டமன்றம் ஆகியவற்றுக்கான தேர்தல்களில் முழு மூச்சாகக் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து பெற்றி பெறச் செய்துள்ளார்கள். தேர்தல் வெற்றிகள் திகைப்பூட்டுவனவாக இருந்திருக்கின்றன.

தமிழ்ப் பேரறிஞர்கள் வருகை

செட்டிநாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைந்திருந்த சங்கங்கள், ஆர்வத்தோடு நடத்திய விழாக்களில், தமிழகத்தின் தலையாய அறிஞர், தமிழ் மேதைகள் பங்கு கொண்டு, அறிவூட்டும் அரிய சொற்பொழிவுகளாற்றி மக்களை மகிழ்வித்த நிகழ்ச்சிகள் ஏராளம். அவ்வாறு இப்பகுதிக்குப் போந்த மூதறிஞர்கள்.

மகாகவி சுப்பிரமணிய பாரதி, வடமொழி - தமிழ்மொழி இரண்டிலும் பெரும் புலமை பெற்ற இரு மொழிப் புலவரான பண்டிதமணி மு. கதிரேசனார், மும்மொழிப் புலவரான மறைமலை அடிகள், மு. இராகவய்யங்கார், ரா.பி. சேதுப்பிள்ளை, வ.உ. சிதம்பரனார், விருதை சிவஞான யோகிகள், தமிழ்த்தென்றல், கலியாணசுந்தரனார், வேங்கடசாமி நாட்டார், நாவலர் சோமசுந்தர பாரதியார், ரா. இராகவய்யங்கார், சுவாமி விபுலானந்தர், மறைந்து கிடந்த சங்கத் தமிழ் இலக்கிய மணிகளை வெளிக்கொணர்ந்து ஒளியூட்டி தமிழ்த்தாய்க்கு அணிவித்த தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்கள் முதலியோராவர்.

காரைக்குடிப் பகுதிக்கு வந்த தேசத் தலைவர்கள்

மகாத்மா காந்தியடிகள்	- மூன்று முறை
பண்டித ஜவர்கலால் நேரு	- இருமுறை
பாபு ராஜேந்திர பிரசாத்	
சர்தார் வல்லபாய் படேல்	- மணிபென் படேல்
ஆசார்ய கிருபளானி	
யூ.என். தேபர்	
ஜெயப்பிரகாஷ் நாராயணன்	
அச்சுத பட்டவர்த்தன்	
டாக்டர் இராதாகிருஷ்ணன்	
ஜனாதிபதி ஜாகிர் உசேன்	
ஜே.ஸி. குமரப்பா	
டாக்டர் பட்டாபி சீதா ராமய்யா	
அஜித் பிரசாத் ஜெயின்	- மத்திய அமைச்சர்
ரபி அகமத் கித்வாய்	- மத்திய அமைச்சர்
டாக்டர் உமாயூன் கபீர்	- மத்திய அமைச்சர்

தேர்களில் கொடி

1930-ஆம் ஆண்டில் மதுரை மீனாட்சி அம்மன் கோயில் கோபுரத்தில் மூவண்ணக் கொடியை மதுரைத் தேசீயத் தொண்டர்கள் கட்டிப் பரபரப்பை உண்டாக்கியதைத் தொடர்ந்து தேர்கள், கோபுரங்கள் ஆகியவற்றில் துணிவுடன் ஏறிக் கொடிகளைக் கட்டிப் பறக்க விடுவது பரவலாகப் பிரபலமடைந்தது. அரியக்குடிப் பெரிய தேரிலும், காரைக்குடி கொப்புடையம்மன் கோவில் தேரிலும், கொடிகள் கட்டப்பட்ட நிகழ்ச்சி மிகவும் பழமையானது.



நேருஜியின் வருகை

1936-ல் காங்கிரஸ் மாமன்றத்தின் பெருந்தலைவராக இருந்தபோது நேருஜி காரைக்குடி வருகை தந்தார். காந்தி சதுக்கத்தில் மாபெரும் கூட்டம் நடந்தது. திரு. சத்தியமூர்த்தி உடன் வந்திருந்தார்.

காரைக்குடி நகர் மன்றத் தலைவர்களாயிருந்த நகரத்தார்கள்

திரு. மெ.செ.மெ.மெ. மெய்யப்ப செட்டியார்
திரு. இராய. சொக்கலிங்கனார்
திரு. சி.முரு. நாராயணன் செட்டியார்
திரு. ஆரு.ஆ.ராம. சொக்கலிங்கம் செட்டியார்
திரு. அரு. அருணாசலம் செட்டியார்
திரு. ஆத.மெ. மெய்யப்ப செட்டியார்
திரு. சித. சிதம்பரம்
திருமதி. உண்ணாமலை சிதம்பரம்

நாடாளுமன்ற உறுப்பினர்கள்

திரு. வெ.வீர.நா.அரு. நாகப்ப செட்டியார்
திரு. அருணாசலம் செட்டியார் - தேவகோட்டை
திரு. ஆர். இராமநாதன் செட்டியார்
திரு. ப. சிதம்பரம்

சட்டமன்ற உறுப்பினர்கள்

திரு. வ.சொ.ராம. வள்ளியப்ப செட்டியார்
திரு. முத்து.கரு.அரு.கரு. அருணாசலம் செட்டியார்
திரு. ஆறு.ஆ.ராம. சொக்கலிங்கம் செட்டியார்
திரு. ராஜா சர் மு.அ. முத்தையா செட்டியார்
திரு. S. மெய்யப்ப செட்டியார்
திரு. சித. சிதம்பரம்
திரு. இராம. நாராயணன்
திரு. S. ரகுபதி
திரு. சொக்கநாதபுரம் சி. சேதுராமன்
திரு. பழ. கருப்பையா

"சுதந்திரப் போரில் செட்டிநாட்டின் பங்கு" என்ற நூலிலிருந்து தொகுத்தளித்தவர்:
முத்து. பழநியப்பன், செயலாளர், காசிச் சத்திர 200வது ஆண்டுவிழாக் குழு மற்றும்
செயலாளர் (பொ) ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் மேலாண்மைக் கழகம்

நன்றி : நூலாசிரியர், திரு. V. பரமசிவம் அவர்களுக்கும் பதிப்பாசிரியர் திரு. அய்க்கண் அவர்களுக்கும்



காசி கண்டம்

சொ.சொ.மீ. சுந்தரம்

மதுரையை ஆண்ட பாண்டிய மரபில் வந்த பிற்கால மன்னர் வரதுங்கராம பாண்டியர். இவர் தம்பி அதிவீரராம பாண்டியர். இவர்கள் திருநெல்வேலியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவர்கள். பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த இவர்கள் இருவரும் பெரும் புலமை பெற்றவர்கள். வரதுங்கராம பாண்டியர் பிரமோத்தர காண்டம் என்ற அரிய நூலை இயற்றியவர். இவர் தம்பி அதிவீரராம பாண்டியர். இவர் சொன்னபடி கூர்ம புராணம், காசி கண்டம் முதலிய நூல்களை இயற்றியவர். நைடதம் புலவர்க்கு ஔடதம் என்று போற்றப்படும் நைடத நூலை இயற்றியவரும் இவரே ஆவார். (இவர் 1552 முதல் 1564 முடிய அரசாண்டவர் என்பர்.)

காசி கண்டம்

பலராலும் காசிக் காண்டம் என்று குறிக்கப்படும் இந்த நூலுக்கு ஆசிரியர் வைத்த பெயர் காசி கண்டம் என்பது. காசித் தலத்தின் பெருமையை இந்நூல் பலவாறு பாடுகிறது. அதிவீரராம பாண்டியரின் முன்னோராகிய பராக்கிரம பாண்டியன் தென்காசியில் கற் கோயில் கட்டினான். இவர் வடகாசிக்கு இந்தச் சொற்கோயிலைக் கட்டினார். கந்த புராணத்தில் சங்கர சங்கிதையில் உள்ள பனிரெண்டு கண்டங்களுள் ஒன்றான காசி கண்டம் அதிவீர ராம பாண்டியரால் மொழிபெயர்க்கப் பெற்றது. இந்நூல் பூர்வம். உத்தரம் எனும் இரண்டு பிரிவுகளையும் நூறு அத்தியாயங்களையும் உடையது. இந்நூலை ஓலைச் சுவடியிலிருந்து காகிதப் பிரதி செய்தவர் திருவாவடுதுறை ஆதீனம் நமச்சிவாய தேசிகர் அவர்கள். இப்பணி 1859 ல் நடந்தது. இந்நூல் 1865ல் அச்சேறிற்று. மீண்டும் 1953 ல் திருவாவடுதுறை ஆதீனம் இருபத்தோராவது குருமகா சன்னிதானம் அவர்களால் ஆதீனப் பதிப்பாக வெளியிடப் பெற்றது.

காசிவாசம் எல்லாப் பாவங்களையும் நாசம் செய்து விடும் என்றும் காசியில் இருப்பவனுக்கு ஆத்ம ஞானம் கிட்டும் என்றும் காசியை அடைந்து அதனால் ஏற்படும் பிரகாசத்தின் மலர்ச்சிக்கு முன்பு மற்ற எல்லாப் பிரகாசங்களும் மின்மினிப் பூச்சியின் பிரகாசம் போல் ஆகிவிடும் என்றும் காசி கண்டம் கூறுகிறது. ஒருவன் வாரணாசியை விட்டு வேறு எங்காவது சென்றால் அது கிடைத்தற்கரிய அபூர்வ நிதியைத் தள்ளிவிட்டுப் பிச்சை எடுப்பது போன்றது. கையில் கிடைத்த ரத்தினத்தை விட்டு விட்டுக் கண்ணாடிச் சில்லை எடுத்துக்கொள்ளலாமா? உலகத்தில் பிள்ளைகள், நண்பர்கள், உறவினர், வீடு, வாசல் எல்லாம் ஒவ்வொரு ஜன்மத்திலும் கிடைக்கும். ஆனால் காசிவாசம் எப்போதும் கிடைக்காது என்று காசி கண்டம் குறிப்பிடுகிறது. சிறந்த இலக்கியமும் புராணமுமான இந்நூல் 2526 விருத்தங்களைக் கொண்டது. இந்நூலில் காசியைப் பற்றிக் கூறப்படும் சில செய்திகளைத் தெரிந்து கொள்வோம்.

காசி - பெயர்க் காரணம்

எது சுயமாகப் பிரகாசிக்கிறதோ அது காசி என்பது "காச்யதே பிரகாசதே இதி காசி" என்ற வடமொழித் தொடரின் மூலம் தெரிகிறது. இச்செய்தியைத்

தேசொடும் பொலிந்து முத்தித் திருமகள் உறைதல் தன்னால்

காசி என்று உரைப்பர்.

என்று காசி கண்டம் கூறுகிறது.

பாவம் தீர்க்கும் வரணை, அசி ஆறுகள்

வரணையாறு. அசியாறு எனும் இரண்டு ஆறுகள் கங்கையில் கலக்கின்றன. இவற்றுக்கு இடைப்பட்ட பகுதி வாரணாசி எனப்பட்டது. இப்பொழுது இப்பெயர் வாரணாசி என்றும் வாரணவாசி என்றும் வழக்கில்



மாறிவிட்டது. வரணையும் அசியும் தம்மை நெருங்கியவர்களின் பாவங்களைத் தீர்க்கின்றன என்று காசி கண்டம் குறிப்பிடுகிறது. "சார்ந்தவர் பாவம் நீங்கத் தகைதலால் வரணை என்றும் ஆர்ந்தநீர் படிந்தோர் பாவம் அறுத்தலால் அசியே என்றும்" இந்த ஆறுகள் அழைக்கப் பெற்றன என்கிறார் அதிவீரராம பாண்டியர்.

மூர்த்தி, தலம், தீர்த்தம்

கண்ணுதற் கடவுளான விசுவேசர், காசி, கங்கை இம்மூன்றும் ஒருசேரச் சிறந்து விளங்குகின்றன என்பதை

இலவுசுடர் விசுவநாதற்கு இணையாம் கடவுள் இலிங்கமும், நீர்
சுலவுமணி கர்ணிகைக்கு இணையாம் துகள்தீர் தெய்வ தீர்த்தமும், வான்
கலவ மஞ்ஞை நடம் பயிலும் காசிக் கிணையாம் நன்னகரும்
உலகம் ஒரு மூன்றிலும் இலை ஈது உண்மை உண்மை உண்மையால்

என்று சத்தியம் செய்வது போலக் காசி கண்டம் குறிப்பிடுகிறது.

தொட்டாலே பிறவி தீரும்

காசியில் வாழ்பவர்களைக் கைகளால் தொட்டாலே போதும் கடும் பிறவிப் பிணி தீரும் என்பதைக் காசி கண்டம்,

பாடகத் தொடர்ச்சிப் பழவினை சிமிழ்ப்பப்
பற்றற எறிந்து வீடளிக்கும்
சேடமை காசி உறையுநர் மேனி
தீண்டினும் பவக் கடல் அழுந்தார்


என்று கூறுகிறது.

எது கால்? எது காது?

காசிக்குச் செல்லும் காலே காலாகும். காசியைப் பேற்றும் நாவே நாவாகும். காசியின் கதை கேட்கும் காதுகளே காதுகளாகும். காசியைக் கண்ட கண்களே கண்களாகும் என்று காசி கண்டம் குறிப்பிடுகிறது.

காசியைக் குறித்துச் செல்லும்
கால்களே கால்கள் ஆகும்
காசியை வழுத்தும் நாவே
நாவெனக் கழற லாமால்
காசியின் கதைகள் கேட்கும்
செவிகளே செவிகள் ஆகும்
காசியை இனிது காணும்
கண்களே கண்களா மால்.

என்று எளிமையாகக் காசியின் புகழ் பேசுகிறது காசி கண்டம். காசியில் இறந்து போகிறவர் எவராக இருந்தாலும் - அவர் பிராமணராயினும் சரி, வேசியாயினும் சரி - பரமசிவமாக ஆகிறார்கள் என்றும் காசியில் இறக்கும் சமயத்தில் ஒருவனுக்குச் சிவதரிசனம் கிடைக்கிறது என்றும் பகவான் இராமகிருஷ்ணர் (1883ஆம் ஆண்டில்) எழுதியிருக்கிறார். இதுவே காசி கண்டத்தின் சுருக்கமாகும்.



வீரேஸ்வர் சிவன்

காசியில் மணிகர்ணிகா மயானத்திற்கு அருகில் கங்கைக்கரையில் சிந்தியா காட் என்ற படித்துறை உள்ளது. அங்கே படிகளில் ஏறி மேலே சென்றால் வீரேஸ்வர் சிவன் கோயிலை அடையலாம்.

இந்த வீரேஸ்வரரை வேண்டி விவேகானந்தரின் அன்னை புவனேஸ்வரி வழிபட்டதால்தான், அவர் பிறந்தார். காசி கண்டத்தில் இவர் புகழ் பேசப்படுகிறது. இவர் சந்நிதியில் ஒருமுறை இறைவன் திருநாமத்தைக் கூறினால் மற்ற இடங்களில் ஒரு கோடி முறை கூறியதற்குச் சமம் என்கிறது காசி கண்டம். (காண்டம் என்பது நூலின் பெரும் பகுதி. கண்டம் என்பது சிறு துண்டு)

காசி கண்டம் பாடக் காரணம்

தென்காசிப் பகுதியில் அரசாட்சி செய்த பாண்டியர் மரபில் வரகுணராம பாண்டியன், வரதுங்கராம பாண்டியன், அதிவீரராம பாண்டியன் என்ற மூவரும் புராணங்களைத் தமிழில் பாடியவர்கள். இலிங்க புராணம், வாயு சங்கிதை, அம்பிகை மாலை மூன்றும் வரகுணராம பாண்டியன் இயற்றியவை. பிரமோத்தர காண்டம் திருக்கருவை அந்தாதிகள் மூன்று, கொக்கோகம் ஆகிய மூன்றும் இயற்றியவர் வரதுங்கராம பாண்டியர். நைடதம், வெற்றி வேற்கை கூர்ம புராணம், காசி கண்டம் என்ற நான்கையும் இயற்றியவர் அதிவீரராம பாண்டியர்.

நளன் வரலாற்றை நைடதம் என்ற நூலாக எழுதினார் அதிவீரராம பாண்டியர். இதைப் படித்த அவர் சகோதரர் வரதுங்கராம பாண்டியர் "ஆண்டவன் புகழைப் பாடாமல் நம் போன்ற அரசன் புகழைப் பாடுவதா என்று சினந்தார். இந்தக் கோபம் ஒரு பாடலாக வெளிப்பட்டது.

சங்கக் குழையனைத் தென்கரு வாபுரித் தாணுவை, வார்
கங்கைச் சடையனைப் பாடல்செய் யாத கவிப்புலவீர்!
அங்கச் சுமைகொண்டு எழுநான்கு கோடி அருநரகப்
பங்கத்தில் வீழவன் நோ பொன்றுவார்தமைப் பாடுவதே

என்று பாடினார். இதனால் தம்மை இகழ்ந்ததாக எண்ணிய அதிவீரராம பாண்டியர், சகோதரரோடு போர் செய்யத் துணிந்தார். அப்போது வரதுங்கராமர்

செஞ்சுடரோன் மைந்தனையும், தென்னிலங்கை வேந்தனையும்,
பஞ்சவரில் பார்த்தனையும், பாராதே - மிஞ்சும்
விரதம் தனைக்கொண்டு மெய்யன்பு பூண்ட
பரதனையும் ராமனையும் பார்.

என்று பாடி அனுப்பினார். இதைப் பார்த்துத் திருந்திய அதிவீர ராமர் அண்ணன் காலில் விழுந்தார். அண்ணன், "மனிதரைப் பாடிய பாவத்தைத் தொலைக்கக் காசிக்குப் போ. காசிச் சிறப்பைப் பாடு" என்றார். இதனால் காசி கண்டம் பாடினார் அதிவீரராமர். இதில் பூர்வ கண்டம் 41 அத்தியாயங்களை உடையது. உத்தர கண்டம் 59 அத்தியாயங்களை உடையது.

நூல் அமைப்பு

அறுபத்து மூவர் வணக்கம், சிவனடியார் வணக்கம், அகத்தியர் விந்திய மலையை அடக்கியது. துருவன், கலாவதி, சிவசர்மா, வயிரவர், தண்டபாணி வரலாறுகள் தீர்த்தச் சிறப்பு ஆகியவை பூர்வ கண்டத்தில் கூறப்படுகின்றன. உத்தர கண்டத்தில் தபோதனன் வரலாறு, ஆதித்தர் வரலாறு, இரத்தினேசன், கிருத்தி வாசன், துர்க்கன், திரிதியை, துர்த்தமன் கங்களா கேது ஆகியோர் வரலாறு, காசிக்குக் கணபதி, திருமால் சிவகணங்கள், விசுவநாதர் வந்த வரலாறு, துர்வாசன், தக்கன் வரலாறு, காசிச் சிறப்பு, விசுவநாதர் சிறப்பு ஆகியவை கூறப்படுகின்றன. இவை யாவும் அகத்திய முனிவன் கேட்க, குமரன் கூறுவதாக, நூல் அமைந்துள்ளது. காசியை எப்படி வழிபட வேண்டும் என்று 36 பாடல்கள் கூறுகின்றன.



கற்பிலக்கணம்

கற்புடைப் பெண்கள் எப்படி இருப்பர் என்பதை
கொழுநன் உண்டபின் தான்நுகர் கொள்கையும்
விழி துயின்றபின் துஞ்சலும், மென்துயில்
எழுதல் முன்னம் எழுதலுமே யன்றோ
பழுதில் கற்புடைப் பாவையர் செய்கையே

என்று காசி கண்டம் கூறுகிறது. இப்பாடல் பழைய மரபுகளைத் தழுவியது.

விசாலாட்சி வீசுகிறாள்

காசியில் இறப்போரை விசாலாட்சியம்மை முன்தானையால் விசிறி இளைப்பாறச் செய்கிறாள். விசுவநாதர் அவர்கள் செவியில் தாரக மந்திரம் ஓதி முத்தியளிக்கிறார் என்பதை

இத்தலம் எய்தி இறக்குநர் யாரும் இளைப்பாற
உத்தரி யங்கொடு மாதுமை வீசிட, உமையோர்பால்
வைத்து வரும் பொருள், மேவரு தாரக மறை யோதி
முத்தி யளித்திடும் இப்பதி அளவிட முயல்வாரே?

என்று காசி கண்டம் குறிப்பிடுகிறது.

அரி அரன் ஒற்றுமை

சிவபெருமான் திருநாமங்களையும் திருமாலின் திருநாமங்களையும் இணைத்து இவர் பாடிய நான்கு பாடல்கள் மிகவும் போற்றத்தக்கவை.

நீலகண்டன், மழுவேந்தி, நெற்றிக் கண்ணன், பூதேசன்,
காலகாலன், விடையூர்ந்தோன், கங்கை சூடி, காமாரி,
சூல பாணி, கரியுரித்தோன், தோகை பாகன், காபாலி,
ஆலமுண்டோன், மதிசூடி, அந்த காரி, ஈசானன்,
வாசுதேவன், சனார்த்தனன், போர் மதுசூதனன், அச்சுதன், நெடுமால்,
ஈசன், அரசன், சங்கரன், கிரிசன், இறைவன், பினாக பாணி, சிவன்,
கேசி நாசன், மணிவண்ணன், கெருடத்துவசன், நரசிங்கன்,
நாசமில்லோன், விடையூர்தி, நம்பன், மிருத்துஞ்செயன், பாகன்,
அரவா பரணன், அழலேந்தி, அட்டமூர்த்தி, செகதீசன்,
புருடோத் தமன், கேசவன், கண்ணன், புயங்க சாயி, புள்ளூர்பதி
பரம சாந்தன், கணநாதன், பவன், முக்கண்ணன், சருவேசன்,

திரிவிக் கிரமன், கமலை பதி, தேவன், சவுரி மாதவனே,
புராரி, தாமோ தரன், சயம்பு, பூவை வண்ணன், கோபாலன்,
முராரி, அனந்தன், கோவிந்தன், முகுந்தன், சார்ங்க பாணி, அரி,
கிரீசன் என்னும் பெயர் முதலாக் கிளக்கு நாமம் நூற்றெட்டும்
பரவும் அவர்கள் மனுலகம் படரார் அழியாப் பதம் பெறுவார்

என்று இறைவன் திருநாமங்களை எழிலுறப் பாடுவது படித்து இன்பமுறத்தக்கது.

நிறைவுரை

அகத்தியர் பாடிய இலக்குமி தோத்திரம், சிவசன்மா பாடிய சிவாட்டகம், வச்சிர பஞ்ச கவசம் எனப்படும் சக்தி கவசம் ஆகியவை காசி கண்டத்தில் உள்ளன. இவை பலராலும் பாராயணம் செய்யப் பெற்றுப் பலன் அளிக்கின்றன. இவ்வாறு காசி கண்டம் காசியின் பெருமைகளையும், திருநீறு சிவமணி ஆகியவற்றின் பெருமைகளையும் விளக்கும் சிறந்த நூலாகத் திகழ்கிறது. புண்ணியம் செய்தோர் படித்துப் பயன் பெறுவர்.



காசியில் வணங்க வேண்டியவை

சொ.சொ.மீ. சுந்தரம்

1. தோடுடைய செவி விழுந்த மணிகர்ணிகா பீடம்

சிவபெருமானை மதிக்காமல் செய்த தட்ச யாகம் சிதைந்தது. தட்சன் மகளான தாட்சாயணி, சிவபெருமான் பெருமைகளைக் கூறியும் தட்சன் கேட்கவில்லை. சிவபிரானை நிந்தித்தான். வீரபத்திரரும் காளிதேவியும் வேள்வியை அழித்துத் தேவர்களுக்குத் தண்டனையளித்தனர். தட்சன் கொடுத்த உடம்பு வேண்டாமென நினைத்த தாட்சாயணி, தன் உடம்பைப் பல பகுதிகளாக்கி ஐம்பத்தோரிடங்களில் வீசினாள். அந்தப் பகுதிகள் விழுந்த இடங்கள் ஐம்பத்தொரு சக்தி பீடங்களாக இந்தியா முழுவதும் அருள்பொழிகின்றன. இந்த சக்தி பீடங்களில் ஐந்தாவது சக்தி பீடம் காசியில் விசாலாட்சி பீடம் என்று அழைக்கப்படுகிறது. தேவியின் தோடணிந்த காது விழுந்த இடமாதலின் இதை மணிகர்ணிகா பீடம் என்று அழைக்கிறார்கள். இங்கே அன்னை விசாலாட்சியாகக் கோயில் கொண்டிருக்கிறாள். இது பாவங்களைப் போக்கிப் பிறவிப்பிணி தீர்த்து, ஆன்மாக்களுக்கு மோட்சமளிக்கும் திருத்தலமாகத் திகழ்கிறது.


2. சோழிமாதா கௌடிபாய்

நம்முடைய உறவினர்களில் நாம் பிரிந்தாலும் நம்மைவிட்டுப் பிரியாத உறவினர் சிவபெருமான் மட்டுமே ஆவார். சிவனை எப்படி வேண்டுமானாலும் நினைக்கலாம். திருஞானசம்பந்தர் தந்தையாக நினைத்தார். திருநாவுக்கரசர் தலைவனாக நினைத்தார். சுந்தரர் தோழனாக நினைத்தார். மாணிக்கவாசகர் தன் மனங்கவர்ந்த மணாளனாக நினைத்தார். நினைப்பவர் மனம் கோயிலாய்க் கொண்டவன் இறைவன். நினைத்தவர்க்கு நினைத்தபடி காட்சி தந்தான். காசியில் கௌடிபாய் என்ற அம்மையார் இறைவனைத் தன் மூத்த சகோதரனாகக் கருதி அன்பு செய்தாள். அவள் விசுவநாதருக்கு அருகிலேயே அன்புப் பிழம்பாய் இருந்தாள். அவரை எல்லோரும் தொட்டு வணங்கினால் அவர் உடம்பு வலிக்குமே என்று அவள் அன்பு மனம் நினைத்தது. இது எனக்குப் பிடிக்கவில்லை என்றாள். விசுவநாதர் "என் பக்தர்கள் என்னைத் தொடுவது எனக்கும் இன்பம். அவர்களுக்கும் இன்பம். என் பக்தர்களை அவமதித்த நீ இனிமேல் இங்கிருந்து விலகி இருப்பாய். என் பக்தர்கள் யாத்திரை நிறைவேறும் பொருட்டுக் கடைசியாக உன்னையும் வணங்குவார்கள் அவர்களுடைய புண்ணியப் பலனில் ஒரு சோழி அளவு நீ பெறுவாய். அதனால் உன் குற்றம் நீங்கும்" என்றார். இதனால் விஸ்வநாதர் சந்நிதிக்குச் சற்றுத் தொலைவில், துர்காகுண்ட் என்ற குளத்திற்குப் பக்கத்தில் கௌடிபாய் கோயில் அமைந்துள்ளது. காசி யாத்திரை முடிவில் பக்தர்கள், அங்கே சோழியுடன் சென்று வணங்கி, சோழியை அங்கே போட்டுவிட்டு வருகிறார்கள். இது சோழிமாதாவின் அன்பையும் விசுவநாதர் கருணையையும் அடியார்கள் பெருமையையும் காட்டுகிறது.

3. ஓம் எழுத்தே உபதேசம்

காசியில் இறப்பவர்களுக்குச் சிவபெருமான் உபதேசிப்பது மாசற்ற தாரகப் பிரம்ம மாகிய ஓம் எனப்படும் பிரணவ மந்திரமே ஆகும் என்று கந்தபுராணம் உற்பத்தி காண்டம் 1215 ஆம் பாடல் கூறுகிறது.

ஈசன் மேவரும் பீடமாய் ஏனையோர் தோற்றும் வாசமாய் எல்லா எழுத்திற்கும் மறைகட்கும் முதலாய்க் காசி தன்னிடை முடிபவர்க்கு எம்பிரான் கழறும் மாசில் தாரகப் பிரமமாம் அதன் பயன் ஆய்ந்தான் என்பது அப்பாடலாகும். இதற்கு வேறுபொருளும் கூறுவர். தாரகம் என்றால் கரையேற்றுவது என்று பொருள். ஐந்தெழுத்தில் இரண்டாவது எழுத்தும், எட்டெழுத்தில் இரண்டாவது எழுத்தும் இணைந்த மந்திரம் ராம என்ற மந்திரம். இதுவே உபதேசம் என்பாரும் உண்டு.



4. காசி கிருத யுகத்தில் திரிசூல வடிவத்திலும் திரேதா யுகத்தில் சக்கர வடிவத்திலும், துவாபர யுகத்தில் தேர் வடிவத்திலும் கலியுகத்தில் சாங்கு வடிவத்திலும் உள்ளது என்று காசி ரகசியம் என்ற நூல் கூறுகிறது.

5. உடல் சாம்பலாகும் இடம் மயானம். உயிரை வாட்டும் மும்மலங்களும் சாம்பலாகும் மகா மயானம் காசி. சர்வ சங்கார காலத்தில் பிரமன், திருமால், தேவர்கள் அனைவரும் ஒடுங்கும் இடம் காசி. எனவே காசிக்கு அழிவில்லை.

6. இறந்தவர் அஸ்தியைக் காசி கங்கையில் கரைத்தால் அந்த உயிர் சொர்க்கத்தில் கொண்டாடப் பெறும் என்று வியாச பாரதம் கூறுகிறது.

7. பஞ்ச தீர்த்த யாத்திரை

காசி கங்கையில் அசி சங்கம கட்டம், தசா அசுவமேத கட்டம், வருணா சங்கம கட்டம், பஞ்ச கங்கா கட்டம், மணிகர்ணிகா கட்டம் ஆகிய ஐந்திலும் ஒரே நாளில் நீராடுவது பஞ்ச தீர்த்த யாத்திரை ஆகும்.

8. ராம் நாம் சத்ய ஹை

காசியில் மணிகர்ணிகா காட்டில், பிணத்தைச் சுமப்போர் ராம் நாம் சத்யஹை (ராம நாமமே நிலையானது) என்று கூறிச் செல்வார்கள். எல்லா மக்களும் இது உண்மைதான் என்று கும்பிடுவார்கள்.

9. காசியில் இறக்க முத்தி

நம் உடம்பில் மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என்று ஆறு ஆதாரங்கள் உள்ளன. கருவாய்க்கு அரை விரல் கீழே எருவாய்க்கு அரை விரல் மேலே உள்ளது மூலாதாரம். கருவாய் ஆகிய குறிக்கு நேர் பின்னால் முதுகுத்தண்டில் உள்ள புள்ளி சுவாதிஷ்டானம். தொப்பூழுக்குப் பின்னால் மணிபூரகமும் இதயத்திற்குப் பின்புறம் அனாகதமும் தொண்டைக்குப் பின்புறம் விசுத்தியும் புருவமத்திக்குப் பின்புறம் ஆக்ஞையும் உள்ளன. இவற்றில் மூலாதாரம் திருவாரூர், சுவாதிஷ்டானம் திருவானைக்கா, மணிபூரகம் திருவண்ணாமலை, அனாகதம் தில்லைச் சிதம்பரம், விசுத்தி திருக்காளத்தி, ஆக்ஞை காசி. மூலாதாரத்திலிருந்து ஆன்மா விடுபட்டுக் கனல் வடிவில் மேலேறிச் சுழிமுனை நாடி வழியாக ஒளிவடிவில் வந்து ஆக்ஞையில் சேர்ந்து சிவதரிசனம் பெற்றுப் பேரின்பப் பிரசாதம் பெறுவதே பிறவியின் நோக்கம். மூலாதாரத்தை விட்டு மேல் எழுவதுதான் பிறப்பு. இதைத் திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன் என்றார் சுந்தரர். இந்த ஆன்மா ஆக்ஞையை அடைந்து அங்கிருந்து உச்சந்தலையில் உள்ள ஆயிரம் இதழ்த் தாமரையாகிய சகஸ்ராரத்தின் வழியாக வெளியேறுவது தான் ஞானிகள் அடையும் மகா சமாதி. இதையே காசியில் இறக்கமுத்தி என்று யோகிகள் குறிப்பிட்டார்கள். கரும்பிலிருந்து சர்க்கரை வருமுன் கழிவுப் பாகு தானாக வெளி வரும். அதுபோல இறைப் பயணத்தில் அட்டமா சித்திகள் வெளிவரும். அவற்றில் இறங்கி விட்டால் ஆன்மா அதற்கு மேல் செல்லாது. சித்திகளைக் கடந்து சிவனருள் பெறுவதே காசி யாத்திரையாகும். இது யோக நூலார் கூறும் விளக்கம்.

10. காசியில் வணங்க வேண்டியவை

விஸ்வேசம் மாதவம் டுண்டிம் தண்ட பாணிம் ச பைரவம்
வந்தே காசீம் குஹாம் கங்காம் பவானீம் மணி கர்ணிகாம்

என்று ஒரு வடமொழி சுலோகம் உள்ளது. இதன்படி காசியில் விஸ்வநாதரையும், பிந்து மாதவரையும், டுண்டி விநாயகரையும், தண்டபாணி எனப்படும் ஹரி கேசரையும், கால பைரவரையும்,



காசித் தலத்தையும், சிவனுடைய குகையையும், கங்கையையும், மணி கர்ணிகா கட்டத்தையும் வணங்க வேண்டும். கால பைரவர் சந்நிதிக்கு மேற்கில் குகா என்ற இடத்தில் ஒரு குகையும் சிவலிங்கமும் உள்ளன. இதுவே சிவன் குகை.

11. கங்கை

கங்கையின் நீளம் சுமார் 2510 கிலோ மீட்டர். கங்கை வானிலிருந்து கீழே இறங்கிய நாள் வைகாசி மாதம் சுக்கில பட்சம் திருதியை திதி, அஸ்த நட்சத்திரம், செவ்வாய்க்கிழமை ஆகும். ஏறத்தாழ 22000 அடி உயரத்தில் இமயமலையிலிருந்து உற்பத்தியாகிச் சுமார் 15000 அடி உயரத்தில் பசுவின் வாய் போல் தோற்றமளிக்கும் ஒரு குகையிலிருந்து வெளிப்படுகிறது. இந்த இடம் கோமுகி எனப்படுகிறது. அங்கிருந்து கங்கோத்ரியில் பாகீரதி என்ற பெயரில் பாய்கிறது. இங்குதான் நாம் நீராடுவது தொடங்குகிறது. தேவப்ரயாகையில் அலக்நந்தாவோடு இணைந்து கங்கையாகப் பாய்கிறது. அமர்நாத்தில் சுமார் 12000 அடி உயரத்தில் உள்ள ஒரு குகையின் அருகே வருவதால் அமர் கங்கா எனப்படுகிறது. சுமார் 2500 கிலோ மீட்டர் தாண்டி வங்காளத்தில் பத்மா நதி என்ற பெயரில் ஷிவாலயா என்ற நகரம் வரை பாய்கிறது. மீண்டும் பாகீரதி என்ற பெயரில் வங்கக் கடலில் கலக்கிறது.

அலகாபாத் வரை தெற்கு நோக்கிப் பாய்ந்த கங்கை, பிறகு காசியைத் தொடுவதற்காக வடக்கு நோக்கிப் பாய்வது பெரிய அதிசயமாகும். இதனால்தான் கங்கைக்குக் காசியில் பெருமை அதிகம். வடக்கு நோக்கிப் பாய்வது சரண யாத்திரை. தெற்கு நோக்கிப் போவது மரண யாத்திரை. இதனால்தான் "காசி கங்கையில் மேவிய பெருமாளே" என்று அருணகிரிநாதர் காசியில் ஓடும் கங்கையைச் சிறப்பித்துப் பாடினார். கங்கை பூமிக்கு வருமுன்னால் காசியில் தர்மநதம் என்ற தீர்த்தம் இருந்தது. அந்தத் தீர்த்தமும் தூதி பாபா என்ற நதியும் கங்கையோடு இணைந்தன. தூதி பாபா என்றால் பாவங்களை விரட்டுபவள் என்று பொருள். கங்கைக்குப் பாகீரதி, ஜான்ஹவி, சரநதி, திரிபதாகை, தேவி நதி, மந்தாகினி, வரநதி, உமைசுரநதி, தசமுகை நதி, தெய்வ நதி, வானதி, சிரநதி, விமலை, ஆகாச கங்கை எனப் பல பெயர்கள் உண்டு.

பார்வதியின் கண் மை சிவபெருமான் கன்னத்தில் ஒட்டியது. சிவபெருமான் அதைக் கங்கை நீரில் கழுவ, கங்கையின் ஒரு பகுதி கருப்பு நீராய் ஓடியது. இதை நீல கங்கா என்கிறார்கள்.

மானசரோவர் செல்லும் வழியில் சுமார் முப்பதடி உயரத்தில் காலா பாணி என்ற இடத்தில் எழுந்தோடும் கங்கை காளி கங்கா எனப்படுகிறது.

உத்தரப் பிரதேசத்தில் காசிப்பூர் தாண்டிப் பாயும் கங்கை ராம் கங்கா எனப்படுகிறது. அங்கே பித்தோராகர் மாவட்டத்தில் பாயும் கங்கை ஜட கங்கா எனப்படுகிறது.

கங்கை நீர் பாவங்களை மட்டுமல்ல, எல்லா நோய்களையும் போக்க வல்லது. 1896 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ஆம் நாள், பிரபலமான ஆங்கில எழுத்தாளர் மார்க் ட்வைன் காசிக்கு வந்தார். கங்கையில் சடலங்கள் எரிந்த நிலையில் தள்ளிவிடப்படுவதையும் அதற்கருகில் மக்கள் குளித்து விட்டுக் கங்கை நீரைக் குடிப்பதையும் கண்டு திகைத்தார். டாக்டர் ஹென்கின் என்ற விஞ்ஞானியிடம் கூறினார். அவர், கழிவுநீர் கங்கையில் சேரும் இடத்தில் ஒரு கன சென்டி மீட்டர் தண்ணீரை எடுத்தார். தனியாக ஒரு பாத்திரத்தில் வைத்தார். அந்த நீரில் இருந்த கிருமிகள் அனைத்தும் ஆறுமணி நேரத்தில் இறந்து விட்டன. மிதந்து சென்ற சடலங்களின் அடியிலிருந்து காலரா கிருமிகள் உள்ள நீரை எடுத்தார். அவையும் ஆறுமணி நேரத்தில் துடிதுடித்து இறந்தன. இந்தக் கங்கையின் புனிதத் தன்மையைப் பழங்காலத்திலேயே அறிந்திருந்த இந்தியர்கள் சிறந்த விஞ்ஞானிகள் என்று புகழ்ந்தார். இச்செய்தி மங்கையர் மலர் நவம்பர் 2004 இதழில் வெளிவந்தது.



கங்கை வெளிப்படும் கோமுகிப் பகுதியில் ஒரு குறிப்பிட்ட வகை நெல்லி மரம் உள்ளது. இதன் நெல்லிக்கனியை உண்டால் ஓராண்டுக் காலம் பசி எடுக்காது. அகத்தியர் துர்வாசர் ஆகியோர் இதை உண்டார்கள் என்று கூறப்படுகிறது.

திரிவேணி சங்கமம்

கங்கை யமுனை சரஸ்வதி நதிகள் கூடும் புண்ணியமான புனிதத் தலம் பிரயாகை எனப்படும் திரிவேணி சங்கமம். கடல் அரசன் மகன் சங்கன் என்பவன் வேத சுலோகங்களை விளையாட்டாகக் கடலில் ஒளித்து வைத்தான். திருமால் அவற்றை மீட்டுத் தந்தார். இதற்காகத் திருமாலுக்கு நன்றி கூற அறுபது கோடியே பத்து லெட்சம் தேவர்கள் கூடிப் பெரிய விழா எடுத்த இடம் பிரயாகை என்று புராணங்கள் கூறுகின்றன. இதற்கு வேள்விகளின் அரசன் என்றும் தீர்த்த ராஜா என்றும் பெயர். பிரமன் இங்கே அசுவமேத வேள்வி செய்தான்.

ஏழாம் நூற்றாண்டில் கன்யா குப்ஜ மன்னரான ஹர்ஷர் இங்கே ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஒரு விழா நடத்தினார். அவருக்குக் கப்பம் கட்டும் இருபது மன்னர்கள் புடைசூழ அவர் பிரயாகைக்கு வருவார். இந்த மன்னர்களை வைத்து அவருடைய அரசின் பரப்பளவை அறியலாம். இத்திருவிழாவில் முதல் நாள் தங்க புத்தர் ஊர்வலம் வருவார். இரண்டாம் நாள் பஞ்சலோக சூரிய பகவான் ஊர்வலம் வருவார். மூன்றாம் நாள் நவரத்தினக் கவசமணிந்து சிவபெருமான் வெள்ளித் திருமேனி திகழ, ஊர்வலம் வருவார். அடுத்த 75 நாட்களுக்கு ஐந்து ஆண்டுகளாகச் சேர்த்துவைத்த செல்வங்கள் அனைவருக்கும் தானம் செய்யப்படும். இவ்விழா பல ஆண்டுகள் மிகச் சிறப்பாக நடந்தது.

கங்கை, காயத்திரி, கீதை இம்மூன்று ககாரங்களுக்கு மேலான ககாரம் இல்லை என்று ஒரு வடமொழி சுலோகம் கூறுகிறது. நம் உடம்பில் ஓடும் இடைகலை, பிங்கலை, சுழிமுனை என்ற மூன்று நாடிகளே கங்கை யமுனை சரஸ்வதி என்று யோக நூல்கள் கூறுகின்றன.

வழித்துணை வருவான்

காட்டையும், காடு சார்ந்த பகுதியையும் பழந்தமிழர்கள் முல்லை நிலம் என்று பிரித்தார்கள். இந்த முல்லையை அடுத்த மலைப் பகுதிகள் குறிஞ்சி நிலம் என்று பிரிக்கப் பெற்றன. குறிஞ்சி நிலத்திற்குத் தலைவனாக முருகப் பெருமானைக் கூறுகிறோம். பிற்காலத்தில் சுப்பிரமணியர் வழிபாடு பரவுவதற்கு முன்னமேயே முருகன் வழிபாடும் சிறப்பாக வேல் வழிபாடும் பழந்தமிழ் நாட்டில் விளங்கி வந்திருக்கக் காண்கிறோம்.முல்லை, குறிஞ்சி ஆகிய இரு நிலங்களையும் பெற்றுள்ள செட்டிநாடு வாழ் மக்கள் முருகன் வழிபாட்டில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்கள். பழைய பாய்மரக் கப்பல் காலத்தில், கப்பல் ஏறும்பொழுது, "திருத்தணி முருகன் வழித்துணை வருவான்" என்று சொல்லிச் செல்கின்ற மரபு இருந்து வந்தது. வேல் வழிபாட்டினை வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்ட நகரத்தார் பெருமக்கள் தாங்கள் சென்று வாணிகம் செய்த பகுதிகளிலெல்லாம் முருகனுக்குக் கோயில் எடுத்திருக்கிறார்கள். சிறப்பாக இலங்கை, மலாய் நாடு, பர்மா ஆகிய பகுதிகளில் முருகனுக்கு திருக்கோயில் எடுத்து வேல் வழிபாடு செய்து வந்திருக்கிறார்கள். கடல் கடந்து சென்று வாழ்வு சிறக்க வழி தேடிய இவர்கள் வாழ்வின் குறிக்கோளாகிய வழிபாட்டை மறவாமல் போற்றினார்கள் என்பதற்குத் தமிழ் வழங்காத இப்பிற நிலங்களில் இன்றும் நிலைபெற்றிருக்கும் இத்திருக்கோயில்கள் தக்க எடுத்துக்காட்டுகளாகும். இப்பகுதிகளில் எல்லாம் சென்று பிற மொழி பேசும்,மக்களோடு பழகுகின்ற காலத்திலும்கூட, ஆங்காங்கே உள்ள இத் திருக்கோவில்கள் என்னைக் கவர்ந்ததோடு, பிற செயல்களினால் இறை வழிபாட்டை மறந்திருந்த என்னை, முருகனை மறவாதிருக்கச் செய்த செயல் இன்றும் என் நெஞ்சை விட்டு நீங்காது நிற்கின்றது. அங்ஙனம் முருகனை நினைக்குமாறு இவர்கள் செய்த திருப்பணி என்றும் வாழ்வதாக.

- அ.ச.ஞானசம்பந்தன்
செயலாளர், தமிழ் வெளியீட்டுக் கழகம்,
கோட்டை, சென்னை - 9.



ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம் 200வது ஆண்டு விழாவிற்கு எங்களது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

உடுமலை நகரத்தார் சாரிட்டபிள் டிரஸ்ட் 1983லிருந்து துவங்கி நல்ல அறப்பணி செய்து வருகிறது.
உடுமலை திருமூர்த்திமலை (சின்னக்குற்றாலம்) பஞ்சலிங்க தீர்த்தமாட வரும் நகரத்தாருக்கு நமது மடத்தில் உணவு ஏற்பாடு செய்து தருகிறோம்.
வருபவர்கள் முன்கூட்டியே தெரிவிக்க வேண்டுகிறோம்.

தலைவர்
திரு. PL. வெள்ளயன் செட்டியார்
செல் : 94422 23774



செயலாளர்
KR.M. கருப்பையா
செல் : 94439 27861



பொருளாளர்
PL. பழநியப்பன்
செல் : 97873 58208







அன்னபூரணியும் விசாலாட்சியும்

முனைவர் சுப.திண்ணப்பன்
(சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம், சிம் பல்கலைக் கழகம், சிங்கப்பூர்)

அன்னபூரணியும், விசாலாட்சியும் நகரத்தார் மகளிர் பெயர்களில் நடமாடும் திருப்பெயர்களாகும். ஆடவர்களுக்குக் காசி என்றும், விசுவநாதன் என்றும் பெயரிட்டு அழைத்தது போலப் பெண்களுக்கு அன்னபூரணி என்றும், விசாலாட்சி என்றும், நகரத்தார் பெயரிட்டு அழைப்பதை ஒரு மரபாகக் கொண்டனர்.

பெயர் என்பது ஒருவரை/ஒன்றைச் சுட்டிக் காட்டுவதற்குரிய அடையாளம் (identify) ஆகும்.

சுட்டிக் காட்டப்பட முடியாத ஒரு பொருள் இறைவன் ஒருவனே ஆவான். எனவே அவனை "ஊரிவான் பேரிவான்" எனப் பெரியோர்கள் குறிப்பிட்டனர். எனினும் ஒரு நாமம் (பெயர்) ஓர் உருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" என்று திருவாசகமும், "பேராயிரம் பரவி" என்று அப்பர் தேவாரமும் இறைவனுக்குரிய எண்ணிலாப் பெயர்களைச் சுட்டிக் காட்டுகின்றன. அந்தப் பெயர்களைக் கூறுவதே நாம பஜனை என்றும் வழிபாட்டின் முக்கிய கூறு என்றும் நம் திருமுறைகள் பக்திப் பனுவல்கள் முழக்கமிடுகின்றன. "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்னெறிக்குய்ப்பது வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே" என்று இறைவன் திருப்பெயரின் பெருமையையும் அதனை எவ்வாறு ஓத வேண்டும் (கூற) என்பதையும் ஞானசம்பந்தப் பெருமான் விளக்கியுள்ளார்.

"அஞ்சுமுகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் வேல் தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்று ஓதுவார் முன்"

என்றும் நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் இறைவன் திருப்பெயர் கூறுவார் பெறும் பயனைப் பட்டியலிட்டுள்ளார். அதனை உணர்ந்த நகரத்தார் பெருமக்கள் தங்கள் குழந்தைகளுக்கு இறைவன் திருப்பெயர்களை இட்டு அழைத்தனர். அதன் வழி இறைச் சிந்தனையும், இறை வழிபாட்டு உணர்வும் தோன்ற வழிவகுத்தனர்.

அந்த வகையில் காசியில் வீற்றிருக்கும் அன்னபூரணி அம்மையின் பெயரையும், காசி விசுவநாதர் உடனுறையும், விசாலாட்சி அம்மையின் பெயரையும் நகரத்தார்களின் பெண்கள் தாங்கிப் பெருமை பெற்றனர். அன்னபூரணி என்பது உயிர் வாழ்வதற்கு அடிப்படையாக உள்ள அன்னத்தை - சோற்றை - நிறைவாகப் பூரணமாக வழங்கும் ஆற்றலுடைய அருட்சக்தி என்னும் பொருளைத் தரும்.

"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோர்"

என்பது மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் இயற்றிய மணிமேகலைக் காப்பியத்தின் அடிப்படைத் தத்துவமாகும். மணிமேகலை நகரத்தார் மரபைச் சேர்ந்த கோவலன் மகளாவாள். அவள் அமுதசுரபி என்னும் அட்சய பாத்திரத்தைப் பெற்று அனைத்துலக மக்களுக்கும் பசிப்பிணி தீர்த்த பாவை ஆவாள். அந்த அமுதசுரபியில் முதன்முதலில் பிச்சை ஏற்க மணிமேகலை தேர்ந்தெடுத்த பெண்மணியாகிய ஆதிரை நல்லாளும் நகரத்தார் மரபைச் சார்ந்தவள் என்பதற்கு நகரத்தார் பருவப் பெண்களுக்குரிய விழா நிகழ்ச்சியாகிய திருவாதிரைப் புதுமை சான்றாகும். இவ்வாறு அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியாகத் திகழ்பவளே அன்னபூரணித் தாயாவாள்.

அன்னம் பாலித்தல்

அன்னதானம் அறங்களில் மிகச் சிறந்த தானம் ஆகும். "அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள் வைப்புழி" என்று



வள்ளுவர் பசிப்பிணி தீர்ப்பதே வங்கியில் வைக்கும் வைப்புத் தொகை என்று பேசுகிறார். தானம் பெற்றவர்கள் "போதும் போதும்" என்று கூறி மனநிறைவு பெறுவதற்கு உதவும் தானம் அன்னதானமே ஆகும்.

அன்னதானத்தை அமுதளித்தல் என்று திருமுறைகள் அழைக்கின்றன. அமுது என்பதற்கு மிக மிக இனிய பொருள் என்றும், தேவர்க்கு மட்டுமே கிடைக்கும் அரிய பொருள் என்றும் உண்பவனை நெடுநாள் வாழவைக்கும் சாவா மருந்து என்றும் பொருள் விளக்கம் தரலாம்.

"மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்,
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தவ் இவை
உண்மையாம் எனின் உலகவர் முன்வருக"

என்று ஞானசம்பந்தர் பூம்பாவையை எழுப்புகின்றபோது சமணர்க்கு முன் அறைகூவல் விட்டதாகச் சேக்கிழார் பாடுகிறார். உலகிற் பிறந்தவர்கள் அடைய வேண்டிய இலக்கு - பயன் இறைவனுக்கும் இறைவன் அடியார்க்கும், அமுது செய்வித்தலும் (அன்னதானம் செய்தல்) விழா எடுப்பதும் தான். சைவ சமயத்தின் அடிப்படைக் குறிக்கோள் (உண்மை) என்பதனை முன்னிறுத்தி அறைகூவல் இடுவதாக அவர் அழைத்துள்ளார்.

எனவேதான் நகரத்தார்கள் பல இடங்களில் அன்னசத்திரம் வைத்து அன்னம் பாலித்து வந்தனர். இந்த அன்னதானம் செய்வதின் அவசியத்தையும் அன்னபூரணி என்னும் திருப்பெயர் நமக்கு அறிவுறுத்துகிறது. "அறம் வளர்த்த நாயகி" என்பது (தர்மாம்பாள்) ஐயாற்றில் வந்திருக்கும் அம்மையின் திருப்பெயராகும். "அறஞ்செய்ய விரும்பு" என்பதையும் இந்த அன்னபூரணி என்னும் பெயர் நமக்கு நினைவுபடுத்துகிறது.

அன்னம் (சோறு) வெள்ளை நிறம். அதனை நினைவுறுத்துவது போல அன்னத்தை வாகனமாகவும் அம்மைக்கு உரித்தாக்கினர் ஆன்றோர். அன்னம் போலக் கள்ளமில்லாத வெள்ளைநிற உள்ளமே கடவுளை வழிபடுவதற்குத் தேவை என்பதை "பொக்கமிக்கவர் (வஞ்சனையுள்ளத்தினர், பூவும் நீரும் கண்டு நாணி நக்கு நிற்பர் இறைவன் என்னும் நாவுக்கரசர் வாக்கு நமக்குக் கூறுகிறது.

அன்னம், பாலையும் நீரையும் பகுத்துப் பார்த்துப் பாலை மட்டும் உண்ணும் என்பர். அந்த வகையில் நாமும் குற்றம் பார்க்கின் சுற்றமில்லை என்பதற்கேற்ப குணத்தையே கொள்ள வேண்டும் (Positive Thinking) என்பதையும் அன்னபூரணி என்னும் பெயர் நினைவூட்டுகிறது.

விசாலாட்சி என்னும் பெயரும் காசியோடு நெருங்கிய தொடர்புடையது என்பதைக் காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி என்னும் தொடர்கள் காட்டும். இங்கு வரும் அட்சி என்பது கண்ணினை உணர்த்தும் வடமொழிச் சொல்லாகும். எனவே விசாலாட்சி என்பது அகன்ற விசாலமான கண்களை உடையவர் என்பதாகும். மனித உறுப்புகளின் சிறந்தது கண்ணே ஆகும். கண்ணில்லா விட்டால் பார்வை இல்லை. எனவே கேடில் விழுச்செல்வமாகிய கல்வியைக் கண்ணோடு வைத்துக் காட்டினர் திருவள்ளுவரும், ஔவையாரும்.

எண்ணென்ப ஏனை எழுத்தெனில் இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு

என்பது குறள். 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பது ஔவையார் வாக்கு. இத்தகைய சிறந்த உறுப்பாகிய கண்ணிற்கு அழகு - அணிகலன் எது - என்று திருவள்ளுவரைக் கேட்டால் கண்ணோட்டம்.

'அதாவது இரக்கமுள்ள பரிவு நோக்கே'

என்று பகர்கிறார் திருவள்ளுவர். கண்ணோட்ட மில்லாத கண் ஒரு கண்ணா என்று வினவுகிறார் திருவள்ளுவர்.

மேலும் நம் பார்வை குறுகிய தன்னலம் கொண்ட நோக்காக இல்லாமல் அகண்ட பார்வையாகி அனைத்துலகுக்கும் அருள் தாங்கி நிற்கும் தன்மையதாக அமைய வேண்டும் என்பதை விசாலாட்சி என்னும் பெயர் வலியுறுத்துகிறது. இந்தத் தனிப்பெருங் கருணைதானே அருட்



பெருஞ்ஜோதியாகிய இறையை நமக்குக் காட்டும் என்கிறார் வள்ளலார்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடி நிற்கும் அருருள்ளம் மன்னுயிரனைத்தையும் தன்னுயிராகக் கருதி ஓம்பும் மனப்பான்மையைக் கொண்டு விளங்க வேண்டும் என்பதை நமக்கு அறிவுறுத்தும் ஒரு பெயரே விசாலாட்சி ஆகும். அகன்ற பார்வையாகி அனைத்துயிர்க்கும் கருணை காட்டி வளர்க்கும் அருள் தாயே விசாலாட்சி. அருளது சக்தியாகும் என்றுதானே நம் சாத்திரங்கள் முழக்கமிடுகின்றன.

அன்னபூரணியும். விசாலாட்சியும் அனைத்துயிர்க்கும் கருணைகாட்டி அன்னம் அளித்து வாழ்தலே பிறவியின் பெரும்பயன் என்பதை வலியுறுத்த வந்த திருப்பெயர்களாகும். நகரத்தார்கள் இந்தியாவில் மட்டுமில்லாமல் இலங்கை, பர்மா, மலேசியா, சிங்கப்பூர், செய்கோன், இந்தோனேசியா, இலண்டன், ஆஸ்திரேலியா, அமெரிக்கா முதலிய நாடுகளிலும் அன்னதானம் செய்வதை அரும்பணியாக மேற்கொண்டுள்ளனர். இந்த உண்மையை உணர்ந்து வாழ முற்படுவோமாக.

தமிழ்நாடும் கங்கையும்

அரித்துவாரில் கங்கையாற்றின் பெருமித ஓட்டத்தைக் கண்டு, வியந்தேன். சங்க காலப் புலவர்களும் புகழ்ந்து பாடிய அந்த ஆற்றின் ஆழமும் வேகமும் நீரின் தன்மையும் தூய்மையும் உணர்ந்து போற்றினேன்.

ஆற்றங்கரையில் சிறு கோயில்கள் பல இருந்தன. அங்கே வந்து பிரார்த்தனை செய்வோர் பலவகைப் பொருள்களையும் ஆற்றிலே எறிந்தனர். தலையை மொட்டை அடித்துக் கொண்ட பிறகு தலைமயிரை எல்லாம் கையிலேந்தி வந்து தூய்மையான கங்கை நீரில் எறிந்து இருகையும் குவித்துக் கும்பிட்டு நின்றனர். இறந்தவர்களின் உடம்பைச் சுட்டெரித்த பிறகு சில எலும்புகளை மட்டும் கொண்டு வந்து ஆற்றில் இட்டால் போதுமே; ஆனால் அந்த மக்கள் குடம் குடமாக மூட்டை மூட்டையாக எல்லா எலும்புகளையும் சாம்பலையும் கொண்டுவந்து கங்கையில் விடுகின்றனர். அவ்வளவு அசுத்தங்கள் கலந்தும் கங்கை தூய்மை கெடாமல் பெருமிதத்தோடு ஓடி வருகிறது.

இமயமலைப் பனி உருகி வருவதாலும், மிக்க வேகத்தோடு ஓடி வருவதாலும் ஆழமும் பரப்புமாக நீர் மிகுந்து செல்வதாலும் அதன் தூய்மையைக் கெடுக்க அவ்வளவு மக்களாலும் முடியவில்லை.

இவ்வளவு நீர் பெருக்கும் தன்மையும் தமிழ்நாட்டு ஆறுகளுக்கு வாய்த்தால், தமிழ்நாட்டு ஆற்றங்கரைகளை உலகம் போற்றும்படியாக தமிழர் செய்திருப்பார்கள்.

- டாக்டர் மு.வ. எழுதியுள்ள 'மண் குடிசை'
என்னும் நாவலில் ஒரு பாத்திரம்

ஜோதிர் லிங்கங்கள் 12

1.	சோமநாதர்	-	சௌராஷ்டிரம்	7.	இராமேச்சுரம்	-	தமிழ்நாடு
2.	மல்லிகார்ச்சுனம்	-	ஆந்திரம்	8.	குஸ்ருணேச்சுரம்	-	எல்லோரா குகை அருகே
3.	திரியம்பகம்	-	நாசிக்பஞ்சவடியருகே	9.	நாகநாதர்	-	சவுண்டி அருகே
4.	மகாகாளர்	-	உஜ்ஜயினி	10.	வைத்தியநாதர்	-	பாட்னா அருகே
5.	ஓங்காரம்	-	உஜ்ஜயினி அருகே	11.	கேதாரேச்சுரர்	-	இமயத்தில்
6.	பீமசங்கரர்	-	பூனா அருகே	12.	விசுவேசுவரர்	-	காசி



காசியைப் பற்றிய சைவ சித்தாந்தக் கருத்துக்கள்

மு.அருணாசலம்
முன்னாள் சைவ சித்தாந்தப் பேராசிரியர்,
காசி இந்துப் பல்கலைக் கழகம்

காசி சேத்திரம் இந்துக்கள் அனைவருக்கும் மிக புண்ணியமான ஸ்தலம். அதிலும் சைவர்களுக்கு மிகவும் சிறப்பானது. காசியில் இறக்க முத்தி என்று சொல்வார்கள். காசியில் இறப்பவர்களுக்கு உமாதேவியார் தோன்றி பிறவியாகிய இளைப்பு மாற, தம் மேலாடையால் மெல்ல வீசி, தாரக மந்திரத்தை உபதேசித்து முத்தியை அடையச் செய்கிறார் என்பது புராணம்.

காசி சம்பந்தமாகத் தமிழில் ஏற்பட்டுள்ள நூல்கள் அனேகம். 16ஆம் நூற்றாண்டின் மத்தியில் தென்காசியில் ஆட்சி புரிந்த அதிவீரராம பாண்டியர் என்ற பாண்டிய மன்னர் காசி கண்டம் என்ற பெயரால் காசியின் மகிமையை 2526 விருத்தங்களால் விரிந்த புராணமாகப் பாடியிருக்கிறார். அதில் சைவ சமயத்தைக் குறித்த மிகப் பலவான கருத்துக்கள் முறையாகச் சொல்லப்பட்டுள்ளன. இது புராணம் மாத்திரமின்றிச் சிறந்த இலக்கியமும் சமய நூலுமாகும்.

மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை 1012 செய்யுட்களையுடைய காசி ரகசியம் என்ற மற்றொரு புராண நூலும் செய்திருக்கிறார். மேலும் 17ஆம் நூற்றாண்டில் இருந்த குமர குருபர சுவாமிகள் காசிக் கலம்பகம் என்ற சிறப்பான பிரபந்தம் பாடினார். தருமபுர ஆதீனத்துத் தலைவரான சிவஞான தேசிக சுவாமிகள் 200 ஆண்டுகளுக்கு முன் காசி ஸ்தலத்தில் எழுந்தருளியுள்ள சைவபரமான மூர்த்திகள் ஒவ்வொருவருக்கும் எளிய நடையில் அமைந்த, சிறப்பான கருத்துக்கள் பொதிந்த திருவருட்பா பாடியிருக்கிறார்.

நெடுந்தூரத்தில் ஒரு காலத்தில் போவதற்கு, எவ்வித வசதியமில்லாது அயல்மொழியும், தமிழருக்குப் புறம்பான ஆசாரமும் வழங்கிய காசியினிடத்து, தமிழ் மக்களுக்கு இவ்வளவு ஈடுபாடு ஏன்? என்ற கேள்வி எழலாம். அப்பர் சுவாமிகள் தேவாரத்துள், காசி சேத்திரம் வாரணாசி என்ற பெயரால் ஒரு வைப்பு ஸ்தலமாக அமைக்கப்பட்டுள்ளது. "மண்ணிப் படிக்கரை வாழ்கொளி புத்தூர் - வக்கரை மத்தாரம் வாரணாசி" என்பது சேத்திரக் கோவைத் திருத்தாண்டவம் ஆறாம் பாடல். வருணை - அசி என்ற இரண்டு உப நதிகளுக்குமிடையில் கங்கைக் கரையில் அமைந்துள்ள காரணத்தால் இந்த ஸ்தலத்திற்கு 'வாரணாசி' என்ற பெயர் வந்தது.

காசியில் சிவபெருமான் திருநாமம் விசுவநாதர் என்பது. உலகம் கடந்த பிரபஞ்சம் அனைத்தையும் உள்ளடக்கி விசுவம் என்று சொல்கிறோம். இவ்விசுவாசத்திற்குத் தலைவனாகிய ஆண்டவனை விசுவநாதன், அகிலேசன் என்று பெயர் சொல்வது பொருத்தமே.

தமிழ் நாட்டில் ஊர்கள் தோறும் சிறப்பான சிவாலயங்கள் அமைந்துள்ளன. ஆங்காங்கு, பட்டணம் முதல் பட்டிக்காடு வரை வாழ்கின்ற மக்களுக்கு தாங்கள் இருக்கும் இடத்திலே இறையுணர்வும் மன அமைதியும் கைகூடுவதற்காக இவ்வாலயங்கள் நெடுங்காலமாக ஏற்பட்டுள்ளன. நம் சமய ஆசாரியர்கள், பாசுரங்களைத் திருவாய் மலர்ந்தருளிய காரணத்தால், பல தலங்களுக்கு மகிமை பின்னும் பெருகலாயிற்று. இத்தகைய ஆலயங்கள் அனைத்தும் சிறிய அளவிலோ, பெரிய



அளவிலோ காசி விசுவநாதர் கோயில் என்று தனியான ஓர் சிறிய கோவில் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கும் உள்ளூர் ஆலயத்தில் பற்றுக் கொள்வதற்கும் முரண் இல்லை. நம் ஆலயத்தில் மகாலிங்க மூர்த்தமாக எழுந்தருளியிருக்கின்ற பரம்பொருளே, விசுவம் அனைத்திற்கும் நாதனாக விளங்குபவன், அவனே காசியில் எழுந்தருளியுள்ள விசுவநாதன் என்று இந்த அமைப்பு நமக்கு சுட்டிக் காட்டுகிறது. இது ஆசேது ஹிமாசலம் வரையில் உள்ள நாடு முழுமையும், ஹிந்து மக்கள் அனைவரையும் ஒற்றுமைப்படுத்துகின்ற திட்டம் மாத்திரமின்றி, பல நாம ரூபங்களால் நாம் ஆண்டவனை வழங்கினாலும், அவன் ஒருவன் என்ற ஒருமை உணர்ச்சியையும் ஊட்டுகின்ற பெருஞ்சாதனமாகும்.

சைவ சித்தாந்த சமயத்தின் தத்துவத்தைச் சுருக்கிப் பின்வருமாறு கூறலாம். ஆண்டவன் ஒருவன். உயிர்கள் பல. உயிர்களைப் பந்தித்து நிற்கின்ற பாசங்கள் மூன்று. அவரவர் வினைக்கு ஈடாகத் தனு கரண புவன போகங்களை ஆண்டவன் கூட்டுவிக்கிறான். உயிர்கள் பாசத் தொடர்பால் பிறவி எடுத்து வினையில் உழன்று முடிவில் இருமுனைகள் தம்முள் நேராக, தம்மைப் பற்றிய பாசங்கள் பக்குவப்பட்டு, திருவருளின் வசத்தில் நின்று விடுதலை பெறுகின்றன. இந்த விடுதலையை நோக்கியே அறிவு படைத்த உயிர்கள் யாவும் புத்திபூர்வமாக முயல வேண்டும். முயலுவதற்கு வழிகள் பல. ஆசாரியனையும், அடியவரையும் திருக்கோயிலையும் வழிபடுவது ஆண்டவனை வழிபடுவதேயாகும். சுருக்கமாக இவையே சைவ சமத் தத்துவமாகும். இக்கருத்தில் பல அம்சங்கள் காசி என்ற தத்துவத்தோடு இணைந்திருப்பதைக் காணலாம்.

காசியில் இறக்கும் பேறு பெறுவது சிறப்பு. காசி சேத்திரத்தை - "மகாஸ்மசானம்" என்று சாத்திரம் கூறும். அதாவது இங்கு உயிரைப் பற்றிய பாசங்கள் யாவும் நீறாகின்றன என்பது கருத்து. பாசங்கள், உயிரானது உடையவனைக் காணாதபடி மறைக்கின்றன. பந்திக்கின்றன. பாசங்கள் நீறாகவே இந்த மறைப்பு விலகி பந்தமும் அறுகிறது. பந்தமற்று விடுதலை கை கூடுகிறது. ஆன்மா ஆண்டவனோடு இரண்டற்ற நிலை எய்துகிறான். இந்தப் பேருண்மையைத்தான் "மகாஸ்மசானம்" என்று பெயர் குறிக்கிறது. சாமானிய மயானம் உடலைச் சுடுகின்றது. இந்த மகா மயானம் உயிரைப் பற்றிய பாசங்களைச் சுட்டுப் பொசுக்கி விடுகிறது; பாச வீடு பெற்ற ஆன்மா முத்தி எய்துகிறான்.

காசியின் மற்றொரு பெயர் ஆனந்தவனம் என்பது. இப்பெயர் மிகச் சிறந்த உபநிடதக் கருத்தை உள்ளடக்கியது. "யதோ வாசோ நிவர் தந்தே - அப்ராப் மனஸா ஸஹ ஆனந்தம் ப்ரும்மணோ வித்வான்" என்பது தைத்தீரிய உபநிடத வாக்கியம். இதன் பொருளாவது, "எந்த இடத்தில் மேலும் அப்பால் செல்ல முடியாமல் வாக்கானது மனத்தோடு கூடத் திரும்புகிறதோ, அதுவே ஆனந்தம், ப்ரும்ம நிலை என்று ஞானி உணர்கிறான்."

"வாக்கு மனமிறந்தவான் கருணையாளன் உருத்தாக் கறவே நிற்கும் தன் முதல்வா" என்பது உண்மை விளக்கம். "மாற்றம் மனங்கழீய நின்ற மறையோனே" என்பது திருவாசகம். மாற்றமும் மனமும் கழிய நின்ற இடம் ஆனந்த நிலை. இந்த இடமே ஆனந்தவனமாகிய காசி என்பது மிகவும் உண்மையான கருத்து.

காசியில் இறப்போருக்கு உமாதேவியார் தோன்றி இளைப்பை மாற்றி முத்தியருளுகிறாள் என்பது ஐதீகம். இது சைவ சித்தாந்தக் கருத்து. அழிப்பு என்பதே இளைப்பாற்றல்தான். நாசம் அன்று என்பது சிவஞான சித்தியார்; எனவே காசியில் இறக்கும் நல்லூழ் பெற்ற ஆன்மாவுக்கு இறைவனுடைய திருவருள் பதிவு (சத்தி நி பாதம்) ஏற்பட்டது பொருளாகும். அருளை உமாதேவி என்று சொல்வது சைவபரிபாஷை. இக்கருத்தையே கேனோபநிஷதமும் கூறும்.



தேவர்களெல்லாம், யாம் பெரியம், யாம் பெரியம் என்று சண்டையிட்டு இருக்கும் நிலையில் அவர்களுக்கு இடையில் ஒரு பெரிய ஜோதி தோன்ற, "அந்த ஜோதியாகிய தேவன் யார்?" என் அக்கினியும் வாயுவும் அறிய முடியாது வெட்கித் திரும்பியபோது, இந்திரன் எதிரே உமாதேவியார் தோன்றினார் என்று உபநிடதம் சொல்கிறது. "ஸ்தஸ் மின்னவே ஆகாசே ஸ்திரியம் ஆஜ காமபஹூ், சோப மானாம், உமாம் ஹைமவதீம்" இங்கெல்லாம் உமை என்று சொல்லும்போது சைவ சித்தாந்தம் கூறுகின்ற ஆண்டவனுடைய பெருங் கருணை என்ற திருவருளேயாகும்.

மேலும் காசியில் ஆண்டவனுடைய சக்தியில் சிறப்பான மூர்த்தமாய் இருப்பது அன்னபூர்ணா தேவி. விசுவநாதருக்குரிய தேவியின் பெயர் விசாலாட்சி; தமிழில் பெருந்தடங் கண்ணம்மை எனினும், காசியில் முதன்மை இருப்பது அன்னபூரணிக்கே. "எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்" என்று சிவஞான சித்தியார் கூறுவதுபோல, உமா தேவியார் அன்னபூரணி வடிவத்தில் உயிர்களுக்கெல்லாம் பக்குவத்துக்கு ஏற்றவிதமாக தனுகரண புவன போகங்களைத் தந்து வினையை அனுபவித்துக் கழிக்கின்ற செயலைச் செய்கின்றார்.


சுத்த அத்வைத நிருபணம் செய்த மகான் சங்கரர் "உலகில் உள்ள பொருள் ஒன்றே; அது தானே பல்வேறு வடிவங்களாகத் தோற்றம் அளிக்கிறது. தோற்றமளிப்பதற்குக் காரணம் மாயை. மாயை நீங்குகின்ற காலத்தில் பலவாய்த் தோன்றுகின்ற ப்ரும்மம் ஒன்றாகின்றது" என்று அவர் ஸ்தாபிதம் செய்தார். அவருடைய சரித்திரத்தையும், நூல்களையும் நாம் தெளிவாக ஆராய்ந்து பார்த்தால் இந்த அத்வைத நிருபணம் அவர் மனத்துக்கும் சாந்தி அளிக்கவில்லை என்பதை உணரலாம். நம்முடைய கடைசி நாட்களில் நிர்க்குண உபாசனையை விட்டு நீங்கி சகுண வழிபாடுதான் ஆத்ம சாந்தி அளிக்கவல்லது எனக்கண்டு, விசுவநாதர் விசாலாட்சி, அன்னபூரணி, தட்சிணாமூர்த்தி போன்ற தெய்வங்களைத் துதித்து எண்ணற்ற சுவை நிறைந்த அருட்பாசுரங்களை அவர் பாடினார். இந்த நிலையை நாம் நன்கு ஆராய்தல் வேண்டும். மனச்சாந்தி என்பது அத்வைத நிருவண நிலையைக் கடந்தது. காசியில் சங்கரர் கடைப்பிடித்த நிலையே சைவ சித்தாந்தத்தில் சோபான முறையாக அமைந்து இருக்கிறது.

சாஸ்திரங்களின் இறுதிப் பகுதியில் ஆசாரியனையும், சிவனடியார்களையும், சிவலிங்கத்தையும் சிவனெனவே வழிபடுக என்பது கட்டளை. இதன் விளக்கமாகவே முந்தையோரான சமயாசாரியர்கள், நாயன்மார்களுடைய வாழ்க்கை அமைந்திருக்கிறது. இவ்வகையில் பார்த்தால் சங்கரர் தம்முடைய ஆத்ம சாந்திக்கு உபாசனைத் தலமாகக் கொண்டு காசிஸ்தலத்தைச் சைவம் தனக்கு உபாசனைத் தலமாக கொண்டிருப்பதோடு அன்றி, குமரகுருபர சுவாமிகள் கூறிய மாதிரியாக

காணுங் காணும் நதிகளெல்லாம் புனற்
கங்கையே அங்குள தெய்வம் யாவையும்
தாணு எங்கள் அகிலேசரே மற்றைத்
தலங்கள் யாவும் தடமதிற் காசியே

என்றவாறு அவரவர் ஆங்காங்கு கங்கையும், விசுவநாதரும், காசியும் தரிசிக்கும் வழியும் செய்திருக்கிறது. காசி கன்னியாகுமரி என்ற பழமொழி கூறும். இரண்டும் ஒன்றே எனக் காசியில் சைவ முரசொலித்து சைவப் பேரரசு செலுத்தியவர் குமரகுருபர சுவாமிகள். சிறந்த சைவ சித்தாந்தத்தின் விளக்காக இருந்த சுவாமிகளின் திருவுள்ளத்தின் வழி அவர் பராமரிப்பில் வந்த காசிக் கேதாரர் ஆலயம் தென்னாட்டுச் சிவாகம முறைப்படி அமைந்து பூசிக்கப்பெற்று வருவது இன்றும் காணத்தக்க காட்சி.

முடிவாக சங்கரர் பாடியருளிய காசி பஞ்சகத்தின் ஐந்தாம் பாடல் இங்கு குறிப்பிடத்தக்கது.



காசி க்ஷேத்ரம் சரீரம்
த்ரி புவன ஜனனீ
வ்வாய பினீ ஜ் ஞான கங்கா
பக்தி ச்ரத்தா கயே யம்
நிஜ குரு சரண
த்யான யோக; ப்ரயாகர்
விச்வசோயம் துரீயம்
சகல ஜன மனஸ்
ஸாஷி பூதோ அந்தராத்மா
தேஹே அர்வம் மதீயே யதி வஸதி
புனஸ் தீர்த்தம் அன்யத் கிம் அஸ்தி


"இந்த சரீரமே காசி க்ஷேத்திரம். இதில் அமைந்துள்ள ஞானமே மூன்று புவனங்களையும் உற்பத்தி செய்வதாயும், சர்வ வியாபினியாயும் உள்ள கங்கை, பக்தி சிரத்தையே கயை. மெய்யான ஆசாரியனுடைய திருவடி தியானத்திலே மனத்தை ஒன்றுபடச் செய்வதே யோகம். துரிய நிலையே சகல ஜனங்களின் மனத்திலும் சாட்சி பூதனாய், அந்தராத்மாவாய் இருக்கின்ற விசுவேசன். இவ்வாறு என்னுடைய சரீரத்திலே அனைவரும் குடிகொண்டிருக்கின்ற நிலையில் வேறு தீர்த்தம் எது உளது?" என்று சங்கரர் கேட்கின்றார். இந்தப் பாவனை ஜீவன் முத்தருக்கே கைவரக்கூடிய பாவனை. இது கைவருவதற்கே சரியை, கிரியை, யோக, ஞான மார்க்கமாகிய சைவ மார்க்கங்கள் குறிப்பிட்ட ஒருவருக்கோ ஒரு வகுப்பாருக்கோ உரியவராக இல்லாமல் அனைவருக்கும் உரியவராகக் கட்டித் தழுவவும், நீராட்டவும், பால் சொரியவும், நிவேதிக்கவும் மலரால் அர்ச்சிக்கவும் உரியவராய் விசுவேசர் இருப்பது மக்களையும் இந்த நிலைக்குத் தூண்டிச் செலுத்துவதற்காகவே இது சைவ சித்தாந்தத்துக்கு முழுமையும் உடன்பாடான சமரச நிலையேயாகும்.

ஆனந்த வல்லியுடன்
ஆனந்தக் கானகத்தே
ஆனந்தக் கூத்தாடு
அருட் கடலை - ஆனந்தம்
கொள்ளத் திளைத்தாடுங்
கூடாதேல் இப்பிறவி
வெள்ளத் திளைத்தாடு வீர்.

கோதாவிரி

"புவியினுக் கணியாய், ஆன்ற
பொருள்தந்து, புலத்திற் றாகி,
அவியகத் துறைகள் தாங்கி,
ஐந்திணை நெறிஅ ளாவி.
கவியுறத் தெளிந்து, தண்ணென்று
ஒழுக்கமும் தழுவி, சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
விரியினை வீரர் கண்டார்"

என்று கம்பர் கோதாவரி ஆற்றின் சிறப்பைப் பாடியுள்ளார். 340 மைல் தொலைவுக்கு ஓடும் இந்த ஆறு இந்தியாவின் பெரிய ஆறுகளுள் ஒன்று; புனிதமான ஆறும் ஆகும். இது தோன்றும் இடத்தின் அருகேயுள்ள நாசிக் - பஞ்சவடியிலும், கடலுடன் கலக்கும் இடத்தின் அருகேயுள்ள கோதாவரியிலும் சத்திரம் அமைத்துள்ள பெருமை நகரத்தாருக்கு உரிய தனிப் பெருமையாகும்.



காசிக் கலம்பகம்


சித்தாந்தச் செம்மணி, முனைவர் பழ. முத்தப்பன், புதுவயல்.

தமிழகத்தில் கி.பி.பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆன்மீகக் கவிஞர் குமரகுருபரர் பாடியருளிய தமிழ்ச் சிற்றிலக்கியம் காசிக் கலம்பகம் ஆகும். காசி நகரத்தின் சிறப்பினைக் கலம்பக உறுப்புகள் கொண்டு பாடப்பெற்ற நூலாகும். குமரகுருபரர் பாடிய சிற்றிலக்கியங்களில் கவிச்சுவையும், கற்பனை வளமும் ஆன்மிகச் சிந்தனையும் கொண்ட அற்புதமான இலக்கியம் காசிக் கலம்பகம் ஆகும்.

திருநெல்வேலி மாவட்டம், ஸ்ரீவைகுண்டத்தில் கைலாசபுரம் பகுதியில் சைவ வேளாளர் மரபில் தமிழ்ப் புலமை மிக்கவராய் விளங்கிய சண்முக சிகாமணிக் கவிராயர் என்பவருக்கும், சிவகாம சுந்தரியார் என்பவருக்கும் கி.பி. 1615 ல் திருமகனாகக் குமரகுருபரர் அவரதாரம் செய்தார். திருச்செந்தூர் முருகன் அருளால் அவதரித்த குமரகுருபரர் ஐந்து வயது வரை ஊமையாய் வாழ்ந்து பெற்றோரின் தவத்தினாலும், திருச்செந்தூர் முருகன் திருவருளாலும் ஊமை நீங்கப் பெற்றார். ஊமை நீங்கப் பெற்றதும் திருமுருகன் திருவருளால் அவர் பாடிய முதல் நூல் கந்தர் கலிவெண்பா ஆகும். கவி பாடுவதில் வல்லவராய் விளங்கிய குமரகுருபரர் இளம் வயதிலேயே திருச்செந்தூர், மதுரை, திருவாரூர், புள்ளிருக்கு வேளூர், சிதம்பரம் ஆகிய திருத்தலங்களுக்குச் சென்று அங்குள்ள இறைவர்களை வணங்கி, அத்தெய்வங்கள் மேல் பல நூல்களைப் பாடித் தமிழுலக வேந்தராக விளங்கினார். அவர் தனக்குரிய ஞானாசிரியரைத் தேடித் தருமபுரத்திற்கு எழுந்தருளி அங்கு திருமட ஆட்சியில் இருந்த குருஞான சம்பந்தர் மரபில் வந்த நான்காம் பட்டத்து குருமகா சன்னிதானம் திருவருள் மாசிலாமணி தேசிகரால் ஆட்கொள்ளப் பெற்றார். அவரைக் குருவாக ஏற்றுக்கொண்டு அவர்பால் தீட்சை பெற்றுத் துறவு மேற்கொண்டார். தம் ஞானாசிரியரின் கட்டளைப்படி காசிக்குச் சென்றார். அங்கு அவர் சென்ற சமயம் அந்நாட்டை ஔரங்கசீப்பின் தமையன் தாராசுவோ என்பவன் ஆண்டு கொண்டிருந்தான். அவனால் கூட்டப்பெற்ற சர்வ சமய மாநாட்டில் கலந்து கொண்டு, அவர்களுடைய மொழியிலே உரை நிகழ்த்திச் சைவ சமயத் தத்துவங்களை விளக்கினார். அவருடைய விளக்கத்தினால் உள்ளம் கவரப் பெற்ற முகமதிய மன்னன் தாராசுவோ குமரகுருபரருக்குப் பெரும் சிறப்புக்கள் செய்தான். குமரகுருபரரின் வேண்டுகோளின்படி இன்றும் சிறப்போடு விளங்குகின்ற குமாரசுவாமி மடத்தைக் கட்டிக் கொடுத்தான். மேலும் குமரகுருபரரின் விருப்பப்படி அழிக்கப்பட்ட கங்கைக் கரைக் கேதாரநாதர் கோயிலை மீண்டும் உருவாக்கித் தினசரி வழிபாடு நடைபெறச் செய்தான். காசியில் பெரும் புகழோடு விளங்கிய குமரகுருபரர் காசி விசுவநாதர், விசாலாட்சி தெய்வங்களைப் போற்றிப் பணிந்து சைவ சமயத்தை வளர்த்துக் காத்து வந்தார். அவருடைய வழியில் தோன்றியதுதான் தமிழ்நாட்டில் உள்ள திருப்பனந்தாள் திருமடம் ஆகும். குமரகுருபரர் பல்லாண்டு காலம் சைவப்பணி செய்து காசித் தலத்திலேயே 1688-ல் வைகாசி மாதம் இறைவன் திருவடியை அடைந்தார். அவருடைய திருவுடல் சலசமாதி செய்யப் பெற்றது.

குமரகுருபரர் பாடிய நூல்கள் கந்தர் கலிவெண்பா, கயிலைக் கலம்பகம், மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ், மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், திருவாரூர் நான்மணி மாலை, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ், சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பர செய்யுட் கோவை, பண்டார மும்மணிக் கோவை, சகலகலாவல்லி மாலை, காசிக் கலம்பகம் என்பன ஆகும். இவர் பாடியருளியதாகக் காசித் துண்டி விநாயகர் பதிகம் என்ற நூல் கூறப்படுவதுண்டு. அது கிடைக்கப் பெறவில்லை.

குமரகுருபரர் பாடிய சிற்றிலக்கியங்களில் ஒன்று காசிக் கலம்பகம் என்ற பிரபந்தமாகும். முதலில் காசிக்குச் சென்ற குமரகுருபரர் அங்குள்ள அரசனை வெல்வதற்காக, அவன் ஆதரவைப் பெறுவதற்காக



அந்நாட்டு மொழியைக் கற்றுத் தேர்ந்து பாடிய முதல் நூல் சகலகலாவல்லி மாலையாகும். சகலகலா வல்லியின் அருளால் கவிபாடும் வல்லவராகி முகமதிய அரசன் சபையில் நடந்த சமய வாதத்தில் வெற்றி பெற்று அதன் பிறகே விசுவநாதரை வணங்கிக் காசிக் கலம்பகம் பாடினார் என்பது வரலாறாகும். இவர் பாடிய மற்றைய கயிலைக் கலம்பகம், மதுரைக் கலம்பகம் போலவே இக்காசிக் கலம்பகமும் தெய்வ வணக்கப் பிரபந்தமாகம். இந்நூலில் காப்புப் பாடல் ஒன்றும், மற்றும் நூறு பாடல்களும் ஆக 101 பாடல்கள் உள்ளன.

கலம்பக உறுப்புக்கள் தமிழ் இலக்கணப்படி இந்நூலில் அமைந்திருந்தாலும் கலம்பகத்திற்குரிய சில உறுப்புக்களை இவர் இந்நூலில் குறிப்பிடவில்லை. புதிய உறுப்புக்களாக பிச்சியார், கொற்றியார் போன்ற உறுப்புக்களும் இக்கலம்பகத்தில் அமைந்துள்ளன. ஒரே உறுப்புக்குப் பல பாடல்களும் இடம் பெற்றுள்ளன. கலம்பகம் என்ற சொல் பதினெட்டு உறுப்புக்களைக் கொண்டது என்ற பொருள்படும். கலம் - பனிரெண்டு, பகம் - ஆறு. ஆகப் பதினெட்டு உறுப்புக்களைக் கொண்டு பாடப் பெறுகின்ற சிற்றிலக்கியம் கலம்பகம் என்பதற்கேற்பக் காசிக் கலம்பகத்திலும் உறுப்புக்கள் அமைந்துள்ளன. புயவகுப்பு, கார், தவம், தூது, அம்மானை, பாண், மதங்கியார், கைக்கிளை, சித்து, ஊசல், களி, மடக்கு, ஊர், மறம், குறம், சம்பிரதம், பிச்சியார், கொற்றியார் என்ற பதினெட்டு உறுப்புக்களைக் கொண்டு காதல் கொண்ட தலைவி ஒருத்தியும் அவள் தோழியும், அவர் உறவினர்களும் விசுவநாதர் மீது பாடுவது போல அகத்துறையாக அமைந்தது இக்கலம்பகம். அகத்துறைப் பாடல்கள் மூலம் தலத்தின் சிறப்பும், விசுவநாதரின் பெருமையும், விசாலாட்சியின் அருளும் பலபடப் பாராட்டப் பெற்றுள்ளன.

தலத்தின் பெருமை

பாடல்தோறும் காசித்தலத்தின் பெருமை கூறப் பெற்றிருந்தாலும் ஒருசில பாடல்கள் காசித் தலத்தின் பெருமையை முழுமையாகத் தருகின்றன.

"படுத்த பாயுட னேபிணி மூழ்கினும்
பல்வி ழுந்து நரைத்தற மூப்பினும்
அடுத்த தீங்குஇவரக் கேபெறு வாழ்வெனும்
அப்பெ ரும்பதி எப்பதி என்பிரேல்
விடுத்து விட்டுஇந் திரதிரு வும்புவி
வெண்கு டைக்குள் இடும்அர சாட்சியும்
கடுத்த தும்பு களத்தரைத் தேடுவோர்
காத லித்து வருந்திருக் காசியே" (பாடல் -24)

என்பது அப்பாடல்களில் ஒன்று. இப்பாடலின் பொருள் - படுத்த பாயுடன் நோயில் மூழ்கினாலும், பற்களெல்லாம் விழுந்து நரையுடன் கூடிய மூப்பை அடைந்தாலும், பெருவாழ்வு கிட்டுகிற நகரம் எந்த நகரம் என்று கேட்டால், அது காசி நகரமே ஆகும். அதாவது எத்தகைய உயிருக்கும் நல்வாழ்வைத் தருவது காசி நகரமே ஆகும் என்பது இப்பாடலில் குறிக்கப்பெறுகிறது. இந்த நகரத்திற்கு இந்திரச் செல்வத்தை விட்டும், மண்ணுலகில் உள்ள அரசாட்சியை விட்டும், பலர் நஞ்சு தழும்பு கொண்ட விசுவநாதரைத் தேடி வருவர். இத்தகைய பெருமை பெற்றதாகும் என்று காசி நகரம் புகழ் பெறுகிறது.



அதுபோல மற்றொரு பாடலில் எந்த ஆறுகளைப் பார்த்தாலும் அவை கங்கை நீராகக் காட்சி தரும். அதுபோல எங்கும் உள்ள தெய்வங்கள் எல்லாம் விசுவநாதரே ஆவர். காசியை தரிசித்த பிறகு பார்க்கின்ற தலங்கள் எல்லாம் காசித் தலமாகவே தோன்றும். ஆதலால் ஒரு உயிருக்கு ஆசை ஏற்படுவது எது என்றால் அது உடல் விடும்போது நல்ல மணிக்கர்ணிகை என்ற கங்கைத் துறைகளில் ஒன்றான பூந்துறையில் யாவரும் போற்றும்படி உயிர் விடுதல் வேண்டும் என்பதே ஆகும். அத்தோடு அல்லாமல் சிவனைப் போல அத்தலத்தில் பேயுடன் ஆடுதலும் வேண்டும் என்று ஒரு தலைவி சொல்வதாக ஒரு பாடல் அமைந்துள்ளது.

"காணும் காணும் நதிகள்எல் லாம்புனல்
கங்கையே அங்கு உளதெய்வம் யாவையும்
தாணு எங்கள் அகிலேச ரேமற்றைத்
தலங்கள் யாவும் தடமதில் காசியே
பூணும் ஆசைமற்று ஒன்றே உடல்விடும்
போது நன்மணி கர்ணிகை பூந்துறை
பேணு மாறுபெற வேண்டும் அப்புறம்
பேயொடு ஆடினும் அடப் பெறுதுமே" (பாடல்-17)

என்பது பாடல். எனவே இவ்விரண்டு பாடல்களிலும் காசிக்கு நிகர் எத்தலமும் இல்லை. எல்லாத் தலங்களுமே காசியாகவே தோன்றும். காசி விசுவநாதரே எல்லாத் தெய்வங்களுமாகக் காட்சி தருகிறார். காசியில் உள்ள மணிக்கர்ணிகைத் துறையில் உயிர் விடுவதே முத்தி தரும் என்ற செய்திகளை முக்கியமாகத் தருகின்றன.

இறைவனுக்கு உகந்த இடம் காசி நகரமே ஆகும் என்பது மற்றொரு பாடலில் கூறப்படுகிறது. பாக்கள் தோன்றும் நாவினை உடைய புலவர்களால் போற்றப் பெறுவதும். வண்டுகள் பண்ணோடு இசையினை ஒலிக்க, மலர்கின்ற பூக்களைக் கொண்ட சோலைகள் சூழ்ந்ததும் ஆகிய காசியம்பதியே, தாமரை மலர் போன்ற கைகளை உடையவனும், விசுவநாதர் என்ற ஐந்தெழுத்துப் பெயரைக் கொண்டவனும், வேத நூல்களுக்குத் தலைவனும் ஆகிய கடவுளுக்குரிய இடமாகும் என்று 32வது பாடல் குறிப்பிடுகிறது. அத்துடன்

"கண்ணின் நிற்பர் மனத்திருக் கோயிலே
காசியே அவர்க்கு ஓர்திருக் கோயிலே" (பாடல்-30)

என்ற வரிகளும் மனத்தில் நினைக்கின்றவர் முன் தோன்றுகிற விசுவநாதருக்கு ஓர் திருக்கோயில் காசியே ஆகும் என்றும் குறிப்பிடுகின்றன.

காசியிலே இறக்க முத்தி என்பது காசிப்பதியின் பெருமையைக் கூறும் பழமொழி ஆகும். இதனை ஒட்டிப் பல புராணங்கள் பலவிதமான கருத்துக்களைக் குறிப்பிடுகின்றன. குமரகுருபரரும் காசிக் கலம்பகத்தில் "காசியில் உயிர் துறப்போர்க்கு அம்பிகை உயிர் பிரியும் சமயம் அந்த வேதனை தீரத் தம் முந்தானையால் விசிறுவாள். விசுவேசர் இறந்தவர் காதில் தாரக மந்திரத்தை உபதேசித்து உயிரைக் கயிலைக்குச் செலுத்துவார்" என்று விளக்கமாகப் பாடல் 36ல் குறிப்பிடுகிறார்.



"கங்கை சூழ் கிடந்த காசி வாணா
ஐவளி பித்தெனு மவைதலை யெடுப்ப
மெய்விட் டைவருங் கைவிடு மேல்வையில்
மாமுதல் தடிந்த காமரு குழவியும்
பொழிமதங் கரையும் மழவிளங் களிறும்
மூண்டெழு மானம் பூண்டழுக் கறுப்ப
இடக்கையி னணைத்துநின் மடித்தலத் திருத்தி
உலகமோ ரேழும் பலமுறை பயந்தும்
முதிரா விளமுலை முற்றிழை மடந்தை
ஒண்டொடித் தடக்கையின் வீசு நுண்டுகில்
தோகையிற் பிறந்த நாகிளந் தென்றல்
மோகமுந் தளர்ச்சியுந் தாகமுந் தணிப்ப
மறைமுதற் பொருளின் நிறைசுவை யமுதினை
அஞ்செவி மடுத்துண வூட்டிநின்
குஞ்சித அடிக்கீழ்க் குடியிருந் துகவே" (பாடல்-38)

இப்பாடலில் இறந்தவர்களுக்குப் பிரணவ உபதேசம் அளிக்கப் பெற்று அதனால் முத்தி அடைவார்கள் என்ற கருத்து தெளிவாக்கப் பெற்றிருக்கின்றது.

காசிக்கு நிகர் எந்தத் தலமும் இல்லை என்பதை 68ஆம் பாடலாகிய இரண்டு வரிப் பாடல் குறிப்பிடுகிறது.

"நகராமாய் மறைச் சிகர மானதால்
மகர மாயினான் நிகரில் காசியே"

என்பது அப்பாடலாகும். இவ்வாறு பாடல்கள் தோறும் காசித் தலத்தின் சிறப்புக்கள் கூறப்படுவதோடு குறிப்பிடத் தக்க சில பாடல்களில் முழுமையாகக் காசியின் சிறப்பைக் குமரகுருபரர் எடுத்தியம்புகிறார்.

இறைவனின் பெருமை

காசி நகரத்தில் எழுந்தருளி உலகத்தைக் காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடுகின்ற விசுவநாதரின் பெருமையைக் குமரகுருபரர் காசிக் கலம்பகத்தில் பலவாறு எடுத்தியம்புகிறார். காசி விசுவநாதரை மனதாரப் போற்றி துதித்தால் மீண்டும் பிறவியில்லை என்பதைப் பாடல் 6-ல் குறிப்பிடுகின்றார்.

"ஆவி உய்யத் துதியார் உதிப்பார் - துதிப்பாரேல் வையத்து உதியார் மறுத்து"

என்பது அப்பாடற் பகுதியாகும். இதன் மூலம் காசி விசுவநாதரைப் போற்றாதவர்கள் பிறப்பார்கள் என்பதும். போற்றுபவர்கள் உலகத்தில் மீண்டும் பிறக்க மாட்டார்கள் என்பதும் கூறப் பெறுகிறது. காசி விசுவநாதரின் சிறப்பைக் கீழ்வரும் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

"சொல்ஆ வதுமறையே சொல்லுவது நல்லறமே
இல்லா வதுமுத்திக்கு ஏதுவாம் இத்தலமே"



இப்பகுதியின் பொருள் காசி விசுவநாதர் சொல்லுவது வேதமே ஆகும். கூறுவது நல்லறமே ஆகும். மேலும் முத்திக்கு இருப்பிடமான தலமும் இதுவே ஆகும் என்பதாகும்.

மேலும் மற்றொரு பாடலில் காசி விசுவநாதரை வணங்காவிட்டால் பிறவி என்ற கடல் வெள்ளத்தில் விழுந்து துன்பம் அடையக் கூடும் என்ற செய்தியையும் குமரகுருபரர் குறிப்பிடுகின்றார்.

"ஆனந்த வல்லியுடன் ஆனந்தக் கானகத்தே
ஆனந்தக் கூத்தாடு அருட்கடலை - ஆனந்தம்
கொள்ளத் திளைத்தாடு கூடாதேல் இப்பிறவி
வெள்ளத் திளைத்தாடு வீர்" (பாடல்-86)

என்பது பாடலாகும். அத்துடன் பெரியபுராணத்து அடியவர்களுடைய குறிப்பையும், திருவிளையாடற் புராணத்துச் செய்திகளையும் விசுவநாதர் பெருமை கூறுமிடத்துக் குறிப்பிடுகின்றார்.

"தூது கொண்டும் தமைத்தோ ழமைகொண்ட
தொண்டர் தண்டமிழ் சொல்கொண்ட குண்டலக்
காது கொண்டு எம்கவிதை கொண்ட" (பாடல்-36)

என்று சுந்தரமூர்த்தி சுவாமியையும்,

"தந்தை தாள்மழுவால் எறிந்து கொல்வார்" (பாடல்-41)

என்று சண்டேசுவர் பற்றியும் குமரகுருபரர் கூறுவது படித்து இன்புறத்தக்கதாகும். திருவிளையாடற் புராணத்தில் பிரம்படி பட்ட நிகழ்ச்சியைக் குமரகுருபரர் வேடிக்கையாக ஒரு பாடலில் குறிப்பிடுகின்றார். அதாவது முன்பு அரிமர்த்தன பாண்டியன் அடித்த பிரம்படிக்கு அஞ்சி, இறைவன் உமையம்மை இடம் பெற்ற இடப் பாகத்தைக் காட்டாமல் தம் வலப்பாகத்தைக் காட்டினான் என்று குறிப்பிடுகின்றார்.

"கோச்செழியன் மாற்றடிக்கு அஞ்சும் இடப்பாகனை" (பாடல்-60)

என்பது அப்பகுதியாகும். இவ்வாறு காசி விசுவநாதரின் பெருமையைப் பலவாறாகப் பாடி சிறப்புப் படுத்தியுள்ளனர். அத்துடன் காசியில் இருக்கும் பைரவர் சிறப்புடையவர் என்பதையும், காசியம் பதியிலே எமன் வரக்கூடாது, பைரவரே பாவத்திற்குத் தண்டனை தருவார் என்பது விசுவநாதர் கட்டளை என்பதையும் குமரகுருபரர் குறிப்பிடுகின்றார். (பாடல் - 56)

இவ்வாறு காசிக் கலம்பகத்தில் தலத்தின் பெருமையையும் விசுவநாதரின் சிறப்பினையும், அம்பிகையின் அருளையும், குமரகுருபரர் இனியத் தேன் தமிழ்ப் பாக்களால் பாடிப் பாடி மகிழ்கிறார். பைரவரை நினைவூட்டுகிறார். படிப்போரின் உள்ளத்தை ஆன்மீகப் பயணத்திற்கு உருவாக்குகிறார். பிறப்பில்லாத் தன்மைக்கு வழிபாட்டைக் குறிப்பிடுகின்றார். காசி முத்திக்கு வழிதரும் தலமாகும் என்பதையும் வலியுறுத்துகிறார். காசித்தலம் போற்றும் காசிக் கலம்பகத்தை நாளும் படித்து விசாலாட்சி சமேத விசுவநாதரின் அருள் பெறுவோமாக.



தமிழிலக்கியமும் காசியும்

'சித்தாந்தச் செல்வர்' டி.பி.சித்தலிங்கம் எம்.ஏ.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக் கழகம்

"சைவமும் தமிழும் தழைத்தினிதோங்குக" என்ற முழக்கத்தைத் தமிழ்நாட்டில் நாம் கேட்கிறோம். "தென்னாட்டுடைய சிவனே போற்றி" என்று திருவாசகம் கூறுகிறது. தென்னாட்டுக்குரிய சிவன் எந்நாட்டவர்க்கும் அருள்புரிவதாக மாணிக்கவாசகர் கூறுகிறார். இவைபோன்ற பல ஆட்சிகளால் தமிழ் நாட்டுக்கும் தமிழுக்கும் சிவனோடும் சைவ சமயத்தோடும் நெருங்கிய தொடர்புண்டு என்பது தெள்ளிதிற் புலனாகும். சிவநெறியோடு தொடர்புடைய எல்லாமே தமிழில் இடம்பெற்றிருத்தல் கண்கூடு. சிவனே முழுமுதல் எனக்கூறும் மெய்கண்ட சாத்திரங்களும் தோத்திரங்களாகிய திருமுறைகளும் தமிழில் இருப்பதை அனைவரும் அறிவர்.

சிவபெருமான் திருக்கோலம் கொண்டுள்ள திருத்தலங்கள் பற்றியும், சிறப்புமிக்க நீர்த்துறைகளைப் பற்றியும் எல்லா சந்நிதிகளுமே திருவருள் பொழிபவை என்றாலும் சிறப்பாகக் கூறப்படும் திருமூர்த்தங்களைப் பற்றியும் புராண நூல்களிற் பரக்கக் காணலாம். மூர்த்திதலந்தீர்த்தம் முறைமையால் தரிசித்தோர்க்கு வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே என்ற அடிப்படையிலே சமய வாழ்க்கை தொடங்குகிறது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூவகையிலுமே தனிச்சிறப்போடு விளங்குவது காசி.

"தலங்கள் தம்மின் மிக்குள்ளதாய்த்
தகுதிசால் தீர்த்தக்
குலங்கள் தம்மின்மிக் குள்ளதாய்க்
குறையிரந்தோர்க்கு
நலங்கள் தந்தருள் மூர்த்தியாய்
நாதவே தாந்தப்
புலங்கள் தந்தபே ரொளியுறை
தலனொன்று புகலாய்"

என்று முனிவர் பலர் சூதபுராணிகரைக் கேட்டதாகப் பரஞ்ஜோதி முனிவர் கூறுகிறார். சூதபுராணிகர் முக்கியமான திருத்தலங்களைப் பற்றிச் சொல்லத் தொடங்குகிறார்.

"அன்னமலி வயற்புலியூர் காசிநகர்
களாத்தி யாலவாயாம்
இன்னவளம் பதிநான்கு"

என்று சிதம்பரம், காசி, காளத்தி, மதுரை என்ற நான்கு தலங்களைக் குறிப்பிடுகின்றார்.

முத்தி தரும் நகரேழில் காசியும் இடம் பெறுகிறது.

"காசி மாயாபுரி அவந்தி காஞ்சிமற்று
ஓசைகொள் அயோத்தி வண்துவரை
ஒப்பறும்
ஏசிலா மதுரையென் றிசைக்கும் ஏழ்பதி
மாசறு முத்தியை வழங்கும் என்பவே"

காசியின் பெருமை

கங்கைக்கு நிகரான நதியும் இல்லை. காசிக்கு நிகரான பதியும் இல்லை என்பது இந்துக்களின் கொள்கை. சிவத்தலங்கள் பலவற்றுள்ளும் சில சிறப்புடையன. திருவாரூரில் பிறப்பதும், சிதம்பர தரிசனமும், திருவண்ணாமலையைச் சிந்திப்பதும் காசியில் இறப்பதும் முத்தி தரும் என்பது சைவர்களின் நம்பிக்கை.

"முனிப்புலி தொழுசிதம் பரங்கண்
ணுற்றவர்
முழைப்புலி முழங்குமவ் வருணை யங்கிரி
நினைப்பவர் அமலவா ரூர்ப்பி றப்பவர்
நிகழ்த்துறு காசியிற் சென்றி றப்பவர்
தனிப்பெரு முத்தியை யடைவர்"



- சிவஞான பாலைய சுவாமிகள் கலம்பகம்

"மின்னவிர் அம் பலங்காணக் காசிநகர்
வதிந்திறக்க வியன்காளத்திப்
பொன்னகரம் பத்தியினால் வழிபாடு
செயவளிக்கும் போகம் வீடு"

- திருவிளையாடற் புராணம்

காசியின் பெருமை அதனுடன் நின்று விடவில்லை. காசியில் வாழ்கிறவர்களைத் தொட்டாலும் போதும். பிறவித் துன்பமில்லை என்று காசிக் கண்டம் கூறுகிறது.

"பாடகத் தொடர்ச்சிப் பழவினை
சிமிழ்ப்பப் பற்றற வெறிந்துவீடளிக்குஞ்
சேடமை காசி யுறையு நர்மேனி
தீண்டி னும்பவக்கட லழுந்தார்"

மூர்த்தி. தலம். தீர்த்தம். என்ற மூன்றும் உயர்ந்தவை என்னும் இம் மூன்றும் ஒன்று கூடியிருந்தால் மிகச் சிறந்தது என்றும் கூறுவார்கள். காசியில் இம்மூன்றும் ஒருசேரச் சிறந்து விளங்குகின்றன. இவற்றுக் கிணையாக வேறெங்குமில்லையென்று காசிக் கண்டம் குறிக்கிறது.

"இலகுசுடர் விசுவநாதற் கிணையாங்
கடவுளி லிங்கமும் நீர்
சுலவுமணி கர்ணிகைக் கிணையாந்
துகள்நீர் தெய்வதீர்த்தமும் - வான்
கலவமஞ்ஞை நடம்பயிலும்
காசிக்கிணையா நன்னகரும்
உலகமொரு மூன்றினும்இலையீ துண்மை
யுண்மை யுண்மையால்"

இப்படிப்பட்ட பெருமை காசிக்கு எப்படி ஏற்பட்டது?

காசி என்ற வடசொல். காசி எனப் பிரியும் "காச்யதே பிரகாசதே இதி காசி" - எது சுயமாகப் பிரகாசிக்கிறதோ அது காசி.

"தேசோடும் பொலிந்து முத்தித்
திருமகள் உறைதல் தன்னால்
காசி யென்றுரைப்பர்"

என்பதாகக் காசிக் கண்டம் குறிப்பிடுகிறது.

வரணை. அசி என்ற இரண்டு ஆறுகள் கங்கையோடு கலக்கின்றன. இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட பகுதியிலுள்ள நகரமே வாராணாசி. இதை வாராணாசி என்றும் வாரணவாசி என்றும் கூறுவதுண்டு.

வரணையும் அசியும் தம்மை நெருங்கியவர்களின் பாவங்களைத் தீர்க்கின்றனவாம்.

"சார்ந்தவர் பாவநீங்கத் தகைதலான்
வரணை யென்றும்
ஆர்ந்தநீர்படிந் தோர்பாவ
மறுத்தலால் அசியேயென்றும்"

வழங்குவதாக. அதிவீரராம பாண்டியர் கூறுகிறார்.

மணிகர்ணிகை என்ற துறையிலமர்ந்து முழுமுதற் கடவுளான முக்கண்ணனே அங்கேயிறந்த வுயிர்களின் வலது காதில் பிரணவ மந்திரம் கூறிப் பிறவாநெறியூட்டுவதாக எல்லா நூல்களும் எடுத்துரைக்கின்றன.

சமயத்துறையில் இவ்வளவு சிறப்புடைய காசியைப் பற்றித் தமிழிலக்கியங்களில் ஏதேனும் குறிப்புண்டா என்று சிறிது காணலாம்.

சங்க நூல்களில் ஒன்றான கலித்தொகை வாரணவாசி என்ற பெயரையே குறிப்பிடுகிறது. வாரணாவாசியிலுள்ளார் பெறும் அருளடைமையாகிய தன்மை" என்பது தலைவியின் வாயிலாகக் கூறப்படுகிறது.

"தெருவின்கண் காரணமின்றிக்
கலங்குவார்க் கண்டுநீ
வாரணவாசிப் பதம் பெயர்த்தல் ஏதில"

- குறிஞ்சிக்கலி



ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய மணிமேகலையிலும் வாரணாசி பற்றிய குறிப்பு உளது.

"வார ணாசியோர்மறையோம் பாளன்
ஆரண வுவாத்தி யபஞ்சிக னென்போன்"

- (வரி 3,4)

"வார ணாசியோர் மாமறை முதல்வன்
ஆரண வுவாத்தி யரும்பெறன் மனைவியான்"

- (வரி 78,79)

(ஆபுத்திரன் திறமறிவித்த காதை)

சிந்தாமணியின் காந்தருவத்தை யிலம்பகத்திலும் "வாரணவாசி மன்னன்" என்ற ஆட்சி உண்டு.

திருமுறைகளில் காசி பற்றிய குறிப்பு மிகுதியாகக் காணோம். தென்னாட்டில் சிவராஜதானியாகக் கருதப்படுவது சிதம்பரம். அதேபோல் வடநாட்டில் சிவராஜதானியாக விளங்குவது காசி. எனினும் காசி பற்றிய குறிப்புகள் மிகவும் அருகியே உள்ளன. கறையான் அரித்த திருப்பதிகங்களுள் காசி பற்றிய திருப்பாடல்களும் கலந்தன போலும்.

காசி, தேவார வைப்புத் தலங்களுள் ஒன்று என்றே திருஞானசம்பந்தர் தமது திருசேத்திரக் கோவையில் வாரணாசியைக் குறிப்பிடுகிறார்.

"மாட்டூர் மடப்பாச்சி லாச்சி ராமம்
முண்டீச் சரம்வாத வூர் வாரணாசி
காட்டும் கடம்பூர்படம் பக்கம்
கொட்டும் கடல் ஒற்றியூர்...

- இரண்டாம் திருமுறை

திருநாவுக்கரசு சுவாமிகள் தமது திருக்கயிலாய யாத்திரையில் வாரணாசிக்குச் சென்றார் என்பதாகச் சேக்கிழார் ஓதுகின்றார்.

"அன்ன நாடுகடந்துகங்கை
யணைந்து சென்று வலங்கொளும்
மின்னு வேணியர் வார
ணாசி விருப்பி னோடு பணிந்துடன்
பின்ன ணைந்தவர் தம்மை யங்க
ணொழிந்து கங்கைபெயர்ந்துபோய்
மன்னு காதல்செய் நாவின் மன்னவர்
வந்து கற்சுர முந்தினார்"

- (செய். 353)

அப்பர் சுவாமிகள் தமது சேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில்,

"மண்ணிப் படிக்கரை வாழ்கொளி
புத்தூர் வக்கரை மந்தாரம்
வாரணாசி வெண்ணி விளத்தொட்டி....

- (6ஆம் திருமுறை)

என்றும்.

தேனார் புன்றகெடில வீரட்டமும்
திருச்செம்பொன் பள்ளி திருப் பூவணமும்
வானோர் வணங்கும் மணஞ்சேரியும்
மதிலுஞ்சை மாகாளாம் வாரணாசி
ஏனோர் களத்தும்

- (காப்புத் திருத்தாண்டகம்,11)

என்றும் குறிப்பிடுகிறார்.

மற்றைய திருமுறைகளில் காசி பற்றிய குறிப்பைக் காணோம்.

பின்னர், அதிவீரராம பாண்டியர் (கி.பி. 1552-1564) என்ற மன்னர் காசிகாண்டம் என்ற வடமொழி நூலைத் தமிழிற் பெயர்த்தார். இது, காசி காண்டம் எனவும் படும். காசியம்பதியின் பெருமைகளை இந்நூல் விளக்கிக் கூறுகிறது. வடமொழிக் கந்தபுராணத்தில் சங்கர சம்ஹிதை என்ற பகுதியில் குமரோற்பவ கண்டம், காசி கண்டம், காளி கண்டம் என்னும் மூன்று பிரிவுகள் உண்டு. இந்தக் காசி கண்டத்தையே அதிவீரராம பாண்டியர் தமிழில் தந்தார்.



பதினேழாம் நூற்றாண்டில் முற்பகுதியில் விளங்கிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் காசிக் கலம்பகம்" என்றொரு நூலை இயற்றினார்கள்.

"ஆனந்த வல்லியுடனானந்தக் கானத்தே
ஆனந்தக் கூத்தாடருட்கலை - ஆனந்தம்
கொள்ளத் தினைத்துழுடும் கூடாதேல்இப்பிறவி
வெள்ளத் தினைத்தாடுவீர்

- (ஆனந்தக் கானம் - காசி)

நோயுற்றுத் தளர்ந்தும் மூப்பினால் இளைத்தும் இருக்கும்போதும் ஒருவர் இன்பவாழ்வு எய்தவல்ல இடம் ஒன்று இருக்கிறது. அதன் பெயர் காசி என்று அவர் குறிப்பிடுகிறார்.

"படுத்தபாயுட னேபிணிமூழ்கினும்
பல்விழுந்து நரைத்துஅற மூப்பினும்
அடுத்தது ஈங்கிவர்க்கேபெரு வாழ்வெனும்
அப்பெருரும்பதி எப்பதி என்பிரேல்
விடுத்து விட்முஇந் திரதிருவும்புவி
வெண்கு டைக்குள் இடும்அரசாட்சியும்
கடுத்த தும்பு களத்தரைத் தேடுவார்
காத லித்து வரும்திருக் காசியே

- (24)

இதே நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் (பிறப்பு கி.பி. 1652) கற்பனைக் களஞ்சியம் எனப் புகழ்பெற்றவர். இவர் தமது சிவஞான பாலைய சுவாமிகள் கலம்பகத்தில் இரண்டிடங்களில் காசியைக் குறிப்பிடுகிறார்.

"பெருமானே சிவஞானிப்
பெயருடையோன் நினதருளால்
வருமான்மா பரமுத்தி
மருவுதலே யியல்பாகும்
பரமான்மா வுரைசெய்யப்
படுகாசி முதலனதாந்
தருமாறோ ருபசாரந்
தருவதுநிற் கிடைத்திடினே
முனிப்புலி தொழுசிதம் பரம்...
நிகழ்த்துறு காசியிற் சென்றிறப்பவர்
தனிப்பெரு முத்தியை யடைவர்.... (91)

அரிச்சந்திர புராணம், மாபாரதம் முதலிய நூல்களும் காசித்தலப் பெருமையைக் குறிப்பிடுகின்றன.

அபிநவகம்பன் என்று புகழ்பெற்ற வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் (கி.பி. 1815-1876) காசி ரகசியம் என்னும் வடமொழி நூலைத் தமிழில் செய்யுள் வடிவில் மொழி பெயர்த்தார். இந்நூல் கி.பி.1881ல் திருச்சிற்றம்பல ஞானியார் உரையுடன் வெளியாயிற்று.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார், காசியில் சில காலம் வாழ்ந்தார். அவரது தங்கை குடும்பத்தார் இன்றும் காசியில் இருந்து வருகிறார்கள். பாரதியார் பல பாடல்களில் கங்கையைப் புகழ்ந்து கூறியுள்ளார்.

"இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற் கெதிரது வேறே"

காசியையும் அவர் மறந்துவிடவில்லை.

"காசி நகர்ப் புலவர் பேசுமுறை தான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி
செய்வோம்"

இவை தவிர, வேறு பல நூல்களும் காசியைப் பற்றி வெளியாகி இருக்கின்றன. ஆனால் அவற்றின் முழு விவரமும் கிடைக்கவில்லை.

1. காசிக் கதிர்காமவேலர் திருவருட்பா- சிவஞான தேசிகர்.
2. காசித் தலத்தில் சத்தவாரணத்தில் எழுந்தருளியிருக்கின்ற 5 விநாயக மூர்த்திகளின் திருநாமங்கள் - சிவானந்தமூர்த்தி
3. காசி மான்மியம் - ஆசிரியர் தெரியவில்லை. பதிப்பித்தவர் பறங்கிப்பேட்டை தெய்வநாயக முதலியார்



4. காசி விசுவநாத சுவாமி பேரில் பதிகம் (ஆசிரிய விருத்தகம்) சுப்புராய ஐயர்.

இந்துக்களின் வாழ்க்கையில் காசி இரண்டற இணைந்திருக்கிறது. கங்கைப் பேராறு காசியை வளைத்துக்கொண்டு ஓடுகிறது. கங்கையால் காசிக்குப் பெருமையா, காசியால் கங்கைக்குப் பெருமையா என்பதை அறுதியாகக் கூற முடியாது. கங்கையைப் பற்றியும் காசியைப் பற்றியும் இந்திய இலக்கியங்கள் அனைத்துமே கூறுகின்றன. காசி என்னும் ஊர்ப்பெயர் மக்களுக்குப் பெயராகவும் வழங்கி வருவதும் இந்த தலத்தின் சிறப்பை உணர்த்தும். தென்தமிழ்நாட்டு மக்களின் வாழ்வில் காசி பெற்றுள்ள சிறப்புக்கு மற்றோர் எடுத்துக்காட்டு, அவர்கள் தம்நாட்டிலுள்ள சில ஊர்களுக்கும் காசி என்ற பெயரைச் சூட்டியிருப்பதாகும். தென்காசி, சிவகாசி என்பன இதற்கு விளக்கமாக அமைந்திருக்கின்றன. அண்மையில் வெளியான பத்திரிகை செய்தி இதனை வலியுறுத்துகிறது. மதுரை மாவட்டத்து மேலூர் முதற்கோட்டத்தைச் சேர்ந்தது மணப்பச்சேரி. அதைச் சேர்ந்த வெள்ளாளப்பட்டி அருகே பூதக்குடி மலையடிவாரத்தில் காடுகள் உள்ளன. அங்குள்ள கல்வெட்டிலிருந்து தெரியவரும் செய்தியாவது:

பறம்பு நாட்டிற்குப் புறத்தேயுள்ள மலைநாட்டுக்குப் புறமலைநாடு என்ற பெயர் இருந்தது. இக்காட்டுக்குள் அழிந்த ஊரின் பண்டைய பெயர் "வாரணவாசி" என்று இருந்து பின்னர் சேரநாராயணபுரம் என்று மாறியது.

முத்தித்தலமாகிய காசியில் உணவும் உறையுளும் அளிக்க நகரத்தார் வசதி செய்துள்ளனர். அவர்களால் நடத்தப்பெறும் நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரம் கடந்த நூறாண்டுகளாக காசியில் தமிழ்நாட்டினருக்கும் பிற கீழை நாடுகளிலிருந்து கடல் கடந்து வரும் தமிழர்க்கும் பேருதவி புரிந்து வருகிறது. கடந்த 150 ஆண்டுகளாக, நகரத்தார் காசி விசுவநாதருக்கு நாள்தோறும் மூன்று வேளை பூஜைக்கு ஏற்பாடு செய்து நடத்தி வருகிறார்கள். இந்தப் பூசையையும் நகரத்தார் சத்திரமே நடத்தி வருகிறது.

இந்த சத்திரம் அண்மையில் தனது நூற்றாண்டு விழாப் பெறவிருக்கிறது. இறைவன் தொண்டு, அடியார்க்குணவு முதலியவற்றின் மூலம் இறைபணியாற்றும் இச்சத்திரம் மேலும் பல நூற்றாண்டு விழாக்களைக் காண எல்லாம் வல்ல சிவன் திருவருள் துணை நிற்குமாக.

காசியைக் குறித்துச் செல்லும்
கால்களே கால்களாகும்
காசியை வழுத்தும் நாவே
நாவெனக் கழறலாமால்
காசியின் கதைகள் கேட்கும்
செவிகளே செவிகளாகும்
காசியை இனிது காணும்
கண்களே கண்களாமால்

- காசி கண்டம்

தருமம் வளர்க்கும் தனவணிகர்

நாசிக் பஞ்சவடி நற்பிர யாகை
காசி அயோத்தி கயைகல் கத்தா
தார கேசுரம் தண்கோ தாவரி
என்னும் தலங்கள் இருநான் கதனில்
சத்திரம் கட்டித் தருமம் வளர்க்கும்
நற்றன வணிகர் நலமுடன் காசி
நாதன் அருளால் நாளும்
வாழ்க! வாழ்க!! வழிவழிச் சிறந்தே!

- வித்துவான் வலம்புரி வே.அண்ணாமலை



செயற்குழு உறுப்பினர்கள் 2010 - 2013

1.	திரு. அ.மு.க.மு.க.கரு.மு. கருப்பஞ் செட்டியார்	காரைக்குடி
2.	திரு. க.தெ.க.அள. திருநாவுக்கரசு செட்டியார்	காரைக்குடி
3.	திரு. அழ.அரு.வெ. காளைராஜா செட்டியார்	தேவகோட்டை
4.	திரு. Dr. MR. முத்தையா செட்டியார்	கோட்டையூர்
5.	திரு. KT.S. பழனியப்ப செட்டியார்	பள்ளத்தூர்
6.	திரு. RM. கண்ணப்ப செட்டியார்	கொ.லட்சுமிபுரம்
7.	திரு. S. திருநாவுக்கரசு செட்டியார்	கடியாபட்டி
8.	திரு. ஆறு. மணி செட்டியார்	ஆத்தங்குடி
9.	திரு. S. காசி செட்டியார்	தேவகோட்டை
10.	திரு. PL. ராமநாதன் செட்டியார்	கொத்தமங்கலம்
11.	திரு. சு.லெ.சுப. லெட்சுமணன் செட்டியார்	பலவான்குடி
12.	திரு. பழ. மோகன் (எ) பழனியப்ப செட்டியார்	சொக்கலிங்கம்புதூர்
13.	திரு. வெ.அழ.வெ. நாகப்ப செட்டியார்	ஓ.சிறுவயல்
14.	திரு. மெ.லெ. மெய்யப்ப செட்டியார்	சிராவயல்
15.	திரு. C. பழனியப்ப செட்டியார்	வலையபட்டி
16.	திரு. T. தமிழ்ச்செல்வன் செட்டியார்	பி.அழகாபுரி
17.	திரு. Dr. கி. ரகுபதி சுப்பிரமணியன் செட்டியார்	நற்சாந்துபட்டி
18.	திரு. PL. அழகப்ப செட்டியார்	விராமதி
19.	திரு. PL. கிருஷ்ணப்ப செட்டியார்	குருவிக்கொண்டான்பட்டி
20.	திரு. P.A. நாகப்ப செட்டியார்	செவ்வூர்
21.	திரு. சுப. தியாகராஜன் செட்டியார்	மகிபாலன்பட்டி
22.	திரு. Dr. S. முத்தையா செட்டியார்	ஆ.தெக்கூர்
23.	திரு. S. பெரியண்ணன் செட்டியார்	நெற்குப்பை
24.	திரு. S. ராமசாமி செட்டியார்	பனையபட்டி
25.	திரு. பி.அ.மு.சா. செந்தில்நாதன் செட்டியார்	மேலைச்சிவபுரி
26.	திரு. கும.நா.சுப.நா.ராம. சுப்பிரமணியன் செட்டியார்	செம்பனூர்
27.	திரு. A. தெய்வராயன் செட்டியார்	வெற்றியூர்
28.	திரு. MR. உடையப்ப செட்டியார்	நடராஜபுரம்
29.	திரு. சொ.கண. சுப்பிரமணியன் செட்டியார்	கீழப்பூங்குடி
30.	திரு. Dr. SP. முத்துக்காளையப்ப செட்டியார்	அரண்மனைசிறுவயல்
31.	திரு. PL. அடைக்கப்ப செட்டியார்	நெற்குப்பை

தணிக்கையாளர்கள்

1.	திரு. PL. சோலையப்பன்	கல்லல்
2.	திரு. T. காளைராஜா	குழிபிறை




பொதுக்குழு உறுப்பினர்கள் 2010 - 2013

கீழவட்டகை

1.	திரு. சி.நா.வெ.நா.நா.அள. நாச்சியப்ப செட்டியார்	தேவகோட்டை
2.	திரு. PL. முத்தையா செட்டியார்	தேவகோட்டை
3.	திரு. நா.நா. அருணாசலம் செட்டியார்	தேவகோட்டை
4.	திரு. செ.பிச.ச.பி. மணிகண்டன் செட்டியார்	தேவகோட்டை
5.	திரு. பிச.சுப.பிச. கணேசன் செட்டியார்	தேவகோட்டை
6.	திரு. PL. கருப்பன் செட்டியார்	தேவகோட்டை
7.	திரு. சித.முரு.வீர.மீ. வீரப்ப செட்டியார்	தேவகோட்டை
8.	திரு. மா. அரு. சோமசுந்தரம் செட்டியார்	தேவகோட்டை
9.	திரு. N. அருணாசலம் செட்டியார்	தேவகோட்டை
10.	திரு. லெ. சதாசிவம் செட்டியார்	தேவகோட்டை
11.	திரு. வெ.ராம.ராம.ராம. ராமநாதன் செட்டியார்	தேவகோட்டை
12.	திரு. அரு.சோம. வெள்ளையன் செட்டியார்	தேவகோட்டை
13.	திரு. அகத்தீஷ் மு. உடையப்ப செட்டியார்	தேவகோட்டை
14.	திரு. L. லெட்சுமணன் செட்டியார்	தேவகோட்டை
15.	திரு. எ.எ.ராம.சொ.ச. நாகப்ப செட்டியார்	தேவகோட்டை
16.	திரு. PL. சின்ன லெட்சுமணன் செட்டியார்	தேவகோட்டை
17.	திரு. மெ.ந.மா.மெ.மெ. கல்யாணசுந்தரம் செட்டியார்	தேவகோட்டை
18.	திரு. மீ. சபாரெத்தினம் செட்டியார்	தேவகோட்டை
19.	திரு. AL.AR.V. காளைராஜா செட்டியார்	தேவகோட்டை
20.	திரு. NK.PL. பழனியப்ப செட்டியார்	தேவகோட்டை
21.	திரு. Dr. AR. மோகன் செட்டியார்	தேவகோட்டை
22.	திரு. S. காசி செட்டியார்	தேவகோட்டை
23.	திரு. A. ராமநாதன் செட்டியார்	தேவகோட்டை
24.	திரு. ஏ.பெரி.கரு.சித.பெரி. சபாமோகன் செட்டியார்	தேவகோட்டை
25.	திரு. அ.ராம.அ.ராம.அரு.மு.வீ. சிதம்பரம் செட்டியார்	தேவகோட்டை
26.	திரு. மு. சாத்தப்ப செட்டியார்	பிள்ளையார்பட்டி
27.	திரு. அரு. உத்தமன் செட்டியார்	ஆறாவயல்
28.	திரு. L. Rm. இராமசாமி செட்டியார்	ஆறாவயல்
29.	திரு. சேவு. பழ. இராமசாமி செட்டியார்	ஆறாவயல்
30.	திரு. RAMA S. இராமசாமி செட்டியார்	ஆறாவயல்
31.	திரு. அரு.பழ. பழநியப்ப செட்டியார்	கல்லுப்பட்டி
32.	திரு. பழ. இராமையா செட்டியார்	கல்லுப்பட்டி
33.	திரு. நா.அ.மெ.நா. அண்ணாமலை செட்டியார்	கல்லுப்பட்டி
34.	திரு. அ.மு.க.மு.க.கரு.மு. கருப்பன் செட்டியார்	காரைக்குடி
35.	திரு. வெ.ராம.சிவ.வெ.சிவ. ஸ்ரீனிவாசன் செட்டியார்	காரைக்குடி
36.	திரு. முத்து. பழனியப்ப செட்டியார்	காரைக்குடி
37.	திரு. சித. ராயப்ப செட்டியார்	காரைக்குடி
38.	திரு. AR.வெங்கிடாசலம் செட்டியார்	காரைக்குடி
39.	திரு. ப.சு.று.அ. ராமசாமி செட்டியார்	காரைக்குடி
40.	திரு. சி.முரு.நா. அண்ணாமலை செட்டியார்	காரைக்குடி
41.	திரு. N.S.T.N. சிதம்பரம் செட்டியார்	காரைக்குடி
42.	திரு. ஆவி.பழ. ஆவிச்சி செட்டியார்	காரைக்குடி
43.	திரு. அழ.சொ. அழகப்ப செட்டியார்	காரைக்குடி
44.	திரு. சு.அப.அ. பழனியப்பன்	காரைக்குடி
45.	திரு. கரு.வ.அழ. வீரப்ப செட்டியார்	காரைக்குடி
46.	திரு. அண.சா.ராம. சாமிநாதன் செட்டியார்	காரைக்குடி
47.	திரு. க.தெ.க.அள. திருநாவுக்கரசு செட்டியார்	காரைக்குடி



48.	திரு. வீர.கரு.வீர.அரு. செல்லப்ப செட்டியார்	காரைக்குடி
49.	திரு. பனை. மெ.சு.ராம.மெ.மெ. மெய்யப்ப செட்டியார்	காரைக்குடி
50.	திரு. எஸ். லெட்சுமணன் செட்டியார்	காரைக்குடி
51.	திரு. வீர.மெ.ராம.மெ. ராமனாதன் செட்டியார்	காரைக்குடி
52.	திரு. A. தேவராஜன் செட்டியார்	காரைக்குடி
53.	திரு. சுப.கதி.உ.ஆரு. கதிரேசன் செட்டியார்	காரைக்குடி
54.	திரு. தெ.மு. இராமசாமி செட்டியார்	காரைக்குடி
55.	திரு. AL. சிதம்பரம் செட்டியார்	கோட்டையூர்
56.	திரு. LP.V. வீரப்ப செட்டியார்	கோட்டையூர்
57.	திரு. Dr. MR. முத்தையா செட்டியார்	கோட்டையூர்
58.	திரு. A. அண்ணாமலை செட்டியார்	கோட்டையூர்
59.	திரு. RM.P.N.AR. நாராயணன் செட்டியார்	கோட்டையூர்
60.	திரு. R.M. சோலையப்ப செட்டியார்	பள்ளத்தூர்
61.	திரு. ரெ. நாராயணன் செட்டியார்	பள்ளத்தூர்
62.	திரு. வ.பழனியப்ப செட்டியார்	பள்ளத்தூர்
63.	திரு. M. முத்து செட்டியார்	பள்ளத்தூர்
64.	திரு. வீர. வீரசேகரன் செட்டியார்	பள்ளத்தூர்
65.	திரு. KT.S. பழனியப்ப செட்டியார்	பள்ளத்தூர்
66.	திரு. உ.அரு.அ. சோலையப்ப செட்டியார்	பள்ளத்தூர்
67.	திரு. மு. லெட்சுமணன் செட்டியார்	கானாடுகாத்தான்
68.	திரு. வீர.நா. நாகப்ப செட்டியார்	கானாடுகாத்தான்
69.	திரு. நா.பெக. பழனியப்ப செட்டியார்	கானாடுகாத்தான்
70.	திரு. கு.மு.சித. முரு.நாராயணன் செட்டியார்	கானாடுகாத்தான்
71.	திரு. M. சுப்பிரமணியன் செட்டியார்	நேமத்தான்பட்டி
72.	திரு. சித. கருப்பையா செட்டியார்	நேமத்தான்பட்டி
73.	திரு. நா. சிவப்பிரகாசம் செட்டியார்	நேமத்தான்பட்டி
74.	திரு. RM.P. முத்துக்குமார் செட்டியார்	கொ.லெட்சுமிபுரம்
75.	திரு. RM. கண்ணப்ப செட்டியார்	கொ.லெட்சுமிபுரம்
76.	திரு. PL. ராமநாதன் செட்டியார்	கொத்தமங்கலம்
77.	திரு. K. அண்ணாமலை செட்டியார்	கொத்தமங்கலம்
78.	திரு. L. முத்து செட்டியார்	கொத்தமங்கலம்
79.	திரு. அரு. முத்தையா செட்டியார்	கடியாபட்டி இராமச்சந்திரபுரம்
80.	திரு. M. நாராயணன் செட்டியார்	கடியாபட்டி இராமச்சந்திரபுரம்
81.	திரு. S.PL. அருணாசலம் செட்டியார்	கடியாபட்டி இராமச்சந்திரபுரம்
82.	திரு. பெரி. குமரப்ப செட்டியார்	கடியாபட்டி இராமச்சந்திரபுரம்
83.	திரு. அழ. வள்ளியப்ப செட்டியார்	கடியாபட்டி இராமச்சந்திரபுரம்
84.	திரு. S. திருநாவுக்கரசு செட்டியார்	கடியாபட்டி இராமச்சந்திரபுரம்
85.	திரு. SP. சோலையன் செட்டியார்	ராயவரம்
86.	திரு. சு.அழ. அழகப்ப செட்டியார்	ராயவரம்
87.	திரு. அழ.முரு. கதிரேசன் செட்டியார்	ராயவரம்
88.	திரு. S.S. RM. ராமனாதன் செட்டியார்	ராயவரம்
89.	திரு. வெ.மு.ராம.வெ.மு.வெ.மு. வேலுமுத்து செட்டியார்	ராயவரம்
90.	திரு. சிவ. காடப்ப செட்டியார்	அரிமளம்
91.	திரு. க. அண்ணாமலை செட்டியார்	அரிமளம்
92.	திரு. செ.ராம.சுப.ராம. அழகப்ப செட்டியார்	அரிமளம்
93.	திரு. பெ. வெள்ள செல்லப்ப செட்டியார்	அரிமளம்
94.	திரு. உ. அருணாசலம் செட்டியார்	அரிமளம்
95.	திரு. செ. சுப்பிரமணியன் செட்டியார்	அரிமளம்
96.	திரு. மெ.மு.மு.ராம.மு. நாகப்ப செட்டியார்	கோனாபட்டு
97.	திரு. மெ.அ. அழகப்ப செட்டியார்	கோனாபட்டு
98.	திரு. சு.மெ.அரு.மெ. அருணாசலம் செட்டியார்	கோனாபட்டு



99.	திரு. அழ. சாத்தப்ப செட்டியார்	கோனாபட்டு
100.	திரு. பழ.மெ. முத்து செட்டியார்	கோனாபட்டு
101.	திரு. C. சுப்பிரமணியன் செட்டியார்	ஆ.முத்துப்பட்டணம்
102.	திரு. N. நாச்சியப்ப செட்டியார்	ஆ.முத்துப்பட்டணம்
103.	திரு. S. லோகநாதன் செட்டியார்	ஆ.முத்துப்பட்டணம்
104.	திரு. அழ. சோலையப்ப செட்டியார்	ஆத்தங்குடி
105.	திரு. காசு. மணியன் செட்டியார்	ஆத்தங்குடி
106.	திரு. சித.சித. அருணாசலம் செட்டியார்	ஆத்தங்குடி
107.	திரு. ஆறு. மணி செட்டியார்	ஆத்தங்குடி
108.	திரு. சுப. பழனியப்ப செட்டியார்	பலவான்குடி
109.	திரு. சு.லெ.சுப. லெட்சுமணன் செட்டியார்	பலவான்குடி
110.	திரு. மு. முத்துராமன் செட்டியார்	பலவான்குடி
111.	திரு. அள. முத்தையா செட்டியார்	ஓ.சிறுவயல்
112.	திரு. வெ.அழ.வெ. நாகப்ப செட்டியார்	ஓ.சிறுவயல்
113.	திரு. M.K. மெய்யப்ப செட்டியார்	ஓ.சிறுவயல்
114.	திரு. வயி.அழ. சின்ன அழகப்ப செட்டியார்	ஓ.சிறுவயல்
115.	திரு. சொ.லெ. அழகப்ப செட்டியார்	ஓ.சிறுவயல்
116.	திரு. சு.கரு.பழ.மோகன் (எ) பழனியப்ப செட்டியார்	சொக்கலிங்கம்புதூர்
117.	திரு. கு.மு.ராம. குமரப்ப செட்டியார்	சொக்கலிங்கம்புதூர்
118.	திரு. பழ. சரவணன் செட்டியார்	சொக்கலிங்கம்புதூர்
119.	திரு. SP. நாகப்ப செட்டியார்	கோ.அழகாபுரி
120.	திரு. உ. உடையப்ப செட்டியார்	கோ.அழகாபுரி
121.	திரு. M. ராமநாதன் செட்டியார்	கண்டனூர்
122.	திரு. அழ. முத்தழகப்ப செட்டியார்	கண்டனூர்
123.	திரு. நா.மு.வெ. முத்தையா செட்டியார்	கண்டனூர்
124.	திரு. நா.அ.பெரி.மு. கணேசன் செட்டியார்	கண்டனூர்
125.	திரு. பழ. முத்துக்கருப்பன் செட்டியார்	கண்டனூர்
126.	திரு. வயி. நாச்சியப்பன் (எ) ராமனாதன் செட்டியார்	கண்டனூர்
127.	திரு. அள.பெரி.நா.வெ.நா. மீனாட்சிசுந்தரம் செட்டியார்	புதுவயல்
128.	திரு. வடு.மு.ராம.மு. அண்ணாமலை செட்டியார்	புதுவயல்
129.	திரு. கதி. ராம.வீர. அருணாச்சலம் செட்டியார்	புதுவயல்
130.	திரு. சு.சி.பழ.சுப. சின்னக்கருப்பன் செட்டியார்	புதுவயல்
131.	திரு. அரு. நாச்சியப்ப செட்டியார்	தேனிபட்டி
132.	திரு. சோ. முத்து செட்டியார்	தேனிபட்டி
133.	திரு. யே. முத்தையா செட்டியார்	தேனிபட்டி
134.	திரு. சீ.வெ.சா.வெ. ரெங்கநாதன் செட்டியார்	அரியக்குடி
135.	திரு. RM. நாராயணன் செட்டியார்	அரியக்குடி
136.	திரு. KR. ராமனாதன் செட்டியார்	அமராவதிபுதூர்
137.	திரு. கா. கண்ணப்ப செட்டியார்	மானகிரி
138.	திரு. கரு. கருப்பஞ் செட்டியார்	மானகிரி
139.	திரு. மெ.லெ. மெய்யப்ப செட்டியார்	சிராவயல்
140.	திரு. வ.சொ. ராமசாமி செட்டியார்	சிராவயல்
141.	திரு. திருநாச்சியப்ப செட்டியார்	நாச்சியாபுரம்
142.	திரு. கும.நா. சண்முகநாதன் செட்டியார்	நாச்சியாபுரம்
143.	திரு. S. கண்ணப்ப செட்டியார்	நாச்சியாபுரம்
144.	திரு. N.V. செந்தில்நாதன் செட்டியார்	தாணிச்சாவூரணி

தெற்கு வட்டகை


1.	திரு. உல.க.கண.கயி.ராம.கண. ராஜா சுவாமிநாதன் செட்டியார்	சக்கந்தி
2.	திரு. முரு.சொ. தண்ணீர்மலை செட்டியார்	கல்லல்
3.	திரு. V. சுப்பிரமணியன் செட்டியார்	கல்லல்
4.	திரு. ஆத.சொ.ஆத. கணேசன் செட்டியார்	கல்லல்



5.	திரு.	PL. சோலையப்ப செட்டியார்	கல்லல்
6.	திரு.	கும.நா.சுப.நா.ராம. சுப்பிரமணியன் செட்டியார்	செம்பனூர்
7.	திரு.	சா.நா. குமரப்ப செட்டியார்	செம்பனூர்
8.	திரு.	முரு. நாச்சியப்ப செட்டியார்	சொக்கநாதபுரம்
9.	திரு.	சோ.கா.மெ. மெய்யப்ப செட்டியார்	சொக்கநாதபுரம்
10.	திரு.	சோம. வி. சொக்கலிங்கம் செட்டியார்	சொக்கநாதபுரம்
11.	திரு.	ரெ. திருநாவுக்கரசு செட்டியார்	மதகுபட்டி
12.	திரு.	சுப. ராஜமாணிக்கம் செட்டியார்	மதகுபட்டி
13.	திரு.	S. ராமசாமி செட்டியார்	அலவாக்கோட்டை
14.	திரு.	J. மணிவண்ணன் செட்டியார்	அலவாக்கோட்டை
15.	திரு.	சித. சம்பத் செட்டியார்	அலவாக்கோட்டை
16.	திரு.	சொ.கண. சுப்பிரமணியன் செட்டியார்	கீழப்பூங்குடி
17.	திரு.	அண.சொ. ரங்கநாதன் செட்டியார்	கீழப்பூங்குடி
18.	திரு.	சிந.கரு. சிதம்பரம் செட்டியார்	ஒக்கூர்
19.	திரு.	மு.சே.ரெ. சேக்கப்ப செட்டியார்	ஒக்கூர்
20.	திரு.	அண. சேதுராமன் செட்டியார்	சோழபுரம்
21.	திரு.	சுப. முருகேசன் செட்டியார்	நாட்டரசன்கோட்டை
22.	திரு.	கண.க.சொ.கோ. சொக்கலிங்கம் செட்டியார்	நாட்டரசன்கோட்டை
23.	திரு.	சுப. ராஜாமணி செட்டியார்	நாட்டரசன்கோட்டை
24.	திரு.	V. விஜயகுமார் செட்டியார்	நாட்டரசன்கோட்டை
25.	திரு.	சித. இராமநாதன் செட்டியார்	நாட்டரசன்கோட்டை
26.	திரு.	O.S. சுப்பிரமணியன் செட்டியார்	நாட்டரசன்கோட்டை
27.	திரு.	C.M.A.O. சண்முகநாதன் செட்டியார்	கொ.அழகாபுரி
28.	திரு.	உ.அ.உ.வே. மெய்யப்ப செட்டியார்	கொ.அழகாபுரி
29.	திரு.	கதி. இராமநாதன் செட்டியார்	காளையார்மங்கலம்
30.	திரு.	சொ.இராம. கண்ணப்ப செட்டியார்	காளையார்மங்கலம்
31.	திரு.	நாக. நாராயணன் செட்டியார்	கருங்குளம்
32.	திரு.	பெரி.வயி.அண. வயிரவன் செட்டியார்	கருங்குளம்
33.	திரு.	AN. முத்துக்கருப்பன் செட்டியார்	பாகனேரி
34.	திரு.	RM. வைரவன் செட்டியார்	பாகனேரி
35.	திரு.	V. முருகப்ப செட்டியார்	பாகனேரி
36.	திரு.	வேலாயுதம் ராகவன் செட்டியார்	பாகனேரி
37.	திரு.	Dr. SP. முத்துக்காளையப்ப செட்டியார்	அரண்மனைசிறுவயல்
38.	திரு.	RM. அருணாச்சலம் செட்டியார்	அரண்மனைசிறுவயல்
39.	திரு.	Dr. L. பழனியப்ப செட்டியார்	அரண்மனைசிறுவயல்
40.	திரு.	MR. உடையப்ப செட்டியார்	நடராஜபுரம்
41.	திரு.	M. சுப்பையா செட்டியார்	நடராஜபுரம்
42.	திரு.	A. தெய்வராயன் செட்டியார்	வெற்றியூர்
43.	திரு.	ஆ.ந. சந்திரன் செட்டியார்	வெற்றியூர்
44.	திரு.	கதி.மெ.சி. தியாகராஜன் செட்டியார்	பனங்குடி
45.	திரு.	V.S.KR. கருப்பையா செட்டியார்	கண்டரமாணிக்கம்
46.	திரு.	வி.மெ.நா.சா. மெய்யப்ப செட்டியார்	கண்டரமாணிக்கம்
47.	திரு.	பழ.மெ.நா. மெய்யப்ப செட்டியார்	கண்டரமாணிக்கம்
48.	திரு.	L. மாணிக்கம் செட்டியார்	கண்டரமாணிக்கம்
49.	திரு.	மெ.இராம. செயமணி செட்டியார்	பட்டமங்கலம்
50.	திரு.	ஆத.நா.நா. மாணிக்கம் செட்டியார்	பட்டமங்கலம்

மேல வட்டகை

1.	திரு.	V.D. கண்ணன் செட்டியார்	வலையபட்டி
2.	திரு.	S. நாகப்ப செட்டியார்	வலையபட்டி
3.	திரு.	மு. நாகப்ப செட்டியார்	வலையபட்டி
4.	திரு.	N. அண்ணாமலை செட்டியார்	வலையபட்டி



5.	திரு. S.V. செந்தில்நாதன் செட்டியார்	வலையபட்டி
6.	திரு. ராம. அண்ணாமலை செட்டியார்	வலையபட்டி
7.	திரு. C. பழனியப்ப செட்டியார்	வலையபட்டி
8.	திரு. PL.M. முத்தையா செட்டியார்	வலையபட்டி
9.	திரு. சுப. முத்துக்கருப்பன் செட்டியார்	வலையபட்டி
10.	திரு. சி. நாச்சியப்ப செட்டியார்	வலையபட்டி
11.	திரு. ஆறு. மு. அண்ணாமலை செட்டியார்	மேலைச்சிவபுரி
12.	திரு. SP. அண்ணாமலை செட்டியார்	மேலைச்சிவபுரி
13.	திரு. சொ. சண்முகம் செட்டியார்	மேலைச்சிவபுரி
14.	திரு. பி.அ.மு.சா. செந்தில்நாதன் செட்டியார்	மேலைச்சிவபுரி
15.	திரு. சித. இராமனாதன் செட்டியார்	ராங்கியம்
16.	திரு. வி.என். சிதம்பரம் செட்டியார்	ராங்கியம்
17.	திரு. மு.ராம.சுப.மு. சுப்பிரமணியன் செட்டியார்	பொன்.புதுப்பட்டி
18.	திரு. Dr. ச. சாமிநாதன் செட்டியார்	பொன்.புதுப்பட்டி
19.	திரு. ப.அ.அழ. அண்ணாமலை செட்டியார்	பொன்.புதுப்பட்டி
20.	திரு. சிவ. சுந்தரம் செட்டியார்	பொன்.புதுப்பட்டி
21.	திரு. மா. லெட்சுமணன் செட்டியார்	வேகுப்பட்டி
22.	திரு. சுப.ச. அண்ணாமலை செட்டியார்	வேகுப்பட்டி
23.	திரு. இராம. ஆண்டியப்ப செட்டியார்	வேகுப்பட்டி
24.	திரு. AV.RM. அருணாசலம் செட்டியார்	வேகுப்பட்டி
25.	திரு. முரு. வேலாயுதம் செட்டியார்	கொப்பனாபட்டி
26.	திரு. லெ.சொ. லெட்சுமணன் செட்டியார்	கொப்பனாபட்டி
27.	திரு. மு.ராம.பழ. பழநியப்ப செட்டியார்	கொப்பனாபட்டி
28.	திரு. M. ஜெயம்கொண்டான் செட்டியார்	கொப்பனாபட்டி
29.	திரு. M. ராஜேந்திரன் செட்டியார்	பூலாங்குறிச்சி
30.	திரு. L. பழனியப்ப செட்டியார்	பூலாங்குறிச்சி
31.	திரு. KR. பழனியப்ப செட்டியார்	பூலாங்குறிச்சி
32.	திரு. V. முத்து செட்டியார்	பூலாங்குறிச்சி
33.	திரு. மு.வயி.சித. முத்தையா செட்டியார்	மிதிலைப்பட்டி
34.	திரு. முரு.ச. முருகப்ப செட்டியார்	மிதிலைப்பட்டி
35.	திரு. RM. வள்ளியப்ப செட்டியார்	மிதிலைப்பட்டி
36.	திரு. முரு. ராஜேந்திரன் செட்டியார்	குளிபிறை
37.	திரு. செ.ராம.செ. அண்ணாமலை செட்டியார்	குளிபிறை
38.	திரு. நா.வயி.ராம. கதிரேசன் செட்டியார்	குளிபிறை
39.	திரு. மா.திரு. மாணிக்கம் செட்டியார்	குளிபிறை
40.	திரு. V. மகாலிங்கம் செட்டியார்	குளிபிறை
41.	திரு. சுப. அருணாசலம் செட்டியார்	குளிபிறை
42.	திரு. அ.சுப.அ. சுப்பிரமணியன் செட்டியார்	விரையாச்சிலை
43.	திரு. வ. வைத்தியநாதன் செட்டியார்	விரையாச்சிலை
44.	திரு. அரு.ச. ராஜகோபால்	விரையாச்சிலை
45.	திரு. கி. ரெகுபதி சுப்பிரமணியன் செட்டியார்	நற்சாந்துபட்டி
46.	திரு. கும.மா. சம்பந்தம் செட்டியார்	நற்சாந்துபட்டி
47.	திரு. சித. முத்துராமன் செட்டியார்	நற்சாந்துபட்டி
48.	திரு. வளர்மதி A. அண்ணாமலை செட்டியார்	நற்சாந்துபட்டி
49.	திரு. RM. ஏகப்ப செட்டியார்	நற்சாந்துபட்டி
50.	திரு. RM. ஜோதிலிங்கம் செட்டியார்	வி.லெட்சுமிபுரம்
51.	திரு. R. சோமசுந்தரம் செட்டியார்	வி.லெட்சுமிபுரம்
52.	திரு. RM. சேதுராமன் செட்டியார்	உலகம்பட்டி
53.	திரு. லெ. பாண்டியன் செட்டியார்	உலகம்பட்டி
54.	திரு. L. சிங்காரம் செட்டியார்	உலகம்பட்டி
55.	திரு. S. பழனியப்ப செட்டியார்	பனையபட்டி



56.	திரு. R. சோம. ராமனாதன் செட்டியார்	பனையபட்டி
57.	திரு. S. ராமசுவாமி செட்டியார்	பனையபட்டி
58.	திரு. SM. சொக்கலிங்கம் செட்டியார்	கீழச்சீவல்பட்டி
59.	திரு. கி. அழகப்ப செட்டியார்	கீழச்சீவல்பட்டி
60.	திரு. CT.S. சிதம்பரம் செட்டியார்	கீழச்சீவல்பட்டி
61.	திரு. பெரி. முத்தையா செட்டியார்	கீழச்சீவல்பட்டி
62.	திரு. CT.V.S. இராமனாதன் செட்டியார்	கீழச்சீவல்பட்டி
63.	திரு. பழ. அழகப்ப செட்டியார்	விராமதி
64.	திரு. மு.பழ.இராம.சா. சாத்தப்ப செட்டியார்	விராமதி
65.	திரு. AR.PL. சுப்பையா செட்டியார்	விராமதி
66.	திரு. M. சொக்கலிங்கம் செட்டியார்	பி.அழகாபுரி
67.	திரு. E.N. M.N. முத்தையா செட்டியார்	பி.அழகாபுரி
68.	திரு. சி.வீர.ராம. வைரவன் செட்டியார்	பி.அழகாபுரி
69.	திரு. S. இராமனாதன் செட்டியார்	பி.அழகாபுரி
70.	திரு. T. தமிழ்ச்செல்வன் செட்டியார்	பி.அழகாபுரி
71.	திரு. ஆ.சொ. ஆண்டியப்ப செட்டியார்	ஆவினிப்பட்டி
72.	திரு. SP. சம்பந்தம் செட்டியார்	ஆவினிப்பட்டி
73.	திரு. SP. சுந்தரம் செட்டியார்	ஆவினிப்பட்டி
74.	திரு. சிவ.சி.மு. சொக்கலிங்கம் செட்டியார்	குருவிக்கொண்டான்பட்டி
75.	திரு. S.தேனப்ப செட்டியார்	குருவிக்கொண்டான்பட்டி
76.	திரு. PL. கிருஷ்ணப்ப செட்டியார்	குருவிக்கொண்டான்பட்டி
77.	திரு. P.A. நாகப்ப செட்டியார்	செவ்வூர்
78.	திரு. Dr. PR. ராமநாதன் செட்டியார்	செவ்வூர்
79.	திரு. சுப. தியாகராஜன் செட்டியார்	மகிபாலன்பட்டி
80.	திரு. மு. முத்துகருப்பன் செட்டியார்	மகிபாலன்பட்டி
81.	திரு. M. காசி செட்டியார்	கண்டவராயன்பட்டி
82.	திரு. S. சுப்பையா செட்டியார்	கண்டவராயன்பட்டி
83.	திரு. S.L.S. பழனியப்ப செட்டியார்	கண்டவராயன்பட்டி
84.	திரு. N. கண்ணப்ப செட்டியார்	கண்டவராயன்பட்டி
85.	திரு. AR. நாராயணன் செட்டியார்	கண்டவராயன்பட்டி
86.	திரு. L. சொக்கலிங்கம் செட்டியார்	கண்டவராயன்பட்டி
87.	திரு. L.S. லெட்சுமணன் செட்டியார்	ஆ.தெக்கூர்
88.	திரு. Dr. S. முத்தையா செட்டியார்	ஆ.தெக்கூர்
89.	திரு. SM.S.V. சீனிவாசன் செட்டியார்	ஆ.தெக்கூர்
90.	திரு. L. நாகப்ப செட்டியார்	ஆ.தெக்கூர்
91.	திரு. MR.S. சேதுராமன் செட்டியார்	நெற்குப்பை
92.	திரு. ந.பழ.மு.ந.தி. சிதம்பரம் செட்டியார்	நெற்குப்பை
93.	திரு. P. லெட்சுமணன் செட்டியார்	நெற்குப்பை
94.	திரு. S. பெரியண்ணன் செட்டியார்	நெற்குப்பை
95.	திரு. மு. சண்முகம் செட்டியார்	நெற்குப்பை
96.	திரு. இராம. சாத்தப்பன் செட்டியார்	நெற்குப்பை
97.	திரு. R. மோகன் செட்டியார்	சிறுகூடல்பட்டி
98.	திரு. நா. பழனியப்ப செட்டியார்	சிறுகூடல்பட்டி
99.	திரு. V. இராமநாதன் செட்டியார்	சிறுகூடல்பட்டி
100.	திரு. பழ. கோவிந்தன் செட்டியார்	சிறுகூடல்பட்டி
101.	திரு. சொ. துர்க்கை கருப்பன் செட்டியார்	வேந்தன்பட்டி
102.	திரு. R.R. இராமநாதன் செட்டியார்	வேந்தன்பட்டி
103.	திரு. PL. கோபால்ராம் செட்டியார்	வேந்தன்பட்டி
104.	திரு. PR. நாச்சியப்ப செட்டியார்	வேந்தன்பட்டி
105.	திரு. லெ. நா. லெட்சுமணன் செட்டியார்	வேந்தன்பட்டி
106.	திரு. SV. சுப்பையா செட்டியார்	வேந்தன்பட்டி